# மருதமுகிழ்

## 2017







வெளியீடு :
**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு

மருதமுகிழ்

# மருதமுகிழ்

வெளியீடு:
**கலாசாரப் பேரவை**
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு

# நூல் விபரம்


நூலின் பெயர் : **மருதமுகிழ்**

நூலின் வகை : கலாசார மலர்

வெளியீடு : கலாசாரப் பேரவை,
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு

பக்கங்கள் : 115

பிரதிகள் : 250

பதிப்புரிமை : பிரதேச செயலகம், வவுனியா வடக்கு

வெளியீடு : 09 கார்த்திகை. 2017

தொடர்பு : பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.

அச்சுப்பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்
இல.85, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.
024 2223658

ISSN : 2345 - 0977 - 2017


மருதமுகிழ்

# வவுனியா வடக்குப் பிரதேச கலாசாரப்பேரவை - 2017



திரு .செ.பவேந்திரன் (உப செயலாளர்) திரு சு. தவபாலன் (பொருளாளர்) திரு. மூ. கோபால்(உறுப்பினர்) ஆலோசகர் திரு. பி. நாகேஸ்வரபாலா (ஆலோசகர்)
தலைவர் திரு. க. பரந்தாமன் (தலைவர்) திருமதி கே. நிவேதிகா (உப தலைவர்) திருமதி செ. விஜிதா (செயலாளர்) திருமதி.உ.பிரதீபா ( உறுப்பினர்)
திரு. க. நாகராஜா (உறுப்பினர்)

**நிற்பவர்கள்.**

திரு. [illegible] (உறுப்பினர்) திரு. [illegible] (உறுப்பினர்) திரு. சு. நவஜீவன் (உறுப்பினர்) திரு.லோ.விமலராஜன் (உறுப்பினர்) திரு. எல். [illegible] (உறுப்பினர்)

# வவுனியா வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவை – 2017

தலைவர்

**திரு.க.பரந்தாமன்**

(பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு)

உபதலைவர்

**திருமதி.கே.நிவேதிகா**

(உதவிப் பிரதேச செயலாளர், வவுனியா வடக்கு)

செயலாளர்

**திருமதி.செ.விஜிதா**

(கலாசார உத்தியோகத்தர், வவுனியா வடக்கு)

உபசெயலாளர்

**திரு.செ.பவேந்திரன்**

(அதிபர், வ/நெடுங்கேணி ம.வி)

நிர்வாக உறுப்பினர்கள்

1. **திரு.லோ.விமலராஜன்** - அதிபர், உமையாள் வித்தியாலயம், சேனைப்புலவு
2. **திரு.க.நாகராஜா** - அதிபர், ஸ்ரீ வாணி வித்தியாலயம், மாமடு
3. **திரு.கு.நவஜீவன்** - செயலாளர், புரட்சி கவின் கலாமன்றம், புளியங்குளம்,
4. **திரு.எல.மயூரசர்மா** - அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா வடக்கு
5. **திருமதி.உ.பிரதீபா** - கிராம சேவையாளர், புளியங்குளம்
6. **திரு.மூ.கோபால்** - கிராமசேவையாளர், குளவிசுட்டான்
7. **திருமதி.கௌ.பிருந்தா** - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு
8. **திரு.கோ.சிவனேசன்** - சமுர்த்தி உத்தியோகத்தர், வவுனியா வடக்கு
9. **திரு.நே.பவானந்தன்** - அபிவிருத்தி உத்தியோகத்தர், வவுனியா வடக்கு

ஆலோசகர்

**திரு.பி.நாகேஸ்வரபாலா**

கணக்காளர் - பிரதேச செயலகம், வவுனியா வடக்கு

ஆசிரியர்

**திருமதி.விஜிதா செல்வகுமார்**
(கலாசார உத்தியோகத்தர், வவுனியா வடக்கு)

மலர்க்குழு

**திரு.ஜே.திருவரங்கன்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

**திரு.என்.பவானந்தன்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

**திரு.எஸ்.ராஜ்குமார்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

**திரு.த.மணிவண்ணன்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

**திரு.எஸ்.மயூரசர்மா**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

**திரு.எஸ்.கஜேந்திரன்**
(அபிவிருத்தி உத்தியோகத்தர் வவுனியா வடக்கு)

# மலரில் முகிழ்பவை


| | | |
|---|---|---|
| 1. | தமிழ்மொழி வாழ்த்து | 08 |
| 2. | வவுனியா வடக்கு பிரதேச கீதம் | 09 |
| 3. | கலைத்தாள் வாழ்த்து | 10 |
| 4. | வாழ்த்துச் செய்தி | 11 |
| 5. | மலராசிரியரின் இதயத்திலிருந்து | 19 |
| 6. | வவுனியா வடக்கு நெடுங்கேணிப்பிரதேச போக்குவரத்து | 20 |
| 7. | தமிழ் சிற்றிதழ்கள் | 26 |
| 8. | வேலையுலகில் தொழில் வழிகாட்டலின் அவசியம் | 33 |
| 9. | வாய்வன் காக்கை | 39 |
| 10. | நாட்டார் பாடல்களில் இளையோடும் உள ஆற்றுப்படுத்தல்கள் | 44 |
| 11. | பேராசிரியர் முருகர் குளசிங்கம் அவர்களுடனான நோர்காணல் | 47 |
| 12. | சிறுவர் கதை - அம்புலிமாமா | 66 |
| 13. | என் தாய் மண்ணே | 72 |
| 14. | முதுமை அது இனிமை | 74 |
| 15. | பண்பாடு | 75 |
| 16. | மண்ணின் மைந்தன் | 77 |
| 17. | அர்த்த நாரீஸ்வரன் | 78 |
| 18. | குழந்தை | 79 |
| 19. | இலங்கை வரணும் இராமராட்சியம் போல் | 80 |
| 20. | இவரல்லோ இரட்சகர்கள் | 82 |
| 21. | நம்பிக்கை | 84 |
| 22. | இயற்கை மானம் காப்போம் | 85 |
| 23. | கோடையின் கோலம் | 87 |
| 24. | தடம் புரளும் இளைஞர்கள் | 89 |
| 25. | யாழிசை நூல் விமர்சனம் | 91 |
| 26. | தமிழர்தம் வாழ்வோடு இணைந்த | 94 |
| 27. | அறுபத்து நான்கு கலைகளில் நாம் | 98 |
| 28. | வாசிப்பின் முக்கியத்துவம் | 101 |
| 29. | சிறுகதை - கூத்து | 103 |
| 30. | நவீன உலகின் ஏழைகள் | 108 |
| 31. | சிறுகதை - விடியாத இரவுகள் | 110 |
| 32. | சிறுகதை - விடிவெள்ளி | 112 |

மருதமுகிழ்

# தமிழ்மொழி வாழ்த்து

**வா**ழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தண்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே!

**சுப்பிரமணிய பாரதியார்**

# வவுனியா வடக்குப் பிரதேச கீதம்

வாழ்கநெடுங்கேணி வளம் நிறை நகருறை
வளர் பிரதேசநற் செயலகமே!
வன்னி நிலத்தழகெண்ணி மகிழ்ந்திட
வாய்த்தநற் பிரதேச செயலகமே! (வாழ்க)

வற்றா ஊற்றின் வளம்மிகு கேணிகள்
பெற்றாய் தாயே புகழ் பெற்றாய்!
அற்றார் அழிபசிதீர்க்கும் அரசியின்
நற்றாய் நீயே நலம்மிக்காய் (வாழ்க)

முல்லையும் மருதமும் முயங்கிய நிலமாய்
மூத்த நிலம் எனப் பெயர் பெற்றாய்!
எல்லை இலாப்புகழ் கொண்ட நம் தாயே
என்றும் வாழ்கவென வாழ்த்துகிறோம்! (வாழ்க)

ஈழ வளத்திருநாட்டின் இதயமாய்
இலங்கு புகழ்வன்னி எழிலரசே!
காலநிலை கனவளம் தரும்
நன்மைபெறு வன்னி நிலத்தரசே (வாழ்க)

குளமும் வயலும் குளிர்ந்தரு சோலையும்
வளமாய் அமைந்த நம் உயிர்த்தாயே!
அழகும் கலைகளும் அரியபால் தேனும்
அன்று போல் மீண்டிட உயிர்த்தாயே! (வாழ்க)

பொன்னென வழியும் வியர்வையில் நனையும்
பூமித்தாயே நம் தாயே!
அன்னமளித்துயர் விருந்தில் மகிழ்ந்திடும்
அன்னை தாயே வணங்குகிறோம்! (வாழ்க)

வவுனியா மாவட்ட வடக்குப் பிரிவாம்
வளம்மிகு நெடுங்கேணிப் பிரதேசம்!
அவனியில் சிறப்புற அனைவரும் வாழ்த்தி
அடிபணிந்தே நாம் போற்றிடுவோம்! (வாழ்க)

அடங்காப் பற்றென அன்றொரு பேர்கொள்
அன்னையெம் தாயே வாழ்த்துகிறோம்!
திடங்கொள் பண்டாரவன்னியன் ஆண்ட
தேசமே உன்னை வணங்குகிறோம்! (வாழ்க)

**கவிஞர் கலாநிதி**
**அகளங்கன்**

# வவுனியா வடக்கு கலாசார பேரவையின் கலைத்தாய் வாழ்த்து

கலைத்தாயைப் பணிவோமடா!
கலைத்தாயைப் பணிவோமடா!
அலைகடலாய் ஆர்ப்பரிக்கும்
தலைமகளாம் தமிழ் மகளின்
(கலைத்தாயைப்..)

மேடை பல காண்போம்!
மேவு புகழ் கொள்வோம்!
தேவைமிகு கலை பெருக்கி
தேனினிய தமிழ் வளர்க்க
(கலைத்தாயைப்..)

காடுவளர் சோலை!
கானமயில் ஆடும்!
மானினங்கள் கூடும் எங்கள்
வவுனியா வடக்கினிலே
(கலைத்தாயைப்..)

இயற்றமிழை வளர்ப்போம்!
இசைத்தமிழை வளர்ப்போம்!
நாடகத் தமிழ் கலந்து
நானிலம் செழித்திடவே
(கலைத்தாயைப்..)

பாடல் பல பாடி - பரதம்
ஆடல் இசை ஆடி!
வீடும் நாடும் நலம் பெறவே
கோடியின்பம் தருபவளாம்
(கலைத்தாயைப்..)

வித்தை பல கற்போம்!
சத்தியத்தைக் காப்போம்!
நித்தமதைக் கடைப்பிடித்து
தர்மமதாய் கொள்வதற்கு
(கலைத்தயைப்..)

காவியங்கள் படைப்போம்!- கலைத்
தேவிபுகழ் சொல்வோம்
மேவுமிசை நாடகத்தால்
மேன்மை பெறும் வாழ்வதனால்
(கலைத்தாயைப்..)

பரதக் கலை வளர்ப்போம்!- சத்திய
விரதமொன்று கொள்வோம்!
சிரமம்தனையே சாய்த்து - கலை
அரும் புகழை உலகறிய
(கலைத்தாயைப்..)

- ஞானக்கதிரோன் பரந்தாமன்

# வவுனியா வடக்கு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் - 2017



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர் - வட மாகாணம்

විනිසුරු සී.වී. විග්නේෂ්වරන්
ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

**Justice C.V.Wigneswaran**
**Chief Minister – Northern Province**

Telephone 021 221 7311
Fax 021 221 7310

A-9 Road, Kaithady

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration


My No NP/CM/Media/10/08/2017

Date 10.08.2017



## வாழ்த்துச் செய்தி

பழந்தமிழரின் வாழ்வியல் முறைமைகள், பிரதேச பழக்க வழக்கங்கள், கலைநயம், பண்பாடு போன்ற பல விடயங்கள் காலத்துக்குக் காலம் வாழ்ந்த மக்களுக்கிடையே எழுத்து வடிவில் அன்றி வாய்மொழி மூலமாக பரம்பலுற்று வந்தன. ஆவணப்படுத்தலின்மையால் பல்வேறு கலை பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் நாடகக் கூத்து வடிவங்களின் பல்வேறு பரிமாணங்கள் முற்றாகவே அன்றி பகுதியளவிலோ அழிந்தும் மருவியும் புதிய வடிவம் பெற்று வந்துள்ளன. எனவே அவற்றின் உண்மைத் தன்மையைக் கண்டறிவது கடினமாக்கப்பட்டுள்ளது. இதனால் தமிழர்களின் பாரம்பரியம் பற்றிய தகவல்களில் பல உட்செருகல்களும், நீக்கல்களும் உள்ளாக்கப்பட்டுள்ளன எனடபதைக் காணக் கூடியதாக உள்ளது.

எனவே ஒவ்வொரு பிரதேசங்களிலும் காணப்படுகின்ற கலாசார பழக்க வழக்கங்கள், அறிவியல் படைப்புக்கள் மற்றும் உள்ளூர் கலைஞர்களின் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள் ஆகிய அனைத்தும் எழுத்து வடிவில் உருவாக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டியது அத்தியாவசியமாகின்றது. இதன் அடிப்படையிலேயே ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் உருவாக்கப்பட்ட கலாசாரப் பேரவைப் பிரிவின் முயற்சியின் கீழ் வருடந்தோறும் இத் தகவல்களை ஒன்று திரட்டி பிரதேச மலர்களாக வெளியிட்டு வருகின்றோம்!

அந்த வகையில் வவுனியா வடக்குப் பிரதேச செயலாளரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்குகின்ற கலாசாரப் பேரவையினால் தயாரித்து வெளியிடப்படுகின்ற "மருதமுகிழ்" என்னும் விசேட மலரின் ஏழாவது பதிப்பு வெளிவர இருக்கின்ற இவ்வேளையில் அம்மலருக்கான வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இவ்வாறான மலர்கள் ஒவ்வொரு பிரதேசத்தின் தொன்மையினை பிரதிபலிக்கின்றது. இப்பிரதேசத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. மற்றும் சமூக பண்பாட்டு அம்சங்களையும் பிரதிபலிக்கின்றன. எனினும் அவை எமது பாரம்பரியம், பண்பாடு, வாழ்வியல் முறைமைகள், சமூகக் கட்டமைப்பு ஆகியவை பற்றியதான முறையான ஆய்வுகளின் பின்னர் வழங்கப்படுகின்ற சரியான தகவல்களாக அமைதல் அவசியம். இவ்வாறான பிரதேச மலர்கள் எதிர்கால சந்ததியின் வரலாற்று பொக்கிஸமாகவும் உயர்கல்வி ஆய்வுகளின் போது உசாத்துணை நூல்களாகவும் அமைதல் அவசியம். எனவே தான் அவை தரமானவையாக வடிவமைக்கப்பட வேண்டும். இவ்வருட மருதமுகிழ் நிறைவான ஒரு மலராக அரும்ப எமது ஆசிகள் உரித்தாகுக.

அன்புடன்,

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வட மாகாணம்.

ம ரு த மு கி ழ்

கலாநிதி. க. சர்வேஸ்வரன்
ආචාර්ය. ක. සර්වේස්වරන්
Dr. K. Sarveswaran Ph.D
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சர், வடக்கு மாகாணம்
Minister for Education, Cultural Affairs, Sports & Youth Affairs, Northern Province
අධ්‍යාපන, සංස්කෘතික, ක්‍රීඩා සහ යෞවන කටයුතු අමාත්‍යවරයා, උතුරු පළාත

My No. | Your No. | Date: 22.08.2017

## கௌரவ வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாச்சாரப் பேரவையினால் வெளியிடப்படும் ஏழாவது மருதமுகிழ் மலருக்கு வாழ்த்து செய்தி வழற்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

நெடுங்கேணி வற்றாத கேணி, புதூர் நாதம்பிரான் ஆலயம், நெடுங்கேணி நொச்சியடி எழுத்துமலை, அன்னதேவன் மடு போன்ற வரலாற்றுசிறப்புரிமைகளைக் கொண்டஇப் பிரதேசத்தின் தொன்மையைப் பிரதிபலிக்கின்ற ஆய்வுக்கட்டுரைகள், நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள் ஆகியவற்றை இம் மலர் தாங்கி வருவது வரவேற்கத்தக்கது.

மேலும் உள்ளூர் கலைஞர்களின் கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியன அப்பிரதேச சமூக பண்பாட்டு அம்சங்களை பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளமை சிறப்பானதாகும். இப்பிரதேசத்தின் தகவல்களையும் சிறப்புக்களையும் ஆவணப்படுத்தி வெளியிடப்படும் இம்மலரானது எதிர்கால சமுதாயத்தினருக்கும் மக்களுக்கும் பிரதேச வளர்ச்சிக்கும் வரலாற்றுப் பதிவாக அமைந்திருப்பது போற்றுவதற்குரியதே.

இம் மலர் சிறப்புற உழைத்த பிரதேச செயலாளர், கலாச்சார பேரவையினர் மற்றும் ஆக்கங்களை வழங்கி மெருகேற்றிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி. கந்தையா சர்வேஸ்வரன
கௌரவ கல்வி அமைச்சர்
வட மாகாணம்

கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்
அமைச்சர்
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை
மற்றும் இளைஞர் விவகாரம்
வடக்கு மாகாணம்

Chunnakam Road, Nallur, Jaffna
Telephone: 021 205 4094 | Fax : 021 205 4093 | Email: ksarveswaranpc@gmail.com



## வடமாகண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு செயலாளரின் வாழ்த்துச்செய்தி

வவுனியா வடக்கு பிரதேச கலாசாரப் பேரவையால் வருடந்தோறும் வெளியிடப்படும் "மருதமுகிழ்" மலருக்கான வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இம்மலரில் வவுனியா வடக்குப் பிரதேசத்தின் தொன்மையைப் பிரதிபலிக்கின்ற ஆய்வுக்கட்டுரைகள், உள்ளூர் கலைஞர்களின் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாட்டுப்புற இலக்கிய ஆய்வுகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் சமூக, பண்பாட்டு அம்சங்களைப் பிரதிபலிக்கின்ற வகையில் அமைந்துள்ளமை சிறப்பாகும்.

பிரதேச மக்களின் ஆற்றல்களுக்கு களம் அமைத்துக் கொடுக்க வேண்டிய கடப்பாட்டை பிரதேச செயலகங்கள் கொண்டிருக்கின்றன. ஆந்த வகையில் தமிழர் பண்பாடுகளையும் பாரம்பரியங்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடன் இச்செயற்பாட்டினை முன்னெடுத்து வரும் பிரதேச செயலாளர் கலாசார உத்தியோகத்தர் மற்றும் கலாசார பேரவையினர் அனைவருக்கும் எனது நல்வாழ்ததுக்களை தெரிவித்துக்கொள்வதுடன் இம்மலரானது தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இ.இரவீந்திரன்
செயலாளர்,
கல்வி, பண்பாட்டலுவல்கள்,
விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு,
வடமாகாணம்.
23.08.2017



## வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளரின்
## வாழ்த்துச்செய்தி

வவுனியா வடக்கு பிரதேச கலாசாரப்பேரவையினால் மருதமுகிழ் மலர்-07 வெளியிடுவதை முன்னிட்டு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

மனித இருப்பின் தனித்துவ அடையாளங்களை வெளிப்படுத்தும் பண்பாட்டு செல்நெறிகளில் எமது மக்களின் பண்பாடு தனித்துவமிக்கது. இவற்றின் சிறப்புக்களை எடுத்தியம்பும் கலைகள், சடங்குகள், பழக்கவழக்கங்கள் மற்றும் இன்னோரன்ன விடயங்களை பதிவிடும் நோக்குடன் வருடாந்தம் கலை இலக்கிய விழாவும் அத்துடன் எழுத்தாளர்களின் ஆக்கங்களினை உள்ளடக்கி வெளியிடப்படுகின்ற இம் மலரானது சிறப்பு மிகு வவுனியா வடக்குப் பிரதேசத்தின் தொன்மையினையும் பல்துறை சார்ந்த வளர்ச்சியையும் பண்பாட்டினையும் பிரதிபலிக்கும் ஆவணமாகவும் திகழ்கின்றது. இது காலத்தின் தேவையாகவும் உள்ளது.

மருதமுகிழ் மலர்-07 மலர்வதற்கு அயராது உழைத்த மலர்க்குழுவினர் மற்றும் கலாசாரப்பேரவையினரின் முயற்சி மேலும் தொடரவும் மலர் மலர்ந்து மணம் பரப்பவும் எனது பாராட்டுக்களையும் வாழ்ததினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. அபிராமி. பாலமுரளி
உதவிப்பணிப்பாளர்,
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - වවුනියාව

மாவட்டச் செயலகம் - வவுனியா

DISTRICT SECRETARIAT - VAVUNIYA

ආයතන අංශය | தாபனப்பிரிவு | ESTABLISHMENT BRANCH


General 024-2222233 | Govt Agent 024-2222235 | Addl. Govt Agent 024-2222260 | Administrative Officer 024-2222106

Fax 0242222212 | E-mail gavavuniya@gmail.com | Web Site www.vavuniya.dist.gov.lk


My No GA/VA/PA/GEN | Your No | Date 2017.10.11



## “மருதமுகிழ்” சஞ்சிகை வெளியீட்டிற்கான வாழ்த்துச் செய்தி

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் கலை இலக்கிய விழாவினை முன்னிட்டு இவ் வருடமும் வெளியிடப்படவுள்ள “மருதமுகிழ்” சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேசத்தையும் அதன் சமூக பண்பாட்டு கலை கலாசார அம்சங்களையும் பிரதிபலிக்கும் வகையில் இம்முறையும் இச் சஞ்சிகை வெளியிடுவதனை வரவேற்பதுடன் தற்போதைய இளம் சமுதாயத்தினரின் நாகரிக போக்கும், நவீன தொழில் நுட்பங்களிலுள்ள அக்கறையின் காரணமாகவும் எமது பாரம்பரிய கலை கலாசார அம்சங்கள் தொடர்பான ஆர்வம் குறைவாகவே உள்ளது. எனவே இவ்வகையான சஞ்சிகைகளின் வெளியீடானது தற்போதைய சமுதாயத்திற்கு மிக அத்தியாவசியமான ஒன்று என நான் கருதுகிறேன்.

இச் சஞ்சிகையானது மிகச்சிறந்த படைப்புக்களை தருவது மட்டுமல்லாது தற்போதைய இளம் சமுதாயத்தினரது மிகச்சிறந்த ஆக்கங்களையும் உள்ளடக்கியதாக அமைவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

பாரம்பரிய கலை கலாசார விழுமியங்களை பாதுகாக்கும் வகையில் தற்போதைய நவீனயுகத்திலும் இவ்வகையான தரமான ஆக்கங்களைக் கொண்ட சஞ்சிகையினை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் “மருதமுகிழ்” சஞ்சிகைக் குழுவினரை பாராட்டுவதுடன் எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

எம்.பி.ஆர்.புஷ்பகுமார,
மாவட்டச் செயலாளர்,
வவுனியா.

"The best reward for us is the appreciation of service receiver"



பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் வவுனியா வடக்கு

## வாழ்த்துரை

வவுனியா வடக்கு கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் கலாசாரப் பெருவிழா 09.11.2017 நெடுங்கேணி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எமக்கு கடந்த ஆறு வருடங்களாக பல்வேறு இசைநாடகங்களைத் தயாரித்து மெருகேற்றிய கலாபூசணம் திரு. இ.தைரியநாதன் அவர்களின் இழப்பு பேரிழப்பாகும். தற்பொழுது தைரியநாதன் போன்ற கலைஞர்களைக் காண்பது முயற்கொம்பாகவுள்ளது.

எமது பாரம்பரியக் கலைகளை அழிய விடாது பாதுகாக்கின்ற கடமை எங்கள் எல்லோரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.வன்முறை சார்ந்த திரைப்படங்களை இளம்தலைமுறையினர் பார்த்து அதுதான் வாழ்வென தமது வாழ்க்கைப் போக்கினை மாற்றி அமைதியாக வாழ முனைகின்ற சமூகங்களுக்கு அச்சுறுத்தலாக இருந்து வருவதை நாங்கள் காணக்கூடியதாகவிருக்கின்றது. கலை என்பது மக்களின் வாழ்வில் நன்மை தரக்கூடிய மாற்றங்களைக் கொண்டு வருவதும் மனச்சுமைகளைப் போக்கின்ற நல்ல பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும். அதைவிடுத்து கலை என்ற போர்வைக்குள் மலினமான விடயங்களை முன்னுரிமைப்படுத்துகின்ற அந்த கலைஞர்களை தமது முன்னோடியாக வரிந்து கொண்டு வன்முறைகளில் ஈடுபடுவதையும் தடுத்து நிறுத்துவதற்கு எம்மால் பாரம்பரியமாக வளர்க்கப்பட்டு வந்த கிராமியக்கலைகளான நாட்டார் பாடல், கும்மி, கோலாட்டம், கூத்துவடிவங்கள், புராணநாடகங்கள், கதாகாலாட்சேபம், வில்லுப்பாட்டு, கோலாட்டம், சிந்துநடைக் கூத்துக்கள் போன்ற கலைவடிவங்களூடாக மக்களின் ரசனைகளை மாற்றி நல்லதொரு ஆரோக்கியமான சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும். இதற்காக சகலரும் ஒன்றுசேர்ந்து உழைக்க வேண்டுமென அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு.க.பரந்தாமன்**
பிரதேச செயலாளர்,
வவுனியா வடக்கு

மருதமுகிழ்



உதவிப் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம் வவுனியா வடக்கு

# வாழ்த்துரை

வவுனியா வடக்கு பிரதேச செயலக கலாசார பேரவையினால் கலாசார விழாவை முன்னிட்டு வருடந்தோறும் வெளியிடப்படும் மருதமுகிழ் சஞ்சிகையானது இந்த வருடமும் தனக்கேயுரிய சிறப்பம்சங்களை தாங்கி வெளிவருகின்றது. வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கலைஞர்களின் ஆக்கங்களை தாங்கியும் எமது பிரதேசத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தியும் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட வளங்களோடு வாழ்வியலை தொடரும் எமது மக்களினதும் மண்ணினதும் சிறப்பினையும் தனித்துவத்தினையும் ஆவணப்படுத்தும் சிறந்த ஒரு ஆவணம் எனும் பெருமையை இந்த மருதமுகிழ் நூல் தாங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பிரதேசத்தின் தொன்மையையும் மகிமையும் தாங்கி வெளியிடப்படும் இந்நூல் தனது சீரிய நோக்கத்தினை எய்கவேண்டும் என்று வேண்டி வவுனியா வடக்கு கலாச்சார பேரவையின் இம்முயற்சியானது இடையறாது சிறப்புடன் தொடரவும் வாழ்த்தி நிற்கின்றேன்.


**திருமதி.நி.கேதீசன்**
உதவிப்பிரதேச செயலாளர்
பிரதேச செயலகம்
வவுனியா வடக்கு



வன்னித் தமிழர் சமூக கலாசார அமைய தலைவர்
அவர்களின்

# வாழ்த்துரை

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற அசாதாரண போர் நடவடிக்கை காரணமாக பேரழிவுகள் இடம் பெற்றமையை அனைவரும் அறிவீர்கள். இந்தப் போர் நடவடிக்கையினால் அதிகளவான தமிழ்க்கிராமங்கள் மட்டுமன்றி மக்களின் வாழ்வியல், மாணவர்களது கல்வி, மக்களின் கிராமியக் கலைகள், கலாசாரம், விவசாய விளைநிலங்கள், கைத்தொழில் நடவடிக்கைகள், பல பயன் தரு பல்லாண்டுப் பயிர்கள், வரலாற்று இடங்கள் போன்றவற்றையும் பெருமளவான மக்களையும் இழந்து வடக்கு, கிழக்குபிரதேசங்கள் காணப்பட்டன.

இப்படியாகப் பல்வேறு துறை அழிவுகளைச் சந்தித்தும், தற்பொழுது எஞ்சியுள்ள மக்கள் பல இன்னல்களுக்கு மத்தியிலும் தம் வாழ்வைத் திரும்பவும் முதலில் இருந்து ஆரம்பித்து நகரத் தொடங்கியுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் பிற்பாடான மீள் குடியேற்றத்திற்கு பின்பு வவுனியா வடக்கு வலயத்திற்கான நெடுங்கேணிப் பிரதேச செயலகமும், பிரதேச செயலாளரும் எடுத்த முயற்சியின் பயனாக உருவாக்கப்பட்ட இவ் வவுனியா வடக்குகல்வி, கலாசார அபிவிருத்தி நம்பிக்கை நிதியத்தினால் இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரம் மட்டுமன்றி, கல்வி, கலை, கலாசார, தெய்வீக வழிபாடு போன்றவற்றில் கூட முன்னேற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துள்ளது எனக் கூறிக்கொள்வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

பிரதேச செயலக பணியாளர்கள் உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்களுடன் மட்டுமன்றி, புலம் பெயர் உறவுகளுடனும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களுடனும் நல்ல உறவைப் பேணி அவர்கள் ஊடாக பல உதவிகளை இப்பிரதேசத்துக்கு பெற்றுக் கொடுத்து வருகிறார்கள். அந்த வகையில் எமது அமைப்பான "கனடா வன்னித் தமிழ்ச் சமூக கலாசார அமையம்" கடந்த பல ஆண்டுகளாக கிராம மட்டத்தில் பெற்றோர்களில் ஒருவரையோ அல்லது இருவரையோ இழந்த மாணவர்களின் கல்வியைத் தொடர்வதற்கான நிதியுதவி, பெண் தலைமைத்துவத்தை கொண்ட குடும்பங்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்குமான வாழ்வாதாரத் திட்டங்களை இவர்களுடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தியவர் என்ற வகையிலும், நானும் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவன் என்ற வகையிலும் அவர்களது சிறப்பான செயற்பாடுகளை நன்கறிவேன். இவர்களின் இச்சேவை மக்களுக்கு மென்மேலும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்றும் "மருதமுகிழ்" சஞ்சிகையும், இக்கலாச்சார விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற வேண்டுமெனவும் மனதார வாழ்த்துகிறேன்.

நன்றி

தலைவர்
**பொ.சிவசுதன்**



# மலராசிரியரின் இதயத்திலிருந்து....

வவுனியா வடக்கு கலாசாரப் பேரவையானது வருடந்தோறும் "மருதமுகிழ்" மலரினை வெளியிட்டு வருகின்றது. ஏழாவது ஆண்டிலே மலர்ந்துள்ள இம் மலரில் முகிழ்ந்துள்ள ஆக்கங்கள் இம்முறையும் பயனுள்ளதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

கிராமியப்பண்பாடுகள் எமைவிட்டுநீங்கிக்கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் எமது இருப்பினை அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்ல வேண்டி அவசரமும் அவசியமும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்றைய காலகட்டத்தில் எமது பண்பாடு என்று சொல்லுமளவிற்கு எந்த எச்சமும் எம்மிடம் மிச்சமில்லாது போய்விடக் கூடிய அபாய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இதற்கு பல காரணங்கள் புறத்தாக்கங்களைச் செலுத்தினாலும் இச்சமுதாயத்தில் வாழும் எம் எல்லோரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ள இப் பாரிய பொறுப்பினை நாம் தோள் சுமக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

வருடந்தோறும் நடாத்தப்படும் கலை இலக்கிய விழாவில் வெளியிடப்படும் மருதமுகிழ் இம்முறையும் சிறந்த படைப்பாளிகளின் ஆக்கங்களை தாங்கி வெளிவருவதுடன், இந்நூல் வெளிவருவதற்கு உந்து சக்தியாக இருக்கின்ற எமது பிரதேச செயலாளர் திரு.க.பரந்தாமன் அவர்கள் மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதியுதவியும் ஆலோசனையும் எமக்கு பக்கத்துணையாக என்றும் இருப்பதுடன் பக்க பலமாக இருக்கின்ற அனைவருக்கும் மனப்பூர்வமான நன்றியினையும் வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.விஜிதா செல்வகுமார்.
கலாசார உத்தியோகத்தர்.
வவுனியா வடக்கு.



# வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேச போக்குவரத்து

- அருணா செல்லத்துரை -

இலங்கையில் அடங்காப்பற்று வன்னிப் பிரதேசம் புராதன வரலாற்றைக் கொண்டது. கி.பி.1505 ஆண்டுகளுக்குப் பின்னர் இலங்கையில் அந்நியர் ஆட்சி ஆரம்பித்துள்ளது. இதில் வடபுலத்தில் 1545 ஆண்டு தொடக்கம் போர்த்துக்கேயரும், 1658ம் ஆண்டு தொடக்கம் ஒல்லாந்தரும், 1795ம் ஆண்டு தொடக்கம் ஆங்கிலேயரும் நிர்வாகம் செலுத்தியுள்ளனர்.

ஆங்கிலேயருடைய ஆட்சிக் காலமான கி.பி.1810-12 களில் புராதன அடங்காப்பற்று - வன்னிப் பிரதேசத்தில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளப் பெருக்கு போன்ற வற்றால் அநேகமான குளங்கள் உடைப் பெடுத்துள்ளன. இதன் காரணமாக மலேரியா, கொள்ளை நோய், காட்டுக் காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய்கள் பரவின. இதற்கு போதிய தடுப்பு நட வடிக்கைகள் எடுப்பதற்கு அக்காலத்தில் இருந்த அரசியல் குழப்பங்கள் காரணமாக இருந்துள்ளன. இதனால் அநேகமான மக்கள் இந்தப் பிர தேசத்திலிருந்து இடம் பெயர்ந் திருந்தனர். உடைப் பெடுத்த குளங்கள் இருந்த பிரதேசங்களில் அநேகமான பிரிவுகள் காடுகளாக மாறின.

இதனை கி.பி.1933 களில் செ.இராசநாயகம் முதலியார் அவர்கள் தமிழில் எழுதிய யாழ்ப்பாணச் சரித் திரம் என்ற நூலில் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார். "வன்னி நாட்டிலுள்ள குளங்கள் ஆண்டுகள் தோறும் உடைந்து வர, அவைகளை திருத்திக் கட்டுவோரின் மையால் வேளாண்மையும் குறைந்து வந்தது. காட்டுக் காய்ச்சலும் அக்காலத்தில் வன்னி நாட்டில் காலூன்றத் தொடங்கியது".

"ஒரு காலத்திலே செழிப்புஞ் செல்வமும் பெற்று உன்னத நிலை யிலிருந்த "வன்னிநாடு" காட்டுக் காய்ச்சலின் உக்கிரத்தை தடை பண்ண வேண்டிய முயற்சிகளில் அரசினர் தலையிடாத காரணத்தால் "இப் போது மனித சஞ்சாரமற்ற வனாந்திர மாகி யாழ்ப்பாண வளனை ஓங்க விடாது சீர்கெடச் செய்யும் ஓர் உதிரமற்ற உடலாகக் கிடக்கின்றது" (யா.ச.பக்கம் 161)

பின்வந்த அநேகமான வரலாற்று ஆசிரியர்கள் காட்டு வளம் நிரம்பியது வன்னிப் பிரதேசம் என்று குறிப்பிட்டிருப்பது துரதிருஸ்ட ஷமானதாகும். பிற காலத்தில் காட்டு வளம் என்பது மாறி காடு என்று குறிப் பிட்டிருப்பதும், "காடு" என்ற சொல்லுக்கு ஒத்த கருத்துள்ள சொல் "வனம்" என்றும், "வனம்" என்ற சொல்லில் இருந்து "வன்னி" என்ற பெயர் வந்ததாகவும் பல வரலாற்றாசிரியர்கள் எழுதியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

**அடங்காப்பற்று** - வன்னி பற்றிய வரலாறுகள் : அந்நியர் ஆட்சிக் காலத்தில் எழுதப்பட்ட குறிப்புகள் வன்னியின் புராதனத்தை உணர வைக்கின்றன. அடங்காப்பற்று - வன்னிபற்றி 1793ல் லெப்ரினற். தோமஸ் நாகெல் அவர்கள் எழுதிய நிர்வாககாலக் குறிப்புகள், 1795ல் ஆங்கிலத்தில் ஆர்.ஜி.அந்தோனிஸ் அவர்கள் எழுதிய டச்சு அறிக்கைகள், 1849லும் 1859லும் சார்ள்ஸ் பிரிட்ஹாம் எழுதிய நூல்கள், 1879ல் சி.பிறிற்றோ

அவர்கள் ஆங்கிலத்தில் வெளியிட்ட யாழ்ப்பாண வைபவ மாலை, 1895ல் ஜே.பி.லூயிஸ் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய வன்னிபற்றிய கைநூல், 1899ல் ஆர்.இ. ஐவர்ஸ் எழுதிய வடமத்திய மகாண கைநூல், மற்றும் றொபேர்ட் நொக்ஸ் அவர்கள் 1660-1679 வரை தமக்கு ஏற்பட்ட அனுபவங்களை எழுதிய நூல் 1903லும் வெளியிடப் பட்டுள்ளள. 1913ல் ஜே.பி.லூயிஸ் அவர்கள் எழுதிய வரலாற்று நினைவுச் சின்னங்கள் என்ற மற்றுமொரு ஆங்கில நூல் போன்றவற்றில் அடங்கப் பற்று வன்னி பற்றிய விபரங்களடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1915ல் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம், 1918ல் மெஸ். வேலுப்பிள்ளை அவர்கள் தொகுத்த யாழ்ப்பாண வைபவ கௌமுதி, 1923ல் ஜோன்.எச் மார்ட்டின் அவர்கள் ஆங்கிலத்தில் பட்டியலிட்ட யாழ்ப்பாணக் குறிப்புகள், 1929ல் ஆர்.ஜி.அந்தோனிஸ் அவர்கள் தொகுத்து எழுதிய இலங்கையில் டச்சுக்காரர் என்ற நூல், 1928ல் சுவாமி ஞானப்பிரகாசர் எழுதிய யாழ்ப்பாண வைபவ விமர்சனம், 1933ல் செ.இராசநாயகம் முதலியார் தமிழில் எழுதிய யாழ்ப்பாணச் சரித்திரம் மற்றும் வையாபாடல் போன்ற நூல்களில் ஆங்காங்கே வன்னி பற்றிய விபரங்கள் காணப்படுகின்றன.

**வன்னிக் கைநூல்** : மேற்காட்டிய நூல்களுக்குள் வன்னிபற்றி மட்டும் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட நூலாக ஜே.பி.லூயிஸ் அவர்கள் எழுதிய "வன்னிக் கைநூல்" காணப்படுகிறது. இதில் லூயிஸ் அவர்கள் தனது கடமையின் நிமித்தம் எழுதிய குறிப்புகள் அடங்கியுள்ளன. அத்தோடு வவுனியா கச்சேரியில் தலைமை எழுது வினைஞராகவும், முல்லைத் தீவுக் கச்சேரியில் 16 வருடங்கள் மொழி பெயர்ப்பாளராகவும் கடமையாற்றிய திரு. கே.தில்லையம்பலம் அவர்கள் தொகுத்துக் கொடுத்த வன்னியின் வரலாற்றுச் சம்ப வங்களை அடிக் குறிப்பாகவும் இந்த நூலில் சேர்த்துள்ளமை சிறப்பம்சமாகும்.

**வழிபாடுகள்** : இராவணனுடைய பரம் பரையினரான இயக்கர்கள், நாகர்கள் குளங்களைக் கட்டி அதன் மூலம் நீர்ப்பாசனம் செய்து விவசாயச் செய்கையில் தலைசிறந்தவர்களாக இருந்தார்கள் என்று புராதன வரலாறுகள் சுட்டிக் காட்டுகின்றன. இயக்கர்கள் இலிங்க வழிபாட்டையும் நாகர்கள் ஐந்துதலை நாக வழிபாட்டையும், இயக்கர் நாகர் சேர்ந்து நாக-லிங்க வழிபாட்டையும் ஆரம்பித்துள்ளமைக்கு ஆதாரங்கள் உள்ளன. இதே நேரம் ஒற்றைத் தலை நாக வழிபாடு, "நாக தம்பிரான்" என்ற பெயரில் ஆரம்பமாகியுள்ளது. மேல்பற்று பிரதேசத்திலுள்ள பாரம்பரிய வழிபாட்டு தலங்கள் மேல்பற்றின் புராதன பாரம்பரியத்திற்கு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

**குளங்கள்** : அடங்காப்பற்று வன்னிப் பிரதேச வரலாற்றின் தொன்மைத்தன்மை இங்குள்ள குளங்களின் வரலாற்றோடு ஒட்டியுள்ளது. இந்தப் பிரதேசத்தில் உள்ள நீர்ப்பாசன முறை மிகவும் சிறப்பு வாய்ந்ததென ஆங்கில அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இப் பகுதியில் ஊற்றெடுத்துப் பாய்ந்த ஆறுகளை மறித்து அணைக் கட்டுக்களைக் கட்டி விவசாயச் செய்கைக்கு நீர்ப்பாசனத்தை பெற்றுள்ளனர். குளங்களைக் கட்டுவதற்கு கருங்கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதனால் அநேகமான குளங்கள் "அலை கல்லுப் போட்ட குளம்" மற்றும் "அடுக்குக் கல்லுக் குளம்" என்ற பெயர்களால் அழைக்கப் பட்டுள்ளன. குளங்களின்

கட்டுகள் அரிக்கப் படாமல் இருப்பதற்காக கருங்கற்களை அடுக்கியும், நீரை வெளி யேற்றும் துருசுக்கும், வானுக்கும் கருங்கற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. துருசு மற்றும் வான் ஆகியவற்றில் உள்ள கருங் கற்களின் தேய்மானத்தைப் பொறுத்தே குளங்கள் கட்டப்பட்டதற்கான காலத்தை தீர்மானிக்கக் கூடியதாக இருந்ததென ஆங்கில ஆய்வாளரான பார்க்கர் தெரிவித்துள்ளார்.

**வன்னிப் பிரதேச பிரிவுகள் :** அடங்காப் பற்று வன்னிப் பிரதேசம், புராதன காலத்தில் கமங்களாகவும் (பண்ணைகள்) வயல் வெளிகளாகவும் மூலைகளாகவும், பிரிக்கப் பட்டிருந்தன. கி.பி.1545ம் ஆண்டுகளில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணப் பிர தேசத்தில் தமது ஆட்சியை நிலை நாட்டத் தொடங்கினர். முதலில் மன்னாரைக் கைப் பற்றியிருந்தனர். போர்த்துக்கேயருடைய ஆட்சிக் காலத்தில் ஒவ்வொரு தேவாலயத் திற்கும் கட்டுப்பட்டதாக பிரதேசங்கள் பிரிக்கப் பட்டன. இந்தப் பிரிவுகள் "Parish" என்ற பெயரில் அழைக்கப்பட்டன. தேவாலயத்திற்கு அடங்கிய பகுதியின் தமிழ்ப்பதமாக "பற்று" என்று அழைக்கப் பட்டது. இதில் மேல்பற்றும் ஒரு பிரிவாகும்.


**மேல்பற்று :** அந்நியர்களின் வரலாற்றுக் குறிப்புகளின்படி "மேல்பற்று" என்பது அன்னதேவன்மடு, குளவிசுட்டான், பெரிய பூவரசங்குளம், மதியாமடு, துவரநேரி, வீர நாரயண முதலியாகுளம், மூன்று முறிப்பு, கத்திரிக்குளம், ஆகிய பகுதிகளைக் குறிக்கும். அந்நியர்கள் வருகைக்கு முன்னர் தட்டாமலை, புதுக்குளம், மகிழமோட்டை, அன்னதேவன்மடு, குளவிசுட்டான், பெரிய பூவரசங்குளம், மதியாமடு போன்ற இடங்கள் முள்ளியவளைக்குச் சேர்ந்ததாகவும் இருந்துள்ளன. பின்னர் இந்த இடங்களில் சில பிரிவுகளும் கிழக்குமூலைப் பிரிவுகளில் இருந்த சில பிரிவுகளும் மேல்பற்றில் சேர்க்கப்பட்டன.

மேல்பற்று என்ற பெரும்பிரிவு அந்நியருடைய ஆட்சி காலத்தில் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. மேல்பற்று கிழக்கிலும், தெற்கிலும், வடக்கிலும் பல புராதன வரலாற்றிடங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு நெடுங்கேணி பிரிவுக் காட்டுப் பகுதிக்குள் பல புராதன சின்னங்கள் ஆய்வுகளுக்கு உட்படுத்தப் படாமல் இருக்கின்றன.

புராதன காலத்தில் நெடுங்கேணியும் வீதிகளும் : ஒரு பிரதேசத்தின் வளர்ச்சியில் அந்தப் பிரதேசத்தின் போக்குவரத்திற்கு அவசியமான வீதிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. புராதன காலத்தில் இருந்து இந்தப் பிரதேசத்தில் போக்குவரத்துக்காக ஒற்றையடிப் பாதைகளும், மரத்தினால் செய்யப்பட்ட இரட்டைச் சில்லு வண்டில்கள் போவதற்கான பாதைகளும் இருந்தன.

இந்தியாவிலிருந்து பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போது கிழக்குக் கரையோரமாக வந்த பக்தர்கள் கண்டி தலதா பௌத்த தலத்திற்கு வழி பாட்டிற்காகச் சென்றுள்ளனர். கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் தமிழ் பௌத்தர்கள் முல்லைத் தீவிலிருந்து சுமார் 15 கிலோமீற்றர் தொலைவில் உள்ள செம்மலைக்குடாவில் இறங்கி, அங்கிருந்து அனுராதபுரம் செல்வதற்கு பல நடை பாதைகள் இருந்துள்ளன. இந்த பாதைகளில் இருந்த கிராமங்களாக குருந்தனூர்மலை, சின்ன இத்திமடு, பெரிய இத்திமடு, திரவியமலை, அலைகல்லுப்போட்ட குளம் (பண்டாரக்குளம்) அன்னதேவன்மடு, குளவி சுட்டான் மற்றும் கும்பகன்னன் மலை, அரியாமடு, ஒதியமலை கூழான்குளம்






போன்றவை குறிக்கப் பட்டுள்ளன. தமிழ் பௌத்தர்கள் இந்தக் கிராமங்களினூடாக சேமமடுவை வந்தடைந்து அங்கிருந்து ஓமந்தை, மடுக்கந்தை வழியாக அனுராதபுரம் சென்றதற்கான குறிப்புகள் இருக்கின்றன.

**அன்னதேவன்மடு** : அந்நியராட்சியின் ஆரம்பத்தில் நெடுங்கேணிப் பகுதியில் புராதன வீதிகளின் முக்கிய சந்தியாக அன்னதேவன் மடு இருந்துள்ளது. அன்னதேவன் மடுவிலிருந்து வடக்கே ஒட்டு சுட்டானுக்கும் மேற்கே கனகராயன்குளம் ஊடாக விடத்தல்தீவிற்கும், தெற்கே குளவிசுட்டான் ஊடாக நயினாமடுவிற்கும் செல்வதற்கான வீதிகள் அமைந்திருந்தன.

கி.பி.1783களின் பின்னர் வன்னியில் ஒல்லாந் தருடைய நேரடி நிர்வாகம் ஆரம்பித்தது. வன்னிப் பிரதேசத்திலிருந்த வன்னியனார்கள் திறைகளை முறை யாகச் செலுத்தாத காரணத்தால் முல்லைத்தீவு, அன்னதேவன் மடு, பூவரசங்குளம், பனங்காமம், சுண்டிக்குளம், விடத்தல்தீவு போன்ற பல இடங்களில் நெற்களஞ்சியங்களை அமைத்து, தமக்கு வரவேண்டிய திறைகளைச் சேகரிக்க ஒல்லாந்தர் நடவடிக்கை எடுத்திருந்தனர். அத்தோடு விடத்தல் தீவிலிருந்த பிரதான அரச அலுவலகங்களோடு தபால் தொடர்புகளை நடத்தவும் அன்னதேவன் மடு சந்தியாக இருந்துள்ளது. இதனால்தான் அன்னதேவன் மடுவில் ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடர்ச்சியாக நெற் களஞ்சியத்தை வைத்திருந்து திறைகளைச் சேகரித்து வந்தனர். அன்னதேவன் மடுவைச் சுற்றி மூன்று குளங்கள் இருக்கின்றன.

**01. படம் : அன்னதேவன்மடுவில் குளம்.**

இங்கு நெற்களஞ்சியம் இருந்த காலத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கட்டடங்களும் கிணறுகளும் இருந்துள்ளன. அங்கிருந்த அலுவலகங்களைச்சுற்றி பூவரசு மரங்கள் நடப்பட்டு மிகவும் அழகாக இருந்ததாக ஆங்கிலக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. தற்போது கட்டிடங்களின் அடையாளமாக சிதைந்து செங்கட்டிகளும் கைவிடப்பட்ட கிணறுகளும் காணப்படுகின்றன. அந்தக் காலத்தில் நடப்பட்ட பூவரசு மரங்கள், காட்டின் நடுவே இருநூறு வருடங்களின் சான்றாக இருக்கின்றன.

**02. படம் : அன்னதேவன்மடுவில் பூவரசு மரம்**

கி.பி.1811ல் மேற்குமூலை பண்டார இலுப்பைக்குளத்தில் பண்டாரம், வன்னியனார் காலமானார். அதன் பின்னரே இந்தப் பிரதேசத்தில் சிவில் நிர்வாகமும், அபவிருத்தி வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1813 களில் அன்னதேவன் மடுவில் சுற்றிவர உள்ள குளங்களினால் அதிக ஈரலிப்புத்தன்மை காணப்படுவதால் நெற்களஞ்சியத்தை அங்கு வைத்திருக்க முடியாது என்று ஆங்கிலேய அதிகாரி திரு. போயிட் அவர்கள் சிபார்சு செய்தார். அதனால் நெற்களஞ்சியம் கைவிடப்பட்டது மட்டுமல்ல அங்கிருந்த அலுவலகங்களும் மூடப்பட்டன.

முல்லைத்தீவு செம்மலையில் இருந்து பண்டாரக்குளம் ஊடாக அன்னதேவன்மடு சந்திவரை சென்ற வீதியும் கைவிடப்பட்டு திருத்தப்படாமல் இருந்தது. புதிய வீதிகள் அமைக்கும் திட்டத்தின் கீழ் நெடுங்கேணி ஊடாகச் செல்லும் போக்குவரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

நெடுங்கேணியும் வீதிகளும் : மேல்பற்று வடக்கில் முக்கிய வழிபாட்டுத்தலங்கள் இருந்த காரணத்தால் பிற்காலத்தில் இதன் பிரிவுகளும் மாற்றப் பட்டுள்ளன.

தற்போது நெடுங்கேணி முக்கிய சந்தியாக மாற்றம் பெற்றுள்ளது. வவுனியா புளியங் குளத்திலிருந்து நெடுங்கேணி செல்லும் பிரதான வீதி பல முறை திருத்தி அமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

1854ல் முல்லைத் தீவிலிருந்து நெடுங்கேணி ஊடாக புளியங்குளம் (கல்லொளுங்கன் புளியங்குளம்) வரை செல்வதற்கான வீதி அமைக்கப் பட்டு, முல்லைத்தீவு நகரம் பிரதான வீதியுடன் இணைக்கப் பட்டது. தண்ணியூற்று, கோடாலிக்கல்லு, தண்டுவான், நெடுங் கேணி, நயினாமடு, மதியாமடு, பரந்தன் (சன்னாசி) ஊடாக புளியங்குளம் செல்வதற்கான வீதி அமைக்கப் பட்டதாக குறிப்புகள் தெரிவிக்கின்றன.

1886களில் இந்த வீதியில் இருந்த காடுகள் பற்றியும், கைவிடப்பட்ட வயல் வெளிகள் பற்றியும் ஆங்கிலேய நிர்வாகியின் நாட்குறிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. வீதியில் 20 அடி அகலத்திற்கு காடுகள் துப்பரவு செய்யப்பட்டு திருத்தப் பட்டதாகவும், கிராமங்களை குறுக்கறுத்துச் செல்லும் இடங்களில் மட்டும் கிரவல் போடப் பட்டிருப்பதனால் மோட்டார் வாகனப் போக்குவரத்து கஷ்டமாக இருப்பதாக அதிகாரிகளின் நாட்குறிப்புகள் தெரிவிக்கின்றன. இதே காலப்பகுதியில் நெடுங்கேணியில் இருந்து கூழான்குளம் வரையிலுள்ள 10 மைல் தூரத்திற்கான வீதி அமைககப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் - நெடுங்கேணி வீதி 1873 - 1874 களில் அமைக்கப்பட்டது. இந்த வீதியை அமைக்கும் போது நீர்ப்பாய்ச்சல் கால்வாய்களும் ஆறுகளும் குறுக்கிடுவதால் வீதி அமைப்பில் சிரமங்களை எதிர் நோக்கியதாக குறிக்கப் பட்டுள்ளது. பண்டாரக்குளம் கிராமத்தினூடாக அன்ன தேவன் மடுவிற்குச் செல்லும் வீதியை இந்த வீதி குறுக்கறுத்து செல்கின்றது.

**03. படம் : பண்டாரக்குளம் சந்தி**

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் அபிவிருத்தி : ஆங்கிலேய நிர்வாகத்தின் ஆரம்பத்தில் பல அரசியல் குழப்பங்கள் ஏற்பட்ட காரணத்தினால் பிரதேசத்தில் புனரமைப்பு வேலைகளைச் செய்ய முடியாமல் போனதாக குறிப்பிடப் பட்டுள்ளது. 1950 களின் பின்னர் திட்டமிட்டு நடத்தப்பட்ட குடியேற்றங்களால் ஏற்பட்ட உள்நாட்டு எல்லைப்புற பிரச்சினைகள் காரணமாக, இந்தப் பிரதேச மக்கள் பல தடவைகள் இடம் பெயர்ந்தனர். இதனால் எல்லைப்புறக் கிராமங்கள் பல காடுகளாக மாறியுள்ளன. அத்தோடு எல்லைபுறக் கிராமங்களில் அநேகர் குடியேறாமல் விட்டதினால் காணிகள் பறிபோயுள்ளதையும் குறிப்பிட்டாக வேண்டும்.

அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் ஓரளவு அமை தியடைந்ததும் வவுனியா வடக்கு நெடுகேணியை மையமாகக் கொண்ட வீதிகளை புனரமைக்கும் நட வடிக்கைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளமை தெளிவாகிறது. மேல்பற்று வடக்கில் வாழ்ந்த மக்களில் அநேகர் நகர்ப் புறங்களை நோக்கி நகர்ந்துள் ளமையினால் அவர்களுடைய மனநிலையில் பல மாற்றங்கள் ஏற் பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாக இந்தப் பிரதேசத்தில் மீளக் குடியேறும் முயற்சிகள் மிகவும் மெதுவாகவே இடம் பெற்று வருகின்றன. வீதிகள் திருத்தி அமைக்கப் பட்டு கிராமங்கள் மீளக் கட்டியெழுப்பப்படும் போது, அந்தக் கிராமங்களின் அடையாளங்கள் மற்றும் வரலாறுகள் மறைந்தும் மாறியும் விடக்கூடிய வாய்ப்புக்களும் உண்டு.

**04. படம் நெடுங்கேணி வீதி**

தொடர்ச்சியாக 30 ஆண்டுகள் இடம்பெற்ற அரசியல் குழப்பங்களின் பின்னர் நெடுங்கேணியை ஊடறுத்துச் செல்லும் வீதிகள் செப்பனிடப் பட்டுள்ளன. இதனால் கரைதுறைப் பற்றிலிருந்து வவுனியா விற்குச் செல்லும் போக்குவரத்து நேரமும் சுருக்கப் பட்டுள்ளது. இது போல இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏனைய கிராமங்களுக்கான வீதிகளும் திருத்தப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கும், ஏனைய பிரதேசங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தொடர்பாடலை வளர்த்துக் கொள்வதற்கும், கல்வி அபிவிருத்திக்கும், அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள போக்குவரத்து வசதிகள் மிகவும் முக்கியமானதாகும். இந்த வசதிகளை பொதுமக்களும், அரச நிர்வாகிகளும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு முறையாகப் பயன்படுத்த வேண்டியது காலத்தின் தேவையாகும்.

**கட்டுரைக்கான படங்கள் :**

01. படம் : அன்னதேவன்மடுவில் குளம்.
02. படம் : அன்னதேவன்மடுவில் பூவரசு மரம்.
03. படம் : பண்டாரக்குளம் சந்தி.
04. படம் : நெடுங்கேணி வீதி

## வாழ்த்துகின்றோம்

வடமாகாண கல்விபண்பாட்டலவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 23.09.2017 நடாத்தப்பட்ட பண்பாட்டுப் பெருவிழாவில் புளியங்குளம், புரட்சிகவின் கலாமன்ற செயலாளர் திரு.குவேந்திரராஜா நவஜீவன் இசை நாடகத்துறைக்காக இளம் கலைஞர் விருதான முதலமைச்சர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையினை பாராட்டி வாழ்த்துவதில் வவுனியா வடக்கு கலாசாரப் பேரவை பேருவகை கொள்கின்றது.



# தமிழ் சிற்றிதழ்கள்

தமிழ்மணி.மேழிக்குமரன்

உலகில் உள்ள தொன்மையான மொழிகள் ஆறு. அவற்றில் இன்றுவரை நின்று நிலைத்து நிற்பது தமிழ்மொழி என்பது தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் பெருமை. உலகில் எட்டு மொழிகள் செம்மொழி எனப் போற்றப்படுகின்றன. அவற்றில் தமிழ்மொழியும் ஒன்று என்பதும் பெருமையே.

ஒரு மொழி செம்மொழி ஆக அங்கீகரிக்கப் படுவதற்கு பதினொரு தகுதிகள் இருக்க வேண்டும் என்று மொழியியல் வல்லுனர்கள் கூறுகின்றனர். அந்தப் பதினொரு தகுதிகளையும் கொண்டுள்ள தமிழ்மொழியில், தொன்மை வாய்ந்த இலக்கியக் கருவூலங்களைக் கொண்டிருப்பது மற்றய மொழிகளைவிட சிறப்பான தகுதியாக கணிக்கப்பட்டுள்ளது.

தமிழ்மொழிக்கான இலக்கிய வரலாறு என்பது தொல் காப்பியத்திலிருந்து ஆரம்பமாகிறது. அதன் வரலாற்றுப் பாதை என்பது தமிழர்கள் அறிவியல் சார்ந்து வாழ்ந்தவர்கள் என்பதனை பல இடங்களில் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆரம்பகாலங்களில் ஓலைச்சுவடிகளில் ஆவணப்படுத் தப்பட்ட நமது இலக்கியங்கள் ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின் புத்தகங்களாக ஆவணப் படுத்தப்பட்டன. இப்பெரும்பணியை உ.வே.சாமிநாதையர், ஆறுமுகநாவலர் போன்றோர் சிறப்பாகச் செய்து தமிழ் வரலாற்றில் இடம் பிடித்துள்ளனர்.

ஐரோப்பியர்களின் வருகைக்குப் பின்னரான தமிழ் இலக்கியங்களின் பரிணாம வளர்ச்சியாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், சிறுகதைகள், நாவல்கள், மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், தகவல் களஞ்சியங்கள் என கடந்தகால, நிகழ்கால இலக்கியங்கள் நூலுருவில் ஆவணப்படுத்தப்படுகின்றன.

இதில் சஞ்சிகைகள் என்றழைக்கப் படும் சிற்றிதழ்கள் காலத்தின் கண்ணா டியாக பெரும்பங்கு வகுக்கின்றன. சிற்றிதழ்களில் பெரும் பாலானவை வியாபார நோக்க கோடும், சுயவிளம்பர நோக்கோடுமே வெளிவருகின்றன. மிகக் குறைவாக சிற்றிதழ்களே ஆராக்கியமான கட்டுரைகளை தாங்கி மிகவும் கனதியாக சமூதாய விழிப்புணர்வை ஏற்படுத்துபவையாக திகழ்கின்றன.

1810ம் ஆண்டிலிருந்து தமிழ் சிற்றிதழ்களின் வரலாறு தொடங்குகிறது என்றாலும் 20ம் நூற்றாண்டில் இலக்கிய வளர்ச்சியும் அதனூடான சிற்றிதழ்களின் வளர்ச்சியும் நோக்கப் படுவது அவசியமாகிறது.

20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடத் தக்க பிறிதொரு அம்சம் வர்த்தக மயமாகாமை எனலாம். தமிழ்நாட்டைவிட ஈழத்தில் எழுத்தறிவு விகிதம் மிக அதிகம் எனினும் இங்கு வர்த்தகரீதியான பெரும் சஞ்சிகைகள் வளர்ச்சியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. தென் இந்திய வர்த்தக சஞ்சிகைகளின் சந்தையாக ஈழம் தொடர்ந்தும் இருந்து வருவதே இதன் காரணம் எனலாம். மலிவான ரசனைக்குத் தீனிபோடும் பொழுது போக்கு ரகக் கதைகள் தமிழகத்தில் மலிவாக உற்பத்தி செய்யப்பட்டு இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. நூல்வெளியீட்டு வசதியும், நூல் சந்தைப்படுத்தல் முறையும்

விருத்தி அடையாத நிலையில் அவற்றோடு போட்டி போடக்கூடிய அளவுக்கு இங்கு வர்த்தக இலக்கியம் வளர்ச்சி அடைய முடியவில்லை.

தமிழுலகில் இச் சிற்றிதழ்களின் வரலாற்றைப் பார்ப்போம். இச் சிற்றிதழ்கள் தமிழர்கள் வாழும் நாடுகளில் எங்கெல்லாம் வெளிவந்திருக்கின்றன என்பதனைப் பார்க்கலாம்.

**"இந்தியத் தமிழ் இதழ்கள்"**

இந்தியாவில் 357 இதழ்கள் வெளி வந்துள்ளன. அவற்றில்

**ஆனந்த போதினி**

1915 ஆம் ஆண்டு முதல் வெளியாகத் தொடங்கியது. நாகவேடு முனுசாமி முதலியார் இதனைத் தொடங்கினார். 1960கள் வரை வெளியானதாகத் தெரிகிறது.

இதற்குப் போட்டியாக 1925இல் ஆனந்தவிகடன் ஆரம்பிக்கப்பட்டது. இக் காலகட்டத்தில் கல்கி, குமுதம், ராணி, கலைமகள் போனற இதழ்கள் வெளிவந்தன.

**நவசக்தி**

1930களில் இந்தியாவில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் திரு. வி. கலியாண சுந்தரனார் ஆவார்.

**வந்தே மாதரம்**

இந்தியா தஞ்சையிலிருந்து 1944ம் ஆண்டில் வெளிவந்த ஓர் இசுலாமிய வார இதழாகும் ஆசிரியர் ஆ.ஜைனுலாதீன்

**அம்புலிமாமா**

தமிழ்நாட்டில் மிகவும் பிரபல்யமான தமிழ் சிறுவர் இதழ். 1947 யூலைமாதம் முதல் இதழ் வெளியானது. இன்றுவரை வெற்றிநடைபோடுகின்றது.

**ஈழத்தில் தமிழ் இதழ்கள்**

இலங்கையில் 216 தமிழ் இதழ்கள் வெளிவந்துள்ளன. இப்போது பதின்மூன்று தமிழ் இதழ்கள் வெளி வருகின்றன. வெளி வந்த இதழ்களில் சில

**இலங்கை நேசன்**

என்பது 1877 ம் ஆண்டு சின்னத்தம்பி அவர்களால் தொடங்கப் பட்ட இந்து சமய இதழ் ஆகும்.இதில் நாவலர் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

**மறுமலர்ச்சி**

இலங்கையின் வடமாகாணம் யாழ்ப் பாணத்திலிருந்து 1930ம் ஆண்டுகளில் வெளிவந்த ஒரு கலை, இலக்கிய இதழாகும். இதன் விலை 30 சதமாக இருந்தது. ஆசிரியர்கள் ஏ. எஸ். முருகநாதன், பீ. எஸ். வரதராஜன். பின்னால் மறுமலர்ச்சிக் கழகம் என்று ஆரம்பிக்கப்பட்டு புதுக்கவிதைக்கு வித்திட்டவர்களில் இவர்களும் உண்டு.

**சௌ சௌ**

மரக்கறி ஒன்றின் பெயரில் 1940களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ச. சௌந்தரராஜன் ஆவார்

**ஆத்மஜோதி**

ஆன்மீக மாசிகை ஈழத்தின் மலைநாட்டிலுள்ள நாவலப் பிட்டியிலிருந்து 1948ஆம் ஆண்டு அப்பொழுது ஆண்டு சந்தா மூன்று ரூபாய். நா.முத்தையா அவர்கள் ஆசிரியர்

**கம்யுனிஸம்**

இலங்கை கம்யுனிஸ்ட் கட்சியின் தத்துவ சஞ்சிகையாக 1960களில் வெளிவந்தது. இதன் முதல் இதழ் 1966ம் ஆண்டில் வெளிவந்துள்ளது. தனி இதழின் விலை 25 சதம் ஆசிரியர் நா. சண்முகதாசன்

**சிரித்திரன்**

1963ஆம் ஆண்டில் சி. சிவஞானசுந்தரம் (சிரித்திரன் சுந்தர்) அவர்களால் யாழ்ப்

பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட நகைச்சுவை இதழ். அன்னாரின் மறைவு வரை 32 ஆண்டு காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்தது. சிந்தனைச் சிறப்பாலும், கேலிச் சித்திரங்கள், கருத்தோவியங்கள் போன்ற படைப்புக்களாலும் ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் சிரித்திரன் சஞ்சிகை தனியிடத்தைப் பெற்றது. மகுடி பதில்கள் என்று மகுடமிட்டு சுந்தர் எழுதிய கேள்வி பதில்கள் ஒரு காலத்தில் பத்திரிகை உலகில் பலராலும் பேசப்பட்டு வந்தது.

மல்லிகை தமிழ் இலக்கியச் சிற்றிதழ்களில் மிக அதிக காலம் தொடர்ந்து வெளிவந்து சாதனை படைத்த மாத இதழாகும். 1966 ஆகத்து மாதத்தில் இதன் முதல் இதழ் வெளியானது. இதன் ஆசிரியர் டொமினிக் ஜீவா. மல்லிகை ஒரு முற்போக்கு மாத இதழ். நாற்பது ஆண்டுகளாக தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது. 400 க்கும் அதிகமான இதழ்கள் வெளிவந்துள்ளன.

சுடர் 1970களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் மாத இதழ் ஆகும். இதன் ஆசிரியர் கோவை மகேசன் ஆவார் சுடர் 1974ம் ஆண்டு வெளியீட்டில் எனது முதலாவது சிறுகதை வெளிவந்து பரிசு பெற்றது.

செந்தணல் இலங்கை யாழ்ப் பாணத்திலிருந்து 1980களில் வெளிவந்த ஓர் இதழாகும். அடுப்போடு வாழ்ந்த நெருப்புக்கள் நாங்கள். எரிப்பதற்காக எடுத்து வருகின்றோம் என்ற பணிக்கூற்றுடன் வெளிவந்த இவ்விதழ் ஈழம் பெண்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ இதழாக அமைந்திருந்தது.

தாயகம் 1980 களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் க. தணிகாசலம் ஆவார். இது மார்க்சியச் சிந்தனையை நாட்டு நடப்போடு பொருத்தி விளக்கிய முற்போக்குப் படைப்புக்களை வெளியிட்டது

மில்க் வைற் செய்தி 1980 களில் இலங்கையில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் க.சி.குலரத்தினம் ஆவார்

கொழுந்து ஈழத்தின் மலையகப் படைப்புகளுக்கு முக்கியத்துவ மளிக்கும் ஒரு சஞ்சிகையாகும். இது மலையக வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுகிறது. 1988 ஜனவரியில் இதன் முதலிதழ் வெளியானது. இதன் ஆசிரியர் அந்தனி ஜீவா

ஞானம் ஈழத்தில் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் ஒரு மாதாந்த இலக்கிய இதழ் ஆகும். இதன் ஆசிரியர் தி. ஞானசேகரன் ஆவார். ஞானம் முதல் இதழ் 2000 ஜுனில்வெளியானது.

அகவிழி கொழும்பு இராஜ கிரியவிலிருந்து வெளி வந்த கல்வியியல் மாத சஞ்சிகையாகும். ஆசிரியர் கே. மதுசூதனன் ஆகஸ்ட் 2004ல் வெளிவந்துள்ளது.

மாருதம் இலங்கை, வவுனியாவிலிருந்து வெளிவரும் ஒரு கலை, இலக்கிய மாத இதழாகும். இதன் முதல் இதழ் 2002ம் ஆண்டு சித்திரை மாதம் வெளிவந்தது. வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் ஆசிரியர்கள்: அகளங்கன், கந்தையா ஸ்ரீகணேசன்

ஜீவநதி யாழ்ப்பாணத்திலிருந்து மாதாந்தம் வெளிவரும் தமிழ் இலக்கியச் சிற்றிதழ் ஆகும். ஆகஸ்ட் 5, 2007 அன்று ஜீவநதியின் முதலாவது இதழ் வெளியாகியது. ஆசிரியர் கலாமணி பரணீதரன் ஆவார்.

**தற்போது இலங்கையில் இருந்து பதின்னான்கு சிற்றிதழ்கள் வெளி வருகின்றன. அவை**

**ஞானம்** கொழும்பு **மகுடம்** மட்டக்களப்பு **தாயகம்** சங்கானை **பிருந்தாவனம்** வவுனியா **மாருதம்** (ஆண்டிதழ்) வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம். **மருதமுகிழ்** (ஆண்டிதழ்) வவுனியா வடக்கு பிரதேச செயலகம் கலிங்கம் திருநெல்வேலி, **பனங்கூடல்** உடுவில் **ஜீவநதி** அல்வாய், **நங்கூரம்** திருநெல்வேலி கிழக்கு, **கலைமுகம்** திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம். **சுகமஞ்சரி** மருத்துவபீடம், யாழ் பல்கலைக் கழகம் **நந்தலாலா** ஹற்றன். **காற்புள்ளி** ஹற்றன்

**அமெரிக்கத் தமிழ் இதழ்**

அமெரிக்காவிலிருந்து ஒரு இதழ் வெளிவந்தது. அது **குமரி (வாசிங்டன் இதழ்)** 1980 களில் ஐக்கிய அமெரிக்காவில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ஜே.ஜோபிரகாஸ்

**அவுஸ்திரேலியத் தமிழ் இதழ்கள்**

அவுஸ்திரேலியாவிலிருந்து இரண்டு இதழ்கள் வெளிவந்தன அவை

**அக்கினிக்குஞ்சு (இதழ்)** 1990 களில் ஆத்திரேலியாவில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ச. பாஸ்கர்

**கலப்பை** (சஞ்சிகை) கலப்பை, அவுத்திரேலிய நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் உள்ள சிட்னி பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் அமைப்பினரால் ஜுலை 1994 இலிருந்து வெளியிடப்படும் காலாண்டு கலை இலக்கிய இதழாகும்.

**"ஐக்கிய அரபு குடியரசில் தமிழ் இதழ்"**

**தமிழன் குரல்** என்ற ஒரேயொரு இதழ் மட்டும் வெளிவந்தது. இது 1990 களில் ஐக்கிய அரபு குடியரசில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் கமால் பாட்சா.

**"ஐக்கிய இராச்சியம் (யு.கே.யில்) தமிழ் இதழ்கள்"**

பிரித்தானியாவை உள்ளடக்கிய ஐக்கிய இராச்சியத்திலிருந்து பதினொரு இதழ்கள் வெளிவந்தன. அவற்றில்

**லண்டன் முரசு** 1970களில் பிரித்தானியாவில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ச.ம. சதானந்தன் ஆவார்

**காற்றுவெளி** இலண்டனிலிருந்து வெளிவரும் ஓர் இதழ். காலவரையறை எதுவும் இன்றி அவ்வப்போது வெளிவரும் இவ்விதழின் ஆசிரியர் முல்லை அமுதன். இவ்விதழ் விளம்பரங்கள் எதுவும் இன்றி வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. 2009 ஏப்ரல் வரை 13 இதழ்கள் வெளி வந்துள்ளன. தற்போது இணைய இதழாகவும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

**நூலகவியல்** ஐக்கிய இராச்சியத்தின் லூட்டன் எனுமிடத்திலிருந்து 2005 இல் வெளிவந்த ஒரு காலாண்டு இதழாகும். அதன் முதலிதழ் 1985ம் ஆண்டு இலங்கையிலிருந்து வெளி வந்தது. ஆசிரியர் என்.செல்வராஜா இவர் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் நூல்களைத் தொகுத்து நூல்தேட்டம் என்னும் ஆவண நூலினை வெளியிட்டு வருகிறார். இதுவரை நூல்தேட்டம் ஏழு தொகுதிகள் வெளிவந்துள்ளன.

**"கனேடியத் தமிழ் இதழ்கள்"**

கனடாவில் முப்பத்திநான்கு (34) சிற்றிதழ்கள் வெளிவந்துள்ன. 1980களில் இருந்து இங்கு சிற்றிதழ்கள் வெளி வருகின்றன. அவற்றில்

**தமிழ் எழில்** 1983 ஒக்டோபரில் இல் கனடாவின் முதல் சஞ்சிகையாக வெளி வந்தது. இதன் ஆசிரியர் மூர்த்தி

**பறை** நமது தமிழ் சமூகத்தின் மீது அக்கறையுடைய தமிழ் விருப்பும் பகுத்தறிவு முனைப்பு முடையவர்கள்

இணைந்து பணியாற்றுவதற்கே இந்தத் தளம்" என்று முதல் இதழில் சொல்லி கனடாவில் வெளிவரும் சஞ்சிகையே பறை ஆகும். தீவிர தமிழ்த் தேசியம், பெரியாரியம், பிராமணிய எதிர்ப்பு, இறை மறுப்பு போன்ற அக்கறைகளைக் கொண்ட சஞ்சிகை. செப்ரம்பர் 2005,ல் முதல் இதழ் வெளியானது.

**எங்கள் ரொறன்ரோ** கனடாவில் ஆண்டுக்கு நான்குமுறை வெளிவரும் ரொறன்ரோ மாநகரத்தின் அதிகாரபூர்வ தகவல் இதழ். இது ஆங்கிலம், பிரேஞ்சு உட்பட 10 மொழிகளில் வெளிவருகிறது. தமிழிலும் இது வெளிவருகிறது. இதன் முதல் இதழ் 2008 இல் வெளிவந்தது. இது அச்சிடப்பட்டு ஒவ்வொரு வீட்டுக்கும் அனுப்படுகிறது. இதை இணையத்திலும் படிக்கலாம்.

### "சிங்கப்பூர் தமிழ் இதழ்கள்"

சிங்கப்பூரில் இருந்து இருபத்திமூன்று(23) சிற்றிதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றில்

**முன்னாஜாத்து திரட்டு** 1872 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் அச்சிடப்பட்ட முன்னாஜாத்து திரட்டு என்ற கவிதை நூலே பழமையான நூலாகும். இக்கவிதை நூல் நாகூர் முகம்மது அப்துல் காதிறுப் புலவரால் எழுதப்பட்டது.

**உதய சூரியன்** சிங்கப்பூரிலிருந்து 1943ம் ஆண்டில் வெளிவந்த ஒரு வார இதழாகும் ஆசிரியர் அறிஞர் கரீம் கனி

### "சுவிட்சர்லாந்துத் தமிழ் இதழ்கள்"

**குருத்து** என்னும் ஒரேயொரு சிற்றிதழ் சுவிட்சர்லாந்திலிருந்து வெளிவந்துள்ளது. 2000 களில் சுவிட்சர்லாந்தில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ப. மயூரன்

### "நியுசிலாந்து தமிழ் இதழ்கள்"

**வெண்ணிலவு** என்னும் ஒரேயொரு சிற்றிதழே நியுசிலாந்திலிருந்து 1997ம் ஆண்டில் வெளிவந்த தமிழ் இதழாகும்.

### "டென்மார்க் தமிழ் இதழ்கள்"

**பாலம்** என்னும் ஒரேயொரு தமிழ் இதழ் 1990 களில் டென்மார்க்கில் இருந்து மாதாந்தம் வெளிவந்தது.

### "நெதர்லாந்து தமிழ் இதழ்கள்"

**அ ஆ இ** என்னும் சிற்றிதழ் நெதர்லாந்திலிருந்து வெளியிடப்பட்ட் காலாண்டு சிற்றிதழாகும். டிசம்பர் 1989ல் வெளிவந்துள்ளது.

### "நோர்வேத் தமிழ் இதழ்கள்"

நோர்வேயிலிருந்து மூன்று தமிழ் சிற்றிதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றில்

**சக்தி** நோர்வேயில் இருந்து வெளிவரும் பெண்களுக்கான தமிழ் இதழ். முதலாவது இதழ் நோர்வே, ஒஸ்லோவில் ஓகஸ்ட், 1990 இல் வெளிவந்தது.

**சர்வதேசத் தமிழர்** 1990 களில் நோர்வேயில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் ந.ச. பிரபு ஆவார்

**சுவடுகள்** 1990 களில் நோர்வேயில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும். இதன் ஆசிரியர் துருவபாலகர் ஆவார்

### "பர்மிய தமிழ் இதழ்கள்"

பர்மாவிலிருந்து மூன்று இதழ்கள் வெளிவந்துள்ன. அவை

**வஜீருல்** இஸ்லாம் பர்மா, இரங்கூனிலிருந்து 1914ம் ஆண்டில் வெளிவந்த ஓர் இசுலாமிய வார இதழாகும். இதன் ஆசிரியர் மு. அப்துல்லா

**தொண்டன்** பர்மாவிலிருந்து 1940ம் ஆண்டில் வெளிவந்த ஒரு நாளிதழாகும். இதன் ஆசிரியர் அபிராமம் முகம்மது இபுராகிம்

**மக்கள் குரல்** பர்மாவிலிருந்து 1961ம் ஆண்டு வெளிவந்தது. இதன் ஆசிரியர் ஜலீல் மரைக்காயர்

### "பிரான்சியத் தமிழ் இதழ்கள்" 5

பிரான்சிலிருந்து ஐந்து தமிழ் சிற்றிதழ்கள் வெளிவந்துள்ளன. அவை

**தமிழ்முரசு** 1985,லிருந்து வெளிவந்த அரசியல் சமூக மாத இதழ் ஆசிரியர்கள் உமாகாந்தன். புஸ்பராஜா. இதில் புஸ்பராஜா தமிழ் இளைஞர் பேரவையின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவர். இவர் எழுதிய ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூல் ஒரு ஆரோக்கியமான பதிவாக உள்ளது.

**அம்மா** பிரான்சிலிருந்து ஏப்ரல் 1991ம் ஆண்டில் வெளிவந்த ஒரு மாதாந்த சிற்றிதழாகும். இதன் ஆசிரியர் எஸ். மனோகரன்

**ஓசை** 1990 களில் பிரான்சில் இருந்து மாதாந்தம் வெளிவந்த தமிழ் சிற்றிதழ் ஆகும்

**மௌனம்** 1990 களில் வெளிவந்தது. இதன் ஆசிரியர் கி.பி.அரவிந்தன்

**வடு** பிரான்சிலிருந்து வெளிவந்த ஓர் இதழாகும். தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் சார்பில் மாதாந்த வெளியீடாக இது வெளிவந்தது. இதன் முதல் இதழ் சூன் 2007 இதழாக வெளிவந்தது ஆசிரியர் தேவதாசன்

### "மலேசியத் தமிழ் இதழ்கள்"

மலேசியாவிலிருந்து இருபது தமிழ் இதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றில்

**தங்கை நேசன்** மலேசியாவில், பினாங்கில் 1876 இல் அச்சிடப்பட்டு வெளிவந்த தமிழ் சஞ்சிகையாகும். இதுவே தமிழில் வெளியான முதல் பத்திரிகை என மலேசிய இலக்கிய வரலாற்றாசிரியர்களால் குறிக்கப் பட்டுள்ளது

**உலக நேசன்** மலேசியா, பினாங் குவிலிருந்து 1883ம் ஆண்டில் வெளிவந்த ஒரு வார இதழாகும். இதன் ஆசிரியர் அ. மு. மரைக்காயர்.

**ஞானாசிரியன்** மலேசியாவிலிருந்து 1888ம் ஆண்டில் வெளிவந்த ஒரு நாளிதழாகும். இதன் ஆசிரியர் சம்சுக்கனி

**இஸ்லாமிய இளைஞன்** மலேசியா, கோலாலம்பூரிலிருந்து 1942ம் ஆண்டு வெளிவந்த ஓர் இசுலாமிய வார இதழாகும்.

### "யேர்மனியத் தமிழ் இதழ்கள்"

யேர்மனியில் முப்பத்திரண்டு (32) தமிழ் இதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றில்

**எண்ணம்** 1983, காலப்பகுதியில் பொப்ளிங்கன், ஸ்ருட்காரட், செருமனி யிலிருந்து அரசியலை மையமாகக் கொண்டு வெளிவந்த கையெழுத்துச் சஞ்சிகை. ஆசிரியர் மகாதேவா. இதுவே ஜேர்மனியில் இருந்து வெளிவந்த முதல் இதழ் ஆகும்.

**சிந்தனை** 1984இல் வெளிவந்த அரசியல் சமூக கையெழுத்து மாத இதழ். ஆசிரியர் பரராஜசிங்கம். பின்னர் தட்டச்சில் எழுதி வெளிவந்த முதல் இதழ்.

**சிறுவர் அமுதம்** 1990இல் வெளிவந்த சிறுவர் இதழ். ஐரோப்பாவில் வெளிவந்த முதல் சிறுவர் இதழ். ஆசிரியர் இராஜேஸ்வரன்

**வெகுஜனம்** 1987இல் வெளிவந்த அரசியல் சமூக இலக்கிய கையெழுத்து மாத இதழ். முதன் முதலில் பாரதி எழுத்துரு மூலம் கணணி அச்சுப்பதிப்பில் ஜேர்மனியில் வெளிவந்த இதழ் ஆசிரியர் மேழிக்குமரன்

**மண்** 1988,ல் வெளிவந்த சமுக இலக்கிய சிறுவர் இதழ். இன்றுவரை தொடர்கிறது. 183 இதழ்கள் வெளிவந்துள்ளன. ஆசிரியர் வ.சிவராஜா சிறுவர் இல்லங்களுக்காக 25இலட்சம் ரூபா தனிமனிதனாக சேர்த்து அனுப்பியுள்ளார். 22 சிறுவர்களை தத்தெடுத்துள்ளார்.

**பெண்கள் வட்டம்** 1987இல் வெளிவந்த ஐரோப்பாவின் முதல் பெண்கள் இதழ். இதன்

உறுப்பினர்கள் நடாத்துகின்ற பெண்கள் சந்திப்பு இன்றுவரை தொடர்கிறது.

**தேனீ** ஜனவரி 1989 இலிருந்து யேர்மனியிலிருந்து வெளிவரத் தொடங்கிய இதழ். இன்று பிரபல்யமான இணைய இதழாக விளங்குகிறது.

**மண், அகரம், சிவத்தமிழ், நாங்கள்** ஆகிய இதழ்கள் இப்போது வெளிவருகின்றன.

உசாத்துணை:
சிற்றிதழ்கள், விக்கிபீடியா, தமிழ் இலக்கியம்

மருதமுகிழ்

# வேலையுலகிற்கு தொழில் வழிகாட்டலின் அவசியம்

ந.பார்த்திபன்
சிரேஸ்ட விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி

**வழி**காட்டலும் ஆலோசனை கூறலும் என்ற செயன் முறை ஆரம்ப காலத்தில் தொழிலுக்கு வழி காட்டுதலிலே தான் தொடங்கியது. பின்னர் அது உளவியல் சார் ஆலோசனை, கல்வி சார் ஆலோசனை, குடும்பம் சார் ஆலோசனை, தொழில் சார் ஆலோசனை போன்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு வளர்ந்து வந்துள்ளது. ஆரம்பத்தில் தொழிலைத் தீர்மானிக்க உதவி புரிய மட்டும் என்று இருந்தது. பின்னர் தொழிலுக்கு மட்டுமெனக் கட்டுப் படுத்தாது தனிநபரின் வாழ்நாள் முழுவதிலும் அவருக்கு ஏற்படும் எல்லாத் தீர்க்கமான சந்தர்ப்பங்களுக்கும் முகங்கொடுக்கும் சக்தியைத் தனிநபரிடம் கட்டியெழுப்புதல் வரை இவ் வெண்ணக்கரு வளர்ச்சியடைந்துள்ளது. இருப்பினும் வேலை யுலகிற்கேற்ப தொழிலுக்கு வழிகாட்ட வேண்டிய, ஆலோசனை கூறப்பட வேண்டிய தேவை அவசியம். இன்றைய காலகட்டத்தில் அதிகம் உணரப்பட்டதால் தொழில் வழிகாட்டல் எண்ணக்கரு மிகவும் முக்கியத்துவமாகின்றது. இன்றைய கல்வி உலகில் பெரும் சவாலாக விளங்குவது சந்தைக் கேள்விக்கேற்ப மனிதவளமானது உயர்கல்வி நிறுவனங்களால் வெளியீடு செய்யப்படுவதில்லை என்றும் குறிப்பாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இது பாரியதொரு தொழில் முடக்கத்தை ஏற்படுத்துகின்றது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

"எதிர் காலத்தில் ஒருவன் தொழிலைப் பெற்று வாழ்க்கையில் முன்னேறக் கல்வி உதவவேண்டும்" என மகாத்மா காந்தி வலியுறுத்து கின்றார். உத்தியோகம் புருஷ லச்சணம் என்று கூறுவது ஆண் - பெண் இருபாலருக்கும் பொருந்தும் "தொழில் என்பதை சில உழைப்பு வழிகள் அல்லது ஓர் உழைப்பு வழி எனக் குறிப்பிடுவதிலும் பார்க்க தமது கல்வியறிவு மற்றும் உழைப்பில் ஈடுபடுதல் மூலம் ஏற்படுத்திக் கொள்ளும் முன்னேற்றம்" என ஆன்ட்ரு என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.ஒருவர் தனது வாழ்நாள் முழுவதிலும் அனுபவிக்கும் முன்னேற்றம், கடமைப் பணிகளின் வெற்றி, உள்ளார்ந்த ஆற்றலின் விருத்தி ஆகியவற்றை மையமாகக் கொண்டதே தொழில். இவ்வாறான தொழில் இன்மையால் பல சமூகப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. வேலையில்லாப் பிரச்சினை என்றென்றும் உள்ளதாகவே காணப்படுகின்றது. இன்றும் கூட பட்டதாரிகள் கூட வேலையின்மை காரணமாக பல்வேறு இடங்களில் பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டுள்ளமை எமது நாட்டின் தற்போதைய குறிகாட்டி இந்நிலையில் தொழில் வழிகாட்டல் தான் உண்மையான தீர்வாக இருக்கும் என்பது உணரப்படுகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்தத்தில் அமெரிக்காவில் கலப்புப் பொருளாதார மாற்றங்கள் பல நிகழ்ந்தன. நகரங்கள் உருவானமையும் கைத்தொழில் மயமாக்கமும் அவற்றுள் பிரதானமான வையாகும். அங்கு இளைஞர்கள் மட்டுமன்றி பிள்ளைகளையும் தொழில்களில் ஈடுபடத் தூண்டும் நிலை காணப்பட்டது. வயதாலும் அனுபவத்தாலும் குறைவாயிருந்தமையால் அவர்களுக்குத் தொழிலைத் தேர்ந் தெடுப்பதிலும் அவற்றில் ஈடுபடும் போது பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க

வேண்டியிருந்தது. அவர்களுக்கு உதவி, ஒத்தாசைகள் வழங்க பிராங் பாஸன் என்பவர் தொழில் வழிகாட்டல் சேவை ஒன்றைத் தொடங்கினார். ஒருவரை அவரது நடத்தைப் பான்மைக்கு மிகவும் பொருத்தமான தொழிலில் ஈடுபடச் செய்வதால் அவருக்கும் சமூகத்துக்கும் உச்ச பலனைப் பெறமுடியும் எனப் பாஸன் நம்பினார். 1902 இல் நடைபெற்றது. இதுவே தொழில் வழிகாட்டலின் ஆரம்பம் என்று குறிப்பிடப்படுகின்றது.

தொழில் சார் வழி காட்டலும் ஆலோசனை கூறலும் பிரதான நோக்கங்கள் பலவற்றைக் கொண்டிருந்தன. தொழில் பெறுபவரின் தெரிவுக்கு உள்ளாகும் தொழில்களின் தன்மை, பொறுப்புக்கள், அத் தொழில்கள் தொடர்பான பணிக் கொடைகள் பற்றி அறிந்து கொள்ள உதவிபுரிதல். வெவ்வேறு தொழில்களுக்குத் தேவையான பொதுவான திறன்கள், சிறப்பான திறன்கள், ஆற்றல்கள், தொழிலில் பிரவேசிப் பதற்கான பொதுவான சிறப்பான தகைமைகள், வயது. ஆயத்த நிலை ஆகியன பற்றி அறிந்து கொள்ள உதவுதல். மேலும் வெவ்வேறு தொழில்கள் தொடர்பான தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு தேவையான அறிவையும் தகைமைகளையும் பெற்றுக்கொள்வதற்கும் தொழில்கள் தொடர்பாக விவேக பூர்வமாகத் தெரிவு செய்வதில் ஒருவர் கொண்டுள்ள ஆற்றல்கள், திறன்கள், உளச்சார்புகள், விருப்பு வெறுப்புக்கள் போன்றவை பற்றிய சுய ஆய்வில் பொருத்தமான வகையில் ஈடுபடுவதற்கும் தன்னைப் பற்றிய சரியான விதத்தில் புரிந்து கொள்வதற்கும் உதவுதல். தொழில் பெறுபவர் தான் கொண்டுள்ள பல்வேறு ஆற்றல்களை இனங்கண்டு கொள்ளவும் மிகப்பரந்த கவர்ச்சிகளை ஏற்படுத்திக் கொள்வதற்காகப் பாடநெறிகள், செயலமர்வுகள் போன்றவற்றில் பங்கு கொள்வதற்கும் வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுத்தல்.

மேற் கூறியவற்றோடு தொழில்சார் பயிற்சியைப் பெறுவதற்காக பல்வேறு நிறு வனங்களால் வழங்கப் படும் வசதிகள், அந் நிறுவனங்களில் சேர்ந்து கொள்வதற்கு தேவையான தகைமைகள், அப்பயிற்சிக்கான கட்டணங்கள் ஆகியன பற்றிய விபரங்களை அறிந்து கொள்ள உதவி புரிவதன் மூலம் பொருத்தமான தொழில்சார் பயிற்சியைப் பெற வகை செய்தல். அடுத்து தாம் ஈடுபட்டுள்ள தொழிலுக்கு ஏற்றவாறாகப் பொருத்தப் பாட்டையும் தம்முடன் வேலை செய்வோரினதும் பொதுச் சமூகத்துடனுமான தொடர்புகளை விளங்கிக் கொள்ளவும் அத்தொடர்புகளைப் பேணுவதற்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உதவிபுரிதல் போன்றன குறிப்பிடப் படுகின்றன. எனவே ஒரு தொழிலைத் தெரிவு செய்து கொள்ளவும் அத் தொழிலுக்குத் தயாராவதற்கும் அத்தொழிலில் பிர வேசிப்பதற்கும் அதில் முன்னேற்றம் காண்பதற்கும் உதவிபுரியும் செயன் முறையே தொழில் சார் ஆலோசனை கூறலும் வழிகாட்டலும் செயன்முறையாகும்.

இன்று வேலை உலகில் காணப்படும் தொழில் வாய்ப்புகள் அவற்றுக்குத் தேவையான தகுதிகள், இருக்க வேண்டிய திறன்கள், ஆற்றல்கள், ஆளுமைப் பண்புகள், சேர்த்துக் கொள்ளப்படும் கால கட்டங்கள், விண்ணப் பங்கள் தொடர்பான விபரங்கள், ஆட்சேர்ப்பு நடைமுறை ஆகியன பற்றி விளக்கங்கள் வழங்குவதும் தொழில் சார் ஆலோசனையே. குறிப்பாகப் பாட சாலையை விட்டு விலகியிருக்கும் சகல மாணவர்களுக்கும் மட்டுமன்றி தொழிலில் சேர்ந்து கொண்ட ஒரு நபருக்கு அங்கு உருவாகும் பல்வேறு பிரச்சினைகளுக்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கத் தேவையான உதவியை வழங்குவதும் தொழில் சார் ஆலோசனை தான். இருப்பினும் இலங்கையில் வேலை யுலகிற் கேற்ப தொழில் வழி காட்டலானது சிறப்பாக,

வினைத் திறனாக இன்று வரை நடை பெற்றுள்ளதா? என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது. இலங்கையின் வேலைப் படையானது கைத் தொழில்களை மேம் படுத்தவும் பலப்படுத்தவும் போதியளவில் திறன்கள் அற்றதாகக் காணப்படுகின்றது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அரசினால் நடாத்தப்படும் பல்வேறு திறன் அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பிரதானமாக நிரம்பல் தொடர்பானதாக உள்ளன. ஆகையால் அவை தொழிலுக்குத் தேவையானதும் பொருத்தமானதுமான திறன்களைக் கொண்டதாக இல்லை. தனியார் துறைக்குத் தேவையான திறன்களை வழங்கக் கூடியளவிற்கு தொழில் பயிற்சி முறை மையானது மீள் கட்டமைக்கப் படல் வேண்டும். ஏனெனில் இறுதியாகத் தொழிலை வழங்குபவர்களாக இருக்கப் போகிறவர்கள் தனியார் துறையினரே யாவார். 1994 ஆம் ஆண்டு தொழில் நுட்பக் கல்வி, தொழிற் பயிற்சிக் கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக அன்றைய ஜனாதிபதியால் பேசப்பட்டது. ஆயினும் பாரிய மாற்றங்கள் நடந்தாகக் குறிப்பிடமுடியாதுள்ளது.

இன்று இவற்றில் பல ஆரோக்கியமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. தொழில் நுட்பக் கல்விச் சீர்திருத்தம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கி மேற் கொள்ளப் பட்டது. கொள்கைத் திட்டமிடலும் இணைப் பாக்கமும், தொழில் நுட்ப நிறுவனங்களின் முகாமைத்துவ அபிவிருத்தி வளப் பங்கீடு, தொழில் கல்வியின் சமூக மதிப்பை உயர்த்தல், பயிற்சிக்கான சந்தர்ப் பங்களை பரவலாக்கல், தேசிய தொழிற் கல்வி நிறவனத்தை மீள் ஒழுங்கமைத்தல், திறன் தகைமைகளை மேம்படுத்தல், தொழில் வழிகாட்டல், ஆலோசனை கூறல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்ற விடயங்களை உள்ளடக்கியதாக தொழில்நுட்பக் கல்வி சீர்திருத்தம் மேற் கொள்ளப்பட்டது. தனியார் துறைக்குப் போதிய அழுத்தங்களும் ஊக்குவிப் புக்களும் வழங்கப் படுவதால் தனியார் துறைக்குப் பொருத்தமான தேவைப் படுகின்ற திறன்களை வழங்க வேண்டியது தொழில் நுட்பத்துறையின் பணியாக உள்ளது. இதன்படி தொழில் நுட்பக் கல்வியுடன் தொடர்புடைய ஆணைக்குழு (TVEC) தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சிக் கான திணைக்களம், தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை (VTA) தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (NITESL) போன்றவை ஓர் அமைப்பின் கீழ்க் கொண்டுவரப்பட்டு பல செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன ஆயினும் வேலையுலகிற்கேற்ற தொழில் வழிகாட்டல் சாத்தியப்படவில்லை.

உலகின் வெற்றி மிக்க இலக்குகளாக திகழக் கூடிய மாணவ சமுதாயத்தை வினைத் திறனுடைய தொழில் சார் ஆற்றுகை யுடையவர்களாகப் பரிணமிக்கச் செய்வதே தொழில் வழிகாட்டலின் முக்கிய நோக்கமாகும் என்றும் தனிநபர் ஒருவருக்கு எந்தவொரு வயதிலும் எந்தவொரு கால கட்டத்திலும் வாழ்நாள் முழுவதும் அவரது கல்வி, பயிற்சி, தொழில் முகாமைத் துவத்துக்கு அவசியமான சேவைகளையும் செயற் பாடுகளையும் வழங்குவதே தொழில் வழிகாட்டலாகும் என்றும் அந்த வகையில் தொழில் வகையில் தொழில் வழிகாட்டல் சிறப்பான அறிக்கையாகவும் ஆற்றுகையாகவும் வளர்ச்சி பெற்று வருகின்றது என தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் கூறுகின்றது. இலங்கையின் பொதுக் கல்வி முறையில் கடந்த இரண்டு தசாப்தங்களில் பாரிய மாற்றமுறும் நிகழ்வுகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன என்றும் அவற்றுள் ஒன்று தான் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சித் திட்டம் என்றும் அது பாடசாலை மாணவர்களுக்கான தொழில் வழி காட்டலாக பரிணாமம் பெற்றிருக்கின்றது. இன்றைய உலகில் தொழில்களைப் பொறுத்தவரை தொழில்

மருதமுகிழ்

கொள்வோர் - தொழில் பெறுவோர் இடையே பாரிய இடைவெளி உள்ளது. என்றும் அந்த இடைவெளியைச் சிறிதளவிற்கேனும் குறைக்க இன்றைய பாடசாலை மாணவர்களுக் கான தொழில் வழிகாட்டல் மேலும் பல புதிய எண்ணக்கருக்களை கைக் கொண்டு முன்னெடுத்து வருகின்றது.

கடந்த நூற்றாண்டின் 5 ஆம் 6 ஆம் தசாப்தங்களில் (1950,60களில்) வெள்ளுடுப்பு உத்தியோகம் என்ற மனப் பான்மை அதிகமாக நிலவியது. தொழிலில் ஏற்றத் தாழ்வுகளை மனிதர்கள் வளர்த்துக் கொண்டதன் விளைவே அது. வெறும் வார்த்தையாய் செய்யும் தொழிலே தெய்வம் என்று சொல்லிக்கொண்ட போதும் உத்தியோகம் என்பது உடை கசங்காத வேலை என்றும் கோழி மேய்க்கினும் கோறணை மேந்தில் (Gorvernmal)மேய்க் கோணும் என்றும் அரச தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை இருந்தது. இதுவே மிகப் பெரிய சீதண நடை முறையையும் முதிர்கன்னிகள் உருவாக்கத்தையும் தந்தது. இந்தத் தவறான மனப்பாங்கை மாற்ற இன்றைய பாடசாலைக் கல்வி குறிப்பாக ஆரம்பப் பிரிவிலிருந்து மாற்றத்தைக் கொண்டுவர முற்படுகிறது. இதனைக் தொழில் விழிப்புணர்வு என்று அழைக்கப்படுகிறது. இங்கு நாம் செய்யும் எத்தொழிலும் மேன்மையானது என்றும் ஒவ்வொருவருடைய தொழிலாலும் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம் என்று தொழிலின் சிறப்பும் அவசியமும் பற்றி எடுத்துக் கூறப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் தேசிய தொழில் சார் தகைமை (NVQ - Nationnal Vocational Qualification) பற்றி அதிகம் பேசப்பட்ட போதிலும் உணரப் பட்டதாகக் கூறமுடியாதுள்ளது. NVQ - இத்தகைமையைப் பெற்றுக் கொண்டால் தகுதியான தொழில் ஒன்றை இலகுவில் பெற்றுக் கொள்ள முடியும். உண்மையில் ஒரு பட்டதாரி தன் பட்டத்தைப் பெற்ற பின்னர் தான் ஒரு தொழில் தகைமைக்காக தன்னைத் தயார்படுத்த வேண்டிய நிலையில் இருக்கிறார். உதாரணமாக ஆசிரியராவதற்கு கல்வி டிப்ளோமா என்னும் தொழில் தகைமை பெற வேண்டியது அவசியமாகின்றது. பட்டதாரி ஒருவர் ஆசிரிய நியமனத்தைப் பெற்ற போதிலும் அவர் தொழில் தகைமையான கல்வி டிப்ளோமாவைப் பெற்ற பின்னர் தான் பதவி உயர்வோ சம்பள உயர்வோ பெற முடியும். பட்டதாரி ஒருவர் கற்பிப்பதற்கான தொழிற் பயிற்சி பெறாமலே நியமனம் பெறும் குறைபாடு எமது நாட்டில் தான் உள்ள குறைபாடான விடயம். இந்தியாவில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்ற ஒருவர் ஆசிரியர்த் தொழில் பெறுவதாயின் டிப்ளோமா பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருக்கிறது. தொழில் தகைமை பெறுவதன் முக்கியத்துவத்தை இது உணர்த்துகின்றது.

NVQ மூலம் தனியார் துறை மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களில் கூட குறிப்பாக தகவல் தொழில் நுட்பத்துறை, இலத்திரனியல், மின்னியல், கணக்கியல், தட்டச்சு, கட்டட நிர்மாணிப்பு போன்ற துறைகளில் வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். உள்ளூர் தொழில் சந்தையை மட்டுமன்றி சர்வதேச தொழில் சந்தையின் தேவைகளைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழகங்கள் இயங்க வேண்டியுள்ளது என்றும் இப் பல்கலைக் கழகங்களது மாற்றங்களுக்கான காரணி உலகமயமாக்கம் என்றும் குறிப்பிடப்படுகின்றது. இதன் காரணமாக வர்த்தகத்துறை போன்று பல்கலைக் கழகங்களையும் அடிப்படை மாற்றங்களுக்கு உள்ளாகி வருகின்றன. புதிய நூற்றாண்டின் பொருளாதாரத் துறையிலும் குறிப்பாக

தொழில்துறையின் அறிவுத்தேவைகளைப் பல்கலைக்கழகங்கள் நிறைவு செய்ய வேண்டிய தேவையுள்ளன.

தொழில் துறையுடன் நெருங்கிய தொடர்பு, அத்துறையினருக்கான ஆராய்ச்சிகள், மனித வளப் பயிற்சி போன்ற வற்றில் பல்கலைக் கழகங்கள் புதிய அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. பட்ட இறுதி வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகளை இன்று தொழில் துறையினர் பல்கலை கழகங்களில் நடத்துகின்றனர். தொழில் துறையினரின் தேவைகளைக் கருத்திற் கொண்டு பல்கலைக் கழகங்கள் இயங்குகின்றன என்பது கவனத்திற்குரியது.

வேலையுலகிற் கேற்ப தொழில் வழிகாட்டலை மேற்கொள்ள பாடசாலைகள் முன்வர வேண்டும். மூன்றாம் நிலைக்கல்வி ஆணைக்குழுவினால் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தொழில் வாய்ப்புக்களை இலகுவாகப் பெற்றுக் கொள்வதற்கான தேசிய தொழில் சார் தகைமை முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு சில பாடநெறிகள் தரம் 9 வரை படித்தவர்களுக்குக் கூட வாய்ப் பளித்திருக்கிறது. அதிபர், ஆசிரியர்கள் தரம் 9 வரை பாடசாலையில் வைத்திருப்பதும் அதன் பிறகு இடைவிலகாது NVQ இற்கு வழிகாட்டுவதும் அவசியமாகின்றது. தரம் 9 வரை பாடசாலைக்கல்வியை முடித்தவர்கள் மட்டம் 1 இல் இணைந்து மட்டம் 7 வரை படிக்கும் வாய்ப்பிருக்கிறது. மட்டம் 7 என்பது பட்டப்படிப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே தேசிய தொழில் சார் தகைமையில் பட்டதாரியாக உயரும் வாய்ப்பு இருக்கிறது. மேலும் தொழில் நுட்பக் கல்லூ ரிகளில் இலவசமாகக் கற்கும் வாய்ப்பும் இருக்கின்றது. புகையிரத, பஸ் பருவகால பயணச்சீட்டுக்கள் சலுகை விலையில் வழங்கப்படுகிறது. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பாடநெறிகளைப் பயிலும் மாணவர்களுக்கு மாதாந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படுகிறது. இவ்வாறான பல அனுகூலங்கள் கிடைக்கின்றன.

அபிவிருத்தி அடைந்துவரும் இலங்கை போன்ற நாடுகளில் அதிகளவாகவும் பெரும் பிரச்சினையாகவும் காணப் படுகின்ற வேலையில்லாப் பிரச்சினையும் மாணவர் இடைவிலகி தவறான நடத்தைகளில் ஈடுபடுகின்றமையும் இல்லாதொழித்து முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கிலேயே இன்று தொழில் நுட்பப் பாடம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. மேலும் பல்கலைக் கழகங்களிலிருந்து வெளியேறும் பட்டதாரிகள் தொழிற் சந்தையின் கேள்விக்கு ஏற்றவாறு தயார் படுத்தப்படாது வெறுமனே கோட்பாட்டு அறிவுடனேயே வெளியேறுகின்றனர் என்ற ஆதங்கமும் குற்றச் சாட்டும் நிலவுகிறது. இதனாலேயே வேலையுலகிற்கேற்ப தொழிற்படையினர் உருவாக்கப் படாமல் போகும் நிலை காணப்படுகிறது. உண்மையில் இது வேலையில்லாப் பிரச்சினையா? தவறாக முத்திரை குற்றப்படக் கூடாதல்லவா? ஒரு புறம் வேலைகளுக் கேற்ற ஆளணியில்லாமலும் கோட் பாட்டு அறிவுடனும் மட்டும் வெளியேறுகின்ற ஆளணியினருக் கேற்ற வேலை இல்லாமையும் என்ற இரு முரண்பட்ட நிலை தான் காணப் படுகின்றது. இது ஒரு காலத்தில் எல்லோரும் கலைப் பட்டதாரிகளாக குறிப்பாக வரலாறு, குடியியல், புவியியல் பாடங்களை மட்டும் படித்து பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வேலையில்லை என்ற பிரச்சினையாகக் காணப்பட்டது. இது போலவே இன்றும் தொழில் நுட்ப அறிவு இல்லாமல் வெறும் புத்தகப் பூச்சிகளாக, கடதாசித் தராதரங்களைக் கைவசம் வைத்திருப்பவர்களுக்கான நிலைமையும் காணப்படுகின்றது.

இன்று க.பொ.த (உ/த) இல் கலைத்துறையில் (Arts) படிப்பவர்களின் பல்கலைக்கழகத் தெரிவு 57% இலிருந்து 25% ஆகக் குறைக்கப் பட்டுள்ளது. மாறாக ஏனைய பிரிவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. எல்லாப் பாடத்தெரிவிலும் தொழில்நுட்பப் பாடமான தகவல் தொழில் நுட்பம் இணைக்கப்பட்டுள்ளது. புதிய கல்விச் சீர்திருத்தத்தில் நாம் சிறப்பான புலமை பெறுவது என்பதிலும் பார்க்க ஒவ்வொரு மாணவனும் தான் வாழும் சூழலுக்கேற்றவாறான தொழில்நுட்ப அறிவைச் சரியான நிலையில் பேணுவதனூடாக தனது வாழ்வின் தேவைகள், வேலைகள் என்பவற்றைப் பொருத்தமானவாறு மேற்கொள்ள முடியும் எனக் கருதப் படுகிறது. இந்நிலையில் தற்போதைய சூழ்நிலையில் தொழில்சார் ஆலோசனையும் வழிகாட்டலும் தனியொருவரின் தொழில் சார் தீர்மானங்களை எடுக்கும் தேர்ச்சியை மேம்படுத்த முயல்கிறது. மனவெழுச்சி விருப்பு வெறுப்புகளைப் புறக்கணிக்காது சுயமான அறிவு பூர்வமான தொழில் வழங்குவோர் எதிர்பார்க்கும் பல்வேறு விடயங்களைக் கருத்திற்கொண்டு செயற்பட்டால் எமது நாட்டிலுள்ள பல்வேறு பிரச்சினைகளும் நெருக் கடிகளும் முடிவுக்கு வரும். இதற்கான சாதகமான பல வாய்ப்புக்களை அறிந்து கொள்வதோடு அதற்கான செயற்பாடுகளில் அனைவரும் ஈடுபடுவதே சிறந்த வழியாகும்.

### வாழ்த்துகின்றோம்

வடமாகாண கல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் செய்யுள் இயற்றுதல் துறைக்கு முதலமைச்சர் விருதினைப் பெற்றுக் கொண்டவரும் 2016 ஆம் ஆண்டு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலக்கியத்துறைக்கு கலாபூஷண விருதினை பெற்றுக்கொண்ட வருமான திரு.ஆறுமுகம் தம்மையா (வன்னியூர் குணாளன்) அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதில் வவுனியா வடக்கு கலாசாரப் பேரவை பேருவகை கொள்கின்றது.

# வாய்வன் காக்கை

கலாபூசணம் பண்டிதை. செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம்
(B.A.Dip-in.cd)

ஒன்றை உற்று நோக்கி உணர்ந்து அதனைப் பாடு பொருளாகக் கொண்டு கவிதை புனைவதில் சங்கப் புலவர்கள் அறிவுத்திறம் மிக்கவர்கள் இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே "காக்கை" யைப் பாடு பொருளாகக் கொண்டு கவிதை புனைந்துள்ளமை வியப்புக்குரியது அன்றோ?

சங்ககாலப் பகுதியில் எழுந்த கவிதைகளை அகத்திணை, புறத்திணை என இரண்டாக வகுத்தனர். மன்னர்களது கொடை வீரம், ஆட்சிச்சிறப்பு முதலானவை புறத்திணையிலும் இருத்தல், புணர்தல், பிரிதல் முதலான அக ஒழுக்கங்கள் அகத்திணையிலும் அடக்கப்பட்டன.

ஒரு மன்னன் இறந்த நிலையில் அவனது கொடை சிறப்பையும், பெருமையையும் எண்ணி வருந்தி வேதனையுற்றுப் பாடும் பாடல்களைக் "கையறு நிலை" ப் பாடல்கள் என்பர். புலவர் பெருஞ்சித்திரனார் மன்னர் வெளிமானிடம் பரிசில் பெற சென்றார். அப்போது மன்னன் இறக்கும் நிலையில் இருந்தான். எனினும் புலவரது பெருமையை அறிந்திருந்தவராதலின் புலவரை முகத்தான் அமர்ந்தினது நோக்கி, அவரது தம்பி இளமானிடம் புலவருக்குப் பரிசில் வழங்குமாறு பணித்தான். சிறிது பொழுதில் மன்னன் இறந்து விட புலவர் வேதனையுற்றுப் பாடியபாடல்.

*"கவிசெந் தாழிக் குவிபுறத் திருந்த*
*செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா*
*"வாய்வன் காக்கை"யுங் கூகையுங் கூடில்*
*போ யாயமொடு பெட்டாங்கு வழங்கும்*
*காடுமுன் னினனே.......... (புற .238)*

"இனிப் புலவர்களுக்கு பரிசில் வழங்குவார் யாரும் இல்லை. என் சுற்றம் என்னாகுமோ? இறந்து படுதலேதகும்"என்ற பொருளமைந்த கையறு நிலைப்பாடல்.

இப்பாடலில் காக்கை இடம் பெற்றுள்ளமை சிறப்புக்குறியது. காகம் சுடுகாட்டில் பிண்டச் சோறு உண்பதற்காக காத்து நிற்கும். அங்கு தம் இனத்தை அழைப்பதற்காக வாய் ஓயாமல் "கா! கா!"என்று கரைந்து கொண்டு இருக்கும் அவ்வாறு வாய் ஓயாமல் கரைய அதன் அலகுகள் எவ்வளவு வலியனவாக இருக்க வேண்டும் என அலகுகளின் வலிமையையும் ஆற்றலையும் வியந்து " வாய்வன் காக்கை" என அடை கொடுத்துள்ளமை சிறப்புக்கும் போற்றுதலுக்கும் உரியது.

புறத்திணையில் மட்டுமல்ல அகத் தினையிலும் காகம் இடம் பிடித்துள்ளது. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல். அந்நில அகஒழுக்கம் பிரிதல். காக்கை பிரிதல் ஒழுக்கத்தை எடுத்துக்கூற துணை செய்துள்ளது.

தலைவன் பொருள் தேடுவதற்காகத் தலைவியை பிரிந்து சென்றான். இடையீடுற்ற தலைவி ஆற்றாளாய்ப் பெரிது வருந்திய வேளையில் தோழி ஆறுதல் கூறி அவளை ஆறுதல்படுத்தினாள். அறிந்த தலைவன் தோழிக்கு நன்றி பாராட்டினான். அப்போது தோழி நின் வரவை நாம் முன் கூட்டியே அறிந்து விட்டோம் "விருந்து வரக் கரைந்த காக்கைக்கு" என்ன கைம்மாறு செய்வோம்? என்றாள்.

காக்கை கரைந்தால் விருந்தினர் வருவர் என்ற நம்பிக்கை அக்கால மக்களிடையே

காணப் பட்டது."காக்கா! காக்கா! விருந்து வரும் என்றால் நடந்து கரை கடிதம் வரும் என்றால் பறந்து கரை" என்பது பேச்சு வழக்கு. எனவே இதனைக் கண்ணுற்ற காக்கை பாடினியார் காக்கையைப் பரிந்து.

*" விருந்து வரக் கரைந்த காக்கை"*
*(குறுந்)*

எனப் பலவாறு சிறப் பித்துள்ளமையாற் போலும் காக்கை பாடினியார் என்ற காரணப் பெயர் பெற்றார்.

தலைவன் வரக் கரைந்த காக்கைக்கு நன்றி செலுத்துவதுடன் மீண்டும் தலைவன் பிரிந்தால் கரைந்து காட்ட வேண்டும் என்ற நன்றிப் பெருக்காலும் நலன் எதிர்நோக்காலும் தூண்டப்பெற்று, காக்கைகள் கூடி வாழு மரத்தருகே பொங்கலிட்டுப் படைக்கும் வழக்கம் சங்ககால மக்களிடையே நிலவி இருந்தது. என்ற உண்மையை,

*"மாசில் மரத்த பலி உண் காக்கை" என்றும்*
*(நற்.281)*
*"நெடுவீழ் இட்ட கடவுள் ஆலத்து*
*உகுபலி அருந்திய தொருவிரற் காக்கை"*
*என்றும் கூறும்*
*(நற்.343)*

*இவ் அடிகள் மூலம் அறியக் கூடியதாய் உள்ளது.*
*பொங்கலை எவ்வாறு செய்வோம்?*

*"திண்தேர் நள்ளி கானத்து அண்டர்*
*பல்ஆ பயந்த நெய்யின் தொண்டி*
*முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு*
*எழுகலத்து ஏந்தினுஞ் சிறிது"* *(குறுந்.10)*

நள்ளி என்ற மன்னன் நாட்டிலுள்ள பலவாகிய பசுக்களின் பாலைக் கறந்து கடைந்தெடுக்கப்பட்ட நெய்யில், தொண்டி நாட்டில் விளைந்த வெண்ணெல்லில் இருந்தெடுக்கப்பட்ட அரிசிச் சோற்றைப் பலியாக ஏழு கலத்தில் ஏந்தி இட்டு வைத்தாலும் காக்கை கரைந்ததால் தலைவி பெற்ற இன்பத்திற்கு அது ஈடாகாது என்பதாம்.

இதனாற் போலும் பண்டிகை விரத காலங்களில் காகத்திற்கு உணவு படைக்கும் வழக்கம் இன்றும் நம்மிடையே நிலவி வருகிறது.

அகத்திணைப் பாடல்களில் "இறைச்சிப் பொருள்" கையாளப்படுவதும் உண்டு. காக்கையே இறைச்சிப் பொருளை வெளிப் படுத்தவும் பாடு பொருளாய் அமைந்துள்ளமையைக் காணலாம்.

*"மாசில் மரத்த பலி உண் காக்கை*
*வளிபொரு நெடுஞ்சினை தளியொடு தூங்கி*
*வெல்போர்ச் சோழர் கழாஅர்க் கொள்ளு*
*நல்வகை மிகுபலிக் கொடைபோ டுகுக்கு*
*மடங்காச் சொன்றி யம்பல் வாணர்*
*விடக்குடைப் பெருஞ்சோறு ளுள்ளுவன விருப்ப*
*மழையமைந் துற்ற மாலிரு ணடுநாட்*
*டாநம் முழைய ராகவும் நாநம்*
*பனிக்கடு மையி னனிபெரி தழுங்கித்*
*துஞ்சா மாகலு மறிவோ*
*ரன்பிலர் தோழிநம் காத லோரே"*
*(நற்.281)*

காக்கை பலி உண் காக்கை. மழையிலே நனைந்து வருந்தியும், புதிய ஊனொரு கலந்து இடப்படுகின்ற விடக்குடைப் பெருஞ்சோற்றுத் திரளைக் கருதியனவாய் இருக்கும். தலைவர் தலையளி செய்ததால் இன்புற்ற யாமும் பனியாலும் குளிராலும் நடுங்கியும் ஓரொருகால் வந்து கூடுவார் என்ற ஆசையால் உயிர் துறவோமாயிரா நின்றோம். இதை அறிந்திருந்தும் வாரா மையால் அவர் நம் மாட்டு அன்பிலர் அன்றோ என காகத்தின் செயலை அடிப் படையாக வைத்து இறைச்சிப் பொருள் புலப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஒரு நற்றிணைப் பாடலில்,

***"துகுபலி யருந்திய தொருவிரற் காக்கை***
***புன்க ணந்திக் கிளைவயிற் செறியப்***
***படையொடு வந்த பையுண் மாலை***
***யில்லை கொல் வாழி தோழி நத்துறந்***
***தரும் பொருட் கூட்டம் வேண்டிப்***
***பிரிந்துறை காதலர் சென்ற நாட்டே"***
***(நற்.343)***

பொருள் வயிற் பிரிந்த தலைவன் குறித்த பருவத்தின் கண் வாராமையால் வருந்துந் தலைவி. பிரிந்தவர்களுக்குத் துன்பஞ் செய்கின்ற இம் மாலைப்பொழுது நம்மைப் பிரிந்து சென்ற காதலர் நாட்டிலும் செல்லுவதில்லையோ? என மனம் நொந்து பாடிய பாடல்.

கடவுளுக்கு நிவேதித்து ஆலத்தின் கீழ் இடப்படும் பலிச்சோற்றைத் தின்ற காக்கை துன்பத்தைத் தருகின்ற மாலைப் பொழுதில் சுற்றத்திடத்தே சென்று தங்கும். ஆனால் நம்மைப் பிரிந்தவர் நாட்டில் இம் மாலைப் பொழுது செல்லுவதில்லையோ? என இறைச்சிப் பொருள் தோன்ற கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார் பாடிய பாடல் எனவே சங்ககால மக்கள் வாழ்வியலில் "காக்கை" சிறப்பாகப் போற்றப்பட்டமையை அறியக்கூடியதாய் உள்ளது.

***"காலையில் எழுதல்; காணாமலே புணர்தல்***
***மாலை தினம் குளித்து மனை புகுதல் - சாலவே***
***உற்றா ரோடுண்ணல் உறவாடல் இவ் வைந்தும்***
***கற்றாயோ காக்கைக் குணம்"***

காக்கைகளிடம் காணப்படும் உயரிய பண்புகளை வெளிப்படுத்தும் பாடல் ஒன்று பாடியவர், காலம் தெரியாது.

"பழமொழி நானூறு" என்பது பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்று. தமிழ் மொழியில் பழமொழியை அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியம். காக்கையின் பண்பையும், செயலையும் விளக்கும் பழமொழிகள் இதில் இடம்பெற்றுள்ளன.

பழமொழி நானூற்றில் இடம்பெறும் செய்யுள்

***"உலக்கை மேல் காக்கை" என்பார்(பழ .84)***

நெல் குற்றப் பயன்படும் கருவி உலக்கை. நெல் குற்றும் போது அரிசி பொறுக்கித் தின்ன காக்கைகள் வரும். ஆனால் ஒருவர் மாறி ஒருவர் நெல் குற்றிக் கொண்டே இருப்பதால் காக்கை உலக்கை மேல் அமரவும் முடியாது உரலிடம் நெருங்கவும் முடியாது. அரிசி பொறுக்கவோ அமரவோ வாய்ப்பின்றித் தவித்துத் தடுமாறும்.

காக்கையின் செயலை ஒருவரைச் சார்ந்து நிலைத்து நில்லாது பலர்பால் மாறி மாறிச் சென்று அலையும் மக்களுடைய பண்பை எடுத்துக் காட்டப் பயன் படுத்தியுள்ளமை அக்காலப் புலவர்களின் உற்று நோக்கி உணர்ந்து அவதானிக்கும் பண்பை வெளிப்படுத்துகின்றமை நயம் மிக்கது.

***"காக்கையைக் காப்பிட்ட சோறு"***
***(பழ. 147)***

உணவைப் படைத்துக் காக்கையைக் காவல்வைத்தால் எப்படியிருக்கும்?"வாய்வன் காக்கை" அல்லவா? கா! கா! என்று தன் இனத்தை அழைத்து அனைத்தையும் உண்டு விடும்.

ஒருவன் தான் தேடிய பொருளைத் கீழ் மகனிடம் ஒப்படைத்தால் என்ன விளையும் என்பதை இயல்பாக நம் கண்டு நடைபெறும் காக்கையின் செயல் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

***"ஆயிரம் காக்கைக்கு ஓர் கல்"***
***(பழ. 35)***

ஆயிரம் காக்கைகளை விரட்ட ஒரு கல் போதும் குடிமக்களிடம் அன்பு கொண்ட மன்னனை அடிப்படுத்த

மருதமுகில்

எத்தனை படை வந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது. மன்னனுக்கு அன்பே சிறந்த வலிமை என அருமையான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

*"முயல் விட்டு காக்கை தினல்"*
*(பழ.356)*

முயல் காக்கையிலும் சிறந்தது. அறநெறிக்கு அருள் அடிப்படை. அதுவே உயரிய ஒழுக்கம். அறநெறி தவறி மறநெறி செல்லலாமா? முயல் இருக்க காக்கையை உண்ணலாமா? என நம்மையெல்லாம் சிந்திக்க வைத்துள்ளார்.

*"விலமைபாடு காக்கையே போன்று"*
*பழ.341)*

வில் எறிந்து காக்கையைத் துரத்துவது போன்று தீயவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு இடங்கொடாது அவர்களது தொடர்பை உடனே அறுத்து விடுக" என்பதாம்.

காக்கையைப் பாடு பொருளாகக் கொள்ளாத இலக்கியங்களே இல்லை என்று கூறும் அளவிற்குப் பக்தி இலக்கியங்களிலும் கூட காக்கை இடம்பிடித்துள்ளது.

*"பிண்டச் சோறும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும்*
*உண்டற்கு வேண்டி நீ ஓடித் திரியாதே*
*அண்டத்து அமரர் பெருமான் அழகமர்*
*வண்டொத்த இருண்ட குழல் வாராய் காக்காய்!*
*மாயவன் தன் குழல் வாராய் காக்காய்!*

பெரியாழ்வார் பாடிய பாடல். காகமே! நீ சோற்றுக்காக அங்கும் இங்கும் ஓடித் திரியாதே! நல்ல அழகான கரிய முடியையுடைய கண்ணனின் முடியைக் கோதி ஒழுங்கு செய்ய வாராய்!

மேலும் கூடுகட்டக் கோல் தேடும் காக்கையே என் கண்ணனை அடிப்பதற்குக் கோல் கொண்டு வா. அவன் மோட்சமே தருவான். என கண்ணனுக்காக உளமுருகிப் பெரியாழ்வார் பாடிய பாடல்களில் காக்கையின் பண்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. விரிவஞ்சி பாடல்கள் இடம்பெறவில்லை.

சங்ககால, பல்லவர் கால இலக்கியங்களில் மட்டுமன்றி தற்கால இலக்கியங்களிலுங்கூட காக்கை செல்வாக்குப் பெற்றுள்ளது.

*"எத்தித் திருடும் அந்தக் காக்கை அதற்கு இரக்கப் படவேணும் பாப்பா"*

என்றார் அமரகவி பாரதியார் சமுதாய அமைப்பில் ஏற்றத்தாழ்வு இருப்பது போல ஆண்டவன் படைப்பிலும் உண்டு.

எத்தித் திருடும் அந்தக் காக்கை நம்மை நம்பியே வாழ்வதால் அதற்கு இரக்கப்பட் வேண்டுமென குழந்தைகளிடம் அன்போடு வேண்டிக் கொள்ளுந் திறம் நயக்கத்தக்கது.

"ஆகாயத் தோட்டி" என்று எல்லோராலும் இழித்தொதுக்கப்படும் காக்கையை, "காக்கைக் குருவி எங்கள் சாதி என ஜெயபேரிகையில் காக்கை தான்

மனிதனது பிறப்பு முதல் இறப்பு வரை இணை பிரியாது இருப்பதால் அதுவே எங்கள் சாதி என பேரிகை கொட்டியுள்ளார்.

*"காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா"*

பாரதியார் காக்கைச்சிறகினில் அதன் கருநீல வண்ணத்தில் கண்ணனையே கண்டார். பாரதிதாசன் காக்கையை ஒற்றுமையின் சின்னமாகக் கண்டார். இவ்வாறு சங்க காலம் முதல் தற்காலம் வரை "வாய்வன் காக்கை" இலக்கியத்தில் தடம் பதித்துள்ளது விரிவஞ்சி விடுத்தார்.

*"காகம் பறவாத இடமும் இல்லை காரை தீவான் செல்லாத ஊரும் இல்லை"*
*"எச்சிற் கையாலும் காகந் துரத்தமாட்டார்"*
*காகம் போலக் கரைகிறாய்"*

*"காகம் போலக் கறுப்பழகி*
*"விருந்து வரக் கரை*
*"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு"*
*"காக்கை உட்கார பனம் பழம் விழுந்தது போல்"*

என்ற பழமொழிகள் எங்கள் ஊரில் மிகுதியாக இடம்பெற்றுள்ளன. ஊருக்கும் காக்கைக்கும் நெருங்கிய தொடர்பும் உண்டு. எங்கள் ஊரில் ஏதாவது பொருட்களைக் கண்டால் எத்தித் திருடுவதும் அந்தக் காக்கை தான்.

டாக்டர், பொன் சௌரிராசன் அவர்களது "கட்டுரை மணிகள்" என்னும் நூலிலிருந்து இக்கட்டுரைக்கான விடயங்களை எடுத்து எழுதியுள்ளேன்.

(நன்றி - டாக்டர் பொன், சௌரிராசன் - கட்டுரை மணிகள் - தேனக வெளியீடு)

## நினைவுகூர்கின்றோம்

அமரர். கலாபூஷணம் கலைவேந்தன் ம.தைரியநாதன்

இசை நாடகத்துறையில் ஜாம்பவனாக திகழ்ந்தவரும் புகழ் பூத்த இசை நாடக விற்பன்னருமான திரு.ம.தைரியநாதன் வவுனியா வடக்கு பிரதேசத்தில் 2011 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தப்பட்ட கலை இலக்கிய விழாக்களில்

2011 சகுந்தலை - ஒலுமடு தமிழ்க்கலவன் பாடசாலை
2011 சத்தியவான சாவித்திரி - நெடுங்கோணி ம.வி
2012 ஸ்ரீவள்ளி - வவுனியா வடக்கு ஆசிரியர்கள்
2013 அரிச்சந்திரமயான காண்டம் - கனகராயன்குளம் ம.வி
2014 சம்பூரணா அரிச்சந்திரா (மூன்று மணிநேரம்) - வவுனியா வடக்கு கலைஞர்கள்
2016 பூதத்தம்பி - வவுனியா வடக்கு கலைஞர்கள்

போன்ற இசை நாடகங்களை பயிற்றுவித்து தனது அர்ப்பணிப்பான நெறியாழ்கையால் இரசிகர்களை தன்னகப்படுத்திய தன்னிகரில்லா கலைஞரின் இழப்பு வவுனியா வடக்கு கலைஞர்களுக்கு பேரிழப்பாகும். அவரது கலைச்சேவையினை இவ்விடத்தில் நினைவு கூர்வதுடன் இவ் ஆண்டு வவுனியா வடக்கு கலை இலக்கிய விழாவில் கலாபூணம் கலைவேந்தர் ம.தைரியநாதன் அவர்களுக்கு வவுனியா வடக்கு கலாசாரப் பேரவையானது இதய பூர்வமான நினைவுக் காணிக்கையை செலுத்துகின்றது

அதேவேளை இவ் இசை நாடகங்களில் முக்கிய பாத்திர மேற்ற அமரர்களான திரு.ஸ்ரீபன் செல்வி கனிதா ஆகியோரையும் இவ் விடத்தில் நினைவு கூர்கிறோம்.



# நாட்டார் பாடல்களில் இழையோடும் உள ஆற்றுப்படுத்தல்கள்

திருமதி.மேரி மெக்டலின் - ஜெயக்கெனடி (M.A, MEd)
ஆசிரிய ஆலோசகர் ( தமிழ் )
வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு, புளியங்குளம்.



**நா**ட்டார் இலக்கியம் என்பது கிராமப் புற மக்களின் வாழ்வியல் அம்சங்களான, பழக்க வழக்கங்கள், பண்பாடுகள், நம்பிக்கைகள், முயற்சிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டது. எழுத்துஇலக்கியம் வளர்ச்சி அடைவதற்கு முன்னர் வாய்மொழியாக வழங்கப்பட்டு மரபு வழிபட்டு வந்ததொரு இலக்கியமாகும்.இது நாட்டார் பாடல்கள்,கதைகள், விடுகதைகள், பழமொழிகள், கதைப்பாடல்கள் எனப் பல வடிவங்களைக் கொண்டது. நாட்டார் பாடலில் மனித உள்ளத்து உணர்வுகளை இயல்பான மொழி நடையில், ஓசை நயம் பட கற்றோரும் கல்லாதோரும் நயக்கும் வண்ணம் பாடப்பட்டு வரும் பாடல்களாகும். இவை கிராமியப் பாடல்கள், நாடோடிப்பாடல்கள், வாய்மொழிப்பாடல்கள், எழுதாக்கவிகள் எனப் பல பெயர்களில் அழைக்கப் படுகின்றன.

நாட்டார் பாடல்கள் காப்பியத் தோற்றத்திற்கு அடிப் படையாக அமைந்துள்ளன. சிலப்பதி காரத்தில் இதன் செல்வாக்கினை பெருமளவில் காணலாம். மனித வாழ்வுடன் இணைந்த வகையில் அமையும் இந்நாட்டார்பாடல்கள் மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை பாடப்படுகின்றன. இவை தாலாட்டுப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், காதல்பாடல்கள், தொழிற்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், வேடிக்கைப்பாடல்கள் போன்ற பல வகைகளில் அமைகின்றன. நாட்டார் பாடல்கள் மனித உணர்வுகளான அன்பு, அழுகை, கோபம், அச்சம், வீரம் போன்ற மன உணர்வுகளை வெளிப்படுத்தும் வேளை மனித உணர்வுகளை ஆற்றுப் படுத்துவதாகவும் அமைந்துள்ளன. இங்கு நாட்டார் பாடலென்ற பரந்த கடற்பரப்பில் ஒரு சில துளிகளை எடுத்து உதாரணம் காட்டியுள்ளேன்.

குழந்தையை தூங்க வைப் பதற்காகப் பாடப்படும் தாலாட்டுப் பாடல் சொற்சுவையும், பொருட்செறிவும் மிக்கவை. ஆராரோ, ரோரோ, ஆரா என்ற பொருளற்ற சொற்கள் ஓசையை நிறைத்தற்பொருட்டு பயன்படுத்தப்படுகின்றன. இப்பாடல்களில் ஓசை பிரதான இடம் பெறுகின்றது குழந்தைகளுக்கு வேண்டிய உறவுகள், பொருட்கள் முதலியவற்றை பாடி குழந்தையை தூங்க வைப்பது சிறப்பானதாக காணப்படுகிறது.

***உள்ளிப் பொதியோடு வந்தீரோ தம்பி***
***உள்ளி மலைநாடுகண்டீரோ தம்பி***
***மஞ்சட் பொதியோடு வந்தீரோ தம்பி***
***மஞ்சட் மலைநாடுகண்டீரோ தம்பி***

என மருத்துவிச்சி பாடும் தாலாட்டுப் பாடலினூடாக குழந்தையைப் பெற்றபோது ஏற்பட்ட வருத்தங்களைப் போக்க கிராமபுறங்களில் உள்ளி, மிளகு, மஞ்சள், மல்லி போன்ற மருத்துவப் பொருட்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றை குழந்தை கொண்டு வந்ததாக கேட்டது தாயை ஆற்றுப்படுத்தவதாக அமைந்துள்ளது.

***அயலும் புடையும் வாழ வேண்டும்***
***அன்னமும் சுற்றமும் வாழ வேண்டும்***
***ஆச்சியும் அப்புவும் வாழ வேண்டும்***
***அம்மானும் மாமியும் வாழ வேண்டும்***

இங்கு ஆச்சி, அப்பு என்பது தந்தை, தாயை குறிப்பதாக அமைந்துள்ளது. இவர்களுக்கு அடுத்த படியாக அம்மானும் மாமியும் பிரதான இடம் பெறுகிறார்கள். எதிர்கால வாழ்வுக்கு நல்ல துணைவனை, துணைவியை கொடுப்பவர்கள் அவர்கள் எனவே அவர்கள் வாழ வேண்டும் என குறிப்பிடுவது பொருத்தமானது. அத்துடன் எல்லோரும் வாழ வேண்டும் என்ற உயரிய மனப்பாங்கு தாலாட்டினூடாக ஊட்டுவது சிறந்த உள ஆற்றுப்படுத்தலுக்குரிய பண்பாகக் காணப்படுகிறது.

குழந்தைப்பருவத்தில் பிள்ளைகளுக்கு கை, கால் பயிற்சி வழங்குவது வழக்காறாக காணப்பட்டது.

**"கைவீசம்மா கைவீசு**
**கடைக்குப்போவோம் கை வீசு'**
**"காலாட்டி வந்தான் காலாட்டி**
**காசு கொடுங்கோ பணம் கொடுங்கோ"**
**"சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு - என்**
**கற்பகத்தருவே சாய்ந்தாடு"**

எனப் பாடல்கள் பாடப்படுவதனூடாக உடற்பயிற்சி வழங்கப் படுவது. ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கு உகந்ததாகும். பள்ளிப் பருவத்தின் போது நண்பர்களுடன் சேர்ந்து விளையாடுதல் கிராமப்புறங்களில் வழக்கமாகும். இதனூடாக மகிழ்ச்சி. ஒற்றுமை போன்ற பண்புகள் வளர்க்கப் படுகின்றன. கிட்டிப்புள்ளு, கோலாட்டம் கும்மி, ஊஞ்சல் போன்ற விளையாட்டுக்கள் பெருவழக்காக காணப்பட்டன.

***கடற்கரை மணலிலே நடக்க முடியாது.***
***கானலிலும் வெயிலிலும் ஓட முடியாது***
***கச்சாய்புளியினிலே ஊஞ்சல் கட்டி***
***கனகர தெருவினிலே கூந்துமொன்றாடி.***

ஊஞ்சல் கட்டி விளையாடுதல் பெண் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டாகும். இது பயத்தைப் போக்குவதாக அமைந்தள்ளது.

***கபடியாடிக்க கபடியாடிக்க***
***கைகால் முறிய கைகால் முறிய***
***காலுக்கு மருந்து தேடிக்கட்டுதேடிக்கட்டு***

விளையாட்டின் போது கைகால் முறிதல் சர்வ சாதாரணமான நிகழ்வாக எடுத்துக்கொண்டு விளையாடுதல் அக்கால மக்களுடைய சிறந்த பண்பாக காணப்பட்டது. காயத்திற்கு மருந்து இயற்கையான கைமருந்தாக அமைந்துள்ளமை சிறப்பானதாகும். காய மேற்படும் என தெரிந்து விளையாடுதல் என்பது தன்நம்பிக்கையும் தைரியத்தையும் எடுத்துக்காட்டுகின்றது.

இளமைப் பருவக்காதற் பாடல்கள் இனிமை நிறைந்தவை. நிலங்களுக்கு ஏற்ற வகையில் காதல் வளர்க்கப்பட்டது. குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐவகை நிலங்களிலும் காணப்பட்ட அகவொழுக்கமானது அந்நிலங்களுக்கு ஏற்ற வகையான முதல், கரு, உரிப் பொருட்களைக் கொண்டமைந்ததாக பாடப்பட்டது.

***கோப்பித்தண்ணியூற்றிவைச்சிருக்கேனத்தான்***
***எடுத்துக் குடியுங்கோ தாகம் தீர***
***கோபப்படாமலே போகும் போது ஒரு***
***முத்தமொன்று தாங்கோ ஆசை தீர***

அச்சம் நிறைந்த கடலுக்குச் செல்லும் தலைவன் கோபப்படாமல் போக வேண்டும் என்பதற்காக முத்தம் தரும்படி கேட்பது தலைவியின் விவேகத்தை எடுத்தக் காட்டுகின்றது. ஊடலும் கூடலும் நிறைந்த காதல் வாழ்வு சுவைமிக்கது.

***ஊரார் உறங்கையிலே உற்றாரும் தூங்கையிலே***
***நல்லபாம்பு வேடம் கொண்டு நான் வருவேன் சாமத்திலே***
***நல்ல பாம்பு வேடங்கொண்டு நடுச்சாமம் வந்தாயானாள்***
***ஊர்க்குருவி வேடங்கொண்டு உயரப் பறந்திடுவேன்***

காதலன் காதலியிடம் இருக்கக் கூடிய அன்புறவுகள் உரையாடல் மூலம் வெளிப் படுத்தப்படுகிறது. பகற்குறி, இரவுக்குறி அகத்திணை வழக்கில் முக்கியமானதாகும்.

மருதமுகிழ்

இங்கு தலைவன் இரவுக் குறியை விரும்பிப்பாடுதல் சுவையானது. ஊடலும் கூடலும் இணையும் வாழ்வியல் அம்சங்கள் இதில் சிறப்பாக எடுத்துக் காட்டப்படுகின்றன.

தொழிற் பாடல்வரிசையில் விவசாயி பாடுகின்ற ஏர்ப்பாடல் பின்வருமாறு அமைகின்றது.

*நாடு தழைக்க வேண்டும் தம்பிரானே*
*நல்ல மழை பெய்ய வேண்டும் தம்பிரானே*
*ஏர் தழைக்க வேண்டும் தம்பிரானே*
*எல்லோரும் வாழ வேண்டும் தம்பிரானே*

எல்லோரும் வாழ வேண்டும் என்ற நோக்கைக் கொண்டு அமையும் தொழிலாக உழவுத் தொழில் காணப்படுகின்றது. களைப்பைப் போக்கும் அதே வேளை எல்லோரையும் வாழ வைக்கும் பண்பையும் உற்சாகத்தையும் கொடுக்கும் பாடலாக இது அமைந்துள்ளது. எல்லோருக்கும் உணவு கொடுக்கும் உழவுத் தொழில் முதன்மையானதாகப் போற்றப்பட்டது.

*புறப்படுவோமே மச்சான் புறப்படுவோமே*
*கட்டுவலை எடுத்துக்கிட்டு புறப்படுவோமே*
*கடல் கடந்து செல்வதற்கு தோயுமுண்டுணி*
*கட்டை சுறா உழுவ மீன் கடலிலேயுண்டு*
*கடவுள் தந்த கைகளே முழுப்படவுண்டு*

கடலுக்குச் செல்லும் மீனவன் தன் உறவுகளை அழைத்துக் கொண்டு தன் நம்பிக்கையுடன் செல்கிறான். இரங்கு வதற்குரிய கடலின் தோற்றமானது. தன்னம் பிக்கையும், தைரியமும் கொடுப்பதாக இப் பாடல் அமைந்துள்ளது.

ஒப்பாரிப் பாடலானது இறப்பு வீடுகளில் பாடப்படும் ஆற்றுப்படுத்தல் பாடலாக அமைந்துள்ளது. இறந்தவர்களின் சிறப்புக்களைக் கூறும் அதே வேளை அவர்கள் அருகில் இல்லாததால் ஏற்படும் மனவேதனையையும் ஈடு செய்ய முடியாத துன்பத்தை சொல்லி அழுவதினூடாக குறைகிறது. கணவன் இறந்ததும் மனைவி பின்வருமாறு ஒப்பாரி பாடுகின்றாள்.

*"தாலிச்சரமிழந்தேன் - நான்*
*தங்கப் பொன் மாற்றிழந்தேன்*
*முத்துச் சரமிழந்தேன்- நான்*
*முருக்கம்பூ பட்டிழந்தேன்"*

கணவன் இறந்ததில் மனைவி இழந்தவற்றை ஏக்கத்துடன் சொல்லி அழுகின்றாள்.

*ஓடியெல்லோ வந்திடுவேன் - உங்கள்*
*ஒழுங்கைத் தெரியாது*
*பாய்ந்தல்லோ வந்திடுவேன் -உங்கள்*
*பாதை தெரியாது*

கணவன் சென்ற இடம் தெரியாது தெரிந்தால் நானும் வந்து விடுவேன் எனப் புலம்பிப்பாடுதல் தன்னையாற்றுப் படுத்துவதாக அமைந்துள்ளது. உலக நியதியை ஏற்கும் மனைவியின் மனப்பாங்கு எடுத்துக் காட்டப்படுகிறது.

தாய் இறந்த போது பிள்ளைகள் பின்வருமாறு பாடுதல் சிறப்பானதாகும்.

*பத்து ஊர் தாய் எனக்கு*
*பக்க உதவி சொன்னாலும்*
*என்னைப்பெற்ற பார்வதியே- நான்*
*இனி பார்கிறது எக்காலம்*

கலை இலக்கியங்கள் மனித உணர்வுகளை ஆற்றுப்படுத்தி வந்துள்ளன. அந்த வகையில் நாட்டார் பாடல் எனப்படும். கிராம மக்களால் பாடப்பட்ட இப் பாடல்கள் உளவியல் கல்வி வளர்ச்சியடையாத காலத்தில் மனித உள்ளத்தை ஆற்றுப் படுத்தும் தன்மைகளைக் கொண்டிருப்பது ஆச்சரியத்துக் குரியதாக காணப்படுகிறது. இன்று நூல்களை அலங்கரிக்கும் நாட்டார் பாடல்கள் மக்களின் வாய்மொழி மரபுகளிலிருந்து நலிந்து விட்டன. இவற்றை மீண்டும் புது மெருகுடன் கொண்டு வருதல் எமது கடமையும் பொறுப்புமாகும்.



# பேராசிரியர் முருகர் குணசிங்கம் அவர்களுடனான நேர்காணல்

நேர்கண்டவர்
திருமதி. விஜிதா செல்வகுமார் கலாசார உத்தியோகத்தர்

மருதமும் முல்லையும் சூழ்ந்த இயற்கை எழில் கொஞ்சும் பிரதேசம் தான் வவுனியா வடக்கிலே அமைந்துள்ள புதுக்குளம் கிராமம். இக் கிராமம் கனகராயன்குளத்தில் அமைந்துள்ள கிராமமாகும். அன்றாடம் கமத் தொழிலையும், உப பயிர் தொழில்களையும் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றை நம்பி இருக்கும் கிராமம் இது. இங்கே இந்தக் கிராமத்தின் ஒரு பிரபலமான உலகமறிந்த கல்விமானை சந்திப்பது மிகவும் உற்சாகமாக இருந்தது. தனது சொந்த மண்ணிற்கு வந்து நீத்தாரின் நினைவு முற்றத்துடனான தங்கம்மா முதியோர் இல்லத்தை நிர்மாணித்து திறப்புவிழா செய்து தனது அரிய சேவையை மண்ணிற்கும் மக்களுக்கும் உறவுகளுக்கும் தன் வாழ்நாளெல்லாம் அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்ற

### "தனக்கென வாழா பிறருக்குரியாளன்"

என்ற தாரக மந்திரத்திற் கமைய செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். "செயற்கரிய செய்த பெரியார் வரிசையில் போற்றத்தக்க பெரியவராக இவர் திகழ்கின்றார். இதனால் இம் மண் பெற்ற பெருமை அளப்பெரிது எனலாம். உலகம் போற்றும் இக் கல்வி மானை அவரது நீத்தார் நினைவு முற்றத்துடனான தங்கம்மா முதியோர் இல்லத்தில் சந்தித்தேன்.

**கேள்வி :-**

வணக்கம் பேராசிரியர் முருகர் குணசிங்கம் அவர்களே! தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டால் சிறப்பாக இருக்கும்.

**பதில் :-**

வணக்கம் கலாசார உத்தியோகத்தர் விஜிதா அவர்களே! எங்களுடைய முதியோர் இல்லத்திற்கு வருகைதந்து இச் செவ்வியை தாங்கள் எடுப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். என்னைப்பற்றி சுருக்கமாக சொல்லப் போனால் நான் இந்த புதுக்குளம் எனும் சிறிய கிராமத்தில் ஏழைக்குடும்பத்தில் பிறந்து கனகராயன்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் ஆரம்பக்கல்வியைப் பயின்று பின்னர் ஓமந்தை மகா வித்தியாலத்திலே எனது உயர் கல்வியைப் பயின்று பின்னர் யாழ் பல்கலைக்கழகம் சென்று வரலாற்றுத்துறையை விசேட துறையாக கற்று சித்தியடைந்து அங்கு சிலகாலம் விரிவுரையாளராக கடமையாற்றிய பின்னர் உதவிநூலகராக கடமையாற்றும்" வாய்ப்பும் எனக்கு அங்கே கிடைத்தது. அதனைத் தொடர்ந்து எனது 5 வருடசேவை அங்கே முடிந்த பின்னர் நான் இந்தியாவிலே மைசூர் பல்கலைக்கழகத்தில் நூலகர் படிப்பினை தொடர்ந்தேன். அப்போ அங்கே அக்கற்கை நெறி திறம்படக் கற்பிக்காதபடியால் பின்னர் லண்டன் பல்கலைக் கழகத்தில் நூலக விஞ்ஞான துறையிலே டிப்ளோமாவும் முதுகலை மாணிபட்டப் படிப்பும் கற்ற பின்னர் யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் மீண்டும் வந்து கடமையில் சேர்ந்தேன். அங்கு கடமையாற்றும் போது 1987 நடந்த இனக் கலவரங்களில் தாக்கு பிடிப்ப முடியாமல் போக அவுஸ்திரேலிய நாட்டிற்கு விண்ணப்பித்த போது பதவியும் தந்து அங்கு நிரந்தர குடியுரிமையும் கிடைத்தபடியால் அங்கு சென்று வாழ்ந்து வருகிறேன். இப்பொழுது வன்னிக்கு வந்து எனது ஓய்வு நேரத்தில் ஏதாவது சமூக

சேவை செய்ய வேண்டும் என்ற நோக்கில் எனது தந்தை தாயின் நினைவாக நினைவு முற்றமொன்றினை ஸ்தாபித்துள்ளேன். அதை இலவசமாக பாடங்கள் கற்பதற்கும் இலவசமாக நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் கொடுத்திருக்கிறேன். அதே வேளை இங்கு ஒரு முதியோர் இல்லம் கட்டி முடிக்கப்பட்டு இந்த வாரம் முதியோர்தின வாரமாக இருப்பதால் கைவிடப்பட்ட முதியோர்களை இவ் இல்லத்திலே சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பும் உத்தியோகபூர்வமாக ஒக்டோபர் 1ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இது தான் என்னை பற்றிய சுருக்கமான விபரம்

**கேள்வி :-**
தங்களின் ஆரம்பம் முதல் கல்விசார் முயற்சிகளையும் நீங்கள் எவ்வாறு அதில் வெற்றி ஈட்டியுள்ளீர்கள் என்பது பற்றியும் கூற முடியுமா?

**பதில் :-**
மிகவும் துன்பம் நிறைந்ததான ஆரம்ப வாழ்க்கை பற்றி நிச்சயமாக இங்கே சொல்ல வேண்டியது அவசியம் ஏனென்றால் என்னைப்போல் வறிய குடும்பத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு நிச்சயமாக உந்து சக்தியாக இருக்கும் என்ற காரணத்தினால் தேவைகருதி இதனை இங்கு சொல்லலாம் என நினைக்கிறேன். இந்த புதுக்குளக் கிராம் A9 வீதியில் இருந்து ஒரு கிலோமீற்றர் தள்ளி இருக்கிறது. அப்ப இந்தக் கிராமத்தில் இருந்தது எங்கட ஐயாவும், அம்மாவும் மட்டும் தான். எனது 9 சகோதரர்களும் நான் இப்பொழுது முதியோர் இல்லம் கட்டியிருக்கிற இந்த இடத்தில் தான் பிறந்து வளர்ந்தோம். இங்கிருந்து கனகராயன்குளம் போவ தென்றால் ஒற்றையடிப் பாதையிலே நடந்து சென்று தான் பள்ளிக் கூடத்திலே நாங்க ளெல்லாரும் படித்தனாங்கள். அப்போது எனது தகப்பனார் புகையிரதப் பிரிவிலே உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். 1958 இனக்கலவரம் நடந்த போது அவர் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டார். அதேவேளையில் தான் பார்த்த புகையிரத சேவை தொழிலையும் இழக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டார். அந்தக் கவலை அவரை மிகவும் வாட்டி வதைத்ததால் நாங்கள் சிறு பிள்ளைகளாக இருக்கும் போது (நான் தான் இக்குடும்பத்தில் கடைசிப்பிள்ளை) நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். ஒன்பது பிள்ளைகளின் பொறுப்பும் எனது தாயாரின் தலையில் விழுந்தது. அப்பொழுது எனது மூத்த தமையன்மார் இரண்டொருபேர் வளர்ந்திருந்தபடியால் சில சில தொழில்களை செய்ய வேண்டி ஏற்பட்டது. ஆனால் மிகவும் துன்பமான விடயம் என்னவென்றால் எனது தாயார் காலை 5 மணிக்கே எழுந்து மூன்று மைல்கள் நடந்து போய் நாள் முழுக்க கூலி வேலை செய்து அவர் திரும்பி வீட்டிற்கு வர 7 மணியாகும். வந்ததும் அடித்துப்போட்ட ஒரு செத்த பாம்பு மாதிரி முற்றத்தில் விழுந்து கிடப்பா அதை சிறு வயதிலே பார்த்த அனுபவம், அந்தத்துன்பம் இந்த வாழ்நாள் முழுக்க என்னால் மறக்க முடியவில்லை. இவ்வாறான வறுமை நிலையில் கூலி வேலை செய்து எங்களை வளர்த்தார். அந்த வேதனையை தாங்க முடியாமல் ஒவ்வொரு சகோதரரும் ஒவ்வொரு சகோதரியும் படிப்பை இடையிலே நிறுத்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது நான் பள்ளிக்கூடத்திலே படித்துக்கொண்டிருந்த பொழுது யாழ்ப்பாணத்திலே குறிப்பாக வடமராட்சியிலே இருந்து வந்த ஆசிரியர்கள் தான் அங்கே படிப்பித்தார்கள். அவர்களின் கதைகளைக் கேட்கும் போது இந்தக் கல்விதான் யாழ்ப்பாணத்திலே முக்கியமான வாழ்க்கை. அதற்காக அவர்கள் எதையும் செய்யத்தயாராக இருந்தார்கள். அதற்காக அந்தப் பிள்ளைகளுக்கு என்னென்ன செய்து வளர்த்து ஆளாக்க முடியுமோ படிப்பித்து, உயர்கல்வி படிப்பித்து அதனால் பெருவருமானம்

ஈட்டியிருந்த சிறந்த ஆசிரியர்களாக எனக்கு கிடைத்தமை வரப்பிரசாதமே அப்போ நான் யோசித்ததென்னவென்றால் கல்வியை நன்கு கற்று அதனூடாக மேலே வந்துதான் எனது சகோதரங்கள் தாயை மகிழ்ச்சியாகவும் வசதியாகவும் வாழ வைக்க முடியுமென்று திடமாக நம்பினேன். "கொடிது கொடிது இளமையில் வறுமை" என்ற வரி பசிக் கொடுமையை அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும். இதனை அறிஞர் கார்ள்மார்க்ஸ் அழகாக குறிப்பிடுவார். பசியின் கொடுமை எவ்வளவு மோசமானது என்பது தெரிந்தவர்கள் ஒரு சமூகத்திலே வாழும் போது அவர்களாலே அச்சமூகம் நிறைய நல்ல பலன்களை அனுபவிக்கும் என்பது அறிவு பூர்வமான முடிவாகும். அந்த வகையில் எனது தாயாரின் சிறிய வருமானம் எனது சகோதரர்களின் வருமானங்களையும் ஆடு, மாடு, கோழி வளர்த்து அதிலே வாற பால்காசு, கோழி வளர்த்த முட்டைக்காசு எடுத்துதான் எங்கட அம்மா எங்களை வளர்த்தார். அப்பொழுது நான் சிறியவனாக இருக்கும் போது எனக்கு யோசனை வந்தது அக்காமார் திருமண மாகாமல் இருக்கிறார்கள் திருமணம் செய்து வைப்பதற்கு பணம் ணேடும் ஆகையால் நான் ஒரு சதம் காசும் அம்மாவிட்ட இருந்து வாங்கக்கூடாது என்று ஒரு உறுதிமொழி எடுத்துக் கொண்டேன். அப்பொழுது நான் நினைக்கிறேன் எனக்கொரு பத்து வயது இருக்கும். நான் 5ம் வகுப்பு படிக்கும் போது நான் சில வேலைகள் செய்தேன். கிணறு கட்டுவார்கள் சீமேந்து பைகளை வேண்டி சீமெந்தை எடுத்த பின் அந்த பைகளை விற்பார்கள். ஒரு பை 50 சதத்திற்கு விற்பார்கள். அதில் 30 பைகளை விலைக்கு வாங்கி அந்த பக்கட்டுக்களை வெட்டி கோதுமைமாவும் சுடுதண்ணியும் சேர்த்து பசை செய்து அதனை ஒட்டுவன். சின்ன பாக்கை 5 சதத்திற்கும் 5 சதமென்றால் 3 சதம் தான் தருவார்கள். பெரிய பாக்கை 7 சதத்திற்கும் விற்பேன். அந்தக் காசு பாடசாலை விட்டுவந்ததும் இரவிரவாக செய்வன். பிறகு மேல் வகுப்புக்கு போகப் போக வருமானம் போதாமல் போக கூலி வேலைக்குப் போவேன். அப்ப அம்மா சொல்லுவா தம்பி நீ கூலி வேலைக்கு போகாத நீ சின்ன ஆள் படிக்க வேணும் என்பார். அண்ணாக்க ளெல்லாரும் சொல்லுவார்கள் வேலைக்கு போகவேண்டாமென்று ஆனால் நான் கேட்க மாட்டேன் எனக்கொரு வைராக்கியம் வந்தது. இவை ஒருத்தரிட்டையும் ஒரு சதம் காசும் வாங்கிறேல்ல என்றும் என்னால குடுக்க முடியுமென்டால் குடுப்பன். ஒருதரிட்டையும் வாங்குறதில்லை என்று முடிவெடுத்தன். அப்போ எருப் பொறுக்கி விப்பன். கூலிவேலைக்கு போவன். றோட்டில தார் ஊற்றுவன். சங்கக்கடையில மூட்டைகள் சுமப்பதும் இப்படியெல்லாம் வேலை செய்து செய்து S.S.C படிச்சன் ஒரு சில காலங்களில் ஒழுங்கா பள்ளிக்கூடம் போக முடியாமலிருக்கும் அண்ணாக்கள் சொல்லுவினம் வயலில போய் காவலுக்கு இரு எண்டு 2 கிழமை பாடசாலை போகாமலிருக்கிற சந்தர்ப் பங்களும் இருந்திருக்குது. இதனால் ரொம்ப கஷ்டமாக இருந்தது. படிப்பதற்கு அப்ப என்ன செய்வனெண்டா பள்ளிக்கூடம் விடுகிற நேரம் நடந்து போய் என்னுடைய நண்பர்களின் கொப்பிகளை வாங்கி இரவிரவாக இருந்து படித்து மனனம் பண்ணி ஓரளவு செய்யக் கூடியதாகவிருந்தது. அதே வேளை வறுமை என்னை வாட்டிக் கொண்டிருந்தாலும் படிப்பில் கவனம் செலுத்தினாலும் கூலி வேலை செய்தாலும், பொறுப்பாக நடந்து கொண்டாலும் குறும்புப் பழக்கங்களும் இருந்தது. நிறைய நன்றாக விளையாடுவன். கரப்பந்து, கிறிக்கற், கூடைப்பந்து மற்றும் கிட்டிப்புள், தாச்சி இதெல்லாம் சரளமாக விளையாடுவன். மேடையில் நல்லா பேசுவன். அப்பவே என்னைச் சுற்றி ஒருகூட்டமிருக்கும் ஆசிரியர்கள், நண்பர்கள் இருப்பினம்.

என்ர வாழ்க்கை முழுவதுமே வறுமை, கஷ்டம் இளையோடிக் கொண்டிருந்தாலும் ஒரு மகிழ்ச்சியும் சந்தோசமும் என்னோடு சேர்ந்து வந்ததாகத்தான் நான் பார்க்கிறேன். எஸ்.எஸ்.சி (நாங்கள் பத்துப்பேர் நண்பர்கள் சேர்ந்து) 1970 டிசம்பர் மாதம் நடந்தது. இவன் என்னத்த பாஸ் பண்ணுறது. இவன் றோட்டில திரிஞ்சு கூலி வேலை செய்து கொண்டு திரியிறான். எங்கட பிள்ளைகள் முழுநேரமாக படிக்குதுகள். நாங்கள் அவங்களைக் படிப்பிக்கிறம் அவங்களெல்லாம் பாஸ் பண்ணுவாங்கள். இவர் எங்க பாஸ் பண்ணுறது றோட்டில நிற்கப்போறார் என்று எனது காதுபடக் கதைப்பார்கள். நான் கவலைப்பட மாட்டன். அப்ப எனக்குப் போடக்கூட செருப்பு இருக்காது. இப்பவும் இந்த மண்ணில் செருப்பில்லாம திரியக்காரணம் அந்த வலி இந்த மண்ணில் தெரிய வேண்டு என்று. எஸ்.எஸ்.சி எல்லாரும் போய் எழுதினம். எழுதிய பின் மறுமொழி வந்தது. ஆங்கிலம் தவிர ஏழு பாடமும் பாஸ் பண்ணின முதல் ஆள் நானாகத்தான் இருந்தன். மற்றெல்லாரும் மூன்று பாடம் நாலு பாடம் ஐந்து பாடம் தான். ஒருவரும் ஆறு பாடம் கூடி சித்தி பெறவில்லை. இது என்ர தாய்க்கு நான் கொடுத்த முதல் பரிசு என்று நான் நினைக்கிறன். தம்பி நீ கெட்டிக்காரனடா உலகத்தில் கடைசி மட்டும் என்ன படிக்க இருக்குமோ படி எண்டு சொன்னா அது என் நெஞ்சில் ஆணியால் குத்தி இறுக்கி அமத்திவிட்டமாதிரி ஒரு இலட்சியத்தை எனக்குத் தந்தது. நான் அவவுக்கு சொன்னன். நான் முடிந்தவரை உயர் கல்வியில் எவ்வளவு எடுக்க முடியுமோ அதை நான் செய்வன் என்று சொன்னன். இதே மாதிரி உயர்தரம் படிக்கிற வசதி நான் படித்த பாடசாலையில் இல்லாததால் உயர்தரம் கற்பதற்காக ஓமந்தை மகாவித்தியாலயத்திற்கு போக வேணும் பஸ்சுக்கு காசு வேணும் ஒரு பழைய சைக்கிள் இருந்தது. மக்காட் இருக்கும், பிறேக் இருக்காது, ஒண்டுமே இருக்காது பெடல் மரக்கட்டையால் செய்து போட்டன். அதில் பதினான்கு கிலோ மீற்றர் சென்று பதினான்கு கிலோமீற்றர் திரும்பி வர வேண்டும். ஏத்தம் இறக்கம் எல்லாம் தாண்டி நேரத்துக்கு பள்ளிக்கூடத்துக்கு போக வேண்டும். உடுப்பெல்லாம் மணக்கும் அங்கு பள்ளிக்கூடம் போக பேசுவார்கள் உடுப்பெல்லாம் மணக்குது என்று வாத்திமாரெல்லாம் பேசுவார்கள். அப்படியெல்லாம் சீரளிந்த வாழ்க்கை. அப்பவெல்லாம் நான் விடவில்லை, விடவேயில்லை அது தான் சொல்லுவினம் Never Give up அப்ப அங்கேயும் நாங்கள் பதினைந்து பேர் உயர்தரம் எடுத்தனாங்கள் அப்பவும் எனக்கு என்னவெண்டு தெரியேல்ல நான் அருள்பெற்றவனோ கடவுள் கிருபை பெற்றவனோ எனது அன்னையில் ஆசி பெற்றவனோ தெரியாது அதில நாலு பாடமும் முதல் முதல் நான் தான் சித்தி பெற்றன். ஓமந்தை மகாவித்தியாலயத்தில் அந்த பதிவு இன்னும் இருக்கு ஆனால் அந்த வருஷம் அதிபர் செய்த குளறுபடியால் பள்ளிக்கூடத்தில் நான் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்தன். அது ஒரு துன்பியலான ஒரு விடயம் பின்னர் இரண்டாம் தடவை திருப்பி எடுத்தன். அப்ப அம்மா சொல்லுவா நீ பொன்னனுக்கு படிக்க வேணும் எண்டு பொன்னனுக்கு படிக்கிற தெண்டால் சட்டப்படிப்பு. பொன்னன் என்றால் ஜி.ஜி.பொன்னம்பலம். நெடுகலும் அவ சொல்லுவா என்னதம்பி அவற்ர ஆங்கிலம் என்னதம்பி அவற்ர பேச்சு என்பா ஐயாவின் தொழில் சம்பந்தமான இழப்புகளுக்கு கோடுகளுக்கு போன போது அவர் பேச அவ கேட்டிருக்கிறா என்ன மாதிரி தம்பி கோட்டில அடிச்சுப் பேசுகிறார் என்பா. நான் மேடைகளில் பேசுகிறதையும் எங்கட அம்மா கேட்டிருக்கிறா அதனால அப்படி ஒரு ஆசை. நான் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு சட்டம் படிக்க போனன். அப்ப கொழும்பு எனக்கு பெரிசா தெரியாது. பெற்றா சந்தைக்கு லொறி ஓடின

அனுபவம் சாமான் ஏத்தி இறக்கிப் போட்டு வந்திடுவன் கொழும்பு அப்ப பெரிசா தெரியாது. நான் அங்க போன போது சப்பாத்தும் அந்த மாதிரி காற்சட்டையும் சேட்டும் எல்லாரும் அப்படி வந்தினம் அப்ப எனக்கு தெரியும் உது கடைசி வரையும் சரிவராது எண்டு ஏனென்டால் உப்பிடி ஒரு வாழ்க்கை என்னால வாழ முடியாது. என்னிட்ட ஆன உடுப்பு இல்ல ஆன சப்பாத்து இல்ல எல்லாம் குழப்புறதா முடியும் எண்டு இருக்கும் போது யாழ் பல்கலைக் கழகம் போற சந்தர்ப்பம் கிடைத்தது. எனக்கு பொருத்தமாக இருந்தது. அங்க நான் செய்த வேலை முதலாவது கடமை படிப்பு, இரண்டாவது கடமை படிப்பு, மூன்றாவது கடமைபடிப்பு, படிக்கிறதே எனது வாழ்க்கையானது.

**கேள்வி :-**

பல இன்னல்கள் இடையூறுகளை கடந்து தங்கள் உயர்கல்வியை பெற்றுள்ளீர்கள் கல்வி கற்பதற்கு தங்களுக்கு வறுமை ஒரு தடையாக இருக்கவில்லை என்பதை குறிப்பிட்டீர்கள். இதன் மூலம் இன்றைய இளம் சமுதாயத்திற்கு தாங்கள் என்ன கூற விளைகிறீர்கள்?

**பதில் :-**

இதில் இளம் மாணவர்கள் நிறைய படிக்க வேண்டி இருக்கு இளம் சமுதாயம் இதனை ஆழமாக யோசிப்பார்களாக இருந்தால் நிச்சயமாக அவர்கள் படித்து மேல வருவதற்கான வாய்ப்பு வசதிகள் நிறைய இன்றைய உலகத்தில் இருக்கு நேரம் அவர்களைக் கட்டுப்படத்தக்கூடாது. நேரத்தை அவர்கள் கட்டுப்படுத்த வேண்டும். நான் எனக்குத் தெரிந்தவரையில் 5ம் வகுப்பில் 4 மணிக்கு எழுந்து படிக்கத் தொடங்கினனான். படுக்கைக்கு போக இரவு 11 மணியாகும். ஐந்து மணி நேர நித்திரை தான். உலகத்தலைவர்களின் வரலாறுகளை வாசிக்கும் போது அவர்கள் நான்கு ஐந்து மணித்தியாலங்களே நித்திரை கொண்டுள்ளார்கள். நித்திரை கொள்ளுகிறவன் உண்மையாக வாழ்க்கையில் முன்னேறுவது ரொம்ப கஷ்டம் ஆங்கிலத்தில் ஒரு பழமொழி Early birds Catch flys அதாவது எந்தப்பறவை அதிகாலையில் எழும்புகிறதோ அந்தப் பறவை தான் பூச்சிகளைப்பிடித்துத் தின்னும் காலம் தாழ்த்தி நித்திரைவிட்டெழும் பறவைக்கு பிடித்து தின்ன பூச்சி இருக்காது. எனவே காலையில் எழுந்து படிக்கும் போது Mind Frish ஆக இருக்கும். காலமை எழுந்த படிக்கிறதென்பது குடுத்து வச்சிருக்க வேணும் நாலு, ஐந்து, ஆறு என மூன்று மணித்தியாலயம் படித்தாலே அது ரொம்ப மனசுக்க தெளிவையும் பதிவையும் கொடுக்கும் எந்த ஒரு கஷ்டமான பாடத்தையும் அதிகாலையில் எழுந்து படித்தால் வெளிச்ச மான அறிவை போதிக்கும்குறிப்பாகஇளம்சந்ததியினருக்கு சொல்லுவது என்னவெண்டால் முக்கியமாக நித்திரை கொள்ளாதையுங்கோ, நல்ல நூல்களைப் படியுங்கோ, நல்ல பிரபலமான அறிஞர்கள், தலைவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளைப் படியுங்கள், ஒவ்வொரு நாளும் பத்திரிகை பாருங்கள். என்ன நடக்குது என்பதனை அறியலாம். உலகம் அதிவேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. மற்றது தாயும் தகப்பனும் உங்களுக்கு கண்கண்ட தெய்வங்கள் தாயையும் தகப்பனையும் மதித்து வணங்காட்டில் எங்களுக்கு எந்த ஒரு அருளும் கிடைக்காது. அதே மாதிரி குரு. எப்படி தாயும் தந்தையும் முக்கியமோ ஒரு மாணவனுக்கு குரு முக்கியம். ஆசிரியர்கள் ஏணிகள் அவர்கள் ஏமாளிகள்அல்ல நீங்கள் நினைக்கலாம் வாத்தியாரை ஏமாத்திப்போட்டு எங்கட விளை யாட்டைக் காட்டாலாமென்று அவர்கள் ஏணிகளாத்தான் இருக்கிறார்கள். ஏணியில் ஏறிப்போன பின்னர் ஏணி அப்படியே நிற்கும். ஆசிரியர்களின் வாழ்க்கை முழுக்க முழுக்க பிள்ளைகளுக்கு அர்ப்பணித்த வாழ்க்கை யாகும். உண்மை

யான ஆசிரியர்கள் பற்றித்தான் இங்கு பேசுகிறேன். அவர்கள் தங்கள் வாழ்கையை அர்ப்பணித்தவர்களாகத்தான் இருப்பார்கள். தங்களுக் கென்று எந்த வாழ்க்கை வசதிகளையும் தேட முடியாத வர்கள். நல்லதொரு ஆசிரியரைப் பின்பற்றின மெண்டால் அவையின்ர வழியிலே போன மெண்டால் நிச்சயமாக தோற்கமாட்டம். நல்லதொரு பெரிய லட்சியத்தை அடைந்தே தீருவோம். மற்றது நவீன சாதனங்கள் நல்ல விடயம் தான் அதில மோசமான கேவலமான விஷயங்களும் இருக்கிறது. தயவு செய்து அந்தப்பக்கம் திரும்பாதையுங்கோ அதே மாதிரி இந்த Mobil Phone நான் இதை வச்சுக்கொண்டு உலகத்தையே என்ர கைக்குள்ள வச்சிருக்கிறன் இதை வச்சுக் கொண்டு உலகத்தில் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் செய்யிறன். தயவுசெய்து அதனைத் தவறாக பயன்படுத்தாதீர்கள். நான் எனது சொந்த வாழ்க்கையை, எனது வறுமையை, கஷ்டங்களையெல்லாம் மக்களுக்கு சொல்ல வேண்டிய நிர்ப் பந்தத்திற்கு தள்ளப்பட்டது, சில வேளை எனக்கு என்னுடைய ஆளுமைக்கு அல்லது என்னுடைய நிலைமைக்கு பாதகமாக இருந்தாலும் உங்கள் எல்லோருடைய நன்மை கருதி என்னுடைய இப் பின்னணியை சொல்லி வைப்பது நல்லது என்று கருதுகிறேன். இதிலிருந்த நிறைய நீங்கள் கற்க வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன்.

**கேள்வி :-** தங்களின் உயர்கல்வி பற்றியும் தங்களின் கல்வி சார் முயற்சிகளில் நீங்கள் சந்தித்த சவால்கள் பற்றியும் அதனை எவ்வாறு எதிர்கொண்டு கல்வித்துறையில் சாதனை படைத்தீர்கள் என்பது பற்றியும் கூறுங்கள்.

**பதில் :-**

நான் முக்கியமாக கெட்டிக்காரனில்லாட்டியும் விடமாட்டன். படிக்கிறத விடமாட்டன் விளங்கேல்ல எண்டா திரும்பத் திரும்பப் படிப்பன். அப்ப எங்களுக்கு மின்சார வசதி இல்லை. எங்கட வீடு கொட்டில் வீடு. கைவிளக்குத்தான். லாம்பேஎங்களிட்ட இல்ல அப்ப டிசம்பரில் தான் சோதினையெல்லாம் வாறது கைவிளக்கில் இருந்து படிப்பன். அதை காத்து நூத்துப் போடும், அனேகமான காலங்களில் மண்ணெண்ணை இருக்காது. இப்படியெல்லாம் ரொம்ப கஷ்டத்துக்குள்ள படிச்சு கல்விப் பொதுத்தராதர சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சை எடுத்து பல்கலைக்கழகம் போக முடிந்தது. எனக்கு 18 வயதிருக்கும் நான் மிகவும் சங்கடமான சிக்கலில்மாட்டிக்கொண்டன. அந்த அவஸ்தையானது சந்தோஷ மான அவஸ்தையும் கொடூரமான அவஸ்தையாகவும் இருந்தது அப்பிடி ஒண்ட வாழ்க்கையில் எப்பவும் நான் சந்திக்கேல்ல. அதனால் மாணவர்களே, மாணவப் பருவத்தில் காதல் சொல்லிக்கொண்டு வருவதில்லை. காதல் திடீர் என்று வரும் இது தான் காதல். இப்படி ஒண்டில மாட்டுப்பட்டு சித்திரவதைப்பட்டனான். இது எனக்கு பின்னடைவான விடயம் ஒன்று. என்னுடைய கல்வியைப் பாதிக்கிறது. மற்றது குடும்ப கௌரவத்தைப் பாதிக்கிறது. இதெல்லாம் கிராமங்களில் முக்கியமான விடயம் அதில் இருந்து விடுபட்டு உயர்தரம் படித்து பல்கலைக் கழகம் போனேன். பல்கலைக் கழகத்தில் ஆண்களும் பெண்களும் வெகு சரளமாக நண்பர்களாக பழகுவார்கள். அங்கு வித்தியாசம் ஒண்டும் இல்லை. இப்ப நான் யோசிச்சது என்னவெண்டா பல்கலைக்கழகத்தில் காதல் ஏற்படுவதற்கு இடங்கொடுக்கக்கூடாது. நான் A/L இல் விட்ட பிழையை இங்க விடக்கூடாது ஆனபடியால் நிச்சயமாக படிப்புத்தான் என்னுடைய முன்னுரிமையாக இருக்க வேணும் மென்று ஆசைப்பட்டு ஆசைப்பட்டு படித்தேன். உண்மையாக பசி கிடந்த ஒருவனுக்கு சாப்பா டெல்லாம் குவிச்சு விட்டா எல்லாத்தையும் சாப்பிட வேணு மெண்ட ஆசை வரும் எந்தெந்தப் புத்தகமெல்லாம்

கிடைக்குதோ அதை யெல்லாம் வாசித்துப் படிப்பன். ஒரு விரிவுரை, தப்பவிடமாட்டன். அந்த பல்கலைக்கழகத்தில் படிக்கிற காலத்தில் கூட நான் ஊருக்கு வந்து 5 ஏக்கர் வயல் செய்வன். ஐயாயிரம் மிளகாய்க்கண்டு நடுவன். சனி, ஞாயிறு வந்து வயல்வேலை செய்து நெல்லெல்லாம் விதைச்சுப்போட்டு திங்கட்கிழமை பல்கலைக்கழகம் சென்று அந்த ஐந்து நாளும் தனியார் வகுப்புகள் செய்வன். என்னுடன் அம்மா அண்ணாவின் பிள்ளைகள் அக்காவின் பிள்ளைகளை அழைத்து வந்து வாடகை வீடெடுத்து அவர்களை படிப்பித்தேன் அண்ணா அக்கா அவர்களுக்கும் கஷ்டம் என்பதால் இதனை என்னால் செய்ய முடிந்தது. அம்மாவுக்கு சந்தோஷம் என்றால் தாங்க முடியவில்லை. ஒரு வருஷத்தால் அம்மா சொன்னா மற்றப் பிள்ளைகளிட்ட போயிட்டு வரப்போறன் என்றா..... அதுக்குப்பிறகு என்னிட்ட அவ வரேல்ல அது என்ர வாழ்க்கையில் இடிவிழுந்த மாதிரி. என்ர அம்மா இல்லாமல் என்னால இயங்க முடியேல்ல. கனவு நினைவு எங்க போனாலும் அம்மா தான் என்ர கண்ணுக்கு முன்னால நிற்பா. நான் கடவுளைக் கும்பிடுநதைவிட என்ர அம்மாவை கும்பிடுறதுதான் அதிகம். அதுக்குப்பிறகு ஒரு வெறிச்ச வாழ்க்கை தான் இருந்தது. ஆனால் சில நேரம் உணர்ச்சி வசப்படுவன். ஆனால் அறிவு பூர்வமாக சிந்திப்பன். இவவுக்கு வயது போயிற்று கஷ்டப்பட்டவா மரணம் அவவை தழுவிக்கொண்டது. ஆனால் என்ர கடமையைச் செய்யாமல் இருக்கக்கூடாது. குறையப்பேர் தான் இப்பரீட்சை எடுத்தனாங்கள் அதில் எனக்கு Upper 2nd கிடைத்தது அதில் தெரிவு செய்யப்பட்டு விரிவுரையாளராக அங்கிருந்த போது எனக்கொரு ஆசை "தென்னாசியவியல் கலைகளைப் படிக்க வேண்டு மென்று இந்தியாவில் குஜராத்தில் வருடா பல்கலைக் கழகத்திறகு போனேன்.இப்ப என்னிட்ட காசு முடிந்துவிட்டது. 4 ஏக்கர் காணியை விற்றுத்தான் போனனான். அங்க என்னால் சமாளிக்க முடியவில்லை. குளிரினால் உடல் உபாதைகளும் வந்ததால் திரும்பி வரவேணும் எண்டு யோசிச்சன். அந்த வேளையில் அங்க ஒரு சுவாரஸ்மான விடயம் என்னவென்றால் நான் அங்கு படிக்கம் போது தற்போதைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் எனக்கு சிரேஷ்ட மாணவராக இருந்தவர். வருடாந்தம் வருகிற தேசிய விழாவின் பொழுது மாணவர் தலைவரான அவரது பேச்சு இடம்பெற்றது. மிக அண்மையில் பிரதமராக அவர் வந்த பின் எனது புத்தகங்களுடன் கடிதமும் எழுதி அவருக்கு அனுப்பினேன். அதற்கு அவர் பதில் கடிதம் உடனே அனுப்பியிருந்தார். நீங்கள் பழைய ஞாபகங்களை திருப்பிக் கொண்டு வந்ததற்கு நன்றி என்றும் உங்கட புத்தகம் பார்த்தனான் மிகவும் அருமையான புத்தகம். இலங்கைத் தமிழர் பற்றி முழுமையான வரலாறு இதுவரை கிடைக் கவில்லை. நிச்சயமாக இலங்கைத்தமிழர் பற்றி பூரணமாக அறிவதற்கு சந்தர்ப்பத்தை தந்திருக்கு என்று வாழ்த்தி எழுதியிருந்தார். அதற்கு பின்னர் படிப்பினை முடிக்காமலே திரும்பி வந்தேன். இது 1980 இல் நடந்தது. அண்ணா ஓராள் 1983 இல் இறந்துவிட்டார். அந்த வேளை நான் திருமணம் செய்யாமல் என்ர சகோதரங்களுக்காக வாழுவமெண்டு இருந்த போது அண்ணா இறந்த போது அவரது ஆறு பெண் பிள்ளைகளையும் கரைசேர்க்கும் பொறுப்பு என் தலையில் வந்து விழுந்தது. எனக்கு கடனும் இருந்தது. பேராசிரியர் இந்திரபாலா சொன்னார். பொம்பிள பிள்ளைகளையும் பார்க்கவேணும் நீ வெளிநாட்டிற்கு போய் படிக்கவும் வேணும் ஆனபடியால் திருமணம் செய் என்றார். திருநெல்வேலியைச் சேர்ந்த பெண்ணை அவரே திருமணம் பேசி செய்து வைத்தார். அவ என்ர வாழ்க்கையில இணைந்தார் "தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பார்கள். எனது மனைவியான இரஞ்சினியும் எனது

குருவான பேராசிரியர் இந்திரபாலாவும் எனக்கு கிடைத்த வரமாக கருதுகிறேன். எனது பாதையில் பயணிப்பதற்கு எனது மனைவி பிள்ளைகளின் அரவணைப்பு சிறப்பாக இருந்தது.

பின்னர் எனக்கு புலமைப்பரிசில் கிடைக்கவில்லை இருந்தும் லண்டன் சென்று எனது மேற்படிப்பை தொடர்ந்தேன். யாழ் பல்கலைக்கழகத்தில் நூலகராக கடமையாற்றிய போதே அங்கு சென்றேன். எனக்கு மகன் பிறந்திருந்ததால் வீட்டு வாடகை. இலங்கையில் இருக்கும் சகோதரர்கள் அவர்களின் பிள்ளைகளைப் பார்க்க வேண்டும். ஆதலால் பகலிலே பல்கலைக் கழகமும் இரவிலே 12 மணித்தியாலயங்கள் வேலையும் செய்வேன். நூலகவியல் துறையில் டிப்புளோமா செய்த பின் புலமைப் பரிசில் முதுமாணிப் பட்டப்படிப்பை முடித்த பின் அவுஸ்திரேலியாவுக்கு விண்ணப்பித்து விட்டு இலங்கை வந்து நூலகராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது அவுஸ்திரேலியா செல்லும் வாய்ப்பு கிடைத்தது. 6 வருடங்கள் தொடர்ந்து நூலகவியற்துறையில் வேலை செய்தேன். முகாமையாளராக ஒரு பிரிவில் கடமையாற்றினேன். நான் நூ லகம் தொடர்பான மாதிரி அமைப்பினை படித்திருந்ததால் அங்கு நல்ல வரவேற்பும் சம்பளமும் கிடைத்தது. மனைவியும் நல்லதொரு வேலையில் இருந்ததால் கை நிறையச் சம்பளம் வந்தது. அண்ணாவின் பிள்ளைகளுக்கு திருமணம் செய்வித்து அதற்கு பின் ஒரு அண்ணன் இறந்தார். அவரின் பிள்ளைகளுக்கும் திருமணம் செய்து கொடுத்தன். இவ்வாறாக ஒருபுறம் பிரச்சனைகள் ஓடிக்கொண்டிருந்தாலும் தொழில் ஒரு மனிதனுக்கு தெய்வம் மாதிரி அதனை மதிக்க வேண்டும். எட்டுமணிக்கு விரிவுரை என்றால் 7.30 க்கு பல்கலைக்கழக வாசலில் நிற்பேன். 7.45 க்கு எனது ஆசனத்தில் அமர்வேன். நேரமே எனது வாழ்க்கை நேரத்தோடு ஒரு நாளும் விளையாட மாட்டன். உலகம் முழுவதும் எத்தனையாயிரம் பிளேன் ஏறியிருக்கிறேன். ஒருமுறை கூட் பிளேனைத் தவறவிடவேயில்லை. எத்தனை பேட்டிகள், கூட்டங்களில் பேசுவதற்கும் சரி நேரம் தவறிச்சென்றதேயில்லை. Coogle இல் சென்று முருகர் குணசிங்கம் என்று அடித்தால் ஐம்பது பக்கங்கள் இருக்கிறது. பிள்ளைகளுக்கு நேரத்தின் பெறுமதி தெரியவேண்டும் என்பதற்காக சொல்கிறேன்.

தென்கிழக்காசிய திறமைசாலி வேண்டும் எனக் கேட்டார்கள் அதாவது இது பற்றிப் படிப்பிப்பதற்காக எனக்கு முழுமையான புலமைப்பரிசில் தந்தார்கள். அப்போ எனக்கு 45 வயது அங்கு 38 வயதுக்கு மேல் புலமைப்பரிசில் வழங்குவதில்லை இருப்பினும் எனது கடுமையான உழைப்பையும் எனது விடாமுயற்சிக்காகவும் 45 வயதில் முழுமையாக புலமைப்பரிசில் தந்தார்கள். அப்போ 60 பேர் கலைத்துறை சார்ந்தவர்கள் கலைத்துறையில் சேர்ந்தோம். மூன்றரை வருடத்தில் கலாநிதி பட்டம் முடிக்க வேணும் ஆனால் கடைசியாக 8 பேர் தான் இருந்தோம். அங்கும் நான்தான் முதல் முதல் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை கையளித்தேன். அப்பவும் எனது பக்க பலமாக அம்மாவின் சக்தி இருந்ததாகவே நம்புகிறேன்.

நான் கலாநிதி படிப்பினை மேற்கொள்ளும் போது உலகம் போற்றுகின்ற ஜாம்பவான் பேராசிரியர் அரசரட்ணம், இவர் வரலாற்று பேராசிரியர் .இலங்கை என்றால் உலகத்தில் எந்த மூலையில் இருந்தும் அவரைத்தான் தொடர்பு கொள்வார்கள். அவர் தான் எனது கலாநிதி பட்டப்படிப்பின் மேற்பார்வையாளர் இது எனது வாழ்க்கையில் மறக்க முடியாதது. வெளிவாரி மேற்பார்வையாளராக H.A வில்சன் அவர்களை நியமித்தார்கள். உலகறிந்த

இரண்டு கல்விமான்கள் கிடைத்தமை எமது அம்மாவின் அருளாகத்தான் பார்க்கிறேன். அடுத்து இயர்போர்ற்றி என்பவர் ஆங்கிலேயர் உள்ளக மேற்பார்வைக்காக போடப்பட்டார்கள். ஆராட்சி செய்வதற்காக பெரிய அறை அதில் தேவையான கணனி மற்றும் அனைத்தும் மேலும் ஆராட்சிக்காக வெளிநாடுகள் சென்று வர இலவசமாக டிக்கட் தந்து அப்படியொரு புலமைப்பரிசில் தந்தார்கள். நான் கலாநிதிப் பட்டத்தை பெற்றேன்.

அம்மாவுக்கு ஒரு சத்தியம் செய்து கொடுத்தனான். அம்மா உலகத்தில் கடைசியாக என்ன படிப்பிருக்கோ முடிப்பன் என்று அந்த சபதத்தை அன்றைக்கு முடிச்சன் அதன் பின் என்னுடைய வாழ்க்கை பல்வேறு கோணங்களில் பல்வேறு திசைகளில் படர்ந்து படர்ந்து உலகம் முழுக்க படர்ந்தது. ஈழத்தமிழர் தொடர்பாக என்னவெல்லாம் உலகத்துக்க சொல்ல வேண்டுமோ எங்கெல்லாம் பேச வேண்டுமோ பேசினன். ஆய்வு செய்து 7 புத்தகங்கள் எழுதினேன். உலகத்தமிழர் பற்றிய விடயங்கள் அரசியல் வரலாறு பற்றிய விடயங்கள் எழுதினேன். இதனால் பல உயிராபத்துக்களை சந்திக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. சில நாடுகள் என்னை வெளி யேற்றின. பல அச்சுறுத்தல்கள் தனிப்பட்ட முறையில் வந்தது. நான் ஒன்றையும் யோசிக்கவில்லை. எனது நோக்கு ஒன்றாக இருந்தது. எனது வாழ்க்கையை எனது சகோதரருக்கும் எனது பிள்ளைகளுக்கும் எனது மண்ணிற்கும் எனது மக்களுக்கும் எனது தமிழ் தேசத்திற்கும் அர்ப்பணித்தேன். என்னிடம் ஒன்றுமே இருக்ககூடாது. இச் சொத்துக்கள் அனைத்தும் என் சகோதரர்களுக்கு நாட்டிற்காக கொடுத்திட்டன். எனக்கு வந்த ஒரு கோடி ரூபா ஓய்வூதியத்தைத்தான் இதற்கு செலவு செய்துள்ளேன். தர்மம் தலைகாக்கும் என்று நம்புகிறேன்.

கனடா பல்கலைக்கழகம் Best Nonfiction in Puplication - 2008 என்ற விருது தந்து போற்றியது. அதேவேளை யாழ்ப்பபாண பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் பதவி வெற்றிடம் வந்தபோது ஆசை வந்தது. அந்த சமூகத்திற்கு சென்று கடமையாற்ற வேண்டு மென்று ஆனால் உள்ளுக்குள் இருந்த சித்து விளையாட்டுகளால் என்னை எடுக்கவே யில்லை. மூன்று தரம் விண்ணப் பித்தனான். அந்த செய்தி பத்திரிகைகளில் கூட வந்தது. இது எனக்கு சரியான மனவேதனையை தந்ததொரு விடயம் ஒரு சமூகத்தில் பல்கலைக்கழகம் தான வழிகாட்டியாக இருக்க வேண்டும். ஆனால் மிகவும் கேவலமாக நடந்து கொண்டது.

**கேள்வி :-**

நீங்கள் பல ஆய்வு நூல்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டுள்ளீர்கள். அவை பற்றி எமக்கு சுருக்கமாக கூறுங்கள்.

**பதில் :-**

1988 இல் தமிழருடைய தேசிய வாதம் பற்றி ஒரு கட்டுரை எழுதினனான். அந்தக் கட்டுரையைதொடர்ந்து1999இல்“இலங்கைத் தமிழர் தேசிய வாதத்தின் ஆரம்ப தோற்றம்” என்ற நூலை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதினேன். அது உலகம் முழுக்க பரவியது. (இது என்னுடைய கலாநிதி ஆய்வுக்கான ஆரம்பம் ஆக இருந்தது). தமிழரின் தேசிய மூலவேர்களை எல்லாம் எடுத்து எழுதப்பட்ட நூல் அது. பேராசிரியர் H.A வில்சன் கூறியதாகவும், குணசிங்கம் அவர்கள் இந்த ஆய்வில் எந்தவொரு ஆதாரங்களையும் எடுக்கத் தவறவில்லை என்று குறிப்பிட்டார். புரொக்வெஸ்ட் இலக்ரோனிக் டாட்டா என்ற வெளியீட்டு பிரிவினர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். புரோக்வெஸ்ட் என்ற வெளியீட்டுப்பிரிவு இந்த நூலை கருத்தில் எடுத்து என்னுடன் உடன்படிக்கை ஒப்பமிட்டு அந்த புத்தகத்தை இலக்ரோனிக்காக வெளியிட்டது. அது எனக்கு கிடைத்த ஒரு பெரிய அடையாளம்

என்று சொல்ல வேண்டும். அது பின்னர் தமிழில் வெளி வந்தது. அதன் பின் ஒரு செய்தி வன்னியிலிருந்து வந்தது. அவர் அந்தப் புத்தகங்களை எல்லாம் பார்த்துவிட்டு சொன்னார். நீங்கள் துணிந்து இந்தப் புத்தகங்களில் ஆவணப்படுத்தியுள்ளீர்கள். இந்த ஆவணங்கள் எல்லாம் எங்க கிடக்கு என்று கேட்டார். இதெல்லாம் போர்த்துக்கல், கொலண்ட், பிரிட்டிஷ், பரிஸ், அமெரிக்காவில இருக்கு இந்தியா, இலங்கையில கூட இருக்கு என்றேன். இதெல்லாம் தேடி எடுக்கேலாதா? என்று கேட்டார். இதெல்லாம் தேடி மாதக்கணக்கு வருஷக்கணக்கில ஆய்வு செய்ய வேணும் என்றேன். இதையெல்லாம் ஆய்வு செய்து இலங்கைத் தமிழரின் பூரணமான வரலாற்றினை எழுத முடியுமா என்று கேட்டார். இது ஒரு துர்பாக்கியமான விடயம். இது யாழ்ப்பாண பல்கலைக்கழகம் செய்ய வேண்டிய வேலை என்றேன். அவர் சொன்னார் அவர்கள் ஒரு நாளும் செய்ய மாட்டார்கள். சுயநலவாதிகள், பயந்தவர்கள், உண்மையை எழுதப் பயந்தவர்கள், நீங்கள் துணிந்து தேசிய வாதத்தின் தோற்றம் பற்றி எழுதியிருக்கிறீர்கள். நீங்கள் தான் துணிந்து செய்யலாம் என்று நினைக்கிறேன் என்றார். நான் சொன்னன் தனியொரு ஆளாக செய்யிறது றொம்பக் கஷ்டம் இது பெரியதொரு முயற்சி என்றேன் எங்களுக்கு தனியொரு தேசம், கலாசாரம், பண்பாடு. எல்லாம் தனியாக இருக்கு ஆனால் பூரணவரலாறு இல்லை என்றால் எமது தேசியவாதம் அடிபட்டு போடும். தேசிய விடுதலைக்கான கோட்பாட்டில் இருந்து விலக்கப்படுகிறம். ஒரு வரலாறு எங்கடகையில் இருக்க வேணும் என்றார். அது எனது மனதில் தைச்சது. ஒரு கல்விமானும் சொல்லாத ஒரு விடயத்தினை அவர் சொன்னார். அதன் பின்னர் எனக்கு வேலையில் நாட்டம் செல்லவில்லை இரண்டு இடம் கடிக்கக்கூடாது. அது தொழிலும், வாழ்க்கையும் ஆகும். நிம்மதி இல்லை என்றால் தொழிலானால் வெள்ளைக்காரன் இராஜினாமா செய்து விடுவான். வாழ்க்கை என்றால் விவாகரத்துத்தான். எனவே நானும் அதனை பழகிக்கொண்டன். அந்த வகையில் இராஜினாமா கடிதத்தை பல்கலைக்கழக முதல்வரிடம் கையளித்தேன். அவருக்கு நான் சொன்னன் எங்கட நாடு அளிஞ்சு போய் கிடக்கு, உலகம் சேர்ந்து தான் அழிச்சது. பல மேடைகளில் இதை சொல்லி இருக்கிறன். உங்களுக்கும் சொல்லி இருக்கிறன். இந்த நாட்டிற்கு ஒரு வரலாறு இல்லை. அதை செய்ய வேண்டிய பணி என்னிடம் வந்திருக்கு என்றேன். உண்மைதான் கட்டாயம் செய்யுங்கள் என்றார். அதன் பின் 6 வருடங்கள் நான் நித்திரை கொள்ளேல்ல தாடி, தலைமுடி வெட்டாமல் விரதம் இருந்து ஆய்வு செய்து "இலங்கைத்தமிழர் ஒரு முழுமையான வரலாறு" என்ற ஆய்வு நூலை எழுதி முடித்தேன்.இப் புத்தகத்தினை 19 நாடுகளில் வெளியிட்டேன். ஒரு புத்தகம் ஐம்பது டொலர்கள் என்றால் இலங்கைக்காசு ஐயாயிரத்து ஐநூறு ரூபா மூவாயிரம் டொலர்கள் கிடைத்தது. அந்த நேரத்தில் இந்நூலை இலங்கையில் தடை செய்திருந்தார்கள். 2009 இல் கனடா பல்கலைக்கழகம் என்னை கௌரவித்து பட்டமும் காசும் தந்து அனுப்பியது. இது எனக்குசந்தோஷமான விடயமாகும். இந்த நூல் இந்தியாவின் பல பல்கலைக்கழகங்களிலும் பாடநூலாக சேர்த்திருக்கிறார்கள். அதன் பின்னர் மகள் சொன்னாள். அப்பா இனி நீங்கள் விடுதலைப் போராட்டம் பற்றி உண்மையை சொல்லேல்ல அதை செய்யுங்கப்பா என்றாள். மட்றாஸ் பல்கலைக்கழகத்திற்கு இதை எழுதுவதற்கு விண்ணப்பித்தேன். அவர்கள் South Asian Section இல் மூன்று வருடத்திற்கு பேராசிரியராக நியமித்தார்கள். அங்க போயிருந்து 2012 இல் "தமிழீழ விடுதலைப் போராட்டமும் அரச பயங்கரவாதமும் இன அழிப்பும் " என்ற நூலை எழுதினேன். இந்நூலில் அவர்களுக்கு

கசப்பான பிரச்சனைகள் அலசப்பட்டதால் என்னை நாடு கடத்தினர். ஆனால் ஆய்வு மூலமான உண்மையினை நான் ஆதார பூர்வமாக எழுதியிருந்தேன்.

ஈழத்தமிழர் வரலாற்று மூலங்கள் - 2004 இல் வெளியிட்டேன். அடுத்து புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றி 19 நாடுகளுக்கு சென்று தர்வுகள் சேகரித்து புள்ளிவிபரங்கள் எடுத்து, பேட்டி எடுத்து "புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் விபரம் என்ற நூல் 2014இல் வெளியிட்டேன். அடுத்து " மாவீரர் காவியச்சோலை"என்ற நூலையும் இரண்டு பிரிவாக வெளியிட்டேன்.

**கேள்வி :-**

நீங்கள் உங்கள் பிறந்த மண்ணில் ஒரு நினைவு முற்றமும் ஒரு முதியோர் இல்லம் தங்கள் சொந்தப் பணத்தில் கட்டி முடித்துள்ளீர்கள். இவ்வாறு செய்வதற்கு எவை எவை தூண்டுதலாக இருந்தது.

**பதில் :-**

நான் பிறந்து வளர்ந்த என்ர ஐயா அம்மா வாழ்ந்த இந்த சொந்தக்காணியில் ஐயா அம்மாவுக்கு நினைவு முற்றம் கட்டவேண்டுமென்ற ஆசை நீண்டகாலமாக இருந்தது. எனவே அவர்களின் நினைவாக நினைவு முற்றமும் கட்டி அவர்களின் உறவுகளை சகோதரர்களை சகோதரரின் பிள்ளைகளை ஊரவர்கள் எல்லாரையும் இந்த மண்டபத்தில் நினைவாக பதிவாக படமாக இட்டு கோவில் மாதிரி ஆக்கி அதில் ஒவ்வொருநாளும் நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தி பிள்ளைகளுக்கு இலவசமாக படிப்பிக்கிறது, அமாசை விரதம், சிவராத்திரி விரதம், நவராத்தரி பூசை, கலை நிகழ்ச்சிகள் எல்லாம் வைக்கவேண்டுமென்ற ஒரு ஆசை எனக்கு இருந்தது. எனக்கு இந்த வருஷம் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. என்னவென்றால் பல்கலைக் கழக ஓய்வூதியப் பணம் கிடைத்தமை ஆகும். அதை கொண்டு இந்தக் காணியை துப்புரவு செய்து நினைவு முற்றம் கட்டி திறப்புவிழாவிற்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரன் அவர்கள் மற்றும் மந்திரிமார், அயல்கிராமம் மற்றும் இக்கிராமமக்கள் எழுனூறு பேர் வருகை தந்து திறந்து வைத்தமை எனக்கு மனமகிழ்வான விடயம் இப்பவும் இதற்கு உண்மையான காரணம் அம்மாதான். வெறும் நினைவுக்காக மட்டும் கட்டப்பட்டதல்ல உள்ளார்த்தமாக ஒவ்வொரு பிள்ளைகளும் தமது தாய் தகப்பனை கடவுளாக போற்றவேண்டும் என்ற உணர்வு ஏற்பட வேண்டும் என்ற நோக்கமாக இருந்தது.

இங்க வருகிற பிள்ளைகள் சொல்லுவினம் நாங்களே எங்கட ஐயா அம்மாவின்ர படங்களை வச்சிருக்கேல்ல இவர் கொண்டு வந்து வைத்திருக்கிறார். அதனால ஒவ்வொரு நாளும் இங்கு ஆக்கள் வந்து வந்து போவினம் 250க்கு மேலான புகை படங்கள் வைத்திருக்கிறேன். அதற்கு நாங்கள் பூசை செய்வம் விளக்கு வைப்பம். மற்றது கூட்டுக்குடும்ப வாழ்க்கை எம்மத்தியில் இல்லாமல் போய்விட்டது. உண்மையான அன்பு, பாசம், புரிந்துணர்வு, அந்த தன்மைகள் எல்லாம் அடிபட்டுப் போச்சுது. எனவே இதுக்குள்ளால ஒரு இணைப்பு பாசவலை, உறவுப்பாலமாக ஏற்படும் என்ற ஒரு நப்பாசை எனக்கிருந்தது. அது ஓரளவு வெற்றியளித்துள்ளதென்றே நம்புகிறேன். அந்த நிகழ்வுக்கு தூரத்து உறவுகளெல்லாம் தூரத்தூர் இருந்து வந்தினம். 50 வருஷத்திற்கு பிறகு 30 வருஷத்திற்கு பிறகு சந்திக்கிறம் என்று ஆளை ஆள் கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்து சந்தோஷமாக கதைத்து எல்லோரும் கொண்டாடி இருந்தினம். உண்மையில் என்னை நான் மறந்து போனன். நான் நினைச்ச லட்சியங்கள் நிறைவேறியிருக்கு நாங்கள் இலவசமாக இந்த மண்டபத்தை எல்லாருக்கும் கொடுக்கிறம். பரிஸ் ஜேர்மன், கனடா போன்ற 19 நாடுகளுக்கு கிட்ட போயிருக்கிறேன். அப்ப காலை

4மணிக்கு எழும்பி நடப்பன் அந்த றோட்டுக் கரையெல்லாம் ஆக்கள் படுத்திருப்பினம் வாழ வழியில்லாத ஆக்கள். சில தமிழ் குரல் கேட்கும் போய் தட்டி எழுப்பி "என்னம்மா" என்று கேட்டால் "ஐயோ தம்பி எங்களைப் பிள்ளைகள் கூடப்பிட்டிச்சினம் அவையின்ர பிள்ளைகளைப் பார்த்தம் பிள்ளைகள் வளர்ந்திட்டுது. பிள்ளைகளுக்கும் எங்களைத் தேவைப்படுதில்ல. பேரப்பிள்ளைகளுக்கும் எங்களைப் பிடிக்குதில்ல. எங்கள தெருவில விட்டிட்டினம்" என்பர். அப்படி கன சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறன். இதே மாதிரி கனடாவுக்கு போனா 25,30 பேர் வயது போன ஆக்கள் இருந்து கதைப்பினம் நான் ஒரு பக்கமாக நிண்டு என்ன கதைக்கினம் எண்டு கேப்பன்.

அவர்களை, பிள்ளைகள் கணக் கெடுக்கிறதில்லை. பேரப் பிள்ளைகள் மதிக்கிறதில்ல. அதனால் வேண்டாத வர்களாக அப்பிள்ளைகளின் வீட்டில் இருக்கிறதைத் தான் நான் பார்க்கிறன். இந்த இடத்தில என்ர ஐயாவும் அம்மாவும் இருந்திருந்தா உண்மையா நான் உயிரோடையே இருக்க மாட்டன். என்ர அம்மா ஐயாவுக்கு இந்த நிலை வந்திருந்தா நான் என்ன பாடுபட்டிருப்பன் என்று நான் எனக்குள்ள துடிச்சுப் போனன்.அதனால 25,50 பேருக்கு வாழ வழியில்லாமல் அநாதரவாக்கப்பட்டவர்களுக்காக வறுமை கோட்டுக்கு கீழ் வாழுகிற முதியோர்களை பராமரிப்பதற்காக இந்த முதியோர் இல்லத்தையும் கட்டி இருக்கிறேன். அருமையான சூழல், ஒரு பக்கம் குளம், ஒருபக்கம் தென்னந்தோட்டம், ஒரு பக்கம் வயல்வெளி, ஒரு பக்கம் குடிமனை இதைப் பார்த்தால் சங்க காலத்து மருத நிலத்தை பார்த்த மாதிரி ஒரு உணர்வு ஏற்படும். நான் உலகத்திலே எத்தனையோ நாடுகளுக்கு சென்றுவந்திருக்கிறன். அவுஸ்திரேலியாவில் 32 வருஷம் இருக்கிறன். எனக்கு இங்க உள்ள சந்தோஷம் எங்கையும் வரேல்ல. எனது மனைவி மருத்துவத்துறையை சேர்ந்தவர். அவ இங்கு வந்து தனது சேவையை செய்ய ஆயத்தமாக இருக்கிறா.

**கேள்வி :-**

ஈழத்தமிழர் வரலாறு பற்றியும் குறிப்பாக வன்னியின் வரலாறு பற்றியும் சுருக்கமாக கூற முடியுமா?

**பதில் :-**

இலங்கையின் வரலாறு சர்ச்சைக்குரிய வரலாறாகத்தான் இலங்கை வரலாற்றா சிரியர்கள் எழுதியுள்ளார்கள். இலங்கை வரலாறு பற்றிய மூலப்பிரதியினை உலகம் முழுக்க தேடியெடுத்து ஆராட்சி செய்து எழுத அதை உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. சுருக்கமாக சொல்லப்போனால் இந்த இலங்கைத்தீவு உலக வரைபடத்தில் இற்றைக்கு ஏழாயிரம் வருடத்திற்கு முன்னர் இருக்கவில்லை. இந்த இலங்கைத்தீவு ஏழாயிரம் வருடங்களுக்கு முன் தென்முத்து குமரிக்கண்டத்தில் இருந்து கால்கோளால் பிரிந்த ஒரு புவியியல் பிரதேசம் குமரிக்கண்டம் தமிழ் நாட்டுடன் சேர்ந்த ஒரு பிரதேசம் அங்கே உள்ள மக்கள் தமிழர்கள். அங்குள்ள மக்கள் சைவர்கள். அங்க உள்ள மக்களுடைய மொழி தமிழ்மொழி. அவர்களுடைய கலாசாரம், பண்பாடு, பாரம்பரியம் எல்லாம் தமிழர் சார்ந்தது. அங்கு இருந்து பிரிந்த துண்டுக்காணியில் (உலகத்தோடு ஒப்பிடும் போது துண்டுக் காணிதான்) எப்படி ஒரு வேறு இனம் இருக்க முடியும். எனவே இங்குள்ள பூர்விக மக்கள் தென் இந்தியாவில் இருக்கிற பூர்விகத்தமிழர்களில் இருந்து வந்தவர்கள். இது ஏழாயிரம் வருடத்திற்கு முன் நிகழ்ந்தது. நிகழ்வு அது ஒரு புறமிருக்க Histry beguns with written documents என்று சொல்லுவார்கள். வரலாறு எழுத்தாக்கங்களுடன் தான் தொடங்கும். ஐதீக வரலாறுகளை legend Registry என்று சொல்லுவார்கள்.அப்போ அதனை ஆய்வுக்கு எடுக்கமாட்டம். ஆனால்

Histry beguns with written documents என்று பார்க்கும் போது இலங்கையின் வரலாறு தீபவம்சம், மகாவம்சம் போன்ற பாளி, சமஸ்கிருத நூல்களோட தான் இந்த வரலாறு தொடங்குகிறத பார்க்கிறம். அப்போ அதில முக்கியமாக கி.மு 5ம் நூற்றாண்டில தான் இலங்கைக்கு பௌத்தமதம் சங்கமித்தவினால் கொண்டு வரப்பட்டது. இந்தியாவில் இருந்து அசோகச் சக்கரவர்த்தியால் அனுப்பப்பட்டது என்று சொல்லப்படுகிறது. சரி கல்வெட்டில் எல்லாம் இருக்கென்று சொல்வதெல்லாம் சரி ஆவணப்படுத்தி சொல்லுகிறார்கள். ஆனால் அது பற்றி சொல்லுகிற முதலாவது நூல் தீபவம்சம், தீபவம்சம் கி.பி. 4 ஆம் நூ ற்றாண்டில் எழுதப்பட்ட நூல் எப்போதைய கதையை சொல்லுகிறது என்றால் பௌத்தமதம் இலங்கைக்கு வந்ததிலிருந்த கதையை சொல்லுகிறது. கிட்டத்தட்ட ஒன்பது நூற்றாண்டு கால வரலாறாகும். எப்படி ஒரு தீபவம்சத்தால சொல்ல முடியும். இது ஒரு கற்பனை வாதத்தின் தொடர்ச்சியாக வந்த கதையென்ற வகையால் அதை ஒரு வரலாற்று நூலாக கொள்ளமுடியாது. அதை ஒரு பௌத்த நூ லாகத்தான் கொள்ள முடியும். அதற்குப்பிறகு மகாவம்சம் என்ற நூல் கி.பி 5 ஆம் நூ ற்றாண்டில் மகாநாமதேரர் என்ற பௌத்த பிக்குவால் எழுதப்படுகிறது. அதுவும் அந்த பௌத்தமதம் வருகை தந்ததிலிருந்து தான் கதை சொல்லுது. விஜயன், சிங்கபாகு இங்க வந்தது. குவேனியை திருமணம் செய்த கதையெல்லாம் வருகுது. அதுவும் ஒரு பத்து நூற்றாண்டு கால வரலாற்றை கூறுகிற ஒரு பௌத்த காவியமாகத்தான் அதைப் பார்க்கிறார்கள். எனவே அதையும் வரலாற்று நூலென்று கொள்ளமுடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக மொழி ஒரு முக்கியமான விடயம். ஒரு நாட்டினுடைய இனத்தைப் பற்றிய வரலாற்றைப் படிக்கிறதுக்கு மொழி முக்கியமானது. கி.பி 7ஆம் 8ஆம் நூற்றாண்டு வரை சிங்கள மொழி என்ற ஒரு சிங்கள எழுத்துக்கூட இந்த இலங்கைத் தீவில் இல்லை. இந்த தீபவம்சமும், மகாவம்சமும் பாளி, சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டது. ஏன் அப்போது சிங்கள மொழி இருந்தால் சிங்கள மொழியில எழுதவில்லை சிங்களமொழியில் தானே எழுதியிருக்க வேண்டும். அப்போ சிங்கள மொழி இல்லை என்பது யதார்த்தமான வரலாற்று உண்மை. ஆனால் இலங்கையினுடைய ஆதிகால வரலாற்றைப் பார்த்தால் அனுராதபுரம் தான் முதல் இலட்சியமாக இருந்துள்ளது. இதைச் சுற்றி இலங்கையிலுள்ள பல்வேறுபட்ட சிற்றரசுகள் திறைகொடுத்து இருக்கிற ஒரு அரசாக இருந்துள்ளது. அங்கிருந்த முதல் மன்னர்கள் யார் என்று பார்த்தால் தமிழ் மன்னர்கள் ஏன் சிங்கள மன்னர்கள் இருக்கவில்லை? எல்லாம் தமிழ் மன்னர்கள் மதம் என்னவென்று பார்த்தால் சைவமதம் பெயர்களைப் பார்த்தால் தமிழ்பெயர்கள் ஏன் சிங்களப் பெயர் இல்லை. ஏன் பௌத்தமதம் இல்லை. அப்போ இந்த பௌத்த மதம் வந்ததன் பின்னர் தான் இங்கு பௌத்தமதம் பரவத்தொடங்கியது. எவ்வாறெனில் நிறுவன ரீதியாக வளர்ந்தெடுக்கப்பட்ட மதம் பௌத்தமதக் கோட்பாடுகள் ஆகும். நிறுவனரீதியான செயற்பாடுகள் அற்ற மதம் சைவம். நிறுவனரீதியாக வளர்த்தெடுக்கப்பட்ட பௌத்த மதத்தினை அக்காலத்தில் ஆட்சி செய்த தேவநம்பியதீசன் என்ற பௌத்த பெயர் மாற்றிய தீசன் என்ற மன்னன் தழுவினான் அதனைப் பார்த்து மக்களும் மதம் மாறினர். மன்னன் எவ்வழி குடிகளும் அவ்வழி என மூதுரை குறிப்பிடுகிறது.

அதன் பின்னர் எனது ஆராட்சியின் போது ஒரு சுவாரஸ்யமான தகவல் கிடைத்தது. அதாவது பாளி, சமஸ்கிருதம், தமிழ் மொழிகளிலிருந்து தோற்றம் பெற்ற மொழிதான் சிங்கள மொழியென சிங்களப் பேராசிரியர் ஒக்ஸ்போட்

மருதமுகிழ்

பல்கலைக்கழகத்தில் ஆராட்ச்சி செய்து ஆய்வு சமர்ப்பித்துள்ளார். இது புத்தகமாக வெளிவரவில்லை. நான் ஆராட்சி செய்யும் போது முக்கியமான ஆதாரத்தை பிரதிபண்ணி எடுத்திருந்தேன். அந்நூலை இரவல் கேட்டபோது அங்க இருந்த சிங்கள நூலகர் கேள்விப்பட்டிட்டு இருட்டடிப்புச் செய்திட்டார். இதைச் சொன்னதும் இரண்டு பேராசிரியர்கள் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்கு போயிருக்கிறார்கள். அங்கு அது இல்லை. ஆனால் நான் முக்கியமான விடயங்களை போட்டோ கொப்பி பண்ணி எடுத்திட்டன் என்பது முக்கியமான விடயம்.

மற்றது எங்களிட்ட ஒரு ஐதீகம் இருக்குதானே கிராமத்தைச் சுற்றி நாலுபக்கமும் தெய்வங்களை காவலுக்கு வைப்பது, இலங்கைத்தீவைப் பார்த்தமென்றால் வடக்கில் நகுலேஸ்வரம், தெற்கில் தொண்டேஸ்வரம், கிழக்கில் கோணேஸ்வரம், மேற்கில் கெலீஸ்வரம் இவ்வாறு நான்கு திசைகளிலையும் வரலாற்றுக் காலம் தொடக்கம் சிவன் கோவில்களை தமிழர்கள் அமைத்துள்ளார்கள். சுந்தர மூர்த்தி சுவாமிகள், திருஞான சம்பந்தர் இலங்கை சிவன் ஆலயங்களைப் பற்றி பாடியுள்ளார்கள். 5 ஆம் நூற்றாண்டு காலத்தில் அவ்வாறு பெரிய ஆலயங்கள் கட்டப்பட்டிருக்குமென்றால் எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தொடங்கியிருக்க வேண்டும். மாணிக்கவாசகர் மன்னார் மாதோட்டத்தில் வந்து குதிரை வாங்கிய வரலாறும் பாடல்களில் உள்ளது.

இன்னொரு முக்கியமான விடயம் யாதெனில் தொண்டேஸ்வரம் அப்பொழுதே போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டுவிட்டது. அப்படிப் பார்க்கும் போது இந்த மண்ணுக்கு வந்தவர்கள் சைவசமயத்தவர்கள், தமிழர்கள், தமிழ்பேசுபவர்கள் இவர்கள் தான் ஆரம்பக்குடிகள். ஆனால் காலம் காலமாக வரலாறு பௌத்தம் சிங்களம் என்று சொல்லி திரிபடைய செய்ததால் போர்த்துக்கேயர் டச்சுக்காரர் வரும் போது சிங்களவர் பௌத்தமதத்தைக் கடைப்பிடித்து அவர்கள் பரவலாக அதிகமாக இருந்ததால் சிங்கள பௌத்த தேசம் என்று எழுதி விட்டார்கள். உண்மையாக வரலாற்றில் அதுதான் நடந்தது. உண்மையாக அதில்லை வரலாறு வரலாறு வேறெங்கோ புதைந்திருக்கிறது. அதைத்தான் இந்த நூலில் வெளிக்கொணர்ந்திருக்கிறேன். றொபேட் நொக்ஸ் என்பவர் பிரித்தானியாவினுடைய ஒற்றர் டச்சுக்காரரிடம் இருந்து இலங்கையை எடுப்பதற்காக முதலில் அந்த ஒற்றரை இலங்கைக்கு அனுப்பி இருக்கிறான். அனுப்பிய ஒற்றரை (சிங்களமன்ன) பிடித்து சிறையில் போட்டு விட்டார்கள். அவன் சிறையில் எட்டு வருடங்கள் இருந்து சிங்களம் நன்றாக பழகிவிட்டான். அவன் சிறையை உடைத்து தப்பி ஓடி வெளிவந்து அநுராதபுரத்திற்கு வந்த போது அங்குள்ள மக்களுடன் சிங்களத்தில் பேசியிருக்கிறான். அப்போ அங்கே இருந்தவர்கள் "ஐயோ தம்பிரானே எங்களுக்கு சிங்களம் தெரியாது" என்று சொல்லியிருக்கிறார்கள். றொபேட் நொக்ஸ் எழுதின புத்தகத்தில் அவன் சொன்னான். அனுராதபுரத்தில் முழுக்க இருந்தது தமிழர்கள் என்று இது எப்போது நடந்தது என்றால் 1970 களில் இன்றைக்கு பாருங்கள் அனுராதபுரத்தில் தமிழர்களில்லை.

போர்த்துக்கீசர், டச்சுக்காரர் வரும் போது 10ஆம் நூற்றாண்டில் சோழர் இராட்சியம் பொலநறுவையை மையமாக வைத்து அரசாட்சி செய்துள்ளான். அந்த வேளையில் பெருந்தொகையான தமிழர்கள் இந்தியாவில் இருந்து வந்துள்ளார்கள். அதை இவர்கள் 10 ஆம் நூற்றாண்டில் சோழராட்சியில் தான் தமிழர்கள் இங்கு வந்தனர் என்று இப்போ கூறுகிறார்கள்.

வரலாற்றுத் தெளிவின்மை தான் இதற்கு காரணம். ஆகையால் இதுவும் தமிழருக்கு பாதகமாகவே போய்விட்டது.

கெலின்கொன் என்ற பிரித்தானிய அரச அதிகாரி இந்த நாடு பற்றி அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இங்கு வந்து மிகத் தெளிவாக எழுதியிருக்கிறான். இலங்கை இரண்டு நாடு, ஒன்று தமிழ் நாடு, மற்றது சிங்கள நாடு சிங்களப்பிரதேசத்தில் சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்கிறார்கள். அவர்கள் சிங்கள மொழியைப் பேசுகிறார்கள். பௌத்தம் அவர்களின் மதம் மற்றைய பிரதேசத்தில் தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்கிறார்கள். தமிழ் பேசுகிறார்கள். சைவ மதத்தைப் பின் பற்றுகிறார்கள். இருவரும் இருவேறுபட்ட கலாசார பண்பாடுகளைப் பின்பற்றுகிறார்கள் என ஒரு அறிக்கை எழுதி அனுப்பியுள்ளார். அந்த ஆவணமும் எனது இந்நூலில் சேர்த்துள்ளேன். ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது சிங்கள கல்விமான்களோ, சிங்கள அரசியல்வாதிகளோ மக்களுக்கு எதிராகவோ நாட்டைக் குளப்புகிற விஷயமாக இதனை எடுக்கக்கூடாது. இது அறிவியல் வரலாற்று ஆய்வு நோக்கிய கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். 1200 புத்தகங்கள் கொழும்பில் விற்கப்பட்டுள்ளது. இதனை சிங்கள கல்விமான்கள் தானே வாங்கி இருக்கினம். இதனை மறுத்து இதுவரை ஒரு அறிக்கை கூட எழுதப்படவில்லை. உண்மை இது தான் என்பது அவர்களுக்குத் தெரியும். எனது நு அயடை முகவரிக்குக்கூட யாரும் இதுவரை எழுதவில்லை. ஒன்றிரண்டு பேர் இதனைத் தட்டிக் கொடுத்து எழுதியிருந்தனர். இலங்கைத் தீவின் வரலாற்றினைப் பொறுத்த வரையில் இது தான் யதார்த்தமான உண்மை.

தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரையில் சோழராட்சி தோற்கடிக்கப்பட்டு விஜயபாகு இந்தியா போகும் போது யாழ்ப்பாண இராட்சியம் தோற்றம் பெற்றிருக்கிறது. இது மிகவும் வலிமை மிக்க இராட்சியமாக திகழ்ந்துள்ளது. ஒரு முஸ்லிம் வர்த்தகரான இபுன் பட்டுட்டா என்பவர் கடல் காற்றினால் ஏற்பட்ட விபத்தின் போது தத்தளித்த இவரை காப்பாற்றியுள்ளனர். அங்கே அரசனிடம் விருந்துண்டுவிட்டு மீண்ட இவ் வர்த்தகர் இந்த நாடு பலமான அரசாக செல்வச் செழிப்போடு இருக்கிறது என்று எழுதியுள்ளார். இது கி.பி 13 ஆம் நூற்றாண்டில் எழுதியுள்ளார். போர்த்துக்கீசர் ஆவணங்கள் முழுவதிலுமே புத்தளம், கற்பிட்டி, சிலாபத்தில் இருந்து மன்னார் ஈறாக யாழ்ப்பாண குடாநாடு வன்னிப் பிரதேசம் முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு வரை தமிழ் பிரதேசங்களாக குறிப்பிட்டுள்ளார்கள். இன்று புத்தளம், கற்பிட்டி, அனுராதபுரம் எல்லாம் தமிழரைவிட்டுப் போய்விட்டது. இவ்வாறு சொல்வதால் சிங்கள மக்களோ சிங்கள அரசியல்வாதிகளோ பிழையாக நினைக்கத் தேவையில்லை கலாசார இன அழிப்பாகத்தான் தமிழர்களால் பார்க்கப் படுகிறது.

யாழ்ப்பாண இராட்சியம் பலமாக இருந்ததற்கு காரணம் கற்பிட்டி, புத்தளம், சிலாபம், வன்னி குறிப்பாக ஒரு பெரிய பின்னணிப் பாதுகாப்பை வன்னிச் சிற்றரசுகள் கொடுத்தது. யாழ்ப்பாண இராட்சியத்திற்காக திருகோணமலை, மட்டக்களப்பில் இருக்கக்கூடிய சிற்றரசுகள் நிறைய செய்துள்ளனர். யாழ்ப்பாண அரசை தூக்கி வைத்திருப்பதற்கு இவர்கள் சிறந்த பங்களிப்பை செய்துள்ளார்கள். வன்னி மண்ணைப் பார்த்தால் யாழ்ப்பாண அரசின் உயர்ச்சிக்கு திறை செலுத்தி அவர்களுக்கு பக்க பலமாக இருந்துள்ளனர்.

போர்த்துக்கீசர் வந்து யாழ்ப்பாண இராட்சியத்தை கைப்பற்றிய உடனே சங்கிலி மன்னன் தப்பி கடலில் ஓட அவனைக் கைதுசெய்து இந்தியாவிலுள்ள கோவாவுக்கு கொண்டு சென்று அங்க வச்சு

மதம்மாற வற்புறுத்தினார்கள். அவங்கள் மதப் பைத்தியம் நீ மதம் மாறினால் உன்னை சிறப்பாக வச்சிருப்பம் என்றார்கள். அவனோ, நான் சைவமதம் மதத்தை விட்டு எக்காரணம் கொண்டும் மாறமாட்டன் தூ க்குறதெண்டால் தூக்குங்கோ என்றான். அதனால் அவனைத் தூக்கில் இட்டார்கள். நான் கோவா சென்று 3 மாதங்கள் ஆய்வு செய்தனான். ஒரு மன்னனே இந்த மண்ணுக்காக உயிர்த்தியாகம் செய்தான். ஏன் அவனை எல்லாம் உதாரணமாக மக்கள் எடுக்கினம் இல்லை.

கோட்டைஇராட்சியம்போர்த்துக்கீசரிட்ட பறிபோனது. கண்டி இராட்சியத்தில் அந்தக் குளிரில் அவர்களால் அடிபட முடியவில்லை கண்டி மன்னன் அடித்துக் கொண்டே இருந்தான். அவர்களால் வெல்ல முடியவில்லை. யாழ்ப்பாண இராட்சியத்தைப் பிடிக்க 80 வருடங்கள் போர்த்துக்கீசர் போராடியுள்ளனர். அவ்வளவு தூரம் வன்னி மன்னர்கள் பின்னணியில் பலம்மிக்க பாதுகாப்பை கொடுத்துள்ளனர். கடைசியில் பீரங்கிகளால் அடித்து யாழ்ப்பாண இராட்சியத்தைக் பிடித்தார்கள்.

இன்றைய உலகத்தில் யூதர்கள் ஆயிரம் வருஷத்துக்கு மேலாக பிரித்தானியாவுக்கு அடிமையாக இருந்தவர்கள் 1948இல் சுதந்திரமடையேக்குள்ள யூதர்கள்அந்த தேசத்தை வென்றெடுத்தார்கள். தமது மொழியையும் தமது அரசையும் தமது விடுதலைப் போராட்டத்தையும் இன்றளவும் விடாது இருந்த இனம் யூதர்கள்

இண்டைக்கு அடுத்த ஒரு இனம் 500 வருஷத்துக்கு மேலாக அடிமையாக இருக்கென்றால் இலங்கைத் தமிழர் தான். மிகவும் வருத்தத்திற்கு உரிய விடயமாகும். கனடாவில் மாகாணசபை எல்லாம் இருக்கு கியூபெக்கில் இருக்கிற மக்களுக்கு கூடுதலான சுதந்திரம் கொடுத்திருக்கிறார்கள். ஏனென்றால் அங்கு இருப்பவர்கள் பிரெஞ் மொழி பேசுபவர்கள் வேறு மதத்தைச் சாரந்தவர்கள் என்பதால் மேலதிகமாக சுயாட்சி கொடுத்து வைத்திருக்கிறார்கள். உங்களுக்கு தனியாக பிரிந்து போற யோசனை இருந்தால் வாக்கெடுப்பின் மூலம் குறிப்பிடுங்கள் என்ற போது நாம் பிரிந்து போக விரும்பவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டனர்.

எனவே மக்களின் சுதந்திரமென்பது அவர்களது உரிமைகளைக் கொடுத்து சுதந்திரமான அரசுரிமையை அவர்களுக்கு எந்த வடிவத்திலாயினும் வழங்க வேண்டும். உலக வரலாற்றில் சூரிஸ்தான் என்ற பிரதேசம் தாம் தனியாக பிரிந்து போகப் போகிறோம் என்றவுடன் பல போராட்டங்கள் முன்னெடுத்தார்கள். இறுதியில் அரசு அவர்களிடம் வாக்கெடுப்பு நடத்திய போது தாங்கள் தனியாகப் பிரிந்து போகப் போகிறோம் என்றனர். இன்னும் சில தினங்களில் அவர்களுக்கு முழுமையான சுதந்திரம் கொடுக்கப்போகிறார்கள்.

மிகவும் ஆதிகால மொழிகளில் செழிப்பாக இன்றளவும் வளர்ந்திருக்கிற மொழி இப்ருமொழி அடுத்து தமிழ்மொழி மூன்றாவதாக சீனமொழி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்கள். ஆங்கில மொழியானது பிற்காலத்தில் வந்தது. லத்தீன் மொழிகள் பழமையான மொழிகள் இன்று வழக்கிழந்து போய் கொண்டிருக்கிறது.

சிங்கப்பூரின் தேசபிதா லிக்குவன்சியை சந்திக்கும் வாய்ப்பு அவர் இறப்பதற்கு 5 வாரங்களுக்கு முன்னர் கிடைத்தது. அப்போது அவர் குறிப்பிட்டார். ஈழத்தமிழரின் இன விடுதலை வேட்கையை அவர்கள் நசுக்கத் தேவையில்லை. இன்று சிங்கப்பூர் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறதென்றால் அது இலங்கைத் தமிழரின் அறிவார்ந்த முயற்சியேயாகும். 60 களில் இவரே கொழும்பைப் பார்த்துவிட்டு சொன்னார். சிங்கப்பூரை கொழும்பு மாதிரி ஆக்குவேன்

என்றார். ஆனால் இன்று எங்கே போய்விட்டது. சிங்கப்பூர் இதனையும் எனது நூலில் குறிப்பிட்டுள்ளேன்.

(அன்று போர்த்துக் கீசருடன் போன சுதந்திரம் இன்றுவரை எமக்கு கிடைக்கவில்லை. நல்ல தலைமைத்துவம் இல்லாத இனமாக மாறுமளவுக்கு பயமாகவும் வேதனையாகவும் உள்ளது)

உண்மையான காரணம் எதுவென்றால் பயமின்மை அதாவது ஒரு நோய்க்கு என்ன அறிகுறி என்று தெரிந்தால் தான் அதற்குவைத்தியம் செய்யலாம். இலங்கை அரசுக்கு பயமில்லை, அரசியல் வாதிகளுக்கு பயமில்லை, தமிழருக்கு பயமில்லை, இளம் தமிழ் சமுதாயத்திற்கு பயமில்லை, பயமில்லை என்றவுடன் வெட்டுக்குத்து, கற்பளிப்பு, கொலை, களவு என்ற பாதக வேலைகள் நடக்கிறது. பயத்தை ஏற்படுத்த வேண்டியதொரு நிலமை இங்கு வருமாக இருந்தால் அனைத்தும் மாறும் இதனை எனது ஆய்வின் முடிவிலும் குறிப்பிட்டுள்ளேன். கல்வித்துறை நேர்மையுடன் இதனை பார்க்க வேண்டும்.

**கேள்வி :-**
வன்னி மக்களின் கல்வி பற்றி ஒரு பின்னணியைச் சற்றுக் கூறுங்கள்.

**பதில் :-**
வன்னி மக்களின் கல்விநிலைமை வரலாற்றுக் காலம் தொடக்கம் பின் தங்கித்தான் இருந்தது. இங்கெல்லாம் திண்ணைப்பள்ளிகள்தான். ஆறுமுகநாவலர் காலத்தில கூட திண்ணைப்பள்ளிகள் தான் இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கல்வி நிலை தலைகீழாக மாறியது. எப்போது என்றால் இலங்கைக்கு போர்த்துக்கீசர் வந்தவுடன் அவர்களுக்கு 2 நோக்கம் இலங்கையின் செல்வத்தைக் கொண்டு போவது மற்றது மதம் மாற்றுவது.ரோம் இராஜ்ஜியம் தான் கி.பி 5,6,7 ஆம் நூற்றாண்டில் ஆசிய செல்வமெல்லாம் குவித்தநாடு அந்த ரோம் இராஜ்ஜயம் வீழ்ச்சியடைந்தது எப்போது என்றால் துருக்கியர் வந்து கொன்சாத்தி நோபல் என்ற கடல் பாதையை கைப்பற்றியபோது கொன்சாத்து நோபள் தான் ஆசிய நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்குமான கடல் வழிப்பாதையாக இருந்தது. துருக்கியர் முஸ்லிம்கள் கடல் வழிப்பயணம் மூலம் வியாபாரத்தின் மூலம் பொருள் குவிக்கும் வேலையில் ஈடுபட்டனர். இதனைப் பார்த்த போர்த்துக்கேயர் பிரெஜ், பிரிட்டிஷ்காரர் இதற்கு மாற்றுவழிப்பாதையை கண்டார்கள். அவர்களெல்லாம் கடல்வழியை பின்பற்றினர். வஸ்கொடகாமா கடலில் வெளிக்கிட்டு கொழும்புக்கு வந்து இங்குள்ள திரவியங்களை கண்டுபிடித்து கைப்பற்றினர். அதிலே போர்த்துக்கீசர் நன்கு கடல் பரீட்சயம் உள்ளவர்கள். கரையோரம் அவர்களால் கைப்பற்றப் பட்டது. அவர்களுக்கு போட்டியாக டச்சுக்காரர் வந்தார்கள் 1650 வரை போர்த்துக்கீசர் இங்கிருந்தனர். மதத்தை பரப்புவதற்கு படிப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. அதனால் மொழியை படிப்பித்தார்கள். அதனால் திண்ணைப் பள்ளிகளில் இருந்து வேறுபட்டது. ஒல்லாந்தர் வந்த போது அதுவும் செல்வம் திரட்டுவதாக இருந்தது. போர்த்துக்கேயர், கத்தோலிக்கத்தையும், ஒல்லாந்தர், புரட்டஸ்தாந்து மதத்தையும் பின்பற்றினர். கத்தோலிக்கரை அழித்து புரட்டஸ்தாந்து கல்வியை புகுத்த முனைந்தனர். இதனால் கல்வி மேம்பாடு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டது. இந்த இரண்டு நிலமையின் பின்னர் பிரிட்டிஷ் வந்தது. அவர்கள் 1695 இல் வந்து மத சுதந்திரம் வழங்கினர். யாரும் எந்த மதத்தையும் பின்பற்றலாம் என்றனர். ஆங்கிலக்கல்வியை நிறையக் கொடுத்தனர். ஏனெனில் உலகின் பல்வேறு இடங்கள் அவர்கள் பிடியில் இருந்த காரணத்தினால் மனிதவலு முக்கியமாகத் தேவைப்பட்ட காரணத்தினால் தாராளமாக

ஆங்கிலக்கல்வியை போதித்தார்கள். அதற்காக யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பாடசாலை தாபிக்கப்பட்டு இலவசக்கல்வி மூலம் யாழ் சமூகம் எழுச்சி பெற்றது. உலகம் முழுக்க பரந்து போனதால் அந்நாடு செழிப்புற்றது. வன்னியின் கல்விநிலை மேம்படாததற்கு காரணம் சனத்தொகை அடர்த்தியின்மை மற்றும் அடர்ந்த காட்டுப் பிரதேசங்கள் காரணமாயிற்று. நிறைய மக்கள் தொகை யாழ்ப்பாணத்தில் இருந்த காரணத்தினால் அங்கு இது சாத்தியமாயிற்று. அதனால் இங்கு கல்வி பாரம்பரிய முறை மிக வேகமாக பாதித்தது. ஆனால் பிரித்தானியர்கள் வந்தவுடன் இங்கும் சின்னச்சின்னப் பாடசாலைகளைக் கட்டி கல்விப்பணியைத் தொடர்ந்தனர். கனகராயன்குளம் பாடசாலைகூட 1860 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ்காரரால் கட்டப்பட்டதாக நான் நினைக்கிறேன். கல்விப் பாரம்பரியம் என்பது எமக்கு அண்மைக்காலமாக வந்த ஒன்று தான் 1983 வன்செயல்களின் பின் 30 வருடங்கள் கல்விநிலை மோசமாக பாதிக்கப்பட்டது. அரச நிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் மற்றும் அனைவரும் இணைந்து இளைய சமுதாயத்திற்கான கல்வித்தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் ஏனென்றால் ஒரு குடும்பம், ஒரு கிராமம், ஒரு நாடு ஒரு தேசம் உயர்ச்சி பெற வேண்டுமென்றால் கல்வி தான் ஒரு வாகனம். இதனை யாராலும் பறிக்க முடியாது. இதனை அனைவரும் உணர வேண்டும். இன்று வன்னி முழுவதும் மேலதிக தனியார் வகுப்புக்களுக்கு மாணவர்கள் போய் வரும் காட்சி ஒரு சிறந்த முன்னேற்றமாக நான் கருதுகிறேன்.

**கேள்வி :-** வன்னி மக்களின் சமய, கலை, பண்பாடு, கலாசார பின்னணி பற்றி தங்கள் கருத்து என்ன?

**பதில் :-**

சிறு தெய்வ வழிபாடுகளான நரசிங்கர், ஐயனார், நாகதம்பிரான் வழிபாடுகள் அதிகமாக இருந்தாலும் அதிகம் மக்கள் இயற்கையை நம்பி வாழ்வதால் கடவுள் அனுக்கிரகம் அவர்களுக்கு அதிகம் தேவைப் படுவதால் சைவ வாதியாக இல்லாமல் அதாவது கடவுள் நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாண சமூகம் அப்படியல்ல சமயவாதியாக இருந்து சமய அனுட்டானங்களை பின்பற்றுகிற வழக்கம் அங்கு உள்ளது. இங்கு கோவிலுக்கு போய் கும்பிட்டு வந்து மாமிசம் உண்ணும் பழக்கம் இருக்கிறது. பண்பாடு என்று பார்த்தால் பண்பாடு ஒரு மனிதனிடம் இரண்டு விதமாக வரவேண்டும். நல்ல பழக்கம், தீங்கு செய்யாமை, சமூக சிந்தனை, நல்ல உணவு, பெரியோரை மதித்தல், நல்ல எண்ணெங்கள் ஆகவே ஒரு நல்ல பண்பான குடும்பத்திலிருந்த பண்பான பிள்ளை வளரும் அதே பண்போடு சமூகத்தில் வளரும்.

அப்படி ஒரு பண்பாடுள்ள குடும்பத்தில் பிறக்காத பிள்ளை படித்து படித்தவர்களுடன் பழகி சமூகத்துடன் பழகி, நல்ல பழக்கங்கள் மூலம் பண்பாடு வரும்.

வன்னியைப் பொறுத்தவரையில் நான் சுத்த வன்னியான் நான் எனது கருத்தாக இதனைக் குறிப்பிடுகிறேன். இவ்விரண்டுமே வன்னிப்பகுதியில் மிகக்குறைவு ஒரு குடும்பத்தில் இருந்து பண்பாடு வருவதென்பதனை பெரிதாக எதிர்பார்க்க முடியாது. இந்த தாய் தகப்பனுக்கு கல்வி இருக்கேல்ல. இவர்கள் நல்ல படித்த சமூகத்துடன் வாழ்கின்ற சந்தர்ப்பம் கிடைக்கவில்லை, பண்பாடுகளுடன் வாழ்வதென்றால் என்ன என்கிற அறிவும் இருக்கவில்லை. நல்ல பள்ளிக்கூடம், பல்கலைக் கழகம் இருக்கவில்லை. அதனால் அவற்றை நாங்கள் அவர்களிடம் எதிர்பார்க்க முடியாது. படித்து பண்பட்ட சமூகத்தை 10 வீதம் தான் பார்க்கலாம். கலாசாரம் பண்பாடு சமூகத்தில் எவ்வளவு முக்கியம் என்பது தெரியும். கலாசாரம்,

பண்பாடு என்பதன் மூலம் ஒரு சமூகத்தை பார்க்க முடியுமென்றால் அந்த வகையில் வன்னி இதில் பின்தங்கியே உள்ளது. ஒரு சில பேரை இக் கருத்து புண்படுத்தலாம். சிலர் கோபப்படலாம். ஆனால் இது தான் யதார்த்தமான உண்மை. இதனை ஒரு சமூகவியல் பார்வையில் சொல்லலாம். இது *மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை* போன்றவற்றிற்கும் பொருந்தும்.

**கேள்வி :-**

வன்னி மக்களுக்கும் இளம் சந்ததியினருக்கும் தாங்கள் கூற விரும்புவது என்ன?

**பதில் :-**

வன்னி மக்கள் கடந்த 30 வருட யுத்த வாழ்க்கையில் தமது இயல்பு வாழ்க்கையை இழந்தவர்கள் முள்ளிவாய்க்காலில் இருந்து வெறுங்கையுடன் முகாம்களுக்குள் அடைபட்டுக்கிடந்து மறுவாழ்வை அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் அமைத்துக் கொடுத்து 60 வீதமானவர்கள் ஓரளவு வசதியாக வாழ்கிற நிலமை காணப்பட்டாலும் இவ்வாறான பாரிய அழிவுக்குள்ளால தப்பிப்பிழைத்து வந்த சமூகம் எப்படி? போட்டி, பொறாமை, குழிபறிப்பு, முதுகில குத்துறது, இப்படியான தீய எண்ணங்களும் செயல்களும் ஆட்கொண்டிருப்பது. கவலைக்குரிய விடயமாகும். இதை இந்த மக்கள் அடியோடு கைவிட வேண்டும் அவர்கள் நல்ல சிந்தனை உள்ளவர்களாக கடவுள் பக்தி உள்ளவர்களாக அறிவியல் பூர்வமாக சிந்திப்பவர்களாக தங்களை மாற்றியமைத்தல் வேண்டும். இவ்வாறு தம்மை மாற்றியமைக்காது விட்டால் அவர்களது வாழ்க்கையும் சந்தோஷ மற்றுப் போய் மிகவும் பளியான ஒரு சமூகமாக மாறுகின்ற நிலமை ஏற்படும். இதனை மாற்றி அமைக்க வேண்டும் ஒவ்வொரு பெற்றோரும் ஒவ்வொரு பிரஜையும் மாற்றியமைக்காவிட்டால் உலகத்திலிருந்து தனிமைப்படுத்தப்பட்டுப்போகும். ஒரு அபாயமான நிலமை ஏற்பட்டுவிடும். சமூக சிந்தனையுள்ள, கடவுள் பக்தியுள்ள சமூகமாக மாற வேண்டும் என்பதே எனது மிகப் பெரிய ஆசை.

**கேள்வி :-**

இறுதியாக தங்களுக்கு மிகவும் பிடித்த தாங்கள் ரசித்த கவிதை வரிகள் அல்லது பாடல் வரிகள் குறிப்பிட முடியுமா?

**பதில் :-**

இந்த ஆலமரம் நெஞ்சில நிறைஞ்சிருக்கு
அந்த மாமரக்கா உள்ளத்தில் நிறைஞ்சிருக்கு
வேப்பமரம் மனசில தான் பூத்திருக்கு
கிணத்தடியில் வாழைமரம் தலைமுறையாய் தவமிருக்கு
எங்கள் நாட்டிலே சொந்த ஊரிலே
எல்லாமே உயர்ந்திருக்கு
அன்னிய நாட்டிலே அவன் வீட்டிலே
எங்க தான் வாழ்விருக்கு
(அந்த ஆல)

சந்தியிலே புளியமரம், சங்கதிகள் சொல்லுது
குளத்தக்கரை மருதமரம் குளிர்நிலவைத் தேடுது
நான் குடித்த இளநீர் தென்னை வருந்தி
என்னை அழைக்குது
வானுயர்ந்த கரும்பனையோ வாவென்று கூறுது
பாலை மரக்கிளைகளெல்லாம் மஞ்சள் குளிர்காயுது
வயற்காட்டில் நாவல்மரம் காதல் கொடி தேடுது
ஆவாசும் பூவரசும் கொஞ்சி விளையாடுது
செவ்வரத்தம் பூச்சிரித்து மண்ணின் கதை பேசுது.

ஆரோக்கியமான இச்சந்திப்புக்கு நன்றி கூறி விடைபெற்றுக்கொண்டோம்.

# சிறுவர் கதை – அம்புலி மாமா

நா.தியாகராசா B.A. (Cey.)
Sworn Translator- Justice of the Peace.
இல. 108, முதலாம் ஒழுங்கை, திருநாவற்குளம், வவுனியா.

**ஆ**தித்தனுக்கு இரவு நேரங்களில் ஆகாயத்தில் அம்புலி மாமாவை அண்ணாந்து பார்ப்பதில் அலாதியான பிரியம். சந்திரன் வளர் பிறையாகி, பௌர்ணமியாகி, தேய்பிறையாகி, அமாவாசை நாளில் முற்றாக மறைந்து, மீண்டும் வளர்பிறையாகி வானில் வலம் வருவதைச் சில காலமாக மிகவும் அக்கறையுடன் அவதானித்து வந்தான். வெண்ணிலவை முகில்கள் மூடும் போது ஆதித்தனுக்கு முகில்கள் மேல் பொல்லாத கோபம் வரும்.

எண்ணற்ற நட்சத்திரங்கள் விண்ணிலே மின்னிக் கொண்டிருந்தாலும், அம்புலி என்னவோ தனிமையில் இருப்பதாகத்தான் ஆதித்தன் உணர்ந்தான். அவனும் வீட்டிலே தனித்த பிள்ளைதான். அம்புலி மாமா விண்ணை விட்டு இறங்கி மண்ணுக்கு வந்தால், தன்னோடும் தனது பள்ளித் தோழர்களுடனும் மனம்விட்டு கதைக்கலாம். புதுவிதமான விளையாட்டுக்கள் விளையாடலாம் விடுகதை சொல்லாம். ஆகா.... இரவுகள் எவ்வளவு இன்பமாக இருக்கும் என்று ஆதங்கப்பட்டான்.

“அம்புலி மாமா வா வந்து எனக்கொரு ஆசை மொழி சொல்ல வா எங்கு நீ செல்லுகின்றாய் தனிமையில் அங்கு நானும் வரவா”..என்று அடிக்கடி பாடிக் கொண்டான்.

பௌர்ணமி நாளில் தனது வளவில் எங்கே நின்று பார்த்தாலும் பெரிய சந்திரன் தெரிந்தது. ஆதித்தன் போகும் திசையெல்லாம் அம்புலியும் தனக்கு முன்னே போய்க் கொண்டிருப்பதும், தான் நிற்கும் போது அம்புலியும் நிற்பதும், தான் திரும்பி நடக்கும் போது தன்னைப் பின் தொடர்ந்து வருவதும் ஆதித்தனுக்கு மேலும் ஆச்சரியத்தைக் கொடுத்தன. கிணற்றுக் குள்ளும், தண்ணி வாளிக் குள்ளும், தண்ணிக் குடத்துக்குள்ளும், கண்ணாடிக்குள்ளும் தனித்தனியே சந்திரன் முழுமையாகத் தெரிவதும், ஆதித்தனுக்கு மேலும் வியப்பைக் கொடுத்தன.

ஒரு நாள் இரவு ஆதித்தன் பெற்றேருடன் கொழும்புக்குப் பிரயாணம் வெளிக்கிட்டான். வீதிக்கு வந்ததும் ஆதித்தன் ஆகாயத்தை அண்ணாந்து பார்த்தான். தனது வீட்டிலே நிக்கும்போது பார்த்த அதே வெண்ணிலவு தலைக்கு மேலே தெரிந்தது. புகையிரத நிலயத்துக்கு வந்ததும். அங்கேயும் ஆகாயத்தில் சந்திரனைக் கண்டதும் தங்களை வழியனுப்புவதற்கு சந்திரன் வந்ததாக ஆதித்தன் நினைத்துக் கொண்டான். மறுநாள் இரவு கொழும்பிலே மாமியார் வீட்டு மொட்டை மாடியில் நின்று கொண்டு கொழும்பு நகரின் அழகை ரசித்துக் கொண்டிருந்த ஆதித்தன் ஆச்சரியத்தினால் அதிர்ந்து போனான். ஆம் ஆகாயத்திலே தான் ஊரிலே பார்த்த அதே சந்திரன் ஆதித்தனைப் பார்த்து பளிச்சென்று சிரித்துக் கொண்டிருந்தான்.

நிலவு தனியாக ஆகாய வீதியிலே வலம் வந்து கொண்டிருப்பதும்இ தான் தனிமையிலே அந்த சந்திரனைக் கண்டு ரசித்துக் கொண்டிருப்பதும்இ ஆதித்தனுக்கு ஒரு புது விதமான உணர்வாக இருந்தது. ஆதித்தன் அம்புலியின் அழகை ரசித்தான். அம்புலியுடன் மானசீகமாக கதைத்துக் கொண்டிருந்தான். அவர்களுக்குள்

அன்புப் பரிமாற்றம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

பாடசாலைக்கு வந்ததும் தான் அம்புலியை தங்கள் வீட்டில் காண்பதையும், தெருவிலும், புகையிரத நிலையத்திலும் தங்களை வழியனுப்ப அம்புலி மாமா வந்ததையும், கொழும்பிலே தான் மாமியார் வீட்டு மொட்டை மாடியில் நின்று அண்ணாந்து பார்த்த போது அம்புலி மாமா ஆகாயத்திலே தெரிந்ததையும் தன் நண்பர்களுக்கு மிகவும் ஆச்சரியத்துடன் சொன்னான். எல்லா நண்பர்களும் 'கொல்' என்று சிரித்து, "அம்புலி எல்லா இடங்களிலும் ஒரே மாதிரித்தான் பிரகாசிக்கும். இது சின்ன விஷயம் இது கூட உனக்குத் தெரியாதா?" என்று ஆதித்தனை எல்லோரும் கேலி செய்தார்கள். ஆனால் ஆதித்தனோ அம்புலி மாமா தனக்கு மட்டும்தான் சொந்தம் என்றும், தன்னோடு அம்புலி மாமா கதைப்பதாகவும் தனக்குள் நினைத்து மகிழ்ந்து கொண்டான்.

சில நாட்களின் பின் ஆதித்தனுக்குப் பிறந்த நாள் வந்தது. பாடசாலை நண்பர்கள் எல்லாரையும் நிலாச் சாப்பாட்டுக்கு வரும்படி ஆதித்தன் அழைத்திருந்தான். குகன், மயூரன், சரவணன், தர்சன், சாரங்கன், மகிமன், சுகர்னன் எல்லாரும் ஆதித்தன் வீட்டுக்கு மாலை 6 மணிக்கே வந்திருந்தன்ர். ஆதித்தனின் அம்மாவும்இ பாட்டியும் எல்லாருக்கும் இனிப்புப் பதார்த்தங்களும் இரவுச் சாப்பாடும் செய்து கொண்டிருந்தார்கள்.

அப்பா, அம்மா, பாட்டி முன்னிலையில் நண்பர்கள் எல்லாரும் "நூறாண்டு காலம் வாழ்க நோய் நொடியில்லாமல் வளர்க" என்று வாழ்த்துக் கூற, ஆதித்தன் பிறந்தநாள் கேக் வெட்டி முதலில் பாட்டிக்கும், பின்னர் அப்பா, அம்மா, நண்பர்கள் எல்லோருக்கும் பரிமாறினான். அப்பாவும், அம்மாவும், பாட்டியும் ஆதித்தனுக்கு அன்பு முத்தம் கொடுத்து, அவனுக்கு வாழ்த்தும் ஆசியும் வழங்கினார்கள். பின்னர் அம்மா எல்லாருக்கும் குளிர் பானம் வழங்கினார். பின்னர் அம்மாவும் பாட்டியும் குசினிக்குள் போனார்கள். அப்பா வழக்கம் போல கிறிகற் விளையாட்டுத் தொடரைப் பார்க்க TV க்கு முன்னே போயிருந்தார்.

சுமார் ஏழு மணியளவில் எல்லா நண்பர்களும் ஆதித்தன் வீட்டின் மொட்டை மாடிக்குப் போனார்கள். கிழக்கு வானத்தில் நிலவு உதயமாகி, தென்னோலைகளுக்கூடாக மேலேழுந்து வந்து மொண்டிருந்தது. "அதோ அம்புலி மாமா. அதோ நிலவு. அதோ சந்திரன்." என்று ஆரவாரத்துடன் ஆதித்தன் கத்தினான். இரவிலே சந்திரன் வருவது வழக்கம் தானே? இதில் என்ன புதுமை என்று எல்லா நண்பர்களும் ஆதித்தனைப் பரிகசித்தனர். "இல்லை இல்லை எங்கள் வீட்டுக்கு மட்டும்தான் அம்புலி மாமா வழக்கமாக வருகிறவர்" என்று நண்பர்களுடன் வாதிடான் ஆதித்தன். நண்பர்கள் எல்லாரும் ஆதித்தனைக் கேலி செய்து சிரித்தார்கள். ஆதித்தனுக்கு சற்று வெக்கமும், வேதனையுமாக இருந்தது. இருந்தாலும் இன்று தன்னுடைய பிறந்த நாளுக்காக அம்புலி மாமா வந்ததாக ஆதித்தன் தீர்மானமாக நினைத்துக் கொண்டான்.

பள்ளித் தோளர்களுடன் தனது பிறந்த நாள் கொண்டாட்டத்திலே கலந்து கொள்ளும்படி அம்புலி மாமாவையும் அழைத்தால் என்ன என்று ஆதித்தன் நினைத்தான். ஆதித்தனின் வேண்டுகோளுக் கிணங்கி எல்லாரும் அம்புலி மாமாவை அழைத்தார்கள். நண்பர்கள் எல்லாரும் தங்களுக்கு நினைவில் நின்ற நிலா பாடல்களைப் பாடினார்கள்.

*"வெண்ணிலவே வெண்ணிலவே விண்ணைத்தாண்டி வருவாயா விளையாட ஜோடி தேவை"*
*"வாராயோ வெண்ணிலாவே கேளாயோ எங்கள் கதையே"*
*"நிலா நிலா ஓடி வா நில்லாமல் ஓடி வா நேரினில் நடந்ததெல்லாம் நீ சொல்ல வா வா.."*
*"ஆயிரம் நிலவே வா. ஓர் ஆயிரம் நிலவே வா..."*
*"நிலவே நிலவே ஆடவா நீ அன்புடனே ஓடிவா"*
*"வெண்ணிலவே தண்மதியே என்னுடனே வா வா நிலவே நிலாவே வா. வா."*
*"ஓ வெண்ணிலா ஒ வெண்ணிலா வண்ணப்பூச் சூட வா வெண்ணிலா"*
*"விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே"*
*"அமுதைப் பொழியும் நிலவே நீ அருகில் வராததேனோ"*
*"அம்புலி மாமா வா வந்து எனக்கொரு ஆசை மொழி சொல்ல வா"*
*எங்கு நீ செல்லுகின்றாய் தனிமையில் அங்கு நானும் வரவா.."*
*"நிலாவே வா செல்லாதே வா"*
*"நிலவோடு வான்முகில் விளையாடுதே.."*
*"அன்று வந்ததும் இதே நிலா இன்று வந்ததும் அதே நிலா"*

அப்போது ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. வானம் இருண்டது. ஆதித்தன் வீட்டு மொட்டை மாடியில் ஒளி வெள்ளம் பாய்ந்தது. அம்புலி மாமா ஆகாயத்திலிருந்து மெல்ல மெல்லக் கீழே இறங்கி வந்து சிறுவர்கள் முன் தோன்றினார். கண்கள் கூச பயத்தோடும்இ பதட்டத்தோடும் சிறுவர்கள் திகைத்துப் போய் நின்றார்கள்.

தலையிலே தங்கக் கிரீடம், கழுத்திலே பெரிய முத்து மாலை, தங்க ஆரம், காலிலே தண்டை, மார்பிலே வெள்ளிப் பூணூல், காதிலே இரத்தினக் கற்கள் பதித்த குண்டலங்கள் தோள்களிலும் கைகளிலும் ஐம்பொன் அணிகலங்கள், இடுப்பிலே பட்டுப் பீதாம்பரமும் தங்க நிறத்திலே உத்தரியமும், நெற்றியிலே வெண்ணீறும், செந்தூரத் திலகமும் துலங்க: கோடி சூரியப் பிரகாசத்தோடும், அழகுப்புன்னகை சிந்திய முகத்தோடும், அம்புலி மாமா சிறுவர்கள் முன்னே காட்சி கொடுத்தார். அவரது கழுத்தை அலங்கரித்த முல்லை, மல்லிகை. றோஜா, செவ்வந்தி. செண்பகம். செந்தூரம். கனகாம்பரம் ஆகிய எல்லா மலர்களும் சேர்ந்த கதம்ப மாலையின் நறுமணம் எல்லாரது மனங்களையும் மகிழ்வித்தது. ஆதித்தனும் நண்பர்களும் அம்புலி மாமாவை வியப்புடனும், பயபக்தியுடனும் பார்த்தார்கள். ஆம் வலது கையிலே பாரிஜாத மலர்களையும், இடது கையிலே ஆகாயத்தாமரை மலர்களையும் ஏந்திக் கொண்டு சாட்சாத் சந்திர பகவானே சிறுவர்கள் முன்னே ஓர் இளம் வாலிபனாக காட்சி கொடுத்தார். முதலில் தன்னை மானசீகமாக நேசிக்கும் ஆதித்தனின் கைகளிலே பாரிஜாத மலர்களைப் பரிசாக கொடுத்தார். ஆகாயத் தாமரை மலர்களை எல்லாச் சிறுவர்களுக்கும் ஒவ்வொன்றாகப் பரிசளித்தார்.

"என்ன சிறுவர்களே எதற்காக அழைத்தீர்கள்? நான் உங்களுடன் விளையாடவே வந்தேன். தயக்கமென்ன? முதலில் என்ன விளையாட்டு விளையாடலாம்? சொல்லுங்கள் என்றார் சந்திரன்.

திகைப்பும், மகிழ்ச்சியும் கலந்த குரலில் "நீங்கள் எப்படி இங்கே வந்தீர்கள்? என்று சந்திரனைப்பார்த்து ஆதித்தன் கேட்டான்.

"நீங்கள் எல்லாரும் பாட்டுப்பாடி அம்புலி மாமா வா வா என்று அழைத்தீர்கள். மருமக்கள் அன்போடு அழைத்ததால் வந்தேன். நீங்கள் அன்போடு அழைக்கும்

போது நான் வராமல் இருக்க முடியுமா? என்று மிகச் சாதாரணமாக சந்திரதேவன் கூறினார்.

'அப்படியானால் நாங்கள் எப்போது அழைத்தாலும் வருவீர்களா ? என்று மகிமன் கேட்டான்.

"ஆம் ஆம் எனக்குச் சிறுவர்களுடன் விளையாடுவதென்றால் அலாதியான இன்பம். என்னுடைய முகத்தை எல்லோரும் அழகு முகம் என்று வர்ணிப்பார்கள். ஆனால் சிறுவர்களே உங்கள் முகங்கள் தங்கம் போல ஜொலிக்கின்றனவே. ஆகா.. கள்ளம் கபடம் இல்லாத உங்கள் முகங்களில் தெரியும் பிரகாசம் தேஜஸ் என்னைக்கவர்ந்து விட்டன. உங்களை நேரிலே பார்த்த இன்றைய நாள் எனக்கு விசேடமான நாளாகும்" என்று சந்திரன் கூறினார்.

"மாமா நீங்கள் யாரோடு ஆகாயத்தில் இருக்கிறீர்கள்" ? என்று சுகர்ணன் கேட்டான்.

"ஏன் நானும் உங்களைப் போல்தான் அம்மா, அப்பா, பாட்டியுடன் இருக்கிறேன்."

"ஏன் நாங்கள் அழைத்தவுடனேயே நீங்கள் வரவில்லை? சற்று தாமதமாகத்தானே வந்தீர்கள்" என்று சரவணன் கேட்டான்.

"நான் எனது தாய் தந்தையருக்கு படுக்கை தயார் செய்து விட்டு அவர்களுக்கு

உணவு பரிமாறிக் கொண்டிருந்தேன். சற்று தாமதமாகிவிட்டது. எனது பெற்றோர் சற்று வயதானவர்கள். அவர்களுக்கு நான் ஒரே பிள்ளை. அதனால் நான்தான் அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்ய வேண்டும். அது சரி நீங்களும் உங்கள் பெற்றேருக்கு உதவிகள் செய்வீர்கள் தானே?"

ஒரே நேரத்தில் எல்லா சிறுவர்களும் "ஆம் ஆம்' என்றார்கள்.

"தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்று ஔவைப் பாட்டி சொல்லியிருக்கிறாரே என்றார் அம்புலி மாமா.

"ஆமாம் ஆமாம் நாங்கள் எல்லோரும் கொன்றை வேந்தன் படித்திருக்கிறோம்" எல்லா சிறுவர்களும் சொன்னார்கள்.

"பாட்டி என்றதும் ஞாபகம் வருகிறது. பாட்டி ஒருவர் நிலாவிலே வடை சுட்டுக் கொண்டிருக்கிறார். என்று எங்கள் அம்மா சொல்லுகிறவர் அது உண்மைதானா?" என்று மயூரன் கேட்டான்.

"ஆமாம் பாட்டியும் எங்களோடுதான் இருக்கிறார். ஏன் தினமும் நீங்கள் அவரைப் பார்க்கிறீர்கள் தானே?"

"ஆம் ஆம் பார்க்கிறோம்." என்றனர் சிறுவர்கள்.

"பாட்டி அங்கே என்ன செய்கிறார் என்று தர்சன் கேட்டான்.

"பாட்டியை எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் எனக்கு நல்ல நல்ல நீதிக் கதைகள் சொல்லித்தருவார். அதோடு எனக்கு மிகவும் ருசியான வடை சுட்டுத்தருவார்" நான் அதை விரும்பிச் சாப்பிடுவேன்.

"அப்படியானால் அம்புலி மாமா ஏன் நீங்கள் இப்போது வரும்போது எங்களுக்கு வடைகள் கொண்டு வந்து தரவில்லை." என்று சாரங்கன் கேட்டான்.

"இன்று நீங்கள் ஆதித்தனின் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் 'கேக்' சாப்பட்டிருக்கிறீர்கள். இன்னும் பலகாரங்கள் சாப்பிடப் போகிறீர்கள். உங்களுக்காக ஆதித்தனின் அம்மாவும், பாட்டியும் பலகாரங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் தானே? அடுத்த முறை வரும்போது

எனது பாட்டியிடம் கேட்டு உங்களுக்கு நிறைய வடைகள் வாங்கிக் கொணர்ந்து தருவேன்."என்றார் சந்திரன்.

"உங்களை எல்லாரும் ஏன் மாமா என்று அழைக்கிறார்கள்? என்று சாரங்கன் கேட்டான்.

"அம்மாமார் எல்லாரும் அன்னிய ஆண்களை தங்கள் சகோதரர்களாக நினைத்து தங்கள் பிள்ளைகளுக்கு அவர்களை மாமா என்று சொல்லித்தான் அறிமுகப்படுத்துவார்கள். இது தமிழர் பண்பாடு. அப்படித்தான் உங்கள் அம்மாமாரும் என்னை மாமா என்று உங்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார்கள். அதனால்தான் நான் உங்கள் எல்லாருக்கும் மாமா ஆகிவிட்டேன்." என்றார் சந்திரன்.

"உங்களிடம் எப்படி இவ்வளவு பிரகாசம் வந்தது" என்று குகன் கேட்டான்."அது எனக்கு சிவபெருமான் அருளிய வரத்தினால் கிடைத்தது. நான் அவரைத் தினமும் வணங்குவேன். நீங்களும் அவரை தினமும் தவறாமல் வணங்கினால் அதிக வரங்கள் தருவரர்" என்றார் சந்திரன்."ஆம் நாங்கள் எல்லோரும் சிவபெருமானை வணங்குகிறோம். அதோடு சிவராத்திரி நாளில் நித்திரை விழித்து சிவலிங்கத்தை வழிபாடு செய்வோம்" என்று எல்லாரும் சொன்னார்கள்.

" மாமா நீங்கள் எல்லா இடங்களுக்கும் போகிறீர்களே அதெப்படி முடிகிறது' என்று மயூரன் கேட்டான்.

"நான் எல்லாருக்கும் பொதுவானவன். எனக்குப் பகையாளி இல்லை. எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவேன். உயர்வுஇ தாழ்வு பார்க்க மாட்டேன். நீங்களும் உங்கள் பெற்றோர், குரு, சகோதரர், அயலவர், சினேகிதர், மாணவர்கள் எவரிடமும் பகைமை கொள்ளக் கூடாது. நான் காடு, மேடு, நாடு, நகர், மலை, மடு, கடல், வெளி எங்கும் ஒளி கொடுப்பேன். பணக்காரர் வீட்டு மாடியில் கொடுக்கும் அதே பிரகாசத்தை ஏழை வீட்டு முற்றத்திலும் கொடுப்பேன். நான் தேய்வதும், மறைவதும், வளர்வதும் போல் உங்கள் கண்களுக்குத் தெரிகின்றேன். ஆனால் உண்மையில் அப்படியல்ல. நான் எப்போதும் முழுமையாகவே இருக்கிறேன். நான் சிவபெருமானின் சடாமுடியை அலங்கரிப்பேன். உமையம்மையின் பாதத்தை வணங்குவேன். பிரமா விஷ்ணு தேவர்கள், முனிவர்கள் எல்லாரிடமும் ஆசி பெற்றுள்ளேன். ஆதனால்தான் நான் ஆகாயத்தில் எப்போதும் சிரஞ்சீவியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களும் உங்கள் பெற்றோர், குரு, கடவுள்களையும் தவறாமல் வணங்கி ஆசி பெற்றுக் கொள்ளுங்கள்." என்றார் சந்திரன் "ஆம் ஆம்" என்று எல்லாச் சிறுவர்களும் ஆமோதித்தனர்.

" மாமா நாங்கள் என்ன விளையாட்டு விளையாடலாம்" என்று ஆதித்தன் இப்போது கேட்டான். "உங்களுக்குத் தெரிந்த எல்லா விளையாட்டுக்களும் விளையாடலாம்" 'என்று சந்திரன் சொன்னார்.

மாமாவும் மருமக்களும் மிக நீண்ட நேரம் கண்ணாம்பூச்சி, கள்ளன் பொலிஸ், கெந்தி பிடித்தல், கிளிதட்டு, விடுகதை சொல்லுதல் என்று தங்களுக்குத் தெரிந்த எல்லா விளையாட்டுக்களையும் விளையாடினார்கள். மகிழ்ச்சியில் குதூகலித்தார்கள். பின்னர் சந்திரன் நடுவிலே நிற்க சிறுவர்கள் சுற்றி வந்து ஆடினார்கள். பாடினார்கள்.

***"சந்திரனே நீ வருவாயே தண்ணொழி எங்கும் தருவாயே"***
***"நிலவே நிலவே ஆட வா நீ அன்புடனே ஒடி வா"***

"மருமக்களே நாங்கள் எல்லாரும் மிகவும் களைத்துவிட்டோம். நான் இனி திரும்பிப் போகிறேன்". என்று சந்திரன் சொன்ன போது: "வேண்டாம் மாமா வேண்டாம் ஏன் அவசரப்படுகிறீர்கள். இன்றைக்கு எங்களுடன் தங்கி விடுங்கள். நாளை அதிகாலை உங்களை அனுப்பி வைக்கிறோம்" என்று எல்லாச் சிறுவர்களும் ஒரே நேரத்தில் அம்புலி மாமாவைக் கேட்டுக் கொண்டார்கள். "இல்லை இல்லை நீண்ட நேரமாகிவிட்டது. உங்களோடு விளையாடியதில் நான் எனது கடமைகளை மறந்து விட்டேன். எல்லாரும் தங்களுக்குரிய கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். இதை நீங்கள் எப்போதும் ஞாபகத்தில் வைத்திருங்கள். ஆகாயத்தில் நின்று கொண்டு நான் நிலவைப் பொழியவில்லை என்று கடவுள்களும், தேவர்களும், முனிவர்களும், எல்லா உலக ஜீவராசிகளும் இப்போது குழப்பம் அடைந்திருப்பார்கள். நான் எனக்குரிய கடமையிலிருந்து தவறிவிட்டேன் என்று தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட்டு விடுவார்கள். சிவபெருமான் என்னைத் தண்டிப்பார். நீங்களும் உங்களுக்கு விதிக்கப்பட கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும். அதோடு பாட்டி அவர்கள் என்னைத் தேடுவார்கள். நான் அவர்களுக்கு வெற்றிலை பாக்கு இடித்துக் கொடுக்க வேண்டும். நித்திரை கொள்வதற்கு மெத்தை போட்டுக் கொடுக்க வேண்டும். நான் பாட்டிக்குச் சேவை செய்தால் அவர் என்னை "நீடூழி வாழ்வாய்" என்று வாழ்த்துவார். பெரியவர்களின் ஆசீர்வாதத்தை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும். உங்களுக்கும் பாட்டி இருக்கிறார்கள் தானே நீங்களும் அவர்களுக்குச் சேவை செய்வீர்கள் தானே?" என்றார் சந்திரன்.

"ஆமாம் நாங்கள் எங்கள் பாட்டிகளுக்கு எல்லா உதவிகளும் செய்கிறோம். எங்கள் பாட்டிகள் தானே உங்களைப்பற்றி கதை கதையாக எங்களுக்குச் சொன்னவர்கள்" என்று சிறுவர்கள் ஏகோபித்த குரலில் சொன்னார்கள்.

" மருமக்களே நான் போய் வரட்டுமா?" என்று சந்திரன் கேட்டபோது "இனி எப்போது மாமா வருவீர்கள்" என்று சிறுவர்கள் கேட்டனர். "நீங்கள் என்னை அன்போடு அழைத்தால் கட்டாயம் மீண்டும் வருவேன்- உங்கள் எல்லாருக்கும் என்னுடைய அன்பான வாழ்துக்களும் ஆசிகளும் உரித்தாகட்டும். இந்தப் பூவுலகிலே சகல செல்வங்களும் பெற்று நீங்கள் நீடூழி வாழ்வீர்களாக" என்று கூறி அம்புலி மாமா சிறுவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

சந்திரன் மெது மெதுவாக மண்ணிலிருந்து விண்ணை நோக்கிப் போய் கொண்டிருந்தது. இந்த கண்கொள்ளாக் காட்சியை கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு சிறுவர்கள் எல்லாரும் கையசைத்து அம்புலி மாமாவை வாஞ்சையோடு விண்ணுலகுக்கு வழி அனுப்பி வைத்தார்கள். தாங்கள் அழைத்த போதெல்லாம் அம்புலி மாமா வருவார் என்ற நம்பிக்கை எல்லாச் சிறுவர்கள் மனதிலும் உறுதியாக இருந்தது. ஆதித்தனின் வீட்டின் மொட்டை மாடியில் தேவலோக மலர்களின் வாசனை நிரந்தரமாகக் குடிகொண்டது.

நாளை பாடசாலையிலே ஆதித்தனும் அவனது நண்பர்களும் அம்புலி மாமாவைப் பற்றி தமது பள்ளித் தோளர்களுக்கு அழகழகாக கதைகள் பல சொல்லிக் கொண்டிருப்பார்கள். ஆம். ஆம். எவருக்கும் கிடைக்காத பெரும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதே. அவர்கள், ஆகாய வீதியிலே தாரகைகள் சூழ தேரிலே பவனிவரும் சந்திரனை நேரிலே பார்த்து மனம் பூரித்துப்போயிருக்கிறார்கள்.

# என் தாய் மண்ணே!

கவிஞர் அகளங்கன்

**நா**ன்பிறந்து வளர்ந்திட்ட வன்னி மண்ணே!
என்தந்தை தாய்மனைவி மக்கள் சுற்றம்
வான்கலந்த என்பாட்டன் பூட்டன் என்ற
வரிசையுள்ளோர் பிறந்திட்ட என்தாய் மண்ணே
மான்மரைகள் மயில்குயில்கள் மலிந்த மண்ணே
மலர்ச்சோலை போல்விளங்கும் வன்னி மண்ணே
கான்நிறைந்த பழமரங்கள் காலந் தோறும்
களிப்போடு நாமுண்ணக் கொடுத்த மண்ணே

தேன்தோடை வாழைபலா தென்னை மாவும்
தினைஉளுந்து குரக்கன்பயறு எள் கடலை
வான்பயிராம் பனையோடு பழ மரங்கள்
வளமான பாலைநறு விலி பனிச்சை
தேன்நிகராம் முரலிஉலு விந்தை வீரை
தெருவோரக் கரம்பை மகிழ் வெடுக்குநாறி
வானுயரும் நாவலொடு பன்னை சூரை
நல்லகரை யாக்கண்ணி விளாத்தி ஈச்சை

அத்திபுளி தேசிவிழா துவரை சூழா
அன்னமின்னா இலந்தைபட்டா ணிச்சி கொய்யா
புத்திதெளி விக்கும்அரு நெல்லி கள்ளி
புதுமைமிகு மாதுளைநா றத்தை நெல்லி
வத்தகம்பப் பாசிகெக் கரிதீன் பிலா
வளர்கொடிதோ டைஎனும்பல் பழங்க ளாலே
இத்தரையில் பழச்சோலை யாய் விளங்கும்
இனியதமிழ் மண்ணேஎன் உயிராம் மண்ணே

குளம்நிறைந்த தாமரைகள் மருத நீழல்
குளிர்தருக்கள் நிழலாக அமைந்த மண்ணே
வளம்நிறைந்த நிலமாகி வானம் பார்க்கா
வயல்வெளிகள் நிறைந்திட்ட வளமார் மண்ணே

உளம்நிறைந்த மகிழ்வோடு ஊரார் கூடி
ஒற்றுமையாய் வாழ்ந்திட்ட உயர்ந்த மண்ணே
களம்நிறைந்த வீரர்கள் மண்ணைக் காக்கக்
களிப்போடு தம்முயிரை ஈந்த மண்ணே

அன்னியர்க்குத் தலைவணங்கா திருந்த மண்ணே
அடங்காப்பற் றெனும்நாமம் பெற்ற மண்ணே
கன்னியர்க்குக் கற்புக்கோர் இலக்கண மாய்க்
காட்டிடவோர் காட்சியென இருந்த மண்ணே
வன்னியர்க்கு உயிரான வன்னி மண்ணே
வளமான வயல்குளங்கள் நிறைந்த மண்ணே
தன்னிகர்க்கு வேறெந்த நாடு மின்றித்
தனியரசாய்த் தமிழரசாய்த் திகழ்ந்த மண்ணே

வந்தாரை வாழவைக்கும் வன்னி மண்ணே
வயல்கள்எல்லாம் நெல்நிறைந்த வளமார் மண்ணே
நொந்தாரை ஆதரித்து வாழ்வு தந்த
நுவலரிய பண்புகொண்ட வன்னி மண்ணே
செந்தாரை பெருகயுத்தம் செய்து வீரர்
தேசமெல்லாம் புகழ்பெற்ற சிவந்த மண்ணே
எந்தாயே எம்மண்ணே ஏத்து கின்றோம்
எல்லோரும் வாழஅருள் கூட்டு வாயே

# முதுமை அது இனிமை

**பயையூர்ப் பரா**

சிறு தளிராய் வேர் பரப்பி
பெரு விருட்சமாய் பூ மலர்ந்து
நறுமணம் வீசி நல்லிதயங்களில் குடிகொண்ட
கருவுற்று காய் தந்து கனி தந்து
களைப்புற்றோரின் நிழலாகி
பெருமழை விட்டோய்ந்த பெரு வெள்ளம் போல்
நிறைவான வாழ்க்கை அனுபவத்தை இதயத்தில்
நிறைந்திருக்கும் வடிவமே முதுமை

துல்லியமாய் இலக்கை கொத்திய கண்களும்
துணிந்து பயணித்த துயர் களைந்த கால்களும்
கனிந்த மாத்திரத்தில் கடிதெனவே பிடித்த கைகளும்
பிணியைக் கண்டிரா உருக்கினையொத்த உடலும்
தனக்கு வேண்டியதை உன்னிப்பாய் கேட்ட காதும்
பணி செய்ய பயமின்றிப் புறப்பட்ட மனமும்
முன்னகர மறுப்பதும் முதுமையின் வலிகள்
என எண்ணி ஏங்கிட வேண்டாம்.

முதுமையில் நிறைந்தவை மனிதம் கண்டவை
அனைத்தும் இன்பங்களின் இனிமையும்
துன்பங்களின் சுமையும்
வெற்றிக் களிப்பும்
தோல்விகளின் துயரமும்
சாதனைகளின் உரமும்
சோதனைகளின் வலியும்
அறிந்தவைகளின் அறிவும்
அறியாதவைகளின் ஆதங்கமும்
பாசத்தின் உறைவிடமும்
பாவிகளின் மோசடியும்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு
பொறுமை நிதானம் கடப்பாடு
உண்மை நேர்மை உறுதி
என்பவற்றின் வெற்றியும்
பொறாமை பொய் பித்தலாட்டம்
கோபம் கொடூரம் ஆணவம்
இவற்றின் தோல்விகளும்
இவை அனைத்தும் அனுபவித்து
அலுத்த வடிவமே முதுமை.

மருதமுகிழ்

# பண்பாடு

எஸ்.தவபாலன்,
அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேசசெயலகம்
வவுனியா வடக்கு.

பண்பென்றால் பாடறிந்துஒழுகுதலாம்
மனதைப் பண்படுத்தும் பண்பாடாம்
உழுதல் முதல் தொழுதல் வரை
விருந்தோம்பல் முதல் திருமணம் வரை
அம்மிதொடக்கம் ஆட்டுக்கல் வரை
தமிழர் பண்பாடுவிரிந்தது.

உழுதுண்டுஉயிர்வாழ்ந்தோம்
உரலெடுத்துநெல்குத்தினோம்
அம்மியில் சம்பலரைத்தோம்
ஒடியல் மாவில் கூழ்காச்சி
நிலவொளியில் கூழ்குடிச்சோம்
உண்மையானதமிழர் பண்பாடு இது.

பாட்டியும் பாட்டனும் அப்புவும் ஆச்சியும்
கூடிக்களித்தகாலத்தின் பண்பாடு
ஆடிப்பாடி கூடிக்குலாவிக் குதூகலித்து
கும்மியடித்தவாழ்க்கையின் பண்பாடு
ஒடிப்பிடித்துஒன்றாயிருந்ததேசத்தின்
பண்பாடு
கலையிலும் வேள்வியிலும்
பரிணமித்தபண்பாடு.

புழுதிபடிந்தவீதியின் பண்பாடு
புல்லர் நுழையாதமண்ணின் பண்பாடு
களைகள்நுகராதகளனியின் பண்பாடு
மனிதம் மரிக்காதமாண்பின் பண்பாடு
எம்மைநாம் ஆண்டவீரத்தின் பண்பாடு
எதிரிகள் போற்றியஈழத்தின் பண்பாடு

தமிழ்மகள் மாவெடுத்துகோலமிட்ட
முற்றத்தேதமிழர் பண்பாடு
வீடெல்லாம் மாவிலைகள்
வீதியெங்கும் தோரணங்கள்
வாசலெங்கும் நிறைகுடங்கள்
வந்தோர் மகிழும் விருந்தோம்பல்கள்
வகைவகையானதின்பண்டங்கள்
தனித்துவமானதமிழர் பண்பாடுகள்.

ஊரெல்லாம் கொண்டாட்டங்கள்
உயிர்ப்பானவிளையாட்டுக்கள்
உயர்வுபெறும் திருவிழாக்கள்
உன்னதம் நிறைந்தவிரதங்கள்
வீரம் பேசும் நாடகங்கள்
விருதுபெற்றநடனங்கள்
பண்பாட்டைபறைசாற்றும்.

போற்றுதற்குரியமொழியும்
புகழ்ச்சியில்லாகுணமும்
சுயநலமில்லாவாழ்க்கையும்
இழந்துபோகாமானமும்
வீழ்த்தமுடியாவீரமும்
உயர்ச்சிமிகுபண்பாடுகள்.

இடம் பெயர்ந்தபோதும்
தடம் பெயராதமிழர் வாழ்வும்
சொத்துச்சுகம் இழந்தபோதும்
சுயமிழக்காநம் குணமும்
விழவிழஎழுந்துநின்றவலிமையும்
பண்பாட்டின் சிகரங்கள்.

மூத்தோர் காத்தபண்பாடு

மருதமுகில் (side decoration)

முழுதாய் தானே இருந்தது
முகப் புத்தகம் இல்லை
முகம் பார்துக் கதைக்கவுமில்லை
மடிக் கணனியுமில்லை
மடியில் கனதியுமில்லை.

கணனியில் இலக்கமில்லை
கன்றாவிகள் செய்யவில்லை
கல்பனாக்காபாட்டுமில்லை
புளூவேல்ஸ் கேமுமில்லை
புளூத்தூத்போனுமில்லை
புழுப்போலவாழ்க்கையில்லை.

இணையத்தில் இணையவில்லை
இன்ரநெற்றில் அரட்டையில்லை
வட்சப்பில் வழியவில்லை
ஸ்கைப்பில் நெழியவில்லை
வைபரில் அசரவில்லை
வைபைக்குஅலையவில்லை.

கைபேசிஅசிங்கமில்லை
கண்டறியாக் காதலில்லை
மெசஞ்சரில் மெசேஜ்சில்லை
பண்பாட்டுக்குஒருபஞ்சமுமில்லை
இன்ஸ்ர கிராம் இயங்கவில்லை
இயங்குதளம் தேடவில்லை
இயற்கைக்கு இழவுசெய்யவில்லை.

இயந்திரஉலகமில்லை
தந்திரவாழ்க்கையில்லை
அந்தரங்கவேலையில்லை
அலட்சியப்பேச்சுமில்லை
அடிமுட்டாள் தனங்களில்லை
அநியாயங்கள் செய்யவில்லை.

இப்போது?
இல்வாழ்க்கைதொலைந்தது
வரலாறுஅழிந்தது
கலாசாரம் அபசாரம் ஆனது
விபச்சாரம் வியாபாரமானது
வேட்டியும் சேலையும் விளம்பரமானது.

முன்புதைத்துப் போட்டதை
இப்போகிழித்துப் போடுறார்
முன்புநடித்துக் காட்டியதை
இப்போகாட்டிநடிக்கிறார்
ஆடைகளில் விழுந்தபண்பாடு
நம் அடையாளத்தையேஅழித்துவிடும்.
அயல் வீட்டுஏழைமகள்
ஆடையின்றிஅம்மணமாய் திரிய
மேல் வீட்டுயன்னலுக்கு
சட்டைபோட்டுஅழகுபார்க்கும் துயரம்
தமிழர் பண்பாட்டில்எப்படித்தொற்றியது
இதைஎப்படிநாம் மாற்றுவது?

களைகள் களனியாகிடத் துடிக்கும்
நேரத்தில்
பண்பாட்டில்
விழுந்தகளைகளையாதுபோனால்
நலம் நம்மைஎன்றும் சேராதுஆதலால்
புதுமைமிகுபண்பாட்டைபுத்துணர்வாய்
போற்றி
பழமைமிகுபண்பாட்டைமாறாதுகாத்து
பெருமைமிகுதமிழர் பண்பாட்டை
ஏழேழுதலைமுறைக்கும் முரசறைவோம்.

வாழட்டும் நம் தமிழ்
ஓங்கட்டும் அதன் புகழ்
திக்கெட்டும் பரவட்டும்
தமிழர் பண்பாடு
நேற்றிருந்தபொற்காலம்
நேர்த்தியாய் நாளைமலரும்.

# மண்ணின் மைந்தன்

த.லீர்த்திகா,
தமிழ்த் துறை, யாழ் பல்கலைக்கழகம்.

உயிர் கொடுத்து உடல் வருத்தி - நித்தம்
உருக்குலையும் ஏர் உழவா!
விழித்திடு! விடியல் வெகுவிரைவில்
உழைப்பின்றி உடல் வளர்க்கும்
உயர்வரக்கத்தை நீ கடிந்திடு

கட்டாந்தரை பிழந்தே - நித்தம்
கால் வயிற்றுக் கஞ்சிக்காய்
கடின உழைப்பு - அவன்
கண்டதில்லை இதுவரைக்கும் வெற்றிக்களிப்பு

காலமாற்றமும் அவன் உழைப்பை
கணப்பொழுதில் அழிக்கும்
காணாத வெற்றிக்காய் - அவன்
கண்கள் காத்தே கிடக்கும்

கதவற்றவாசல் வழியே
தடையின்றித் தழுவிடும் தென்றல்
தொலைதூரத்திலிருந்தும்
துல்லியமாய் கண்டறிந்து
கண்சிமிட்டும் நட்சத்திரக்கூட்டம்

ஓட்டைக் கூரையின் வழியே வந்து
கட்டியணைக்கும் வட்ட நிலவு
கூரையற்ற வீட்டினுள்ளே
அழைர்யாமல் வந்த செல்லும் மழைத்துளி

வாடகையின்றியே வசந்தம் வீசும் குளிர்காற்று
வலிதாங்கி சுமைதாங்கி - எம்மை
வாழவைத்தான் ஏர் உழவன்

காலங்கள் ஓடுகின்றன்
குதிரை வேகத்திலேயே
கபடமில்லா ஏர் உழவா
காலம் கடக்கிறது கவனி
மீளமுடியாமல் வருத்தும் - உன்
வாழ்க்கைக்கு புதிய ஒளிபாச்சிவிடு
விடியலை வரவைத்து விடு
வறுமையை விரட்டி விடு
வெற்றின் மைந்தனே
வாழ்க நீ வளர்க நீ

மருதமுகிழ்

# அர்த்த நாரீஸ்வரர்

**பயையூர்ப் பரா**

மாலை சூடி மணக்கோலம் பூண்டு
நாள் பார்த்து கோள் பார்த்து
அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
தாலிக் கொடி கட்டி வாழ்க்கைப் பூந்தோட்டத்தில்

பெரியவர்களின் பெருவாழ்வு வாழ
வாழ்த்திய வாழ்த்தொலிகளுடன்
கால் பதித்த அவள் இன்று
அர்த்தநாரீஸ்வரர் கோலத்தில்

அர்த்த நாரீஸ்வரர் என்றால் ஆண்பாதி பெண்பாதி
ஆண்பாதி பெண்பாதி அந்த அபலைதான்
அர்த்த நாரீஸ்வரர்
அன்றொருநாள் அவள் வாழ்வில்
இடி வீழ்ந்ததனால் அவள்
அர்த்த நாரீஸ்வரர் கோலத்தில்
கண்கண்ட கணவன் கைதவறிப் போனான்
அண்ட சராசரமும் அடங்கிப்போனதாய் உணர்வு
அரைவயதில் அநியாயமாக
ஆண்டவன் எடுத்தானா அல்லது
அடுத்தவன் எடுத்தானா யாருக்கு தெரியும்

அன்றாட சீவியத்திற்காய் திண்டாடும் இக்காலத்தில்
கொண்டவளைக் காப்பாற்ற கடுமையாய் உழைத்தவன்
மண்ணகம் விட்டேகி விண்ணகம் சென்றுவிட்டான்

விடியலை தலையில் சுமக்கும் வைகறைப்பறவை இவள்
வாழ்வின் விடியலைத்தேடி இப்பறவை வைகறைப்பொழுதில்
பறக்கத்தொடங்குகிறது
தன் வாழ்வின் எஞ்சிய நாளுக்காகவும் ஏக்கத்துடன் இருக்கும் தன்
குஞ்சுகளுக்காகவும்
கணவனின் தந்தையின் கடமையை ஏற்று ஆண் ஒரு பாகமாகவும்
தாயின் கடமையை ஏற்று பெண் ஒரு பாகமாகவும்
அர்த்த நாரீஸ்வரர் கோலத்தில் அவள்

ஆண் என்ற கோலத்தில்
சுட்டெரிக்கும் சூரியனைப் போல்
அசிங்க பார்வைகளுக்கும் அர்த்தமற்ற பேச்சுக்களிற்கும்

பதில் தரவும்
சவால்களை உடைப்பதற்கும்
சாதனைகளைப் படைப்பதற்கும்
குஞ்சுகளுக்கு இரைதேடவும்
பெண் என்ற கோலத்தில்
தன் குஞ்சுகளை தன் இறகுகளால் மூடி பாதுகாப்பதற்கும்
தாயன்பை வழங்குவதற்கும்
தாயின் பணிகளைச் செய்வதற்கும்

இப்போது புரியும் இந்த விடியலை
தலையில் சுமக்கும் வைகறைப்
பறவையின் இன்னொரு
பரிணாமம் அர்த்த் நாரீஸ்வரர் என்பதை

## குழந்தை

அ.திவ்வியா,
வவுனியா

*இதயம் துடித்து சிலிர்க்க*
*உதிரம் கனிவாய் சிவக்க*
*கருப்பை தரித்த நிலவு*
*உறக்கம் கலைத்த கனவு*
*சிரிப்பை முடிந்த சொர்க்கம்*
*இரவில் விழிக்கும் சூரியன்*
*நிஜக் கடவுளின் நின்மதி*
*ஓடி விளையாடும்*
*ஒரு தலைக்காதல்*
*அடம்பிடித்தாடும் சிவதாண்டவம்*
*சின்ன சின்ன சேட்டைகளின்*
*சிம்ம சொப்பனம்*
*கரை புரண்டோடும் நதியின் சாயல்*
*பாஷைகளின் முதல் மொழி*

# இலங்கைக்கு வரவேணும் இராம இராட்சியம் போல்

ஆறுமுகம் தம்பையா
நெடுங்கேணி.

### வெண்பா

சீர்பூத்த நல் இலங்கைத்தீவின் சிறப்பதனை
பேர்பூத்த செந்தமிழால் பாடிடவே - கார்பூத்த
வண்ணத்தான் பாதம் பணிந்து மனத்
தெண்ணத்தான் காப்பானே என்றும்

### இலங்கைத் தாயின் சிறப்பு

இலங்கைத் திருநாடு என்றாலே - இன்பம்
துலங்கும் தேனூறும் வாயினிலே - எங்கள்
மூவினத்தோர் வாழும் நாடென்றால் - உயிர்
மூச்சுப்பிறக்குது பேச்சினிலே

பாரத நாடு வடக்கேயும் கிழக்கே மலேசியா தாய்லாந்தும்
வளர் இந்து சமுத்திரம் தெற்கேயும்
மேற்கே ஆபிரிக்க நாடுகளும் - இவை
மத்தியில் உள்ள வள நாடு

மகாவலி கங்கை வளம் பலவே தரும் - நல்ல
மாணிக்க கங்கை எனப்பலவும் - மேவி
யாறு பல ஓடத் திருமேனி
மேனி செழித்தது எம் நாடு

தென்னை பலாவொடு மாஞ்சோலை பனை - சேர்ந்த
நற்கன்னல் கதலி முதற் பலகாய்
கனிகள் தரும் மரங்கள் - பல
காண இனிய தெம் தாய்நாடு

வளம்மிகு தேயிலை றப்பரோடு - செந்நெல்
வாய்த்த சோளம் தினை குரக்கன் - என
உணவு தரும் பல பயிர்களெல்லாம் - இங்கு
சேர்ந்து வளரும் திரு நாடு

மாணிக்கம் முத்து மலர்ப்பொய்கை - மத
யானை மருப்பு மலர்ச்சோலை - தேன்
வண்டொரு வண்ணமயில் கிள்ளை - புள்ளி
மானினம் வாழும் வள நாடுஷை

சொல்லற்கரியதெம் நாட்டின் சிறப்பினை
எழுதி முடிக்கவும் ஏலாது - முன்னர்
நல்லதிறேதாயுதத்தினிலே நன்கு குபேரனும் ஆட்சி
செய்த பின்பு இராவணன் தான் ஆண்டான்

பேசி பலமன்னர் தாம் ஆண்டார் - அன்று
நீர்வளம் சீர்வளம் கொண்ட இந்நாட்டை - இன்று
மாசற்ற மூவின மக்கள் தமையீன்று
மாண்பு மிகுந்தது எம்நாடு

ஆண்ட மன்னர்கள் அநேகம் பேர் - எழில்
பூண்ட அயோத்தியை ஆண்ட ஸ்ரீராமர்
போலிங்கு ஆள்பவர் சிறி
சேனா மன்னர்

மூவின மக்கள் தன் உடன்பிறப்பேயென
முழுமனங்கொண்டவர் மக்களிடை
அன்பும் பண்பும் அரவணைப்பும் நல்கி - நல்
ஆட்சி புரிவதும் தானவரே

இராமரின் ராட்சியம் போலிங்கே - நம்
இலங்கைத்தீவுக்குத்தான் வரணும் - எனக்
துலங்கு மனத்தவர் கூறுதல் கேட்டு - எம்
துன்பம் அகன்று மகிழ்ந்திடுவோம்.

வாழ்க நிரந்தரம் வாழ்க மூவின மக்களுமே
வாழ்க இலங்கைத்திருநாடே வாழிய வாழியவே
வாழ்க மன்னர் சிறிசேனா என்றும் வாழியவே
வளர்க இங்கு அவராட்சி வாழிய வாழியவே

# "இவரல்லோ இரட்சகர்கள்"

சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை
இறம்பைக்குளம், நெடுங்கேணி.

மண்மகள் குளிரக் குளித்து
மனம் போல முழுகிக் களித்து
தன் வயிறு தாங்கிப் பெற்ற
தாவர சங்கமத்தின்
தாகத்தைத் தீர வைத்து
கண்ணிறைக் காட்சி நல்கும்
கனமழை பொய்த்தாலே
கண்ணீரை வடித்துக் காத்து
காற்றிடம் கொடுத்தாள் பாவம்

விண்மகள் ஏனோ தன்னுடைய
கன்களை மூடிக்கொண்டாள்
விதை நெல்லைக்கூடப் பல
விவசாயப் பெருங்குடிகள்
விளைச்சலில் பெறவும் இல்லை
வீணாகிப் போன அந்த
முயற்சியின் அயர்ச்சியாலே
விரக்யின் விளிம்பைத் தொட்டு
விடியலைக் காணவில்லை

கடன் என்னும் பூதம் வாயை
கடல்போலத் திறந்து காட்ட
இடரினில் வீழ்ந்தார் பாவம்
இவரென்ன செய்தார் மோசம்
வாலாட்டும் வல்லரசு
தாலாட்டுப் பாடி நிற்க
வறுமைப் பேய் வந்து
பாய்விரித்துப் போர்வையிட
நித்திரையில் தொலைந்த

நிம்மதியை நினைத்தால் வருமா
விலைக்கென அரிசிவாங்கி
விறைந்திடும் உலையில் போட
காசு மரமென்ன காய்த்தா கிடக்கிறது
களவு எடுத்து வயிறு வளர்க்க
காவல்துறை விட்டிடுமா
நிவாரணங்கள் எல்லாம்
நிலையில்லாச் சொப்பனங்கள்
நினைத்தவுடன் கிடைக்காத
நீண்டகாலத் தாமதங்கள்

நிலவினில் கொடியை நட்டான்
நீண்ட வானில் செயற்கைக் கோளை விட்டான்
விரலினில் வியனுலகின்
விந்தைகளைக் காண வைத்தான்
கடலினில் கலனை ஏவிக்
கரையினைத் தொட்டான் என்று
மனிதனின் பெருமை பேசி
மலைத்திடும் மடையர் கூட்டம்

மண்ணினைக் கொன்றான்
மரத்தினைக் கொன்றான்
விண்முகில் தின்றான்
வீசிடும் காற்றில் மாசை
விதைத்துமே நின்றான்
விசங்களை உணவில் சேர்த்து
வீர மானிடரை அழித்தான்
போதாதென்றே எண்ணி
போரினில் நவீனம் செய்வான்.

எள்ளோடு காயும் எலியெச்சம் போலே
வல்லோனின் வருமான வழிக்கு வசதியாய்
எல்லோரும் செல்வோம் எமலோகம்
எருவாகி மறைவோம் என்ற நிலையில்
மழைதான் பெய்யுமா விளைவு வருமா
மாசடையும் இயற்கைத் தாயை
மரணத்தில் தள்ளி விட்டு மனிதன்
மடமைத்தனத்தாலே மடிந்திடலாமா?

போதையின் பாதையிலே நாடுதான் போகையிலே
பொல்லாத அழிவெல்லாம் நாளும் நடந்திடுமே
விடிகாலையில் கிடைக்கின்ற பத்திரிகைகள்
விதம்விதமாய் செய்தி பல செப்பிடுமே
வீதி விபத்தென்றும் வீடு களவென்றும்
பாதி வழியிலே படுகொலை நடந்ததென்றும்
பற்றை மறைவிலே பருவப் பெண் மரணமென்றும்
ஆள்கடத்தல் கப்ப அறிவித்தலென்றும்

அன்றாடம் இவை விட்டால்
செய்தியேதும் இல்லை
அரசியலை எடுத்துக் கொண்டால்
அடிதடிகள் வாக்குவாதம்
ஒரே கட்சிக்குள்ளேயே
ஓராயிரம் கருத்துக்கள்
நல்லாட்சிதான் இங்கு
நடக்கிறது என்பார்கள்
இதுவல்லோ நல்லாட்சி
இவரெல்லோ இரட்சகர்கள்.

# நம்பிக்கை

குவேந்திராசா நவஜீவன்

கண்ணீர் துளிகள் சேர்த்து
ஒரு கடலைச் செய்யாதே அந்த
சோக நீரில் மூழ்கி உன்
வாழ்வைக் கொல்லாதே
இழந்ததை எண்ணி அழுவதனாலே
எதுவும் கிடையாதே
எல்லாம் உந்தன் கையில் தானே
மனமே உடையாதே மனமே உடையாதே மனமே உடையாதே

சாதனை என்ற போதனைக்குள்ளும்
வேதனை இருக்குதப்பா
சட்டம் என்பது சாஸ்திரம் என்று
நீதி சிரிக்குதப்பா
அகிலம் என்ற ஆழ்கடல்
முத்தையே விதைக்குப்பா
ஆசை என்ற ஆன்மீகம்
மனிதரையே வதைக்குதப்பா
தோல்வி வாழ்வை சபதமொழியாய் எழுதிக்கொள்ளுங்கள்
வெற்றி வாழ்வை வியர்வைத் துளியாய் அர்த்தம் சொல்லுங்கள்
(கண்ணீர்)

முடியாதென்று இருக்கும் வாழ்க்கை
விடியா வாழ்க்கையப்பா
முயன்று முயன்று வென்றது தானே
உலக வேட்கையப்பா
கடினம் என்று ஒதுக்கிக் கொண்டால்
கவலை தானே நீளுமப்பா
காலம் மீது காதல் கொள்ளும்
இன்பம் என்றும் வாழுமப்பா
தோல்வி வாழ்வை சபதமொழியாய் எழுதிக்கொள்ளுங்கள்
வெற்றி வாழ்வை வியர்வைத் துளியாய் அர்த்தம் சொல்லுங்கள்
(கண்ணீர்)

# இயற்கை மானம் காப்போம்

ஆக்கம் :- பிரபாகரன் வேதிகா
யாழ். பல்கலைக்கழகம் - 1ம் வருடம்

*உயிரினங்கள் அனைத்திற்கும் அன்னை*
*உவந்துமே அளித்திட்டாள் தன்னை*
*உலகங்கள் எல்லாம் எமக்காய்*
*உவந்தளித்த தெய்வம் இயற்கை*

*இயற்கையது அரியணை ஆண்டகாலம்*
*இன்பமது மட்டுமே எமக்களித்தாள்*
*செயற்கையை அரியணை ஏற்றினோம்*
*சீற்றமது கொண்டாள் இயற்கை!*

*அலைவந்து கரைதனில் மோதிடும்*
*மலைவளர்ந்து மேகமதை முட்டும்*
*கலைகள் உள்ளத்தைத் தட்டும்*
*கதிரவனோ கண்களை எட்டும்*

*அற்புத ஆற்றல் இயற்கைபோதும்*
*நட்புறவொடு அனைவரும் வாழ்ந்திட!*
*யுத்தங்கள் பெருகின உலகில்*
*மொத்தமாய் அழித்தனர் இயற்கையை!*

*கொத்துக் கொத்தாய் செயற்கையால்*
*சத்தமின்றிக் கொன்றனர் இயற்கையை!*
*சுனாமியாய் சூறாவளியாய் வரட்சியாய்*
*வந்தாள் உருக்குலைந்த இயற்கையன்னை!*

*அன்பெனும் அரிய பண்பு இயற்கை*
*அதையறிந்திடாத மனிதர் நயற்கை*
*அழகுற அமைந்தபூமி இயற்கை*
*அதை கெடுக்கத் தோன்றியது செயற்கை*

*இயற்கையவள் சீற்றமுற்றால் பூமியில்*
*இருக்காது மனித இனம் - காற்றும்*
*நீரும், தீயுமாய் மாறிப் பூமியைத்*
*தீண்டும் முன் தணிப்போம் அவள் சீற்றம்.*

பொறுமையின் சிகரம் புவியன்னை
பொறுத்திட்டாள் பல பிழைகள் - நாம்
ஆதரித்திட மறந்தால் - எம்மை
அழித்திடுவாள் இயற்கை மறவாதீர்

எண்ணத்தை மாற்றிட வேண்டும்
பெருஞ்செல்வம் இயற்கை வேண்டும்
இறைவன் உவந்தளித்த அற்புதத்தை
இம்சிக்காது வாழ்தல் கடமை

பிரகாசிக்கும் சூரியனும் கண்சிமிட்டும் நிலவும்
தலையசைத்திடும் மரங்களும் தழுவிச்செல்லும் தென்றலும்
தன்னிலை மறந்தால் தரணியில் யாருமில்லை
இயற்கையன்னையை நிர்வானம் ஆக்காதீர்
அவமானப்படுவதெல்லாம் எயிர்கள் மறவாதீர்!

# கோடையின் கோலம்

செல்வி. சதீஸ்வரன் டிலக்சி
வ/நெடுங்கேணி மகா வித்தியாலயம்
(அகில இலங்கை தமிழ்தினப்போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை - 2016 - பிரிவு - 04)

காற்றோடு கானம் பாடும்
நெல் வயல்கள் - அதில்
மெட்டுப்போட்டு தாளமிடும்
நீரோடைகள்
ஆற்றோடு அலைந்தாடும்
மீனினங்கள் - அதை
உண்பதற்காய் காத்திருக்கும்
கொக்கினங்கள்.

மழை என்னும் வானவனால்
மலர்ந்து விட்ட தரை நிலமும்
வேரூன்றி செழித்து நின்ற
கரும்பச்சை மரங்களும்
வளையாமல் நின்றாடும்
பனைவடலி தோப்பம்
கோடை எனும் காலத்தால்
கோலம் மாறிப் போயினவோ

களை பிடுங்கி ஏர் உழுதே
மகிழ்ந்திட்ட உழவர்கள்
களிப்புடன் நாற்று நட்டே
வளர்ந்திட்ட நாற்றுகளும்
மழை வருமா என எண்ணி
மரித்துவிட்ட வயல் நிலமும்
எவர் கண் பட்டதனால்
எரிந்து போயினவோ.

மழையின் மைந்தனாக
மடித வழ்ந்த இந் நிலம்
கோடை எனும் காலத்தால்
வறுமை எனும் கோலம் வந்து
வாடை காட்டி திரிகிறதே
வருந்தி மனம் வாடிறதே
கதிரவனின் கண்களுக்கு
எம் கதறல் கேட்கலையோ!

உண்ண உணவின்றி
கண்களில் நீர் வழிய
கரை காணா படகு போல
ஆனதுவே நம் வாழ்க்கை
நித்தம் நித்தமே - நாம்
சித்தம் கலங்கியே
வற்றிப் போகின்றது கண்ணீர்
வாடிப்போகிறது மனமும்

வெயில் கொளுத்து தென
வெறும் கண்ணாடி ஆடை போல்
ஆடம்பரமாய் அணிந்து கொண்டே
வீதியிலே விரைகையில்
கண்ணனான எம் கலாச்சார
நோக்குப் பார்வையிலே
கோடைக் கொடுமையால்
கிறுக்கல் விழுகிறதே.

பனை ஓலைக் குடிசைகளும்
அதில் பரந்திருந்த ஓட்டைகளும்
கதிரவனின் வேலெறிகள்
விழுந்திடவே வழி செய்யும்
அதில் ஏழையவன்
நாளை பற்றி சிந்தித்தே
அன்றுப் பொழுதைக்
கழித்திடுவான்

பசுமையான தோப்புக்களாய்
பரந்திருந்த மரங்களில்
காய்த்திருந்த காய்கள்
வெப்பம் எனும் அலையால்
வெம்பியே பழுத்திட்டு
வேண்டாத நோய் தனை
வேதனையிடத் தந்திட்டு
வேடிக்கை பார்க்கிறதே.

கோடைக் காயங்களால்
பள்ளிப்பருவத்திலே
துள்ளித்திரியும் வேளையிலே
வீட்டுக்குள் முடங்கி
கல்விக் கண்களை - சிறார்கள்
கச்சிதமாய் மூடிவிட்டே
பள்ளிப் படிப்புக்கு - ஒரு
முற்றுப்பள்ளி வைக்கின்றனரே.

எப்போது விடியுமென
எதிர் பார்த்து காத்திருந்த
எம் ஜனங்கள் - இப்போ
எப்போது இருளுமென
பகல் பொழுதை பரபரப்பாய்
கழித்திட்டே - நிலவன்பில்
காய்கிறனர் - இது
காலம் செய்த கேடுதானோ.

கதிரொளி பரப்பிடும்
காலக் கதிரவன்
என்முன்னே வந்து நின்றால்
கேள்வி ஒன்று கேட்டிடுவேன் - நாம்
என்ன பாவம் செய்தோமேன்று
மார்கழி மழையினால்
நனைந்திருந்த எம் மனதை
கோடைக் கொடுமை வாட்டி
விடட்டே.

கோடைக் காயங்களை
ஆற்றிடவே - ஒரு
கோடித் தென்றல் வராதா - இம்
மண்ணில் மலர்கள்
மலர்ந்திடவே - ஒரு
மழையும் பெய்து
நனைத்திடாதா.

வெப்ப வேதனை கோடியே
இதனால் கசப்புறும் வாழ்வை
தேடியே - பல
உயிர்கள் நகரும் நாடியே
வாழ்வின் அர்த்தத்தைப் புரிந்தே
வாழும் மனிதர் நாம்
வெப்பம் இயற்கையின் சீற்றமென
எண்ணியே துணிந்து
வாழ்ந்திடுவோம்
கோடைக் கொடுமைக்கு
முடிவொன்று கிடையாதா
விடிவொன்று வராதா - நம்
காலம் மாறும்
வசந்தம் வரும் வரை - வாழ்வை
வளமாக்கி வாழ்ந்திடுவோம்.

மருதமுகிழ்

# தடம்புரளும் இளைஞர்கள்

(தமிழ்த் தினப் போட்டிக்காக எழுதப்பட்ட கவிதை வலயமட்டத்தில்
முதலிடம் பெற்றது - 2017)

ம.துர்க்கா
கலைப்பிரிவு, மு/வித்தியானந்தா கல்லூரி

தடம்புரளும் இளைஞர்கள்
புதுவைகறை உமக்காய் காத்துக்கிடக்கிறது
புள்ளி இட்டு கோலம் போடு
புத்துயிர் பெற்ற வாழ்வுக்காய்

இளைஞர்கள் ஒன்றிணைவோம்
புதுப்பொலிவோடு புறப்பட்டு
புதுயுகம் படைப்புபோம்
புதுக்கவிதைகள் மூலம்

ஓ! இளைஞனே - என்
கதறல் கேட்கவில்லையா? - உன்
காதோரங்களில்
கேட்பின் ஏன் தயங்குகின்றாய்
வாழ்வின் வடிவத்தை வரைவதற்கு

இனிமையான இந்த மானிலத்தில்
இதமாக வாழும் இந்த காலங்களில்
இனிமைகள் அன்றி இன்னல்கள்
அநுபவிக்க - நீ
இணங்கிக் கொள்வது ஏனோ!

இளைஞர்களே!
ஓடுகின்ற கால்கள்
ஓய்வெடுக்க முன்னர் - நீர்
எடுத்துக் கொண்ட பயணம்
முடிந்திருக்க வேண்டும் - நீரோ
தடம்புரண்டு செல்வதும் ஏனோ!

தடம்புரளும் இளைஞர்களே
தடம்பதிக்க வேண்டுமெனில்
தலைநிமிர்ந்து பாருங்கள்
தடம் பதித் தலைவர்களில்
தலை அசைக்கும் வாவென்று

இளைஞர்களே
தடம் பதிக்க வழி இருக்க
தகாத வழியில்
தடம் புரண்டு செல்வதேனோ
வாலிபத்தின் வடிவம் உன்னை
வருடி இளுக்கின்றதா.
வருந்தும் செயல்புரிய
ஓ! இளைஞர்களே
மது என்னும் அரக்கியின்
சித்தின்ப லீலைக்குள் - நீ
சித்தமற்று செல்வதேனோ!
சிகரங்கள் அனைத்தையும்
சிரைச்சேதம் செய்வதேனோ
தடம்புரளும் இளைஞர்களே
தடம் பதிக்க நினைக்காமல்
தனம் கொண்ட மங்கையர் - பின்
தடுமாறிப் போவதேனோ!

ஆடாத ஆட்டமெல்லாம்
ஆடப் போவது ஏனடா
அழகான வாழ்வுதனை
அழிப்பதும் ஏனடா
கூடாத தீய பெயர்
தேடுவதும் ஏனடா

தொலைபேசி என்னும்
தொ(ல்)லை பேசிக்குள் - உன்
தொகையான வாழ்வுதனை
தொலைப்பதும் ஏனடா
மணம் வீசும் தமிழ் மொழியை
மறந்து விட்டு தகாத மொழிகள்
பல பேசி
மரித்துப் போகின்றாய்
மறுவாழ்வற்று

இளங்கன்றன்ன
பயமறியா இளைஞர்களே

மருதமுகிழ்

பயங்கர வேகத்தில்
மோட்டார் வண்டிகளை
மோசமாக முறுக்கிச் செல்வதேனோ
முந்திச் செல்வதில் - உமக்கு
இன்பம் உண்டென்றால்
முயற்சி செய்துபார்
தடம்பதிக்க
அதன் இன்பம் பல கோடி

இளைஞர்களே!
சாதனைகள் பல படைத்து
சரித்திரத்தில் - நீர்
சாதிக்க வேண்டிய தருணத்தில்
சாதிக்க தவறி சந்திகளில் திரிந்து
சந்திக் காற்றுவாங்கி சண்டைகள் புரிந்து
சந்ததிக்கு இழுக்கேற்கும்
சத்திர சிகிச்சைகள் தேவையா?

தடம்புரளும் இளைஞர்களே! - உம்
வாழ்வில் தடங்கள் பல பதிக்க
ஒரு சில திருப்பங்கள் போதும் - எதுவென
தேர்ந்தெடு தடம்பதிப்பாய் நித்திலத்தில்

வாலிபத்தின் வாயில்களை
வடிவமைக்க முயற்சி செய்
வகையான முயற்சிகள்
வகைவகையாய் செய்திடு
வசந்தமான எதிர்காலம்
வந்திடும் உனைத்தேடி

விஞ்ஞானத்தின் விந்தைகளை
விருப்போடு ஏற்று
வித்தைகள் பல விநோதமாக செய்திடு
விருப்போடு உனை ஏற்கும்
விஞ்ஞான உலகம்
இளைஞர்களே! - உம்

தடம்புரண்ட வாழ்நாளை
சற்று திரும்பிப்பார்
வீணாக கழித்து போன
பொன்னான காலங்கள்
கதறிய தருணத்தை

தடம்புரண்ட இளைஞர்களே
தற்துணிவு பெற்றிடுங்கள்
தடம் பதிக்கும் எண்ணத்தில்
வள்ளுவன் வாக்கை
மனதிலே நிறுத்தி எண்ணம், செயல், சிந்தனை
ஒருமித்து செயற்பாடு - ஒரு நாள்
தடம்பதியும் உன் வாழ்நாள்
சரித்திரத்தில்
இன்றைய இளைஞர்களே!
நாளைய நாட்டின் தலைவர்களென்று
சற்று சிந்தையில் நிறுத்துங்கள்
இளைய இளைஞர்களே!

தடம்புரளும் இளைஞர்களை
தடம் பதிக்க வைக்கும் வரை
நங்கையவள் பேனா முனைகள்
நகர்ந்த வண்ணம் இருக்கும்
புதுக்கவிகள் எழுந்த வண்ணம் இருக்கும்
புதுயுகம் படைத்தாவது
இளைஞர்களை தடம் பதிக்க செய்திடுவேன்.

தாய் மடியில் பாலுண்ண முன்பே
கருவறையில் கற்றுணர்ந்த
தாய் மொழியாம் தமிழ் மொழியில்
கவி வரைந்து
இளைஞர்களை ஒன்றிணைத்து
புத்துயிர் அளித்து
புதுப் பொலிவூட்டி
காவியம் படைத்திடுவேன்
கண்டிப்பாக ஒரு நாள்

என் இறுதி மூச்சு உள்ளவரை
கவிவரிகள் தொடுத்திடுவேன்
என் கரங்கள் செயலிழக்கும் வரை
எழுதிடுவேன் கவிச்சரங்கள்
என் நா ஈரம் வறளும் வரை
செப்பிடுவென் செந்தமிழை
தினம் தினம் முயற்சிப்பேன்
திண்ணியமாய் முழு மூச்சாக
தடம் புரளும் இளைஞர்கள்
தடம் பதிப்பதற்காய்

# "யாழிசை நூல் விமர்சனம்"

செல்லத்துரை இலட்சுமிகாந்தன்
கனகராயன்குளம் வடக்கு, கனகராயன்குளம்

நூல் : யாழிசை
நூலின் வகை : நாவல்
ஆசிரியர் : சிவ . ஆருரன்
பதிப்பு : 2015 மார்ச்
ஆச்சிட்டோர் : மதிகலர்ஸ், முத்திரைச் சந்தி.

நீண்ட நாட்களின் பின் ஓர் உயிரோட்டமான கதையை வாசித்த திருப்தி யாழிசை மூலம் கிடைத்தது. யாழிசை என்ற நாவல் மூலம் ஒரு சமூகத்தின், குறிப்பாக ஆசிரிய குழாமை பெருமைப்படுத்த முனைந்துள்ள ஆசிரியர் திரு. சி.ஆருரனுக்கு முதற்கண் நன்றிகளையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் வாழும் சமூகம் முற்று முழுதாக ஆசிரியர்களையே நம்பியேயுள்ளது. ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளை படிப்பில் சிறந்தவனாக வளரவேண்டுமென்று துடிப்புடன் நல்ல திறமையான ஆசிரியர்களைச் தேடிச்சென்று தனிப்பட்ட வகுப்புக்கள் வைத்துப் படிப்பிக்கின்றனர். அந்த தெரிவு செய்த ஆசானிடம் "சேர் என்ர பிள்ளை நல்லா படிச்சு ஓர் அரசாங்க உத்தியோகம் பார்க்க வேணும்" அரசாங்க வேலை என்றால் கடைசி ஓர் ஆசிரியராக ஆவது வந்தால் சரி. இதுவே எமது ஆதங்கம் நல்ல ஆசிரியராக தேடி கடைசி ஒரு ஆசிரியனாகவாவது என்பது எமது சமூகம் ஆசிரியத்தொழில் எமது நாட்டில் வாய்மைத் தொழிலாக கருதப்படவில்லை. படிக்கும் மட்டும் ஆசிரியர் தேவை. படித்த பின் வாய்மைத்தொழில் தேவை. இந்த நிலையில் ஓர் ஆசிரிய குடும்பத்தை எடுத்து அக்குடும்ப உறுப்பினர்கள் மூலம் நல்லவர்களையும் நல்ல எண்ணங்களையும் வெளிக்காட்டியுள்ளார் அசிரியர்.

சுதந்திரம் கேட்டு ஆயுதமேந்தி தோற்றுப்போன இனம் என்பதற்கு அப்பால் எத்தனையோ உண்மைகள் உணர்வுகள் உணர்ச்சிகளை வெளியுலகிற்கு உணர்த்திய ஒரு இனமாக இருக்கும் இத்தமிழ்ச் சமூகம் எவ்வாறான நிலையில் இருக்கிறது என்பதனை புடம்போட்டுக் காட்ட முற்பட்டுள்ளார் ஆசிரியர். இக்கதையை வாசிக்கும் போது டாக்டர் மு. வராராசனார் அவர்களது கதையை வாசிக்கும் எண்ணம் வந்தது. அந்தளவு தமிழ்ச் சொற்களை அழகாகக் பயன்படுத்தியுள்ளார்.

யாழிசை என்ற நாவல் மூலம் சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டும் கண்ணாடி இலக்கியங்கள் என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளார். அவர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளது போல் இம் மண்ணில் ஒரு படைப்பிலக்கியத்தை உருவாக்குவதற்கு நாம் கற்பனை பாத்திரங்களை நடமாடவிட வேண்டிய அவசியமில்லை. இக் கதையில் உலாவும் கதாமாந்தர்கள் கற்பனையில் கருவானவர் அல்லர். நம்மோடு நம் மண் மீது உலாவித்திரிபவர்கள் என்று கூறியுள்ள இடத்திலிருந்து இந்த கதையின் கதாபாத்திரங்களின் உயிரோட்டத்தின் தன்மையை புரிந்து கொள்ளக்கூடியதாக உள்ளது. அத்தோடு எமது சமூகப் பழக்க வழக்கங்களையும் மிக இலகுவாக இனங்காட்டியுள்ளார் ஆசிரியர்.

அதாவது கிளிநொச்சியில் ஒரு கிராமத்தையும் யாழ்ப்பாணத்தின் ஒரு பகுதியையும் கதைகளமாகக்காட்டியுள்ள ஆசிரியர் இருவேறு பிரதேச பழக்க வழக்கங்களையும் வெளிக் காட்டியுள்ளார். கிராமத்திற்கே உரித்தான சில மரபுகளை கிளிநொச்சி கிராமம் மூலம் தொட்டுக் காட்டியுள்ளார். அத்தோடு அக்கிராம மக்களின் வெகுளித்தனமான மனநிலைகள் விட்டுக்கொடுப்பு அர்ப்பணிப்பு போன்ற உயர்ந்த கொள்கைகளை பல்வேறு பாத்திரங்கள் மூலம் காட்டியுள்ளார். நாதன் என்ற மாதவியின் அத்தானை கதையின் எழுபது வீதமான பக்கங்களில் ஓர் பொறுப்பற்ற போக்கிரி போல காட்டி இறுதிப்பகுதியில் அக்கிராமத்தில் தனது மைத்துனியின் பெயர் காப்பாற்றப்பட வேண்டுமெனில் தானொரு போக்கிரி என்ற பட்டம் சுமக்க வேண்டும் என்பதைச் சொல்லாமல் சொல்கின்றார். இது நாதனின் உணர்வல்ல. கிராமத்தவரின் உள்ளத்து வெளிப்பாடு.

அதேவேளை மாதவி மாறனிடம் பணம் வாங்கிய அசசிறு சம்பவம் கிராமத்தில் எவ்வளவு பெரிய கதையாக மாறி பரவிவிடுகிறது. ஆனால் திருமணப்பேச்சு முற்றாகிப் போன யமுனாவின் (மாறனின் மாமன் மகள்) திருமணம் தடைப்பட்டது. குறித்து அவ்வூரில் ஒரு வெளிப்பாட்டையும் காணவில்லை. இங்கு தான் ஆசிரியர் கிராமத்தையும் நகரத்தையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். கிராமம் என்பது மனித உறவுகள் கூடியுள்ள கூட்டம். இங்கு சிறு சம்பவமும் முழுப்பேருக்கும் தெரிய வரும் ஒரு வீட்டில் மங்கள அல்லது அமங்கல நிகழ்வென்றால் அது ஊருக்கே உரித்தானதாகக் கருதப்படும். ஆனால்நகரம் அப்படியல்ல. அது மனித உடல்கள் உலாவும் இடம். அங்கு பரஸ்பர சிரிப்புக்கள் கூட போலியாகதாக இருக்கும். அடுத்த வீட்டின் மரண நிகழ்வு கூட செய்திகளினூடே பெறவேண்டி வரும். இதனை அழகாக காட்டியுள்ளார் ஆசிரியர்.

ஆசிரியரால் உருவாக்கப் பட்ட அனைத்து கதா பாத்திரங்களும் மனதில் அசைபோடுவதோடு நிலையாக வாழ்கின்றார். ஒவ்வொரு பாத்திரத்தின் ஊடாக ஒவ்வொரு செய்தி சொல்லி வந்துள்ளார். ஆனால் யாழிசை என்ற பெயரை கதையில் ஒரே ஒரு தடவை உச்சரித்து யாழிசையின் நாதத்தை உணர்த்தியுள்ளார். இன்று யாழ் இசைக்கருவியோ அதன் நாதமோ பார்க்க கேட்க இயலாதளவு வழக்கிழங்தாலும் யாழின் பெருமை பெறுமதி என்றும் போற்றப்பட, போற்றப் பட்டுக் கொண்டுள்ளது. அதேபோல் யாழிசையென்றவளின் வாழ்க்கை முடிந்து போனாலும் இன்றும் யாழிசைகள் உள்ளார்கள் என்பதை உணர்த்தியுள்ளார்.

தன்னலமற்ற தியாகத்தை போற்றி வெளிக்காட்ட இதைவிட பெரிய கருவி தேவையில்லை என்பது போல ஆசிரியர் யாழிசையை கையாண்டு யாழிசையை மட்டுமல்ல ஆசிரியர் திரு.சிவ.ஆருரனும் நிலைத்து வாழ்பவராகிவிட்டார். பாரதக் கதையில் ஒருமுறை துரோணர் தருமனை அழைத்து பொழுது சாயுமுன் ஒரு கெட்டவனை அழைத்துவா என்றாராம். அதேபோல துரியோதனனை அழைத்து ஒரு நல்லவனை அழைத்துவா என்று அனுப்பிவிட்டார். மாலைப் பொழுது இருவரும் வந்தனர் வெறுங் கைகளோடு. இதிலிருந்து என்ன தெரிகின்றது. நல்லவனுக்கு எல்லாமே நன்றாகத்தான் தெரியும். அதேபோல ஆசிரியர் படைப் பாளிகள் அனைவரும் நல்லவராக இருப்பதை காணும் போது சிவ.ஆருரன் எவ்வளவு நல்லவர் எனக் காட்டுகின்றது. அந்த வகையில் நிலையான ஒரு கதையை தந்து ஆருரன் நிலைத்து விட்டார் பாராட்டுக்கள்.

யாழிசை என்ற நல்ல நாவல் மூலம் தனது கருத்துக்களை அல்லது

எண்ணங்களை வெளிக்காட்டியுள்ள ஆசிரியர் அவ்வவ்போது சிற்சில தவறுகளை அல்லது குழப்பங்களை சந்தித்துள்ளார். என்பது கதையினூடாகத் தெரிகின்றது.

குறிப்பாக கதையின் ஆரம்பப் பகுதியில் மூத்த ஆசிரியர் (சேவையில் நீண்ட காலம்) என்பதால் குறைந்த பாடவேளை வழங்கப்பட்டிருந்ததாக சில தவறுகள் நடைபெறலாம். ஆனால் அதை சொல்பவர்கள் சொன்னால் சுற்றுநிரூபம் ஆகிவிடும். இங்கு ஆரூரன் ஆசிரிய குடும்பம் மட்டுமன்றி முற்றுமுழுதாக ஆசிரிய குளத்திலிருந்து கதையெழுதியுள்ளார். இந்நிலையில் "மாறன் பணியில் மூத்தவராக இருந்தமையால் குறைவான பாட வேளைகளே வழங்கப்பட்டிருந்தது." என்ற வாக்கியம் ஏற்புடையதாய் இல்லை.

இது போல "நண்டு சாப்பிட்ட இடமும் நாலு பெண்டுகள் கூடின இடமும் குப்பை" என்று செல்வராசா வாயிலாக ஒரு கருத்தைக் கூறியுள்ளார். இது பழமொழியாகவோ அல்லது முதுமொழியாகவோ இருக்கலாம். ஆனால் யாழிசை என்ற புனிதப்பெயர் கொண்டு ஒரு பெண்ணினத்தைக் கேவலப்படுத்த முனைந்துள்ளார் எனலாம். ஆசிரியர் கற்பகம் என்ற பாத்திரத்தை பயன்படுத்தி "அவ கதை காவுபவர்" என்பதை நாசூக்காக சொன்ன ஆசிரியர் ஒட்டுமொத்த பெண்களையும் இவ்வாறு கூறியிருக்க கூடாது.

மாறனை பீஷ்மருக்கு மேலானவனாக காட்ட முற்பட்டுள்ள ஆசிரியர் வயோதிப தனது தாய் தந்தையை ஏமாற்றியுள்ள மாறனை எவ்வாறு கூறுவது உறவுகளில் உன்னதமானது புனிதமானது. எல்லாவற்றுக்கும் மேலானது என்றெல்லாம் கூறும் தாய் தந்தையை மாறன் ஏமாற்றியுள்ளான். மாதவியின் மானத்தைக் காத்தவன், பிரமச்சாரிய விரத்தை கடைப்பிடிப்பவன். இந்த பெற்றோரின் மனநிலையையும் உணர்ந்திருக்க வேண்டு மல்லவா?

யசோதாவிற்கு வாக்குறுதியை வழங்கிய பின் வாங்கியவன் சந்தர்ப்பம் வரட்டும் சொல்வம் என்று இருப்பது விரைவான கால ஓட்டத்திற்கு சரிவருமா? எல்லாவற்றையும் யாதர்த்தமாக நோக்கிய ஆசிரியர் யசோதா மாறன் மேல் கொண்ட அதீத காதலால் தன்னை மாய்த்துக் கொண்டிருந்தால்?

இவ்வாறான சிற்சில குழப்பங்கள் வந்திருந்தாலும் ஒரு நல்ல கதையை உயிரோட்டமான கதையை எங்கள் கதையை எங்களிற்கு தந்த ஆசிரியர் சிவ.ஆரூரனுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து வாசிக்காத ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய ஒரு நல்ல நாவல் "யாழிசை" என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

# தமிழர் தம் வாழ்வோடு இணைந்த இலக்கியம் மற்றும் கலை

(2017 கலை இலக்கியப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை)

*செல்வி சங்கவி மதிவதனன்*
வ/விக்னேஸ்வரா ம.வி, சின்னப்பூவரசன்குளம்

ஒரு முழுமையான ஒழுக்கமான சிறந்த மனிதர்களைக் கொண்ட தேசத்தை ஒருங்கிணைப்பது இலக்கியம் மற்றும் கலையாகும். இலக்கியம் மற்றும் கலை எமக்கு பல புதிய விடயங்களை பற்றி அறிய உதவுகிறது. இவற்றின் மூலம் சமுதாயம் வளர்ச்சியடைகின்றது. ஒரு முழுமையான தேசம் உருவாகுவதற்கு இலக்கியம் மற்றும் கலை பங்களிப்பு செய்கின்றது. கலைகள் வளர்ச்சி அடைந்து வருவது நாம் அறிந்ததே. பண்டைய காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு இலக்கியம் மற்றும் கலை உதவுகிறது. இலக்கியம் மற்றும் கலைகைள கற்பதன் மூலம் வாழ்க்கையை மேன்மைடையச் செய்யலாம்.

முழுமையான தேசத்தை ஒருங் கிணைக்கும் இலக்கியம் மற்றும் கலையில் இலக்கியத்தை எடுத்து நோக்குவோம். கவி நயம் சிந்தும் கவிப்பேரரசுகளின் வீரிய மனத்தில் உதித்து அவர்கள் மறந்த போதும் மனித மனத்துள் ததும்பும் உயிரோட்டம் மிக்க படைப்பு இலக்கியமாகும். இருபதாம் நூற்றாண்டில் இலக்கியம் எவ்வளவு வளர்ச்சி ளயடைந்துள்ளது. இருபதாம் நூற்றாண்டு இலக்கியம் என்றதும், இயல்பாகவே நவீன அம்சங்களுடான அதன் தொடர்பு நினைவு வரும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியிலிருந்து சுவடுகளைப் பதிக்கத் தொடங்கிய நவீனத்துவத்தின் முழு அம்சங்களையும் இருபதாம் நூற்றாண்டிலேயே காண முடிகின்றது. அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டு இலககியம் முன்னர் எப்போதும் இல்லாத வகையில் நவீனத்துவத்தின் பண்புகளை சுமந்து கொண்டு தனி வழியிற் செல்ல ஆரம்பித்துள்ளது. இந் நூற்றாண்டின் இலக்கிய வகைகள் அனைத்திலும் நவீனத் துவத்தின் தாக்கத்தையே இனங்காண முடிகின்றது.

ஒரு சில விதி விலக்குகள் இருப்பினும், பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் தமிழ் இலக்கியத்திற் சமயச் சார்பே முக்கியத்துவம் பெற்று விளங்கியது. ஆனால், ஆங்கிலேயர் ஏற்படுத்திய புதிய பொருளாதார முறைமையினாலும் பழைய நிலப்பிரபுத்துவச் சமுதாய அமைப்பு நிலை குலையத் தொடங்கிய மையாலும் ஆங்கிலக் கல்வியின் விருத்தியினாலும் கல்வி ஜன நாயகமயப்படத் தொடங்கிய மையாலும் நவீனத்துவத்தின் அம்சங்கள் சகல துறைகளிலும் அகலக் கால் பரப்பி வந்தமையினாலும் சமூகம் பற்றிய சிந்தனை வளரத் தொடங்கியது. அதனால் இருபதாம் நூற்றாண்டு இலக்கியத்தில் சமூகச் சார்பே முக்கியத்துவம் பெறத் தொடங்கிற்று. இலங்கைத் தமிழ் இலக்கியத்திலும் இதே நிலையினைக் காண முடிகின்றது.

இருபதாம் நூற்றாண்டின் இலங்கைத் தமிழ் இலக்கியத்திற் காணத்தகும் குறிப்பிடத்தக்க ஓர், அம்சம், தேசியம் பற்றிய விழிப்புணர்வாகும். கதிரை மலைப் பள்ளுக் காலத்தில் "மகாவலிகங்கை நாடெங்கள் நாடே" என்றும் ஒலிக்கத் தொடங்கிய இலங்கைத் தேசியம் தொடர்பான குரல்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் ஆறுமுக நாவலரின் "நல்லறிவுச்சுடர் கொளுத்தல்" வாயிலாக உரத்து ஒலிக்கத் தொடங்கின. அதன்

தர்க்கரீதியான வளர்ச்சியை இருபதாம் நூற்றாண்டின் இலக்கியத்திற் காணலாம். தேசிய ரீதியான இலக்கியச் சிந்தனை, இலங்கைத்தமிழ் இலக்கியத்தைத் தனியாக இனங்காணத் தொடங்கிற்று.

இருபதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1960 களில் முக்கியத்துவம் பெற்ற கால கட்டமாகும். அறுபதுகளிலிருந்து சமுதாய உணர்வு மிக்க படைப்புகள் இலங்கையிற் பெருகத் தொடங்குவதைக் காணலாம். அதே வேளை, புனை கதைகளின் இலக்கியத்தரம் பற்றிப் பண்டிதப் பரம்பரையினருக்கும், முற்போக்கு இலக்கிய வாதிகளுக்குமிடையே சர்ச்சைகளும் ஏற்பட்டன. இத்தகைய சர்ச்சைகள், புனைகதைகள் தொடர்பாக மக்கள் மத்தியிற் புதிய விழிப்புணர்வு ஏற்பட உதவியாக அமைந்தன. மறுபுறத்தில் ஐம்பதுகளில் மேனாட்டு மயப் பட்டிருந்த இலங்கைப் பல்கலைக் கழகங்கள் அறுபதிகளிலிருந்து சுதேசிய விழிப்புணர்வு கொள்ளத் தொடங்கின. அதன் விளைவாக பல்கலைக் கழகங்களிலிருந்து புதிய இலக்கிய வாதிகள் பரம்பரையொன்று புறப்படத் தொடங்கியது. இன்னொரு புறத்தில், அக்கால கட்டத்திலிருந்து, மலைய கமும் இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியின் முக்கிய களங்களுள் ஒன்றாக அமையத் தொடங்கியது. மலையகத்தில் அதற்கு முன்பிருந்தே இலக்கியப் பங்களிப்புகள், ஆரம்பித்து விட்ட தெனினும் அக்கால கட்டத்திலிருந்து பிரக்ஞை பூர்வமான இலக்கிய வளர்ச்சி ஏற்படுவதை காணலாம்.

1970களில் தமிழ் இலக்கியத்தின் களங்கள் மேலும் பெருக்கமடைவதைக் காணலாம். யாழ்ப்பாணம் முதல் திக்கு வல்லை வரை இத்தகைய இலக்கியக் களங்கள் விரிவடையத் தொடங்கின. யாழ்ப்பாணத் தமிழ் மன்னர் காலத்தின் பின் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்கள் மட்டுமன்றி இலங்கையின் தமிழ் இலக்கியப் போக்கானது அடுத்த காலகட்டங்களில் அவை மேலும் பெருகத் தொடங்கின. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிற் புதிய புதிய பிரதேசங்கள் இலக்கியக் களங்களால் வளர்ச்சி நிலையைக் காணக்கூடியதாக இருந்தது. அதேவேளை எழுபதுகளிலும், எண்பதுகளிலும் இலக்கியத்தில் அழகியல் தொடர்பாக இடம்பெற்ற சர்ச்சைகள் இலங்கையின் இலக்கிய வளர்ச்சியிற் புதிய உந்து சக்தியாக அமைந்தது எனலாம்.

இருபதாம் நூற்றாண்டின் இறுதி இரு தசாப்தங்களிலும் இலங்கைத் தமிழ் இலக்கியம் புதிய இரு பரிமாணத்தைப் பெறத் தொடங்குவதைக் காணலாம். அடக்கு முறைகளுக் கெதிரான விடுதலையுணர்வும், பெண்ணிலை வாதமும் இக்கால கட்டத்தில் முதன்மை பெறும் அம்சங்களாக அமைகின்றன. இக் கால கட்டத்தில் இலங்கைத் தமிழ் இலக்கியம் புதிய தேடல் முயற்சிகளை ஆரம்பித்துள்ளது. அதே வேளை, எண்பதுகளில் இலங்கைத் தமிழ் இலக்கியத்தில் இடம்பெறத் தொடங்கு வதைக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டிற் குறிப்பிடத் தக்க பிறிதோர் அம்சம் இலங்கைத் தமிழ் இலக்கியம் தமிழ் நாட்டு இலக்கியப் போக்கினின்றும் மெது மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டு தனியான பாதையில் நடைபோடத் தொடங்கியமையாகும். இதற்கு இலங்கையின் அரசியல் சமூக பொருளாதார பண்பாட்டுக் காரணங்கள் அடிப்படையாக அமைந்தன. இவ்வாறு முழுமையான தேசத்தை ஒருங்கிணைப்பதற்கு இலக்கியம் பெரும் பங்காற்றுகிறது. அத்தோடு கலை என்ற விடயத்தை நோக்கின்.

கலை என்பது கலா என்னும் சொல்லில் இருந்து தோற்றம் பெற்றது. கலா என்பதன் பொருள் சதா வளருதல் என்பதாகும்.

அதாவது மாந்தர் தம் உள்ளத்தில் உதித்த உயர்ந்த எண்ணங்களும் சீரிய சிந்தனைகளும் அழகுக் கலைகளை சதா வளர்த்து வருவதானாலேயே கலை என்னும் பெயர் பெறுகிறது. கலைகளினூடாக வாழ்க்கை விருத்தியடைகிறது. கலைகள் பல வகையில் காணப்படுகிறது. சிற்பக்கலை, கட்டடக்கலை அதற்கு உதாரணங்களாக கூறலாம். இலங்கையிற் கட்டடக்கலை, சிற்பக்கலை என்பன எவ்விதம் வளர்ச்சி பெற்றன வென்பதனைச் சுருக்கமாக ஆராய்வோம். கட்டடக் கலையும் உருவங்கள் அமைக்கும் கலையும் இந்திய நாட்டு மொழிகளில் சிற்பம் என்றும் அத்தொழில்களைச் செய்வோரை "சிற்பி" கள் என்றும் அழைக்கின்றார்கள். அவ்வழக்கைப் பின்பற்றித் தமிழிலும் சிற்பம், சிற்பிகள் என்னும் சொற்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையிற் சிற்ப வளர்ச்சி, இந்திய நாட்டின் சிற்ப வளர்ச்சியோடு தொடர்புடையதாகும். இரு நாடுகளும் ஒரே கலை இலக்கணங்களையே அடிப்படையாகக் கொண்டு கலைகளை வளர்த்து வந்தன. எங்ஙனம், இந்திய சிற்பங்கள் சமயத் தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. அவ்வாறே இலங்கையிலும் சிற்பங்கள் சமயத் தொடர்புடையனவாக அமைந்துள்ளன.

பொருள்கள் கலை நூல்களிற் கூறப்பட்ட அளவுப் பிரமாணத்திற் கிணங்கவே அமைக்கப்பட்டன. பிரமாணந் தவறியன அமங்கலப் பொருள்களாக விலக்கப்பட்டன. விகார வடிவுடைய பொருள்களையும் உடைந்தனவற்றையும் உபயோகிக்க மக்கள் விரும்பியதில்லை. அக் காரணத்தினால் உபயோகத்திலிருந்த பொருள்கள் யாவும் அளவுப் பிரமாணமுடையனவாயும் கலை வனப்புப் பொருந்தியனவாயும் இருந்தன. அக்காலத்து மக்கள் தினசரி வாழ்க்கையில் உபயோகித்த உபகரணங்கள் இக்காலத்து நகரங்களிலுள்ள சித்திர சாலைகளில் அலங்காரப் பொருளாக காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம்.

ஒரு பொருளானது கலை அம்சங்கள் பொருந்த அமைக்கப்பட வேண்டுமாயின் அப்பொருளை அமைக்க முன் வரும் கைவினைஞன் கலை உள்ளம் படைத்தவனாக இருத்தல் வேண்டும். கலைப் பண்பு வெறுங்கைச்சாதுரியத்தாலும் தொழிற் பயிற்சியாலும் மாத்திரம் ஏற்படுவதொன்றன்று. உள்ள மலர்ச்சியின் பயனாய் ஏற்படும் நிலையே கலைப் பண்பாகும். இந்நிலை ஆத்மீகத் தன்மை பொருந்தியது. ஐம்புல இன்ப நிலைக்கு அப்பாற்பட்டது. சடத்துவம் எதுவும் இல்லாதது. சடப்பொருள்கள் மூலம் பிரகாசிக்கும் ஆத்மீக இன்ப நிலையே கலைப்பண்பாகும். இக்காரணம் பற்றியே சிற்பியானவன் தியானயோகத்திலும் ஒழுக்க நெறியிலும் தேர்ச்சி அடைந்தவனாய் இருத்தல் வேண்டும் என கூறப்படுகின்றது.

சிறந்த கல்வியும் நற்குணமும் ஒழுக்கமான வாழ்வும் சாந்தமுடைய மன நிலையும் பொருந்திய ஒருவனே கலைப்பண்பு நிறைந்த ஆற்றலுடையவனாய் விளங்குதல் கூடும் கலையின்பத்தை கைவினைஞன் தான் அனுபவித்தாலன்றி அதனை புறப்பொருள்களில் விளங்கும் விதத்தில் அமைத்தல் இயலாது. இயந்திரங்கள மூலம் கலைப் பொருள்களை அமைதத்தல் இயலாத காரியமென அறிஞர் கூறுவதும் அக்காரணம் பற்றியேயாகும். "இயந்திரம் மனிதனுக்கு அடிமையாக இருக்க வேண்டுமன்றி மனிதன் அடிமையாகக் கூடாது. இயந்திரம் அழகையும் வாழ்க்கையில் இன்பத்தையும் வளர்க்கக்கூடியதன்று. அதை அதற்குரிய இடத்தில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும்" என சேர் ஜோர்ஜ் பேட்வுட் கூறுகிறார்.

கலையால் பயன் படுத்தப்பட்ட உள்ளத்தில் தான் உண்மையாக சமய

அறிவும் கடவுள் பக்தியும் மலரும். சமய அனுபவம் கலை அனுபவம் இரண்டும் ஒரே அனுபவத்திற்கு இடம் பெற்ற இரு பெயர்களாகும் என்கிறார் டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்கள். சமயம் மறுமலர்ச்சி அடைதல் வேண்டு மென்பது நாம் இது காறும் கூறியனவற்றாற் பெறப்படும் உண்மையாகும். இவ்வாறு சமூகத்திற்கு கலை பங்காற்றி வருகின்றது. ஒவ்வொரு கலைப்பொருளிலும் உப யோகத்தன்மை அழகும் ஒன்றுபட்டு விளங்கின. முழுமையான தேசத்தை ஒருங்கினைப் பதற்கு கலை பெரும் பங்காற்றுகின்றது. இலக்கியத் தோடு கலை இணையும் போது முழுமையான தேசத்தை ஒருங்கிணைக்க முடியும் என்பது நிதர்சனம்.

கலைகளை நாங்கள் நோக்குகின்ற பொழுது நாட்டுப்புற நடனங்களிலான கோலாட்டம், கும்மி, வில்லுப்பாட்டு, மயில் ஆட்டம், வள்ளிதிருமணம், அரிச்சந்திர நாடகம், நொண்டி நாடகம், சத்தியவான் சாவித்திரி போன்றன தமிழர்கள் மத்தியில் முக்கியத்துவம் பெற்றவையாகவே காணப் படுகின்றன. இன்றைய கால கட்டத்தில் இக்கலைகள் கிராமப்புறங்களில் கோயில்த் திருவிழாக்களில் மாத்திரமே ஆடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. தமிழர் தம் வாழவோடு இணைந்த கலைகளை அழிய விடாது பாதுகாக்க வேண்டியது இளம் தலைமுறையினரான எங்களது கடமையாகும்.

இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி அதாவது தான் எழுந்த சூழ்நிலையை படம் பிடித்துக் காட்டுவதனால் அதனை காலத்தின் கண்ணாடி என்கின்றோம். உதாரணமாக திருக்குறளை நோக்கின் மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதனையும் எவற்றை தவிர்க்க வேண்டும் என்பதனையும் வையத்தில் வாழ்வாங்கு வாழ தேவையான வழிகளையும் கூறுகின்ற நூலாக இருப்பதனால் தான் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்ட நூலாக இன்று வரை விளங்குகின்றது. அது மட்டுமல்லாது சிலப்பதிகாரத்தை நோக்கின் பல்வேறுபட்ட அறக் கருத்துக்களை தன்னகத்தே கொண்ட நூலாகவும் மக்களுடைய வாழ்க்கைக்கு அடித்தளம் இடுகின்ற நூலாகவும் விளங்குவதால் தான் இன்று வரை சிறப்பிடம் பெற்று விளங்குகின்றது.

மேலும் இராமாயணம், மகாபாரதம், கந்தபுராணம், பெரியபுராணம், மணி மேகலை போன்ற நூல்கள் பல்வேறுபட்ட ஒழுக்கக் கருத்துக்களை கொண்டமைந்த நூல்களாக விளங்குவது குறிப்பிடத்தக்கது. மாற்றான் மனைவியை நோக்குவதால் ஏற்படும் விளைவுகள் பெண்ணாசை, மண்ணாசை, பொன்னாசை என்பவற்றால் அழிந்தவர்களின் வரலாறு தாய் சொல் கேட்காமையினால் அனுபவித்த கொடுமைகள் பதவியாசைகளினால் வந்த விபரீதங்கள் சமய சிந்தனைகள், ஒழுக்கக் கோட்பாடுகள், தூய நட்பின் சிறப்பு, ஒருவனுக்கு ஒருத்தி போன்ற விடயங்களை தமிழர் தம் வாழ்வோடு இணைத்து இவ்விலக்கியங்கள் கூறுவதால் இன்று வரை தம் மங்காப்புகழோடு விளங்குபவையாக உள்ளன. எனவே கலைகளைப் பாதுகாத்து இலக்கித்தோடு ஒன்றினையும் பொழுது தமிழர்களுக்கான முழுமையான தேசத்தை உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

# அறுபத்து நான்கு கலைகளில் நாம் ......

வவுனியம் கலை இளவல்
திருமதி.சுதர்சினி மோகராசா (ஆசிரியை)

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் அம்மை

என்றுகலைத்தாயின் துதிபாடுகின்றோம் இந்த அறுபத்து நான்கு கலைகளையும் அறிந்தவர் எவரும் இல்லை . ஆனால் இந்த அறுபத்து நான்கில் ஒன்றாவது தெரியாதவன் மனிதன் இல்லை இறைவன் தன் படைப்பில் மனிதனாய் ஆறு அறிவுள்ளவனாய் படைக்கப்படுகின்ற மனிதன் உடன் ஒரு கலையும் பிறக்கின்றது. இதை அறியாத மனிதன் கடவுள் எனக்கு என்னதந்தான் என வினாவுவதையே குறிக்கோளாய் கொண்டு காலத்தை ஒட்டுகிறான். இறுதி காலம் முடியும் வேளையிலும் எனக்கு கடவுள் ஒன்றுமே செய்யவில்லை என்று கூறியபடி இறக்கிறான்.

தாயின் கருவில் தோன்றியதும் அங்கே குழந்தை தனது இயல்பான செயற்பாட்டை தொடங்கின்றது. குழந்தையின் (துடிப்பு) அசைவு இருக்கின்றதா என்று வைத்தியர் கேட்க .அம்மாவும் மகிழ்வுடன் ஆம் என்கிறாள். அதன் அர்த்தம் உடல் உறுப்புக்களை குழந்தை அசைக்கின்றது. அப்படி ஆயின் ஆய கலைகள் அறுபத்து நான்கில் ஒன்றான யோக கலையை கருவினிலே குழந்தை செய்கின்றது. என்று தானே அர்த்தம் அவ்வாறு உருவாகும் குழந்தை பிறந்தவுடன் அதற்கு எண்ணைபூசி கால்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. குழந்தை தானே தனது உடலை பிரட்டுதல் பயிற்சி (உடும்பு பிடித்தல்) நசைநார் பயிற்சிகள் (தவழ்தல்) இவ்வாறு அறியாத வயதில் செய்யும் பயிற்சிகள் அனைத்தும் இரண்டு வயதில் முடக்கப்படுகின்றது எந்த ரூபத்தில்?

அங்கே ஓடாதே விழுந்து விடுவாய். அதை செய்யாதே காயம் வரும். இதை மட்டும் படி இது பெற்றோரின் அன்பு கட்டளை யாகிவிடுகிறது. இதை அதிகார கட்டளை என்பதை மறந்து விடுகிறார்கள். அறியாத வயது தொடக்கம் கற்று வரும் கலைகளை முடக்கி இயந்திர வாழ்க்கை என்னும் பயங்கரமான கலைக்குள் கட்டாய திணிப்பு செய்கின்றனர். இதனால் வளர்ந்து வரும் அந்த பிஞ்சு குழந்தையின் எண்ணத்தில் பெரிய இடி விழ அதை தாங்க முடியாத பிள்ளையுள்ளம் நெறிபிறழ்வு எனும் பாதையை நோக்கி பாய்ந்து ஓடுகிறது. இங்கே பிள்ளையின் வாழ்வை சூனிய பாதை ஆக்கியவர் யார்?

அறுபத்து நான்கு கலைகளை முதன்மையான நுண்கலைகள் இலக்கிய அடிப்படைக் கலைகள், உடல், அலங்காரக் கலைகள், அழகு தரும் கலைகள், குடும்பத்திற்கான கலைகள், தேகப் பயிற்சி கலைகள், விளையாட்டுக் கலைகள், பொழுது போக்குக் கலைகள், தொழிற் பயிற்சிக் கலைகள், என்று வகைப்படுத்தியுள்ளனர். இதில் முதன்மைக்கலைகளை நமது முன்னோர்கள் 5 என வகுத்தனர். ஆனால் பிள்ளையை காலங்களில் அவற்றுடன் இன்னும் இரண்டினைச் சேர்த்து ஏழு நுண்கலைகளாகப் பகுத்துக் காட்டியுள்ளனர். இதில் தேகப்பயிற்சிக் கலைகளில் ஒன்றான உடற் பயிற்சிக்கலையை பயில்வதில் எமது பெரும்பாலானவர்கள் ஆர்வம் காட்டுவது இல்லை இதற்கான காரணத்தை ஆராய்ந்தால் அதற்குரிய விளக்கத் தெளிவு

இல்லாமையே காரணம் ஆகும். தமது நேரத்தை வீணாக்குவது மூடத்தன்மை என எண்ணுகிற மனப் போக்கினை கொண்டு வாழ்கின்றனர்.

நுண்கலைகளில் ஒன்றான நாட்டியக் கலையை எடுத்துக் கொண்டால் பொதுவாக அனைவராலும் கூறப்படும் ஒரு வார்த்தை "சும்மா ஆடிக்கொண்டு திரியுதுகள்" என்பதாகும். இது உடலுக்கும் மனதுக்கும் வலு சேர்க்கும் கலையாக கல்வியாக ஏன் ஏற்றுக் கொள்ள இந்த சமுதாயம் மறுக்கின்றது. கற்பவர்களையும் கற்பிப்பவர்களையும் தவறான கண்ணோட்டத்தில் பார்க்கின்றது. இதற்கு காரணம் அவர்களுடைய மனம் வளப்படவில்லை. இந்த கலைத் துறையில் இருப்பவர்கள் மனத்தூய்மை, உடல்தூய்மை உடையவர்கள் இவர்களிடம் நோய் அண்டுவதும் இல்லை. இவர்களை நோய் கண்டால் ஓடிப்போய்விடும் உடல்பயிற்சியானது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்துகிறது. தத்துவஞானி வேதாந்திரி மகர்ஷி அவர்களின் மனவளக்கலையும் யோகாவும் என்னும் கலையிலே முதலில் மனமானது வளப்படுத்தப் படுகின்றது. எமது மனம் எப்பொழுதும் வளமாக இருந்தாலே உடல் நலமாக இருக்கும். மனதில் அழுக்கு அடங்கிக் கிடக்க உடலை வளப்படுத்தி என்னப் பயன் இதனாலேயே எமது சமூகம் பாரிய சீரழிவை நோக்கி செல்கின்றது. பணம் இன்றி படிக்க கூடிய கலைகள் பல உள்ளது. பணத்தைக் காரணம் காட்டி படிக்க முடியாத கலைகளை விடுத்துபணம் இன்றி கற்க கூடிய கலைகளை கற்று மனிதனாக வாழ ஏன் முயற்சிக்கக் கூடாது முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை.

மனிதனின் அறிவு பிரபஞ்சத்தையே தன்னுள் அடக்கிக் கொண்டு வாழத் தகுதியாக இருக்கின்றது. ஆனால் அவன் நீண்ட காலம் உயில் வாழ தேவையானதைச் செய்ய மறுக்கின்றான் பின்னர் எப்படி அந்த அழிவில் இருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளப் போகிறான்.

அறுபத்து நான்கு கலைகளில் ஒரு பிரிவான விளையாட்டுக் கலைப்பற்றி பார்த்தால் அது போகும் போக்கானது ஒரு வாணிபமாகவும் சில நாடுகளில் சூதாட்டமாகவும் பெருகுகின்றது. விளையாட்டுத் துறையினால் ஏற்படும் நன்மைகளை மனித இனம் உணரமறுக்கின்றது. அது ஒரு ஆக்க துறை ஆனால் மனிதர்களின் நடத்தையால் அது அழிவுத் துறையாக மாறுகின்றது. இதை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இவ்வாறு கவியில் கூறியுள்ளார்.

***"தேவையற்ற பொருட்கள் தமைத் தேவையாக்கித்***
***தேவை பெருகித் துன்பம் மலியக் கண்டோம்***
***தேவைக்கு மேலதிகமாகத் துய்ந்த***
***தீங்கு பஞ்ச பாதகங்களை, ஏழ்மை, நோய்கள்***
***தேவையற்ற பொருட்கள் எவையெனக் கண்டிப்போ***
***திரும்பத் தோன்றாதொழித்துப் பலர் வாழ்விற்குச்***
***தேவையுள்ள பொருள் முடக்கம் தெளிவில்லாததோர்***
***செய்கைக்கும் முடிவு கட்ட வேண்டுமின்று"***

இவ்வாறு அறுபத்து நான்குகலைகளை பற்றியும் விளக்கக் கூறின் எமது வாழ்க்கையுடன் இணைத்திருக்கும் இவைகளை விடுத்து கலையை தவறாக நினைத்து தவறான பாதைக்கு மனதை இட்டுச் செல்கின்றனர். இந்த

தெய்வீக கலைகளானது எமது வாழ்வை வளப்படுத்தும் என்பதை அறிந்து எமது வருங்கால சந்ததியினரை கருத்திற் கொண்டு கலைப்பணிகளை ஆற்ற முன்வர வேண்டியது எமது கடமையாகின்றது. இலவச உடற்பயிற்சிகள் கூடங்களை அமைப்பதன் மூலம் கிராமங்களில் ஏற்படும் இளம் வட்டாரங்களின் சீரழிந்து போகும் பாதைகள் மாற்றப்படலாம் நகரப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள யோக வாழ்வு கூடங்களைப் போன்று எமது பகுதிகளில் அமைக்கப்பட்டால் நிச்சயமாக இளையோர் சமூகம் நல்லதொரு பயனைப் பெறும் வயது முதிர்ந்தவர்களைத் தாக்கும் நோய்கள் அற்றுப் போக வாய்புண்டு என எண்ணுகிறேன். கலைக்கூடங்களை அமைப்பது நல்லதொரு மாணவர் சமூதாயத்தைக் கட்டியெழுப்ப வழி கோலும்.

*நல்ல அமைதி எனும் பேராற்றலை பெற்றிட*
*காலையில் தியானம் மாலையில் விளையாட்டு - மைதானம்*
*நாள்தோறும் நற்சிந்தனை அது காட்டிடும் - போதனை*
*இணைந்திடவே இங்கோர் யோக சாலை*
*அதனால் நாம் அனைவரும் பெற்றிடுவோம்*
*அமைதி எனும் நல்ல பேராற்றலை - அதனால்*
*மனித சமுதாயத்தை கட்டி காத்திடுவோம்*

மருதமூகிழ்

# வாசிப்பின் முக்கியத்துவம்

தொகுப்பு :- பிரபாகரன் வேதிகா
யாழ். பல்கலைக்கழகம் , 1ம் வருடம்

**வா**சிப்பின் முக்கியத்துவம் பற்றிப் புதிதாகப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இருப்பினும் இது பற்றி திரும்பத் திரும்ப பேச வேண்டியிருக்கிறது. வேகமான வாழ்க்கையில் சமூகத்துடன் சேர்ந்து பயணிக்க வேண்டியிருக்கிறது. இதற்கு வாசிப்பு இன்றியமையாதது. எந்த விடயமும் தெரியாமல் இருப்பது இருட்டில் இருப்பதற்கு சமமானது. அன்றாடம் உலகில் நடக்கும் புதினங்களையும் செய்திகளையும் அறியவும் மனதினை இதப்படுத்தவும் வாசிப்பே சிறந்த வழி. மின்னூடகங்கள் ஊடாக விரைவாக தகவல்களை அறிய முடியினும் தாளில் அதாவது அச்சு ஊடகங்கள் வாசிப்பதே மனதில் எளிமையாக பதியவும் மன அழுத்தங்களைக் குறைக்கவும் வசதியானது என ஆய்வுகள் கூறுகின்றன.

வாசிப்பு புதியதொரு உலகத்தைக் காட்டும். வாசிப்புப் பழக்கத்தை அன்றாட பணியில் ஒன்றாக மாற்ற வேண்டும். புத்தகங்களை வாசிக்கும் பழக்கம் இருந்தால் மனிதர்களை நேசிக்கும் பழக்கம் வரும் என்பார்கள். சிந்தனையின் தூண்டுகோல் புத்தகங்களே. பரந்துபட்ட அறிவைப் பெற பல்துறைப்புத்தகங்களையும் வாசிப்பது அவசியம். வாசிக்கும் பழக்கத்தை குழந்தைப் பருவத்திலிருந்தே வளர்த்தெடுப்பது பெற்றோரின் கடமை. வருங்கால சந்ததிகள் பல சங்கதிகளை தெரிந்து கொள்ள வேண்டுமானால் நூலகங்கள் நிலைத்திருத்தல் அவசியம். சிறந்த நூல்களே சிறந்த நண்பர்கள் என்பார்கள். எனவே பெற்றோர்களே உங்கள் குழந்தைகளுக்கு நல்ல நூல்களை நண்பராக்குங்கள். நூல்களுடன் ஒருவர் வளராவிட்டால் இது அவனுக்குப் பேரழிவாகும் என்கிறார் அபிரகாம் லிங்கன்.

உலகில் ஏற்பட்ட பல புரட்சிகளுக்கும் முன்னேற்றங்களுக்கும் அடிப்படையில் அமைந்தவை சிறந்த புத்தகங்களே. எழுத்தினால் மாபெரும் போராட்டத்தை தோற்றுவிக்கவும் முடியும். அடக்கவும் முடியும். பிறக்கும் போது எதுவுமறியாமல் பிறக்கும் மனிதன் வாசிப்பின் மூலமே அறிஞனாகின்றான். எனவே ஒரு மனிதனைப் பூரணமாக்குவது வாசிப்பு. உலக அறிவு விரிவுபட்டது. வாசிப்புக்கு வயது எல்லை கிடையாது. பெரியோர்கள் முதல் சிறியோர்கள் வரை அனைவரும் வாசிக்க வேண்டும்.

நல்ல வாசகர்களாக இருப்பவர்கள் தான் முற்போக்கான சமூகத் திறனுடையவர்களாகவும் இலகுவாக மற்றவர்களுடன் கலந்து கொள்பவர்களாகவும் இருப்பர். காலம் எனும் ஆழ்கடலில் நிற்பவர்கள் அறிவு எனும் துறைமுகத்தையடைய கலங்கரை விளக்காக அமைவது வாசிப்பு. வாசிக்கும் சமுதாயமே நாட்டின் அபிவிருத்திக்கான சுட்டியாகும். கடந்த காலங்களில் பொருளாதாரக் காரணிகளே அபிவிருத்தியை அளவீடு செய்தது. ஆனால் தற்போது அறிவு, கலாச்சாரம் என்பனவும் சேர்க்கப் பட்டுள்ளது. அறிவார்ந்த சமூகத்தின் உருவாக்கம் வாசிப்பிலேயே தான் தங்கியுள்ளது. ஒரு சமுதாயம் நிலைத்திருப்பதற்கும் அதன் கலை, கலாசார விடயங்கள் நிலைத் திருப்பதற்கும் வாசிப்பைத் தவிர வேறுவழியில்லை என்றால் மிகையாகாது.

நவீன தொழில்நுட்பங்களின் வருகையானது பாரிய நன்மைகளை வழங்கிநிற்கும் அதேநேரம் வாசிப்புப் பழக்கத்தினை வீழ்த்தியிருப்பது கவலைக்குரியது. இலங்கையில் சிறந்த கல்வி முறைமை, உயர் எழுத்தறிவு வீதம் என்பன காணப்படுகின்ற போதிலும் வாசிப்புப் பழக்கம் பிறழ்வுற்றுள்ளது. வேகமாக நகரும் தற்போதைய தொழில்நுட்ப வாழ்வில் வாசிக்க நேரமில்லை என்பதே தற்போதைய சாடுதலாக இருக்கிறது. நேரம் கிடைக்கும் போது வாசிக்கிறேன் என்பதைவிட நேரம் ஒதுக்கி வாசிப்பதே இங்கே வேண்டப்படுகிறது. நூலகங்கள் அதிகம் உள்ள போது வாசகர்கள் அதிகம் இல்லை என்பது கவனத்திற்குரியது.

நூல்களின் பெறுமதி அதிகரிப்பு அறிவைத் தேடுவதன் ஆர்வத்தினை குறைவடையச் செய்துள்ளது. அதேபோன்று நூல்களை வெளியிடுவதற்கான செலவும் அதிகமாகவுள்ளது. இதனால் உள்நாட்டு எழுத்தாளர்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். நூல்களை எழுதத் திறமையுள்ளவர்கள் பலர் இப் பணியிலிருந்து ஒதுங்கும் நிலையைக் காணலாம்.

நூல்களின் உற்பத்தியும் விநியோகமும் நகர்ப்புறங்களை மையமாகக் கொண்டுள்ளன. ஏனைய பகுதிகளில் நூல் உற்பத்தியும் விநியோகமும் குறைந்தளவில் மட்டுமே காணப்படுகிறது. மக்களின் வாழ்க்கைமுறையில் ஏற்பட்ட மாற்றமானது வாழ்வதாரத்தை உயர்த்தும் செயற்பாட்டில் மட்டுமே அதிக கவனம் செலுத்தப் பழக்கியுள்ளது.

மின்னூடகங்களின் அறிமுகம் வாசிப்பினை சுருக்கியுள்ளது. குறுகிய நேரத்தில் அதிகூடிய தகவல்களை மின்னூடகங்களினூடாக பெற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. இது தவிர சமூக கலாசார காரணி மற்றும் குடும்ப சூழல், கல்வித்தகைமை, வருமானம் போன்றனவும் வாசிப்புப் பழக்கத்தின் வீழ்ச்சியினை தீர்மானிக்கிறது.

**வாயார வாசிப்பதை**
**மனதார நேசிப்போம்**
**அறிவார்ந்த செய்திகளை**
**மறவாது வாசிப்போம்**
**சிந்தனைக்கு விருந்தாக.....**
**கற்பனைக்கு கருத்தாக.....**
**தனிமைக்குத் துணையாக.....**
**வாசிப்பை நேசிப்போம்**
**வளம் சேர்க்க வாசிப்போம்.**

அத்தி பூத்தாற்போல அருகிவரும் வாசிப்பை நித்திய கல்யாணியாய் நித்தமும் மணம் வீசச் செய்வோம்.

# சிறுகதை – கூத்து

கனக செந்தி நாதன்



நான் என் சாய்வு தளர்ந்த நாற்காலியிற் படுத்துக் கிடக்கின்றேன். எழுபது ஆண்டுகளாக வாழ்ந்துவிட்ட என் தளர்ந்த உடலுக்கு இந்தப் படுக்கையிலே ஒரு சுகம். அடுக்களையில் குரல் கேட்கிறது. அது என் பேரன் சச்சியின் குரல்தான். அவனுடைய குரல் எப்பொழுதும் எடுப்பானதாகத்தான் இருக்கும். இரண்டு நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஒரு நாடகம் இடம்பெற்றதாம். பனியும் அதுவும்... நான் போய் பார்க்கவில்லை. நல்ல வடிவாகச் சச்சி நடித்தான் என்ற பலர் புகழ்ந்தார்களாம். அதைப் பற்றிப் பத்திரிகையிலே புதினம் வந்திருக்கிறது. அந்தப் புதினத்தைத்தன் தாய்க்கு உரத்துப் படித்துக் காட்டிப் புழுகிக் கொண்டிருக்கிறான்.

பாவாடை தாவணி அணிந்த ஒருத்தி, படலையைத் திறந்து, பத்திரிகையும் கையுமாக வருகின்றாள். என் கண் கொஞ்சம் "புகைச்சல்". யார்? அவள் திலகவதி தான். "பெரிய பிள்ளை" யாகி மூன்று வருடங்களாகின்றன. அந்தக் காலத்தில் "சாமத்தியப்" பட்ட பிறகு ஒரு குமரப் பெண்ணுடைய முக தரிசனம் கிடைக்கத் தவமிருக்க வேண்டும். காலம் மாறிப் போச்சு. என்னை கவனிக்காதவளைப் போல அவள் அடுக்களைப் பக்கம் விரைகின்றாள். முகம் மலர்ச்சியிலே பொங்க, "அத்தான் அத்தான்" என்று அழைத்தபடி ஓடுகிறாள். "என்ன திலகவதி?" உள்ளேயிருந்து சச்சியின் குரல் கேட்கிறது.

"நான் சொன்னேனே அத்தான். நீங்கள் நல்லா நடிச்சியள். பேப்பரிலே வருமெண்டு. பாத்தியளே இந்தப் பேப்பரை....."

சச்சியின் நடிப்புத் திறன் வழி வழியாக வந்த சொத்து என்று நினைத்துப் பார்ப்பதில் என் மனம் மகிழ்ச்சி கொள்ளுகின்றது. சச்சியின் தகப்பன் - என் மகன் - ஒரு காலத்தில் நாடகம் ஆடினவன் தான் சிறு தொண்டனாக, நத்தனராக அவன் ஆடிய கூத்துக்களை நான் பார்த்திருக்கிறேன். அப்பொழுது பத்திரிகைகளில் இதைப் பற்றி எழுதுவதுமில்லை. எந்த மச்சாளும் புழுக ஓடி வருவதுமில்லை.

என் மகனுடைய நடிப்பிலே தொற்றி, என் நினைவுகள் வேறொரு கிளையிலே தாவுகின்றன. தளர்ந்து போயிருக்கும் என்னுடைய உடலை இப்பொழுது பார்ப்பவர்கள் நானும் ஒரு காலத்தில் கூத்தாடியவன் என்பதை நம்ப பஞ்சிப்படுவார்கள்.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் என்று நினைக்கிறேன். ஓம் ; வள்ளிசாக ஐம்பது ஆண்டுகள் இருக்கும். நான் ஆடிய கூத்தைக் கண்டு "சபாஷ்" போட்டவர்கள் ஆயிரமாயிரம். கொட்டகைக் கூத்தில் நான் உக்கிரசேனனாக நடித்த காட்சி இப்பொழுதும் என் கண் முன்னே நிற்கும். தூக்க முடியாத பெரிய கிரீடத்தைத் தலையில் கொண்டு, வில்லுடுப்புக்கள் போட்டு, பெரிய செங்கோலுக்குக் கீழே எறி வெடிகளை வைத்து "படார், படார்" என வெடித்து முழக்கி, "அண்டமெல்லாம் கிடுகிடுத்து நடுங்கிடாதோ இயமனும் நடுங்கிடானோ" என நான் பாடினால், தூங்கிக் கொண்டிருக்கும் சிறு குழந்தைகள் கூட எழுந்து உட்கார்ந்து விடும். ஒரு மைலுக் கப்பாலுள்ளவர்கள் கூட, "உக்கிரசேனன் களரிக்கு வந்து விட்டான்" என்று ஓடோடி வருவார்கள்.

அண்ணாவி கந்தப்பிள்ளை என்பவர் அந்தக் காலத்தில் பெரிய அண்ணாவியார்.

"வருதோத்திரங்களை" அவர் பாடி, கூத்தில் வரும் ராசா ராணிகளை - நடிப்பவர்களை - அறிமுகப்படுத்தும் அழகுக்கு நிகரே கிடையாது என்பது எல்லோருக்கும் தெரியும்.

"அத்தான் கதாநாயகன் வேஷம் போட்டுக் கொண்டு மேடையில் நின்ற அழகைப் பார்க்க வேணும் அத்தை ......... உடனே ஆளை அடையாளம் தெரியலை" அடுக்களையில் திலகவதியின் குரல் கேட்கிறது.

ஒரு தடவை பள்ளிக் கூடத்து மேடையில் ஆடியதற்கு இவ்வளவு ஆர்ப்பாட்டம். நாங்கள் பத்துக் கிழமைகளாக தொடர்ந்து கூத்தாடியிருக் கிறோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் இரவு எட்டு மணிக்குக் கூத்துத் தொடங்கும். எட்டு மணியானதும் பார்த்தால் இந்த இலுப்பையடி வெளியிலே ஒரேசன சமுத்திரம். கண் எட்டு மட்டும் மனிதத் தலைகள். என்னுடைய காட்சி விடிய நாலு மணிக்குத் தான். ஒரு பெண்ணை வலோற்காரஞ் செய்யும் அரக்கனைக் கொன்றொழிக்கும் வீரம் மிக்க அரசனாக நான் நடித்தேன். என் நடிப்பைப் பார்த்து என் இரசிகர்கள் சால்வைகளில் பணம் முடிந்து எறிவார்கள். அதை எடுத்து அண்ணாவியார் வாழ்த்துவார். "இந்த நாடகத்திலே இன்னாரின் நடிப்புக்காக செல்வச் சீமான் பொன்னம்பலம் போட்ட கொள்ளே கொள்ளை இன்றும் போடுவார் இன்னும் போடுவார்" என அவர் வாழ்த்தும் காட்சி அருமையிலும் அருமை. இரவு பத்து மணிக்குத் தூக்கம் போட்டவர்கள் கூட, உக்கிரசேனனாக நான் வந்ததும் எழுந்து விடுவார்கள். என் "தடல் புடல்" நடிப்பு அப்படிப்பட்டது. அந்தப் பத்து வாரங்களும் நான் இந்த ஊரில் இராசா மாதிரித்தான் தலை நிமிர்ந்து நடந்தேன்.

என் தலை நிமிர்வுக்கு கூத்திலே விழுந்த சால்வைகளும் மாலைகளும் காரணமென்றாலும், ஒரேயொரு சால்வையும் அதில் மடிந்து போட்ட ஒரு வெள்ளி ரூபாவும் தான் முக்கிய காரணம். அந்தச் சால்வை முடிச்சிலுள்ள வெள்ளி ரூபாவில் என் மச்சாள் சின்னம்மையினுடைய இதயம் ஒளிந்து கொண்டிருப்பதான நினைவே நிறைவு.

"அத்தான் மேலுள்ள ஆசையில் இவள் புழுகுகிறாள்........" அடுக்களையில் சச்சியின் தாய் பேசும் குரல்.

இந்தக் காலத்துச் சிறிசுகளின் காதல். இந்தக் கிழவன் அந்தக் காலத்தில் காதலித்தான் என்று சொன்னால் இவர்கள் சிரிப்பார்கள். இவர்களுக்கு காதல் என்பது இந்தக் காலத்துக்குரிய பண்டம் என்ற நினைப்பு. இது எந்தக் காலத்துக்கும் உரியது. அந்தக் காலத்தில் ஓர் ஒழுங்கு முறை இருந்தது.

பத்தாவது வார முடிவில் அண்ணாவியார் கூத்து உடுப்புகளுடனே எங்களை யெல்லாம் கூட்டிக்கொண்டு பெரிய பணக்கார புள்ளிகளின் வீடுகளுக்கும், கூத்தாடியவர்களின் உறவு முறையானவர்களின் வீடுகளுக்கும் போய்ச் சிறிய ஆட்டம் காட்டிச் சன்மானம் பெறுவார்.

சில பெரிய புள்ளிகளின் வீடுகளைத் "தரிசித்து" விட்டு, என் மாமா சங்கரப்பிள்ளையின் வீட்டுப் படலையைத் தாண்டி முற்றத்துக்கு வருகின்றோம். காதல் எத்தகைய விந்தையான உணர்ச்சி என்பதை அன்றைக்குத்தான் உணர முடிந்தது. எப்பொழுது இந்த முற்றத்துக்கு வருவோம் என் று என் மனம் உதைத்துக் கொண்டிருந்தது. வந்தாகி விட்டது. நெஞ்சத்தின் உதைப்பு. கூச்சம் என்ற வேறு உருவந்தாங்கிவிட்டது. ஒரு பக்கமாக ஒதுங்கி நடிகர்களுக்கு ப் பின்னால் மறைந்தும் மயைாததுமாக நின்றேன். அண்ணாவியார் கூத்தில் நடந்த ஒரு சிறு பகுதியாகிய "பால பார்ட்" நிகழ்ச்சியைக் காட்டி விட்டு நிறுத்தினார். என்மாமா வெற்றிலைத்தட்டத்திலே ஐந்து வெள்ளி

ரூபாக்களை வைத்து அண்ணாவியரிடம் நீட்ட, அவரும் வாழ்த்தி முடித்தார். நாங்கள் போகத் தயாரானோம்.

அப்பொழுது "என்ன மருமகப்பிள்ளை, பின்னுக்குப் பதுங்கி நிக்காமல் முன்னுக்கு வந்து நில்லேன்" என்று என் மாமா அழைத்தார். கூத்தாடுவது சுகம். இப்படிப்பட்ட நேரத்தில் எலலோர் முன்னாலும் போய் நிற்பது வலு வில்லங்கம் என்று தோன்றியது. சிறிது துணிவுடன் முன்னால் போய் நின்றேன். தன் மகளுக்கு என் முழு வேஷத்தைக் காட்ட நினைத்திருக்கலாம் என்று என்னுள் எழுந்த நினைவு அலை ஒன்றே எனக்கு அந்தத் துணிச்சலைத் தந்தது. கதவுக்குப் பின்னால் இருந்த வளைகரம் கதவைச் சிறிது நீக்கியதையும், கழுகாக அலைந்த என் கண்கள் பார்த்தன. என்னுள் ஒரு சிலிர்ப்பு.

மாமா தன் மனைவியான பாக்கியம் மாமியை அழைத்து "மருமகப்பிள்ளை இந்தக் கூத்திலை உக்கிர சேனனான நன்றாக ஆடி சபாஷ் வாங்கினார். கண் திட்டி நாத்திட்டி படப் போகும். ஒரு கறுப்புப் பொட்டு வைத்து விடு" என்று சொன்னார். பாக்கியம் மாமி என் நெற்றியில் பெரியதாக ஒரு கறுப்புப் பொட்டு வைத்து விட்டு திரும்பினாள். இந்தக் கணத்தில் என் நெஞ்சில் விரிந்த மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகளே கிடையாது.

"ஓம், பிள்ளை இப்பவே உன்ரை கொத்தானிலை வலு கரிசனை தான், பொழுது படையுக்கை மிளகாய் தடவி சுடத்தான் வேணும்" சச்சியின் அம்மா தான் பேசுகிறாள். அடுப்படியில் நடக்கும் "சமா" இன்னமும் கலையவில்லைப் போலும்.

பாக்கியம் மாமி இட்ட அந்தப் பெரிய கறுப்புப் பொட்டில் எல்லாத் திருஷ்டிகளும் அழிந்துவிட்டன என்ற நிறைவு என் மனதிலே பொங்கிய அதே நேரத்தில், ஒருவன் காறித் துப்புவது என் காதில் விழுந்தது. நான் திரும்பிப் பார்த்தேன். எல்லாருமே திரும்பி பார்த்தார்கள். அங்கே சண்முகம் நின்றான். எல்லோர் முகங்களிலும் எழுந்து நின்ற கேள்விக் குறிக்குப் பதில் சொல்லுபவனைப் போல, "குத்தகை கொடுக்க வக்கில்லாதவனுக்கு இராச கூத்து எதற்கு? கறுப்புப் பொட்டு எதற்கு? அவரைப் பார்த்துக் கண் திருஷ்ட்டி படப் போகுதா மல்லோ"? என்று எல்லோர் செவிகளிலும் விழும்படியாகக் கூறினான். அந்த நாராசம் கலந்த வாரத்தைகள் என் செவிகளில் விழுந்ததுமே, சண்முகத்தின் கழுத்தைத் திருகிக் கொன்று விட என் கரங்கள் துடித்தன. மாமாவின் முகத்தைப் பார்த்தேன். அவர் முகத்திலும் கோபம் கொப்புளித்தது. கைகலப்பு எழும் சூழல். அண்ணாவியார், ஒரு நல்ல காரியம் நடக்கும் போது விபரீதம் விளையக்கூடாது என்று தடுத்துவிட்டார்.

"நாடகம் வடிவா ஆடினது போதும். சோதினை முடிவு வந்தாலல்லவோ தம்பியின்ரை வண்டவாளம் தெரியப் போகுது?"

"அத்தை , அத்தான் இந்தப் தடவை கட்டாயம் பாஸ் பண்ணுவார்" திலகவதி தன அத்தானுக்காகப் பரிந்து பேசுகிறாள்.

"உப்பிடித்தான் நீ போன முறையும் சொன்னனி."

அடுக்களையில் பேச்சு வேறு திசையிலே திரும்புகின்றது.

என் மாமா முன்னிலையில், என் மச்சாள் அறியும் வண்ணம், நான் மானபங்கப்படுத்தப்பட்ட அந்த நிகழ்ச்சி என் மனத்தை அரித்தது. இரவு முழுவதும் தூக்கம் இல்லை. பொழுது விடிந்தது. என்னுள் ஒரு தெளிவு ஏற்பட்டது.

தோட்டம் குத்தகைக்கு எடுத்துப் பயிரிட்டிருந்தேன். புகையிலைக் கன்றுகளை விட,சாமை, குரக்கன் பயறு முதலியனவும் பயிரிட்டேன். இவை சாப்பாட்டிற்கு,

புகையிலை அந்தக் காலத்தில் தொன் கணக்கில் விற்பதில்லை. என்றாலும், புகையிலை விற்ற காசு மிஞ்சும் கூத்து முசுப்பாத்தியில் காசை வேறு வழிகளில் தாராளமாகச் செலவு செய்தேன். குத்தகைப் பணத்தை இரண்டு வருடங்களாகக் கொடுக்கவில்லை. நான் சோம்பேறியுமல்ல. இரண்டாயிரங்கன்று புகையிலைக்கு ஏழு மணித்தியாலம் துலாவை விட்டு இறக்காமல் உழக்கக்கூடிய வாலிபன் என்று ஊரில் எனக்குப் பெயர். இதனால் என்னுள் இருந்தமான உணர்ச்சி வீறு கொண்டு எழுந்தது.

கூத்துத் தொடங்குவதற்கு முன்பே அண்ணாவியார் செலவுக்கென்று - இடையிலே குழப்பாமல் இருப்பதற்காகவும் தான் - ஒவ்வொருவரும் நூறு ரூபா கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்து, ஒரு மனேஜரையும் நியமித்து விட்டார்கள். நல்லதம்பி இதற்காக நியமிக்கப்பட்டார். அவரிடம் பணத்தை முதலிற் கொடுத்தவன் நானே. கூத்து என்றால் எனக்கு அப்படிப்பட்ட ஒரு பைத்தியம் இருந்தது.

கூத்து பழகத் தொடங்கி விட்டோம். இந்தச் சண்முகம் தொடக்கத்தில் இராசா வேஷத்துக்குச் சேர்க்கப்பட்டான். "தொண்டை சரியில்லை" என்று அண்ணாவியார் கூறி, அந்தப் பகுதியை என்னையே ஆடச் சொன்னார். கூத்தாடிய எல்லோருக்கும் என்மீது ஒரு விதப் பொறாமை. இதனால் என்னை வெல்லக்கூடியதாக உடுப்புகள் தேட ஆரம்பித்தார்கள். இந்தப் போட்டியில் நானா விட்டுக் கொடுப்பவன்? என் முடிக்காக, வில் உடுப்புக்காக, புஜ கிரீடங்களுக்காக, கையிலே சுழற்றும் பட்டு இலேஞ்சிக்காக, நீண்ட செங்கோலுக்காக எவ்வளவோ செலவழித்தேன். அத்துடன் வெள்ளுடுப்பு, மேடையேற்றம் என்பவற்றுக்கெல்லாம். பார்த்தும் பார்க்காமல் என் கையால் பணம் விட்டேன்.

நான் ஆடிய கூத்தின் பலன்? குத்தகைப் பணம் கொடாமல் விட்டதற்காகக் காறி உமிழ்கிறான் சண்முகம்!

"உப்பிடி நடிப்புத் திறமையோடை இந்தியாவில் பிறந்திருந்தால் நாளைக்கே சினிமாஸ்டார்"

"உந்த வசுக்கோப்புப் பைத்தியம் குறுக்கிட்டுத் தான் படிப்புகளை நாசமாக்குது; திலகவதி உன்னை வீட்டிலை தேடப் போகினம்; நீ போயிட்டு வா பிள்ளை." சச்சியின் தாயின் குரலில் கண்டிப்பும் சற்றே ஏறி இருக்கின்றது.

அடுத்த நாள் மாமா என்னை ஆள் விட்டுக் கூப்பிடுவித்தார். குத்தகைக் காசு முப்பது ரூபாவையும் என் முன்னால் எடுத்து வைத்தார். சண்முகத்தின் முகத்திலே வீசியெறிந்து விட்டு, தன் தோட்டத்திலே வேலை செய்யும்படி கூறினார். கோப்பி கொண்டு வந்து தந்த பாக்கியம் மாமி இன்னொரு புதினத்தையும் சொன்னார்."இருக்கிற காணி பூமிகளை வித்தாவது அத்தான் இன்னும் இரண்டொரு கூத்து ஆடவேணும். சண்முகம் போன்ற ஆட்கள் எரிச்சலிலை சாக வேணும்" என்று இரவு முழுவதும் என் மச்சாள் சின்னம்மை வாய் பொருமினாளாம்.

அப்பொழுது நான் நிதானத்தை இழக்காமல் யோசித்தேன். என் கையில் உரமிருக்கிறது. தோளில் வலு இருக்கிறது. சண்முகம் கூறிய வடு இருக்கிறது. இரக்கமும் பரோபகாரமும் தேவையில்லை. என் சொந்தக் காணியிலை செழிப்பாக பயிர் செய்யும் வரைக்கும் கூத்தைப் பற்றியும், விவாகத்தைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பதேயில்லை. என்று என் மனதிற்குள் நான் சபதமேற்றேன். "பணத்திற்குள் வேறு ஏற்பாடு செய்து விட்டேன்" என்று மாமா தந்த பணத்தைத் "தட்டிக்கழித்து" விட்டு வீடு திரும்பினேன்.

கூத்துக்காக நான் செய்வித்த இராச முடி, வில்லுடுப்பு, செங்கோல், முத்துமாலை எல்லாம் என்னைப் பார்த்துச் சிரிப்பது போலத் தோன்றின. மின்னல் போல ஒரு யோசனை. அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டு கூத்து நடப்பித்த மனேஜர் நல்ல தம்பிடம் சென்றேன். அங்கே அண்ணாவி கந்தப்பிள்ளையும் இருந்தார். என் கூத்துடுப்பக்களை நல்லதம்பி அவர்களின் பாதத்தின் அடியில் வைத்து, அவற்றை அடமானமாக வைத்துக் கொண்டு நூறு ரூபா தரும்படி கேட்டேன்.என்னுடைய மனோ நிலையை அவர் புரிந்து கொண்டார். பணத்தை எடுத்து வருவதற்காக உள்ளே போக ஆயத்தமானார்.

அப்பொழுது அண்ணாவியார் தன் கைலேஞ்சியில் முடிந்து வைத்திருந்த பணத்தில் நூறு ரூபாவை எடுத்து என்னிடம் நீட்டி, "முருகேசு, இந்தா இதைப்பிடி. சும்மா தலையை ஆட்டாதே. உன் குருவான நான் உனக்கு - உன் நடிப்புக்கும் - தரும் சன்மானம் என்று வைத்துக் கொள்" என்றார்.

"குருவுக்குத்தான் சீஷன் தட்சணையாக ஏதாவது கொடுக்க வேணும். அதைவிட்டுத் தங்களிடம் கைநீட்டி வாங்க" என்று நான் சொல்லி முடிப்பதற்குள், "பரவாயில்லை, முருகேசு எடுத்துக் கொள். நீ நல்லாக வந்த பின் இரண்டு மடங்காகத்தாவேன்" என்று அவர் சொன்னார். இந்தக் காட்சியை நல்ல தம்பி மனேஜரும் பார்த்துக் கொண்டு நின்றார்.

"இந்தா முருகேசு! நான் சொல வதைக்கேள். இந்த உடுப்புகளை நான் அண்ணாவியாரிடமே கொடுக்கிறேன். அவருக்கு வேறு கூத்துகளுக்கும் உதவும். அதற்காக அவரிடமிருந்து நூறு ரூபாவைப் பெற்றுக் கொள் அடமானம் என்ற கதையே வேண்டாம்" என்றார் மனோஜர்.

விஷயம் அவ்வளவோடு முடிந்தது. நான் பணத்தைப் பெற்றுக்கொண்டு கண்களிலே துளிர்த்த நீரை மறைத்துத் திரும்பும் பொழுது, "முருகேசு, இதை நீயே கொண்டு போ. உன் நடிப்புத் திறமைக்காக நான் தரும் பரிசு" என்று கூறி அண்ணாவியார் செங்கோலை என்னிடம் நீட்டினார். அதைப் பெற்று நான் கண்களிலே ஒற்றிக் கொண்டேன்.

இந்தக் காலத்தில் ஒரு பரப்புக் காணி என்ன விலை விற்குது?அந்தக் காலத்தில் எழுபது ரூபாவுக்கும் ஏழு பரப்புக் கலட்டி நிலம் வாங்கினேன். என் சலியாத உழைப்பும் முயற்சியுமே அதை தோட்ட மாக்கியது.

"அப்ப நான் போயிட்டு வாறேன் அத்தை....." திலகவதி என்னைத் தாண்டி, படலையைத் திறந்து செல்கிறாள்.

நான் என் கலட்டி நிலத்தைப் பண்படுத்தப் பெருமுயற்சி செய்து கொண்டிருக்க, தன் காணியை விற்றாவது நான் கூத்தாட வேண்டுமென்று ஆசை காட்டிய உன் மச்சாள் சின்னம்மை அந்தக் காணியையே சீதனமாகக் கொண்டு இன்னொருவனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாள். எல்லாம் அளந்த படியே நடக்கும். நகன் கூத்தாடி புகழையும் இகழையும் பெற்றேன். விதி தன் கூத்தை.... உம்.... உலகமாகிய மேடையில், ஆடி விட்டது. விதியாகிய அண்ணாவி நடத்தும் கூத்தும் நாங்களும்... பல பேரப்பிள்ளைகளைக் கண்டு விட்டேன் நான்.

சச்சி தன் கையில் பத்திரிகையுடன் நான் இருக்கும் இடத்துக்கு வருகின்றான். அந்தப் புதினத்தை எனக்கும் வாசித்துக் காட்ட அவனுக்கு விருப்பம் போலும், பெரிய அறையில் பெட்டகத்துக்கும் வின்னால் இன்னும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் செங்கோலைப் பார்க்கும் ஆசை என் உள்ளத்தில் எழுகிறது.

நன்றி : சுதந்திர இலங்கை சிறுகதைகள்

# நவீன உலகின் ஏழைகள்

சிஹாப்தீன்

மனிதனின் ஒரு தேவை நிறைவேறும் போது மற்றொரு தேவை முளைவிடுகிறது என்று பொருளியல் சொல்கிறது. அந்தத் தேவை, புதியதாகவும் இருக்கலாம். அல்லது நிறைவேறிய தேவையிலிருந்தும் தோன்றலாம். மனித குலம் நாகரிக முன்னேற்றத்தைக் கண்டது என்பதன் பின்னணியில் தொனிக்கும் அர்த்தம் அது தனது தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டே நகர்ந்து கொண்டிருக்கிறது என்பது தான். இன்னும் இன்னும் தனது தேவைகளை அதிகரித்துக் கொண்டு சென்று கொண்டிருக்கிறது என்பது தான்.

தனது பொருட்களைத் தானே காவிச் சென்ற ஆதி மனிதன் மிகப் பாரமான பொருட்களைமரக் குற்றிகளை அடுக்கி அதன் மேல் வைத்து உருட்டித் தள்ளி நகர்த்தினான். சக்கரம் கண்டுபிடிக்கப்படுகிறது. அது மனித நாகரிக வரலாற்றில் ஒரு பெரும் திருப்பு முனையாக அமைந்துவிட்டது. சக்கரங்களைப் பயன்படுத்தி பொருட்களைத் தானும் இழுத்தான். மிருகங்களையும் பயன்படுத்தினான். நீராவி இயந்திரம் கண்டு பிடிக்கப்பட்ட தானது மற்றொரு திருப்பு முனையாக அமைந்தது. இன்று மனிதன் தனது வீட்டு அறையொன்றில் அனுபவிக்கும் அதீத சுகத்தை ஒரு வாகனத்துள் பெற்றுக் கொள்ளும் முன்னேற்றம் அடையப் பெற்றிருக்கிறது. இன்றைய நிலையை அடைவதற்கு மனித குலம் நீண்ட காலத்தை இழந்திருக்கிறது. நான் இந்த இடத்தில் சொல்ல வருவது என்னவெனில் தேவைகளை நிறைவு செய்வதற்கான மனித குலத்தின் முயற்சியை. ஒன்றை அடைந்து கொள்வதற்கான உழைப்பை. நான் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் சற்று சிந்தித்துப் பாருங்கள். தேவைகள் எவ்வாறானவையாக இருந்தன? அவை எவ்வாறு நிறை வேற்றப்பட்டன? அதற்கான முயற்சிகள் எத்தகையாக இருந்திருக்கும்? அடைவுகளைப் பெறு வதில் இருந்த உழைப்பின் மகத்துவம் எப்படியானது? எல்லாவற்றையும் விட முக்கியமான விடயம் என்னவெனில் ஒரு தேவையிலிருந்து இன்னொரு தேவை எப்படிப் பிறந்து வந்திருக்கிறது. என்பதை அவதானிப்பது தான்.

இன்று தேவைகள் ஆசைகளாக மாற்றமடைந்திருப்பதைக் காண்கிறோம். நமது வீடுகளில் உள்ள பல பொருட்கள் இல்லாமலே மனித சமூகத்தின் ஒரு தொகுதி வாழ்ந்து மறைந்திருப்பதை நாம் அறிவோம். அவ்வாறு மறைந்து போனவர்களுக்கு அவசியமற்றதாயிருந்த இவை நமக்கு அவசியமானவையாக மாறிப்போயிருக்கின்றன. இவை இல்லை என்றால் வாழ்வு முழுமை பெற்றவிடாது என்பது போல் ஒரு பிரமை நமக்கு ஏற்பட்டு விடுகிறது. இன்று இவை எதுவும் இல்லாமல் நவீன உலகத்தில் வாழ முடியுமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏனெனில் தொழில்நுட்பமும் நாகரிகமும் உச்ச நிலையில் இருக்கும் (இந்நிலை இன்னும் 50 வருடங்களில் பின் தங்கிய நிலையாக இருக்கும் என்பது வேறு விடயம்) இக்காலத்தில் வாழ்வதற்குப் போராட வேண்டியிருக்கிறது என்பது வலிக்கும் உண்மை. ஆனால் இந்த உச்ச நிலை உண்மைக்குண்மையாக நமக்குக் திருப்தியைத் தரக்கூடியதுதானா என்பதை விளக்கும் ஒரு சம்பவத்தை இங்கு தருகிறேன்.

ஒரு தந்தை தனது மகனுக்காக

சுற்றுப் பயணம் ஒனறை ஏற்பாடு செய்தார். செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள். ஏழை மக்கள் கிராமத்தில் எவ்வாறு வாழ்கிறார்கள் என்தை மகனுக்கு காட்டுவது தந்தையின் நோக்கமாக இருந்தது. கிராமத்தின் மிக ஏழ்மையான விவசாயக் குடும்பம் ஒன்றைத் தெரிவு செய்து சில நாட்கள் இரவும் பகலும் தந்தையும் மகனும் அவர்களுடன் கழித்தார்கள்.அச்சுற்றுலாவை முடித்துக் கொண்டு நகரத்தை நோக்கித் திரும்பும் வழியில் இந்தப்பயணம் பற்றி உனது கருத்து என்ன என்று மகனைக் கேட்டார் தந்தை. இது ஒரு சிறந்த, பெறுமதியான அனுபவம் என்று மகன் சொன்னான். ஏழை மக்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதைப் பார்த்தாயா? என்று அவர் மகனிடம் கேட்ட போது அவன் ஆம் என்று பதிலளித்தான். அப்படியானால் இந்தப் பயணத்திலிருந்து நீ அறிந்து கொண்ட விடயங்களை எனக்குச் சொல்ல முடியுமா? என்று தந்தை கேட்டக மகன் சொல்லத் தொடங்கினான்.

"நமது வீட்டில் ஒரே ஒரு நாய் இருக்கிறது. அவர்களிடம் இருப்பதோ நான்கு. நமது சிறிய தோட்டத்தின் மத்தியில் நமது நீச்சல் தடாகம் அமைந்துள்ளது. அவர்களிடம் எங்கு சென்று முடிவுறுகிறது என்று அறியமுடியாத நீரோடை இருக்கிறது. நமது தோட்டத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவர்களுக்கு இரவில் நட்சத்திரங்கள் இருக்கின்றன. நமது வீட்டு முற்றம் முன்னாலுள்ள சுவருடன் முடிவடைகிறது. அவர்களது எல்லை தொடுவானுக்கு அப்பாலும் நீள்கிறது. நாம் வாழ்வதோ சிறியதோர் துண்டு நிலம். அவர்கள் வாழ்வதோ விசாலம் மிகுந்த நிலப்பரப்பு. நமக்கு சேவை புரிவதற்காக நம்மிடம் வேலைக்காரர்கள் இருக்கிறார்கள்."

அவர்களோ மற்றவர்களுக்குச் சேவை புரிகிறார்கள். நாம் நமது உணவை பணங் கொடுத்து வாங்குகிறோம். அவர்களுக்குரிய உணவை அவர்களே விளைவித்துக் கொள்கிறார்கள். நம்மையும் நமது பொருட்களையும் பாதுகாப்பதற்காக சுற்று மதில்கள் உள்ளன. அவர்களைப் பாதுகாப்பதற்காக நண்பர்கள் இருக்கிறார்கள்.

தந்தை பேச்சற்று அமைதியாயிருக்க மகன் சொன்னான் :- "அப்பா , உங்களுக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். நாம் எவ்வளவு ஏழைகளாக இருக்கிறோம் என்பதை உணர்த்தியதற்காக!"

ஆதாரம் : தீர்க்கவர்ணம்
10.08.2008 (பத்தி எழுத்து)

# சிறுகதை – "விடியாத இரவுகள்"

சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை
இறம்பைக்குளம், நெடுங்கேணி.

**கி**ழக்கு வெளிக்கத் தொடங்கியது. மெல்ல மெல்ல பறவைகளின் விதம் விதமான இன்னிசை காற்றில் கலக்கிறது. ஆலயங்களின் மணியோசை ஓங்கார நாதமாய் விரிந்து பரந்து செல்கின்றது. ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா என்று மூன்று முறை முருகன் கோவில் இருக்கும் திசை நோக்கி கையெடுத்த கனகம்மா வெறுமையை வெறித்து நோக்குகிறாள்.

விடை காண முடியாத வினாக்கள் நெஞ்சில் எழுந்து இடியப்பச் சிக்கலாகிப் போகிறது. என்னதான் மூளையைப் போட்டு பிசைந்தாலும் பிரச்சினைகளிற்கான தீர்வு தான் கிடைத்தபாடில்லை. கடன் மேல் கடன் பட்டு கழுத்தை நெரிக்கிறது. வட்டியைக் கட்டித் தீர்ப்பதற்குள்ளேயே பெரிய போராட்டமாகி வாட்டி வதைக்கின்றது.

மூன்று பிள்ளைகளோடு தன்னையும் பிரிந்து சென்ற கணவன் வேறு திருமணம் புரிந்து வாழ்ந்து வரும் போது தனித்து நின்று தன் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கப்பட்ட கஸ்ரங்கள் பிள்ளைகள் கல்வியில் சாதனை புரிந்த போதெல்லாம் தன்னை மறந்த பூரிப்பைக் கொடுத்தது. ஆசாபாசங்களை துறந்து மெழுகுதிரியாக உருகிக் கரைந்து செய்த தியாகங்கள் வீணாகவில்லை. மூத்த மகன் மருத்துவத்துறை மாணவனாக தெரிவாகி பல்கலைக்கழகம் சென்றுவிட்டான். இரண்டாவது மகன் மருத்துவத்துறை மாணவனாக தெரிவாகி கொழும்பு பல்கலைக் கழகத்தில் சேர்ந்துவிட்டாள்.

மாதா மாதம் பிள்ளைகளின் கல்விச் செலவுக்கு கிடைத்து வரும் உதவிகள் போதுமானதல்ல. ஏதோ தன்னால் முடிந்தவரை கடன் பட்டும் செலவைச் சுருக்கியும் கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்தும் பணத்தை அனுப்பி வைத்து விட்டு அடுத்த மாதத்திற்கு என்ன செய்யலாம் என்ற கதை தொடர்கதையாகிவிடும் கல்விக்கு செலவிடும் பணம் வீண் செலவல்ல. அது எதிர்காலத்திற்கான நல்ல முதலீடு என்பது கனகம்மாவுக்கு தெரியாததல்ல. நெற்காணிகளை பிறரிடம் விதைக்கக் கொடுத்து அதன் மூலம் கிடைக்கும் குத்தகை நெல்லை சாப்பாட்டிற்கு வைத்துக் கொண்டு செலவு செய்வது கனகம்மாவின் வழக்கம்.

சென்ற வருடம் மாரி மழை பொய்த்துவிட்டது. காலபோகம் கைவிரித்து விட்டது. சிறுபோக நெற்செய்கைக்கும் குளங்கள் எவற்றிலும் தண்ணீர் இல்லை. வவுனியா போன்ற இடங்களில் சிலர் காலபோகம் செய்து அறுவடை செய்தனர் சிறுபோகம் கூட சிறிதளவு செய்திருந்தனர். ஆனால் கனகம்மா வாழ்கின்ற பிரதேசத்தில் வெகு சிலரே சிறிதளவு விளைவைப் பெற்றனர். பெரும்பாலும் எல்லோருக்கும் பயிர்கள் அழிந்து விட்டன. வேலியை பிரித்து வயல்களில் மாடுகளை மேய விட்டுவிட்டு விவசாயிகள் பெருமூச்சு விட்டனர்.

அரிசியை கடைகளில் விலைக்கு வாங்குவதற்கும் காசு வேண்டாமா காசுக்கு எங்கே போவது வேறு வருமானம் என்ன வருகிறது. தம்ழ் மக்களின் பணப்பயிராக விளங்கிய புகையிலைச் செய்கை தடைசெய்யப்பட்டு விட்டது. மிளகாய் செய்கை வெங்காயச் செய்கைகளால் கோடிஸ்வரர்களாக மாறிய தமிழ் மக்கள்

ஏராளம். பெருந்தொகையான மேட்டு நிலக்காணிகள் தரிசு நிலங்களாக மாறிவிட்டது. முள்ளிவாய்க்காலில் எல்லாம் இழந்த தமிழ் மக்களை போல பச்சைக்கம்பளம் விரித்து காட்சி அளித்த நிலங்கள் காடு மண்டிக்காணப்படுகின்றன. உற்பத்தி செலவுகள் கூடிவிட்டன. வேலைக்கு ஆள் பிடிப்பது கஸ்ரம் கூலியும் கூடிவிட்டது. கனகம்மாவின் சிந்தனை கடந்த காலத்தில் மிதக்கிறது. பெருந்தொகையான மேட்டுகாணிகளும் அவர்களிற்கு சொந்தம். நூற்றுக்கணக்கான மூடை நெல்லையும் புகையிலை பாடங்கள் வெங்காய முடிச்சுக்கள் உழுந்து மூடைகள் என வீடு நிறைந்த செல்வம்.

இவற்றையெல்லாம் வைப்பதற்கென்றே தந்தையாரால் கட்டப்பட்ட பெரிய மாளிகை வீடு வேலையாட்களின் நடமாட்டம் அவர்களிற்கு மூன்று வேளையும் உணவு தயாரித்து பரிமாறுவது ஏராளம் பசு மாடுகள் அவற்றை பராமரிக்கவும் பால் கறக்கவும் வேலைக்காரர்கள். கறந்த பசுப்பாலை பெரிய அண்டாச்சட்டியில் காய்ச்சி இரவு உரை மோரிட்டு அதிகாலையில் எழுந்து ஆடை கரைத்து வெண்ணெய் எடுத்து நெய் உருக்கி நெய் விற்ற பணம். லோட் கணக்கில்மாட்டெரு விற்ற பணம் நாள்தோறும் பலருக்கு தயிரையும் மோரையும் இலவசமாக கொடுப்பதில் நிறைகின்ற எல்லாமே இன்பமயம்.

எத்தனை விதமான வருமானங்கள் அடிக்கடி வியாபாரிகள் லொறிகளோடு வந்தபடி இருப்பார்கள். அந்த வசந்த காலங்கள் எல்லாம் போர்காலத்தோடு மறைந்துவிட்டன. எத்தனை இடப்பெயர்வுகள் எவ்வளவு பொருள் இழப்புக்கள் உறவு இழப்புக்கள் உயிர் இறப்புக்கள் தமிழ் மக்களின் அத்திவாரமே சின்னபின்னமாகி விட்டது.

பண்பாடு பாடை ஏறிப்போய்ச்சு. ஒற்றுமை நம்பிக்கை எல்லாமே சாமாதி அடைந்து விட்டன. எவரையும் நம்ப முடியாத காலம் எங்குமே பொய்யும் களவும் ஏமாற்றம் ஒழுக்கக்கேடுகளும் தலைவிரித்து ஆடுகின்றது. தனது இளமைக்கால நினைவுகளில் மூழ்கிய கனகம்மா நிகழ்கால நிதர்சனத்திற்கு திரும்புகின்றாள்.

நிதர்சனத்தில் கானல் நீராகி போகின்ற இனிய நினைவுகளை மறக்க கடந்த காலத்தில் வாழ்வது மனித இயல்பு. காலை இயந்திரம் மட்டும் இருந்து விட்டால் போதும் மனிதன் அதில் பயணித்து இனிய கடந்த காலத்தை அடைந்து விடுவான். ஏனென்றால் ஜீரணிக்கவே முடியாத விரக்திகளும் ஏமாற்றங்களும் துயரங்களையும் கடந்திட ஆருக்குத்தான் ஆசை இருக்காது.

மூத்த மகளை இறுதி போரில் பறிகொடுத்த கனகம்மா இரண்டாவது மகன் புற்றுநோயால் மடிந்து விட மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதை போல அடுத்தடுத்து நிகழ்ந்த பேரிடிகளால் நிலைகுலைந்து போனாள். யோசித்து யோசித்து கனகம்மாவின் மூளை களைத்து விட்டது. அழுதழுது கண்ணீர் வற்றி விட்டது. மகள் பட்டதாரி ஆசிரியராக வேலை பார்க்கிறாள். அவளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும். சீதனமாக காணிகளை மட்டும் கொடுக்க முடியுமா? நகைகள் செய்ய வேண்டும். பல இலட்சங்கள் பணம் சேர்க்க வேண்டும். என்ன வழி இரவு பகலாக சிந்தனை ஓயவில்லை.

தன்னை வாட்டி வதைக்கின்ற இரத்த அழுத்த நோய் அடிக்கடி வைத்தியசாலைக்கு செல்ல வேண்டும். சில வேளை ஆபத்தான கட்டங்கள் வந்து விடும். முருகா பிள்ளையை ஒருத்தன்ற கையில பிடித்து கொடுக்கும் வரை என்னைக் காப்பாற்று என்று கூறியபடி காலை உணவைத் தயாரிக்க குசினிக்குள் நுழைகிறாள்.

# விடிவெள்ளி– சிறுகதை

டாங்.. டாங். என நாளாந்த அலாரமாக ஒலித்துக் கொண்டிருந்தது அருகிலுள்ள விளாத்தியடி விநாயகர் கோவில் மணி. சோம்பல் முறித்து கண்விழிக்கும் முன்னர் அவளது மூளை துரிதமாக செயற்பட்டது. மூச்சிறைக்க மாடி அறையிலிருந்து கீழ் அறைக்கு ஓடி வந்தாள் 13 வயதுச் சிறுமி ஆத்மிகா.

அவள் எதிர்பார்த்ததனை விட வியப்பை தந்தது செளமியாவின் குறும்புத் தனங்கள் . குளித்து இரட்டை ஜடை பின்னி ஒரே இரவில் இல்லத்து ஆட்களுடன் சகஜமாக பழகியதுடன் 3 வயது குட்டி தேவதை நர்மிதாவுடன் மழலை நடை பழகிக் கொண்டிருந்தாள் செளமியா.

நேற்று மாலை நீதிமன்றம் மூலம் அரவணைக்கும் இல்லத்துக்கு புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தாள் செளமியா. இல்லத்துக்கு புதிதாக இணைபவர்கள் கீழ்த் தளத்திலேயே பணியாளர்களுடன் தங்க வைப்பது வழமை என்பதனால் ஆத்மிகாவிற்கு செளமியாவுடன் அன்று பழகிக்கொள்ள சந்தர்பம் கிடைக்கவில்லை. எனினும் செளமியாவின் விரக்தியான பார்வையுடன் அவளது இறுகிப்போயிருந்த முகம் ஆத்மிகாவிற்கு ஏனோ மனதை நெருடிக் கொண்டிருந்தது.

தனது காலைக் கடன்களை முடித்துவிட்டு வரவேற்பறையில் அமர்ந்தவளுக்கு அந்த அடைக்கலக்குருவிகளின் ஆரவாரம் மனதை வருடிக் கொண்டிருந்தது. அழகாக பின்னப்பட்டிருந்த சின்னஞ்சிறிய கூடு அது, தாய் பிள்ளைகள் என்ற அன்புப் பரிமாற்றம் குஞ்சுகள் தாம் பெற்றோரின் பாதுகாப்புடன் இருக்கிறோம் என்ற மகிழ்ச்சி ஆரவாரம் ஆத்மிகாவை தன் குடும்பத்தை நோக்கி சிந்திக்க வைத்தது.

வறுமையிலும் அம்மா அப்பா அண்ணா என மகிழ்ச்சியான குடும்ப சூழலில் வளர்ந்திருந்தாள் ஆத்மிகா. உழைப்பின் களைப்பை மறைக்கவென கொஞ்சம் கொஞ்சமாக மதுவிற்கு அடிமையான தந்தை முழுக்குடிகாரனாக மாறியபோது குடும்பம் கடன் , லீசிங் என வறுமைச் சூறாவளியில் சிக்குண்டு போயிருந்தது. அம்மாவின் சுயதொழில் முயற்சிகளும் முதலுக்கு மோசமாகிப் போய்விட பெற்ற மனதினைக் கல்லாக்கிக் கொண்டு பெற்றவள் மத்திய கிழக்கு நாட்டுக்கு தொழில் தேடிச் சென்ற அந்த நொடியில் பிள்ளைகள் சிந்திய கண்ணீரின் அர்த்தம் அப்போது அந்த பிஞ்சுகளுக்கு புரியவில்லை. இப்போது புரிந்தது பின்னாளில் வரும் துயரை நினைத்து மனம் அப்போது அழுதிருக்கிறது என்று.

அம்மாவைப் பிரிந்த அந்த 6 மாத காலத்தில் 6 நாள் வயிறார சாப்பிட்டோமா??????அம்மாவின் அரவணைப்பு இல்லாமல் கண்ணீரோட கழிந்த இரவுகள் எத்தனை ....??? இருட்டு பூதம் எப்போதும் எங்களை விழுங்கிவிடும் என்ற ஏக்கம்.???? இவை எல்லாவற்றுக்கும் மேலாக தங்கு வேலை என்று சென்ற தந்தையும் 6 நாட்களாகியும் வீடு திரும்பவேயில்லையே “கவனமாக இருங்கோ பிள்ளைகள்.. “என்ற தாயின் கடைசி வார்த்தைகளுக்குப் பிறகு பிள்ளைகள் தாயின் தொடர்பைப் பெற்றுக் கொள்ளவேயில்லை. தாய் அரச திணைக்களங்களில் பதியாமல் களவாக வெளிநாடு சென்றிருந்ததனால் தாயைத் தேடும் முயற்சியும் ஆத்மிகாவிற்கு பயனளிக்கவில்லை.

தங்கையின் பசித்த வயிறு பார்க்க சகிக்க முடியாமல் தன்னை விட 2 வயதில் மூத்த அண்ணன் சுகி தற்கொலைக்கு முயற்சித்து அயலவர்களின் உதவியால் காப்பாற்றப்பட்டு உத்தியோகத்தர்கள் தந்த நம்பிக்கை வார்த்தைகளால் இந்த இல்லத்துக்கு வந்த சேர்ந்தது. நினைவுகளின் இறுக்கத்துடன் அந்த வீட்டுக்குருவிகளைப் பார்க்கின்றாள் ஆத்மிகா குருவிகளின் வயிறு நிறையவேயில்லை. ஆனாலும் அவர்களின் மகிழ்ச்சி ஆரவாரம் சிறிதும் குறையவுமில்லை.. இன்று பெற்றோர்கள் பிள்ளைகளின் வயிற்றுக்காக என ஓடி ஓடி உழைக்கிறார்கள், அளவுக்குமீறிய ஆசைகளும் ஆடம்பரத் தேவைகளும் மனிதர்களை சுயநலவாதியாக்கிவிட்டிருக்கின்றது.. பிள்ளைகளின் ஆரோக்கியம் வயிறு நிறைந்து எடை கூடுவதில் இல்லை பெற்றோர்களின் அரவணைப்புடன்கூடிய உள ஆரோக்கியத்தில் உள்ளது என்பதனை பெற்றோர்கள் புரியவேயில்லையே பிள்ளைகளின் பாசறை வீடு தானே. அவளையும் மீறி வடிந்து கொண்டிருந்த கண்ணீரைத் துடைக்கக்கூட மனமில்லாமல் வீட்டுக்குருவிகளின் அன்பான வாழ்க்கையில் மூழ்கியிருந்தவளுக்கு அன்னையின் ஸ்பரிசம் ஏக்கத்தை தரவே. அந்த கரங்கள் அவள் கன்னங்களை வருடிக் கொண்டிருந்தது.

தன்னை சுதாகரித்துக் கொண்டு இல்லத்து தோழிகள் என நினைத்து நன்றி கூற நிமிர்ந்த ஆத்மிகா சௌமியாவை அந்த இடத்தில் எதிர் பார்க்கவில்லை. சௌமியாவிற்கு ஆறுதல் சொல்ல ஓடி வந்தவள் சௌமியாவால் தான் ஆற்றுப்படுத்தப்பட்டுக் கொண்டிருப்பதனை நினைத்து வெட்கப்பட்டாள். ஒருவரை ஒருவர் அறிமுகப்படுத்திக் கொண்டு சிறுமிகள் இருவரும் தமது இல்லத்துக்கான இணைவைப் பற்றிய துன்ப மூட்டைகளை ஒவ்வொன்றாக இறக்கி வைத்தனர்.

பெற்றோரை இழந்த சௌமியா அண்ணாவின் போதைப் பொருள் பழக்கத்தினால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் இல்லத்துக்கு இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தாள். உற்ற தோழிகளாக ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டு தோழமையுடன் சிறுமிகள் இருவரும் ஒருவரை ஒருவர் ஆறத் தழுவிக் கொண்டனர். குடும்ப பிணைப்பினை இழந்திருந்தாலும் சமூகப் பிணைப்பு நல்ல நட்பைத் தந்து நம்பிக்கையூட்டியது சிறுமிகளுக்கு.

அன்று சனிக்கிழமை என்பதனால் இல்லத்தில் நடனம், சங்கீதம், வாத்திய வகுப்புக்கள் என எல்லோரும் தயாராகிக் கொண்டிரந்தனர். ஆத்மிகா வீணை வகுப்புக்குச் செல்லத் தயாராகவே சௌமியாவும் வயதுக்கேற்ற குதுகலத்துடன் அவளுக்குள் ஒரு சரஸ்வதிதேவி குடிகொண்ட கர்வத்தில் ஆத்மிகாவுடன் கைகோர்த்துக் கொண்டாள்.

மனதுக்குள் இருண்டு போயிருந்த எட்டாத கல்வி, பாடசாலை இடைவிலகல், இளவயதுக் கர்ப்பம்□.என்ற பயம் ஓடி ஒழித்துக் கொள்ள புதிய உற்சாகமாக மனதில் சுவையருவியாக ஊற்றெடுத்துக் கொண்டிருந்தது சிறுமிகளின் எதிர்கால விடிவெள்ளி நம்பிக்கையுடன்.

நன்றி

சிறுகதை ஆக்கம்: சி.சுபாஷினி
பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், வவுனியா வடக்கு.

## பிரதேச மட்ட மற்றும் மாவட்ட மட்ட இலக்கிய விழா - 2017/ 2018 பெறுபேறுகள்

மாவட்ட செயலகப்பிரவு: வவுனியா
பிரதேச செயலகப்பிரிவு: வவுனியா வடக்கு
மொழிமூலம்: தமிழ்

**பாலர்பிரிவு**

| இல | போட்டி | பெயர் | முகவரி | ஆக்கத்தின்தலைப்பு | பெற்றநிலை |
|---|---|---|---|---|---|
| 01 | கையெழுத்துப் போட்டி | 01.ஜெகதீஸ்வரன் கார்த்திகா | யு9 வீதி, பரசங்குளம், புளியங்குளம் | | 01 |
| | | 02.எரிக்கெபநேசன் கோஜினி | யு9 வீதி, புளியங்குளம் | | 02 |
| | | 03.மணிமாறன் துர்க்கா | இந்தியன்குடியிருப்பு,பரசங்குளம். புளியங்குளம் | | 03 |

**சிறுவர் பிரிவு**

| இல | போட்டி | பெயர் | முகவரி | ஆக்கத்தின்தலைப்பு | பெற்றநிலை |
|---|---|---|---|---|---|
| 01 | கவிதைப்பாடல் போட்டி | 01. யோகநாதன் தழிழினி | குட்டிப்பிள்ளையார் குடியிருப்பு, புளியங்குளம் | | 01 |
| | | 02.ஜெககிஸ்ணா பவித்ரன் | கல்மடு, புளியங்குளம் | | 02 |
| | | 03.நாகேஸ்வரன் கபிக்ஷாளினி | குட்டிப்பிள்ளையார் குடியிருப்பு, புளியங்குளம் | | 03 |
| 02 | கையெழுத்துப் போட்டி | 01.திவ்யா சுபாஸ்கரன் | முத்துமாரிநகர் புளியங்குளம் | | 01 |
| | | 02.மணிமாறன் கேதாரணி | இந்தியன்குடியிருப்பு,பரசங்குளம். புளியங்குளம் | | 02 |
| | | 03. இராசேந்திரம் நிதர்சனா | பரசங்குளம். புளியங்குளம் | | 03 |

**கனிஸ்ட பிரிவு**

| இல | போட்டி | பெயர் | முகவரி | ஆக்கத்தின் தலைப்பு | பெற்றநிலை |
|---|---|---|---|---|---|
| 01. | கட்டுரைப் போட்டி | 01.சங்கவி மதிவதனன் | அனந்தர் புளியங்குளம், புளியங்குளம் | தமிழர் தம் வாழ்வோடு இணைந்த இலக்கியம் மற்றும் கலை | 01 |

**சிரேஸ்ட பிரிவு**

| இல | போட்டி | பெயர் | முகவரி | ஆக்கத்தின் தலைப்பு | பெற்றநிலை |
|---|---|---|---|---|---|
| 01 | கட்டுரைப் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | போட்டி | 01. திசானா சிவகுமார் | அனந்தர் புளியங்குளம்,புளியங்குளம் | சிறந்த மானிட தேசத்தை உருவாக்கும் இலக்கியம் மற்றும்கலை | 01 |
| | | 02. பிரியந்தனி திலகேஸ்வரன் | மதியாமடு, புளியங்குளம் | தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை | 02 |

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட பிரிவு

| இல | போட்டி | பெயர் | முகவரி | ஆக்கத்தின் தலைப்பு | பெற்ற நிலை |
|---|---|---|---|---|---|
| 01 | பாடல் ஆக்கப் போட்டி | 01.சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை | இறம்பைக்குளம் நெடுங்கேணி | இவரல்லோ இரட்சகர்கள் | 01 |
| | | 02.குவேந்திரராசா நவஜீவன் | முத்துமாரிநகர் புளியங்குளம் | நம்பிக்கை | 02 |
| | | 03.ஆறுமுகம் தம்பையா | ஒலுமடு,நெடுங்கேணி | இலங்கைக்கு வரணும் இராம இராட்சியம் போல் | 03 |
| 02. | இலக்கியப் போட்டி | 01. செல்லத்துரை லக்சுமிகாந்தன் | கனகராயன்குளம் வடக்கு, கனகராயன்குளம் | யாழிசை நாவலுக்கான விமர்சனம் | 01 |
| 03. | சிறுகதைப் போட்டி | 01. சிதம்பரப்பிள்ளை தெய்வேந்திரம்பிள்ளை | இறம்பைக்குளம் | நெடுங்கேணி விடியாதஇரவுகள் | 01 |



புராதன மன்னர்களின் இராசதானி
பிராமி கல்வெட்டு - வெடுக்குநாறி மலை, ஒலுமடு

**Vaani Computer Printing Centre, Vavuniya.**
No.85, Kanthasamy Kovil Road, Vavuniya.
024 2223658